# அர்த்தமுள்ள அந்தரங்கம்

மனித இனத்தின்
காமம், மனம், ஆத்மா பற்றிய
அறிவியல் காரணங்கள் –
ஆச்சரியமூட்டும் உண்மைகள்



உளநலவியல் நிபுணர்
டாக்டர் ஷாலினி

விகடன்
பிரசுரம்

To Amazon

# அர்த்தமுள்ள அந்தரங்கம்

**மனித இனத்தின்**
**காமம், மனம், ஆத்மா பற்றிய**
**அறிவியல் காரணங்கள் –**
**ஆச்சரியமூட்டும் உண்மைகள்**



உளநலவியல் நிபுணர்
டாக்டர் **ஷாலினி**

விகடன்
பிரசுரம்



# டாக்டர் ஷாலினி

சென்னை மருத்துவ கல்லூரியில் இளங்கலை மருத்துவத்தைப் பயின்ற டாக்டர் ஷாலினி, முதுகலையில் மன நலமருத்துவத்தை மதுரை மருத்துவ கல்லூரியில் முடித்தவர்.

தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவ பல்கலை கழகத்தில் 'மகளிர் மனநலம்' குறித்த ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் பெற்றவர்.

தற்போது, சென்னை மருத்துவ கல்லூரியின் மனநல பிரிவில் ஆராய்ச்சியாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

மேலும், 'உளநல சேவை மற்றும் ஆராய்ச்சி மையம்' என்ற அமைப்பை நிறுவி அதன் இயக்குநராகவும் இருந்து வருகிறார்.

'மைண்ட் ஃபோகஸ்' என்ற நிறுவனத்தை உருவாக்கி, மன அழுத்தத்தைக் குறைப்பது பற்றி, பள்ளி - கல்லூரி ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் காவல் துறையினருக்கு வகுப்புகள் நடத்தி வருகிறார்.

'மனரீதியாகப் பாதிக்கப்பட்ட கதாபாத்திரங்களை சரியான முறையில் சித்தரிப்பது எப்படி' என்று திரைத் துறையினரும், தொலைக்காட்சித் தொடர் இயக்குநர்களும் இவரிடம் ஆலோசனை பெறுகின்றனர்.

இதுவரை எழுதியுள்ள நூல்கள்: 'Myths and psychiatry', 'ஆளை அசத்தும் 60 கலைகள்' மற்றும் 'அந்தரங்கம் இனிமையானது.'

மனிதகுல வரலாற்றைப் பற்றி படிப்பதிலும், ஆராய்ச்சி செய்வதிலும் இவருக்கு ஆர்வம் அதிகம்.

# அர்த்தமுள்ள அந்தரங்கம்

**மனித இனத்தின்**
**காமம், மனம், ஆத்மா பற்றிய**
**அறிவியல் காரணங்கள் –**
**ஆச்சரியமூட்டும் உண்மைகள்**



**உளநலவியல் நிபுணர்**
டாக்டர் **ஷாலினி**

விகடன்
பிரசுரம்

Title : ARTHTHAMULLA ANTHARANGKAM

© Dr. SHALINI

ISBN : 978-81-89936-03-7

விகடன் பிரசுரம்: **158**

நூல் தலைப்பு:

அர்த்தமுள்ள அந்தரங்கம்

நூல் ஆசிரியர்:

© டாக்டர் ஷாலினி

முதற்பதிப்பு : மார்ச், **2007**

நான்காம் பதிப்பு : நவம்பர், **2008**

---

பதிப்பாளர்:

பா. சீனிவாசன்

ஆசிரியர்:

வீயெஸ்வி

பொறுப்பாசிரியாகள்:

பொன்ஸீ, செங்கோட்டை ஸ்ரீராம்

உதவி ஆசிரியர்கள்:

இரா.சரவணன், சா.இலாகுபாரதி, எம்.நாகமணி,

கே.பாசுமணி, எஸ்.கோபால், சிவராஜ்,

சு.இரமேஷ், மகாதேவன்

தலைமை வடிவமைப்பு:

மு.ராம்குமார்

வடிவமைபபு:

அ.அன்பழகன்,

கா.மங்களேஸ்வரன், கோ.செந்தில்

---

இந்தப் புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பதிப்பாளரின் எழுத்துபூர்வமான முன் அனுமதி பெறாமல் மறுபிரசுரம் செய்வதோ, அச்சு மற்றும் மின்னணு ஊடகங்களில் மறுபதிப்பு செய்வதோ காப்புரிமைச் சட்டப்படி தடை

செய்யப்பட்டதாகும். புத்தக விமரிசனத்துக்கு மட்டும் இந்தப் புத்தகத்திலிருந்து மேற்கோள் காட்ட அனுமதிக்கப்படுகிறது.

---

**விகடன் பிரசுரம்,**

757, அண்ணா சாலை, சென்னை-600 002.

எடிட்டோரியல் பிரிவு போன் :**091-44-28524074/84**

விற்பனை பிரிவு போன் :**091-44-42834283/84**

e-mail :**publications@vikatan.com**

# அவசியமான அர்ந்தங்கள்

சூரியனைச் சுற்றிவரும் கோள்களில் பூமி மட்டும்தான் இயற்கையால் ஆசிர்வதிக்கப்பட்டு இருக்கிறது. மற்ற கோள்கள் எல்லாம் உயிர்ப்பு சக்தி அற்று மருகி நிற்க, பூமி மட்டும் உயிரினங்களைப் பிரசவித்து தாய்மைக்குரிய பூரிப்போடு தழைத்துச் செழித்திருக்கிறது. அந்த உயிரினங்களில் தனித்துவமுடையதாக, மற்ற எல்லா உயிரினங்களுக்கும் தலைமை தாங்கக்கூடிய ஆற்றலும் அறிவும் பெற்றதாக இருப்பதுதான் மனித இனத்தின் சிறப்பு.

இந்த ஆற்றலையும் அறிவையும் மனிதனுக்கு அவன் நினைத்த மாத்திரத்திலேயே இயற்கை வழங்கிவிடவில்லை. DNA என்ற புரதச் சுருளில் தோன்றிய உயிரின் தொடக்கம், மனிதன் என்ற உன்னத நிலை வரை பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கிறது. அப்படிப்பட்ட உயிரைத் தாங்கி இருக்கும் உயிரினங்களின் தலையான பணியே இனப்பெருக்கம்தான். இனப்பெருக்கத்தை ஊக்குவிப்பதையே குறியாகக் கொண்டு செயல்படுபவை ஜீன்கள்.

ஜீன்கள், தன் உயிர் தேவைக்கு ஏற்றவாறு உயிரினங்களில் ஏற்படுத்திய பரிணாம மாற்றங்கள் பல. படர்வன, பறப்பன, ஊர்வன, பாலூட்டிகள்... போன்றவை இவற்றில் அடங்கும். பாலூட்டிகளின் முதிர்ந்த பரிணாமம்தான் மனித இனம். இந்தப் பரிணாமங்களுக்கும், உயிரினங்களின் வாழ்வியல் மாற்றங்களுக்கும் அடிப்படையாக ஜீன்கள் கையில் எடுத்திருக்கும் யுக்திதான் காமம்.

‘காமமா!’ என அதிர்ச்சியடைந்தாலும், ‘ஆமாம்!’ என ஒத்துக்கொள்ள வேண்டிய பல அறிவியல் உண்மைகள் இருக்கின்றன. காமம் என்ற ஒன்று இல்லாவிட்டால் இனப்பெருக்கம் இருந்திருக்காது. உயிர்களும் தழைத்திருக்காது. ஆக, வாழ்வியல் தேவைக்கான முக்கிய அம்சமாகக் காமம் இருக்கிறது. ஆனால், காம உணர்வில் வக்கிரம் நுழைகிறபோதுதான் அது உயிருக்கு எமனாக முடிகிறது. அதற்கும் உளநலவியல் ரீதியான அறிவியல் காரணங்கள் பல இருக்கின்றன.

பன்னிரெண்டு வகையான மனித காமத்தையும், அதனால் மனித இனத்தில் ஏற்பட்ட வாழ்வியல் ஏற்ற-இறக்கங்களையும் ‘அர்த்தமுள்ள அந்தரங்கம்’ என்ற இந்தப் புத்தகத்தில் விரிவாக விளக்கி இருக்கிறார் டாக்டர். ஷாலினி.

இந்தப் புத்தகத்தில் மனித இனத்தின் அந்தரங்கம் குறித்த ஆச்சரியமூட்டும் உண்மைகளும், அறிந்துகொள்ள வேண்டிய அடிப்படைத் தகவல்களும் நிரம்ப உள்ளன. காமத்தின் ஆதாரக் குணங்களோடு மனித இனத்தின் அந்தரங்கப் பிரச்னைகளை, உளநலவியல் பூர்வமாக அணுகி இருக்கிறார் நூலாசிரியர். இந்தப் புத்தகத்தைப் படியுங்கள் உங்கள் புரிதல்கள் மேலும் விரிவடையும்.

-பதிப்பாளர்

# ஆத்மா என்னும் பட்டாம்பூச்சி

அட்டைப்படத்தைப் பார்த்துவிட்டு, ‘அய் அந்தரங்கம்!’ என்று ஆர்வம் தாளாமல் காமத்தைப் பற்றிய ‘கசமுசா புக்!’ என ஆசைஆசையாக இதை வாங்கிப் பார்த்து, பக்கங்களைத் திருப்பத் திருப்ப ‘அடடா...! வெறும் சிற்றின்பம்னு நினைச்ச செக்ஸுக்குப் பின்னால் இவ்வளவு மேட்டர் இருக்கா...! இத்தனை நாளா தெரியாம போச்சே!’ என்று நீங்கள் நினைத்து ஆச்சரியப்பட்டால்... இதற்காகத்தான் இந்தப் புத்தகம் எழுதினேன்.

அட்டைப்படத்தை மறுபடியும் ஒருமுறை உற்றுப் பாருங்களேன். நிர்வாண நிலையில் அணைத்தபடி ஓர் ஆணும் ஒரு பெண்ணும் நின்றுகொண்டு இருக்கிறார்களே - அவர்கள் யார் தெரியுமா?

அந்த ஆணின் பெயர் ஈரோஸ் - நம்மூர் மன்மதன் போல இவன் கிரேக்க புராணத்தின் காதல் தெய்வம். அந்தப் பெண்ணின் பெயர் சைக் - இவள்தான் மனம் என்பதன் தெய்வம்.

சைக்கியின் கையில் ஈரோஸ் தவழவிடும் அந்தப் பட்டாம்பூச்சிதான் ஆத்மா என்பதன் கிரேக்க உருவகம். ஆக, இந்தப் புராதன சிற்பம் சொல்ல வரும் தத்துவம் என்ன தெரியுமா? மனமும் காதலும் ஒன்று சேர்ந்தால்தான் ஆத்மா உயிர்த்தெழும். வாழ்க்கை அர்த்தப்படும்.

அட்டைப்படத்தின் இடது பக்கத்தில் இரண்டு வளைவுகள் பின்னிப் பிணைந்து, நெளிந்துகொண்டிருக்கிறதே - அது என்ன தெரியுமா? அதன் பெயர் DNA. மனித உடல், மனம், உறவு, நடத்தை, குணம், வரலாறு... போன்ற எல்லாவற்றுக்குமே காரணமான மூலாதாரம் அது.

‘அர்த்தமுள்ள அந்தரங்கம்’ என்னும் இந்தக் கட்டுரைகளை முதலில் தொடராக வெளியிட்ட குங்குமம் நிறுவன ஆசிரிய பெருமக்கள் திரு. ராவ் மற்றும் திரு. சாரு ப்ரபா சுந்தர் அவர்களுக்கு என் முதல் நன்றி. இந்தக் கட்டுரைகளைத் தொகுத்து, அதற்கு ஓர் அழகான புத்தக வடிவம் தந்து, பிரத்தியேக கவனத்துடன் உருவாக்கியுள்ள விகடன் பிரசுரக் குழுவினர் அனைவருக்கும் ஒரு ஸ்பெஷல் தாங்க்ஸ்.

இத்தனை சமாச்சாரங்களையும் நான் பார்த்து, ஜீரணித்து எனக்குப் புரிந்ததை என்னால் முடிந்த தமிழில் எழுதியது பெரிய விஷயமே இல்லை. நான் எழுதியதை எல்லாம் ஆழ்ந்து படிக்கும் வாசகர்களாகிய உங்களுக்குத்தான் என் வெரி ஸ்பெஷல் தாங்க்ஸ்.

அன்புடன்,
ஷாலினி

55 திருவல்லிக்கேணி நெடுஞ்சாலை,
சென்னை-5

இந்நூல்
தவமிருந்து பெற்ற என் அம்மாவுக்கும்
தமிழ் ஓதி வளர்த்த என் அப்பாவுக்கும்

உள்ளடக்கங்களை


[தலைப்பு](#)

[பதிப்புரை](#)

[1. அந்தரங்க அவஸ்தைகள்!](#)

[2. கபாலம் முழுக்க காமம்!](#)

[3. காமத்திலே 12 வகை!](#)

[4. முதல் வகை காமம்!](#)

[5. தொட்டுக்கொள்ள ஒரு துணை!](#)

[6. மனஸ்தாபம் தீர்க்கும் மன்மதப் பசை!](#)

[7. பெண் பிசாசு!](#)

[8. விதவிதமான பசி…](#)

[9. தனிமையிலே இனிமை!](#)

[10. இறுக்கம் தவிர்…](#)

[11. நிறைய பெண்கள் = அதிக அந்தஸ்து!](#)

[12. கற்க கலவியுற…](#)

[13. மன்மத மாந்திரீகம்!](#)

[14. கலையாத தவம்!](#)

[15. உலகின் முதல் தொழில்!](#)

[16. மனிதன் ஜெயித்த ரகசியம்!](#)

[17. ஆண்களுக்கு கோடி, பெண்களுக்கு நூறு!](#)

[18. ஆனந்தத் தாண்டவம்!](#)

[19. “வம்சத்தை விருத்தி செய்ய வாடா!”](#)

[20. ஆசிட் அற்புதம்!](#)

[21. ஜித்து ஜீன்ஸ்!](#)

22. பிரம்ம ரகசியம்!

23. ஆணே இல்லாத ஆதி உலகம்!

24. காதல் கணக்குகள்!

25. செக்ஸ் சடங்குகள்!

26. ஆசையினாலை மனம்...

27. காதல் பிறந்த கதை!

28. ஆஹா பரவசம்!

29. சிற்றிடை என்பது...

30. உடற்பசியும்... அறிவுப்பசியும்...

31. பச்சை உடம்புக்காரி

32. வேட்டையாடு... உறவாடு...!

33. இனச்சேர்க்கை இன்பம்!

34. சுகத்தின் விசை!

35. விசை மாறிய பயணம்!

36. ஏவாளின் அடையாளங்கள்!

37. வாத்துக்குட்டியும், வக்கிரங்களும்...

38. காமத்தின் முதல் டீச்சர்!

39. தாயை மணந்த தனையன்!

40. தாயின் திருப்பணி

41. மனித ஞாபகம்

42. உலகின் முதல் கடவுள்!

43. ஒரு பெண் X பல ஆண்கள்

44. ஒரு ஆண் X பல பெண்கள்

45. ஒருவனுக்கு ஒருத்தி!

46. கற்பு எனப்படுவது யாதெனில்!

47. தந்தை மகற்காற்றும் நன்றி!

48. ஆயிரம் காலமும் அவசர கதியும்

49. மனித மகசூல்!

50. பெண்களை கவரும் நிலைகள்!

51. எதிர்மறை கவர்ச்சி!

52. புணர்ச்சி விதிகள்!

# 1

# அந்தரங்க அவஸ்தைகள்!



“இதை எப்படி டாக்டர் உங்ககிட்ட சொல்லுவேன்!" என்றுதான் ஆரம்பித்தார் அந்த அம்மா.

“என்ன விஷயம், சும்மா சொல்லுங்க.”

“என் பையனுக்கு நாலு வயசுதான் ஆகுது. சாப்பாடு ஊட்டி விடுறதுக்கு வசதியா இருக்குமேனு நான்தான் அவனுக்கு டி.வி-ல சினிமா பாட்டெல்லாம் காட்டி ஊட்ட ஆரம்பிச்சேன். தப்பான பாட்டெல்லாம் இல்ல. சும்மா சாதாரண தமிழ் சினிமா பாட்டுதான். அதைப் பார்த்துட்டு அவன் கேட்ட கேள்வி இருக்கே..!”

“சொல்லுங்க.. அப்படி என்ன கேட்டான்?”

“ஏம்மா, சினிமாவுல டான்ஸ் ஆடுற ஆன்ட்டிக்கு மட்டும்... அது வந்து... அவன் என்ன கேட்குறான்னா... ‘பொம்பளைங்களுக்கு மட்டும் மார்பகம் இருக்கு, ஏன் ஆம்பிளைங்களுக்கு இல்ல’னு கேட்குறான். இந்த வயசுல பேசுற பேச்சா இது! நான் பயந்தே போயிட்டேன். அதுலேர்ந்து தமிழ் சினிமா பாட்டையே என் பிள்ளைக்குக் காட்டுறதில்லை. ஆனா, அவனே ரிமோட்டைத் தட்டிப் பாக்குறான். அதுவும் இந்தக் காலத்துப் பாட்டெல்லாம் சொல்லிக்கிற மாதிரியா இருக்கு. வாடிபோடினு மரியாதை இல்லாம!" -அந்த அம்மா மூச்சுவாங்கிக் கொள்ளக்கூட நேரம் எடுத்துக்கொள்ளாமல்

மடமடவென்று பொரிந்து தள்ள, “லெட்ஸ் கம் டு தி பாயின்ட்’ என்றேன்.

பாயின்ட் இதுதான்!



அந்த அம்மாவுக்கு தன் மகன் கேட்ட கேள்விக்குச் சரியான பதில் தெரியவில்லை. தெரிந்த பதில்களைக்கூட எப்படி விளக்குவது என்று புரியவில்லை. அதையெல்லாம் விட, ‘இந்த வயதில் இப்படிப்பட்ட கேள்விகளைக் குழந்தை கேட்கலாமா? அது நார்மல் குழந்தைதானா?’

என்ற பயம்!

“அவன் கேட்ட கேள்விக்கு நிறைய அர்த்தமிருக்கு. அவன் ரொம்ப நார்மலான, அறிவுக்கூர்மை அதிகமுள்ள குழந்தைதான். டோன்ட் ஒர்ரி" என்றதும்தான் அந்த அம்மாவின் முகமே தெளிந்தது. ஆனாலும் குழப்பம் தீராமல், “அப்படி என்ன டாக்டர் அர்த்தம் இருக்கு இதுல?" என்றார்.

“இருக்கு, நிறைய இருக்கு" என்றபோது, “என்ன? என்ன?" என்று அம்மாவும் அவர் குழந்தையை விட அதிக ஆர்வத்தோடுக் கேட்கத் தொடங்கினார்.

தினம்தினம் நீங்கள் சந்திக்கும் பல பேருக்கு இருக்கும், பல பிரச்னைகளுக்கு அடிப்படைக் காரணமே அவர்களது அந்தரங்க வாழ்க்கைதான்.

“பேசாம என் பாய் பிரண்டை விட்டுடப் போறேன் டாக்டர்" என்று தீர்மானமாகச் சொன்னாள் அந்த கால் சென்டர் ஊழியை.

“வொய்? வாட் ஹாப்பென்ட்?”

“தென் வாட் மேடம்! என்னைத்தான் உயிருக்கு உயிராக லவ் பண்ணுறதா சொல்லுறான். என்னைத்தான் கட்டிப்பேனு என் பின்னாடியே லோலோனு அலையிறான். ஒரு நாளைக்கு எத்தனையோ தடவை போன், எஸ்.எம்.எஸ். எல்லாம் செய்யிறான்.”

“அப்புறம் என்ன பிரச்னை?”

“பாவம் ரொம்ப கெஞ்சிக் கேக்குறானேனு காபி ஷாப்புக்கு அவனோட போனா... என் எதிர்லயே இன்னொரு பொண்ணை லுக் விடுறான் மேடம்.”

“அந்தப் பொண்ணு எப்படி இருந்தா?”

“டைட்டா டிரெஸ் போட்டுக்கிட்டு, ரொம்ப செக்ஸியாதான்... ஆனா அதுக்காக! சே சே, இந்த ஆம்பிளைங்களை நம்பக்கூடாதுப்பா! எவடா கிடைப்பானு அலையிற சபல கேசுங்க!”

ஒட்டுமொத்த ஆண்வர்க்கத்தையே அவள் வார்த்தைகளால் வறுத்தெடுக்க, அவள் சினம் ஆறும்வரை காத்திருந்துவிட்டு...

“ஆனால், அவன் பார்த்ததுல என்னம்மா தப்பு?" என்று நான் கேட்டதுதான் தாமதம்.

“என்ன தப்பா? என்ன மேடம் நீங்க? எவ்வளவு திமிர் இருந்தா நான்

ஒருத்தி பக்கத்துல குத்துக்கல்லு மாதிரி உட்கார்ந்து இருக்கும்போதே, அவன் வேற ஒருத்திய சைட் அடிப்பான்னு நானே நொந்துக்கிட்டு இருக்கேன்!”

“பட், அவன் அப்படிச் செய்யுறதுல நிறைய உள்விஷயம் இருக்கும்மா. புரிஞ்சிக்காம நீ கோவிச்சிக்கிறதுல அர்த்தமே இல்ல" என்று நான் துவங்கும்போதே, அவள் முகம் இருண்டாள்.

“வாட் பிளடி அர்த்தமோ போங்க...!"

“இதனால என் உடம்பு ரொம்ப கெட்டுப்போகுது மேடம். எப்படியாவது எனக்கு இனிமே இந்த மாதிரி பிரச்னையே வராம காப்பாத்துங்களேன்.”

“எந்த மாதிரி பிரச்னை?”

“அதான் மேடம் ந... நைட்... தானா... லீ... லீக் அவுட் ஆயிடுது" என்று முழு அச்சம், மடம், நாணத்துடன் அந்த ஆண்மகன் சொல்ல..

“அதனால என்ன?”

“அதனால என்னவா? இப்படி எல்லாம் சத்து வெளியேறுனா உடம்பு கெட்டுப் போயிடும் மேடம். முகத்துல பரு வரும். கன்னத்துல டொக்கு விழும். ஜன்னி வரும். நரம்புத் தளர்ச்சி வரும். ஆண்மையே போயிடும். என் பெண்டாட்டி என்னைவிட்டு ஓடியே போயிடுவா! அப்புறம் என் வாழ்க்கையே அவ்வளவுதான்!”

“இப்படியெல்லாம் ஆகும்னு யார் சொன்னா உனக்கு?”

“ஒருத்தரா ரெண்டு பேரா? எந்தச் சேனலைத் திருப்பினாலும் டி.வி.யில இதைப் பத்திதானே மேடம் சொல்லுறாங்க!”

“சொல்லுறது அவங்க இஷ்டம். நம்புறதும் நம்பாததும் உன்னோட இஷ்டம்தானே?”

“எப்படி மேடம் நம்பாம இருக்குறது? நான் செய்யறது தப்புதானே?”

“நீ செய்யிறது தப்பா சரியானு சொல்ல எனக்கு அதிகாரமில்லப்பா. ஐ எம் ஒன்லி எ சைக்கியாட்ரிஸ்ட், நாட் எ ஜட்ஜ்.”

“சைக்கியாட்ரிஸ்ட்னா சரி தப்புனு சொல்லக்கூடாதா?”

“சையின்ஸ் ‘ரைட்’டா ‘ராங்’கானு சொல்லாதுப்பா. ‘ஓகே’வா ‘நாட் ஓகே’வானுதான் சொல்லும்.”

“அப்படினா எனக்கு இருக்குற பிராப்ளம் ஓகேவா, நாட் ஓகேவா?”

“உங்களுக்கு இருக்குற மாற்றம் ஓகே. பட், அதை ஒரு பிராப்ளமா நீங்க நினைக்கிறதுதான் நாட் ஓகே.”

“ஒண்ணுமே புரியலையே மேடம்" என்று அவன் விளங்காது விழிக்க, “பட், நீங்க பயப்படுறதுலயும் ஓர் அர்த்தம் இருக்கு" என்று நான் விஷயத்தை விளக்கியபோது, அவன் ஆச்சரியத்துடன் வாயடைத்துப் போனான்.

“நான் சொல்லுறேனேனு தப்பா நினைக்காதீங்க. பட், இந்த பொம்பளைங்களே ரொம்ப மோசம்" என்று என் முன்னே அமர்ந்ததும் அறிக்கை விடுத்தார் அந்த வாலிபர்.

“வை டு யூ ஸே தட்?”

“மூணு வருஷம் மேடம். என்னோட நல்லா சுத்திட்டு, என் செலவுல நல்லா மொக்கிட்டு, மகாபலிபுரம், பாண்டிச்சேரி ஒண்ணுவிடாம என்ஜாய் பண்ணிட்டு... என்னை ராஜா, செல்லம்னு கொஞ்சிட்டு.." கண்ணீர்த் ததும்ப பேச்சு நின்று, கைக்குட்டையால் முகத்தைப் பொத்தினார்.

“இப்ப என்னடான்னா ஜாதி மதம்னு வித்தியாசம் சொல்லி... என்னைக் கட்டிக்க மாட்டேன்னு..." மறுபடியும் நனைந்தது கைக்குட்டை.

“ஏன் என்னை லவ் பண்ணும்போது அவளுக்குத் தெரியலையா, நான் வேற ஜாதினு”

“அவளுக்குக் கல்மனசு டாக்டர். போன் நம்பரைக் கூட மாத்திட்டா. ஆனா, என்னால அவளை மறக்கவே முடியலையே. தினமும் தண்ணி. வேலைக்கு லேட்டு. வீட்டுல ஒரே திட்டு...”

இந்த முறை கைக்குட்டையின் உபயோகம் அதிகரித்து, பேச்சு நின்றது. கொஞ்சம் தெளிந்ததும் நிமிர்ந்தார்.

“அவ ஏன் மேடம் என்னை வேண்டான்னுட்டா?" என்றார் திடீர் ஆக்ரோஷத்துடன்.

“ஷ்! ரிலாக்ஸ், உணர்ச்சிவசப்படுறதை நிறுத்திட்டு, கொஞ்சம் நிதானமாக யோசிச்சுப் பார்த்தா உங்களுக்கே புரியும். அவங்க வேண்டாம்னு சொன்னதுல நிறைய அர்த்தம் இருக்கு" என்றபோது

அவர் நிராசையுடன் தலை குனிந்தார்.

பல பேருக்கு இருக்கும் பல பிரச்னைகளுக்கு அடிப்படைக் காரணமே அவர்களது அந்தரங்க வாழ்க்கைதான்.

'அந்தரங்கம்' என்ற இந்த ஒற்றைச் சொல்லைப் பார்த்ததும், 'அய்' என்று ஆவல் கொள்ளும் நமக்கு உண்மையிலேயே அதைப் பற்றி என்ன தெரியும்? பசு, பட்சி, பிராணி... போன்ற ஐந்தறிவு ஜீவராசிகளுக்கு எவ்வளவு தெரியுமோ, அவ்வளவுதான் நமக்கும் தெரியும் என்றால், சேசே அது இந்த மனித மூளைக்குப் பெருத்த அவமானம் ஆகாதோ!



ஆகையால், மனித இனத்தின் அந்தரங்கத்தைப் பற்றி ஆதி முதல்

அந்தம் வரை, அக்கு வேறு ஆணி வேறாக அலசி ஆராயப் போகிறோம். இதுவரை நீங்கள் பார்த்திராத, கேட்டிராத, நினைத்திராத பல திடுக்கிடும் உண்மைகளை உங்களுக்குத் தெளிவாக விளக்கவே இந்த 'அர்த்தமுள்ள அந்தரங்கம்.'

# 2

## கபாலம் முழுக்க காமம்!



அந்தரங்கத்தின் அர்த்தங்களைப் பற்றி அறிந்துகொள்வதற்கு முன்னால் சில அடிப்படைச் சமாச்சாரங்களைச் சொல்லியாக வேண்டும்.

இந்தப் பரந்த பூலோகத்தில் எத்தனை விதமான ஜீவராசிகள் இருக்கின்றன... படர்வன, பறப்பன, ஊர்வன, நடப்பன... என்று பல வகைப்பட்ட இந்த ஜீவராசிகளின் ஒரே ஒரு பிறவிப்பயன் என்ன தெரியுமா? இனவிருத்திதான்! அதாவது, அடுத்த தலைமுறையை உருவாக்குவதுதான். இதைச் செய்ய இரண்டு வழிகள் உள்ளன.

வழி நம்பர் ஒன்:

தன்னைத் தானே வகுத்து, கலவுறவே இல்லாமல் குட்டிப் போடுதல் - Asexual Reproduction.

வழி நம்பர் டூ:

ஆண், பெண் என்று பாலினப் பிரிவு கொண்டு, ஆண் வேறு மாதிரியான உடலமைப்பு கொள்வது. அதாவது, ஆணும் பெண்ணும் வெவ்வேறு விதமான உடலமைப்பு கொள்வது. இந்த ஆணும், பெண்ணும் தனித்தனியே தத்தம் உடம்புக்குள் குட்டிக்குட்டி அரை விதைகளை உற்பத்திச் செய்யும். பிறகு இரண்டும் கூடி ஆணின் அரை விதையும்’ பெண்ணின் அரை விதையும் ஒன்று சேரும்போது விதை

முழுதாகி, கரு உருவாகி, உயிர் உயிரினமாகிவிடும். இந்த வகை இனப்பெருக்கத்தை Sexual Reproduction கலவிமுறை இனப்பெருக்கம் என்கிறோம்.



இந்தக் கலவிமுறை இனப்பெருக்கம் செய்யும் ஜீவராசிகளில், செடிகொடிகளில் தொடங்கி, மீன், முதலை, முயல், மனிதன் வரை ஒரு பெரிய பட்டியலே அடங்கி இருக்கிறது. இந்த எல்லா ஜந்துக்களுமே கலவுறவு மேற்கொண்டுதான் அடுத்த தலைமுறையை உருவாக்குகின்றன. ஆனால், இதில் ஒரே ஒரு மிருகத்திற்கு மட்டும்தான் கலவுறவில் சுகம் உணரும் தன்மை உள்ளது. அதுவும் கொஞ்ச நஞ்ச சுகமல்ல. இதைப் பற்றி பேசினாலும், செய்தாலும், படித்தாலும், பார்த்தாலும் சுகம் கொள்ளையோ கொள்ளை என்ற அளவுக்கு மிதமிஞ்சிய கலவி சுகம். அது எந்த மிருகம் என்று யூகிக்க முடிகிறதா?

யூகிக்க முடியவில்லை எனில் இன்னொரு துப்பு இருக்கிறது. மற்ற மிருகங்கள் பருவ நிலையைப் பொறுத்து வருடத்தின் சில வாரங்களில் மட்டும்தான் இனச்சேர்க்கை புரியும். மற்ற நேரங்களில் ஒன்றை மற்றொன்று கண்டுகொள்ளாது. ஆனால், இந்த மிருகம் மட்டும் வருடத்தின் முன்னூற்றி அறுபத்தைந்து நாட்களும் இனச்சேர்க்கையில் ஈடுபட வல்லது. இப்போதாவது நான் எந்த மிருகத்தைப் பற்றிப் பேசுகிறேன் என்று புரிகிறதா?

இல்லையா! இதோ இன்னொரு துப்பும் இருக்கிறது. உலகிலுள்ள அனைத்து மிருகங்களும் பின்னுக்கு முன் சேர்த்து புணரும். அதுவும் சில வினாடிகளுக்கு மட்டுமே புணரும். ஆனால், இந்த மிருகம் மட்டும் முகத்தோடு முகம் பார்த்துப் புணரும். அதுவும் மணிக் கணக்காக…

அது எந்த மிருகம் என்று கண்டுபிடித்தீர்களா? கடைசி துப்பு ஒன்று வேண்டுமா? உலகிலேயே மிகப் பெரிய சைஸ் செக்ஸ் உறுப்பு இந்த மிருகத்துக்குத்தான் உண்டு. அதுவும் உச்சந்தலையில் மண்டை ஓட்டிற்குள், மிகப் பத்திரமாக! அதாங்க மூளை! இதைத் தவிர, உச்சந்தொடையில் ஓர் எக்ஸ்ட்ரா பாகமும் உண்டு. ஆக, இரண்டு கலவுறவு உறுப்புகளைக் கொண்ட உலகின் ஒரே ஜீவராசி இதுதான்.

கண்டுபிடித்து விட்டீர்களா? ஆமாம். நமக்கெல்லாம் மிகவும் பரிச்சயமான அதே மிருகம்தான். அதற்கு ஒரு நீண்ட பெயரும் இருக்கிறது. இது ரொம்ப புத்திசாலி என்பதனால் மற்ற மிருகங்களுக்கு முதலில் வெத்துப் பெயர்களை வைத்துவிட்டு கடைசியில் மிச்சம் பிடித்த மிக உசத்தியான ஒரு பெயரைத் தனக்குத்தானே சூட்டிக்கொண்டது. அது என்ன பெயர் தெரியுமா? ஹோமோ சேபியன்ஸ் சேபியன்ஸ். (Homo sapiens sapiens) ஹோமோ என்றதும் வில்லங்கமாக முடிச்சுப் போட்டுவிடாதீர்கள்! இந்த ‘ஹோமோ’ என்றால் லத்தீன் மொழியில் மனிதன் என்று அர்த்தம். ‘சேபியன்ஸ்’ என்றால் அறிவாளி என்று அர்த்தம். அந்த இன்னொரு சேபியன்ஸ் எதற்கு என்றால், தான் ஓர் அறிவாளி என்று தெரிந்துகொண்ட அறிவாளி The wise man who knows he is wise என்று அர்த்தம்.

இதில் ஒரு வேடிக்கையைக் கவனித்தீர்களா? ‘நான் உலகிலேயே ரொம்பவும் புத்திசாலியான மிருகமாக்கும்’ என்று தன்னைத் தானே மார்தட்டிக் கொள்ளும் இந்த மனிதன்தான் உலகிலேயே மிகவும் செக்ஸியான மிருகம்! கபாலம் நிறைந்த அளவுக்குக் காம இச்சையும் நிறைய, அதுவும் ஒரே மிருகத்தில். அப்படியானால்... இந்த அபார அறிவிற்கும், அபரிமிதமான இதன் ஆசைக்கும் ஏதாவது சம்பந்தம் இருக்கிறதா?

இருக்கே! ஒரு முக்கியமான சம்பந்தம்!

மற்ற மிருகங்கள் கடனே என்று செய்யும் ஆஃப்ட்ரால் இனவிருத்தியை, மனிதனை மட்டும் ‘சுகமான சுகமே’ என்று ஆர்வமாகச் செய்ய வைக்கும் ஒரு சுவாரசியமான சம்பந்தம்.

அது என்ன அப்படிப்பட்ட சூட்சமமான சம்பந்தம்...?

# 3

# காமத்திலே 12 வகை!



மனிதன் என்ற நிலையை மறந்து, உங்கள் உணர்ச்சிகளை ஓரங்கட்டி வைத்துவிட்டு, கொஞ்ச நேரம் ஒரு வேற்றுலக அமானுஷ்யனாக உங்களைப் பாவித்துக் கொள்ளுங்கள். நீங்கள் விண்கலம் மூலமாக வேற்றுலகிலிருந்து பூலோகத்திற்கு வந்து முதல்முறையாக இங்குள்ள ஜீவராசிகளைத் தரிசிப்பதாக வைத்துக் கொள்வோம். இப்போது பூலோகத்தில் நிகழும் செக்ஸ் என்கிற சமாச்சாரத்தைக் கவனியுங்கள்.

ஆண் என்ற ஒன்று இருக்கிறது. அதற்கு ஆண் உறுப்பு என்ற ஒன்றும் இருக்கிறது.

பெண் என்ற ஒன்று இருக்கிறது. அதற்குப் பெண் உறுப்பு என்ற ஒன்றும் இருக்கிறது.

இந்த ஆண் + அந்தப் பெண்.

இதன் உறுப்பு + அதன் உறுப்பு = செக்ஸ், என்றால்... 'அடச்சே! போயும்போயும் இரண்டு உறுப்புகள் சேருகின்ற அற்ப மேட்டர்! புழு, பூச்சி, ஆடு, மாடு, சிங்கம், புலி... போன்ற எல்லா மட்டத்து உயிர்களும், அவ்வளவு ஏன் செடி கொடிகளும்கூட செய்யும் ஒரு சாதாரண இனப்பெருக்கச் சடங்குதானே இது. இதில் அப்படி என்ன இருக்கிறது. இந்த மானுட ஜென்மங்கள் இதை ஒரு பெரிய மேட்டராகப்

பேசுகிறார்கள்!' என்று யோசிக்கத் தோன்றுகிறது அல்லவா?



உண்மைதான். அமானுஷ்யக் கண்களுக்கு இந்த உடல் சேர்க்கையும் உறுப்பு சேர்க்கையும் உப்புச்சப்பில்லாத ஒரு வெத்து மேட்டர்தான்.

ஆனால், மனித வர்க்கத்துக்கு 'உடல் உறவு' என்பது ரொம்பவே பேசப்படுகின்ற மெயின் மேட்டர். ஏன் இப்படி?

எல்லா உயிர்களும்தான் இனச்சேர்க்கையில் ஈடுபடுகின்றன. ஆனால், மானுடம் மட்டும்தான் இன்புறுகிறது. காரணம், மானுடத்துக்கு மட்டுமே இருக்கும் அபாரமான ஆறாவது அறிவுதான். அறிவு என்ற

ஒன்று இருப்பதினால்தான் ‘இது இன்பம்’, ‘இது துன்பம்’ என்று உணரும் தன்மை ஏற்படுகிறது. மற்றபடி என்னதான் புழு, பூச்சி வகையறாக்கள் புணர்ந்தாலும் அவை சுகிப்பதில்லை. காரணம், சுகம் என்ற ஒன்றை உணரும் ஆற்றல் அவற்றின் மூளைக்கு இல்லை. அதனால், அவை என்ன முயன்றாலும், ‘சுகமா, அப்படினா என்ன?’ என்று மந்தமாகத்தான் கிடக்கும் அவற்றின் மூளை.

ஆனால், மனித மூளையின் சங்கதியே வேறு.

கண், காது, மூக்கு, சருமம், வாய் என்ற ஐந்து ஒற்றர்களின் உதவியால் அருகே நடப்பதையும், தூரத்தில் நடப்பதையும் மிகத் துல்லியமாகக் கிரகித்துக்கொள்ளும் கெட்டிக்கார மூளை மனிதனுடையது. கிரகித்த எல்லாவற்றையும் உணர்தல் என்கிற சல்லடையில் போட்டுச் சலித்து, சுகத்தை மட்டும் பிரித்து சேகரிக்கும் ஆற்றல் பெற்றது. இந்தச் சுகத்தை உணர்வதற்கு ‘இன்ப மையம்’ என்ற ஒரு மிகப் பிரத்தியேக பாகம் நம் நடு மூளையில் ஆழப் புதைந்து இருக்கிறது.

உடம்பில் உள்ள அனைத்து நரம்பு முனைகளும் இந்த இன்ப மையத்திற்குச் சமிக்ஞைகளை அனுப்பிக்கொண்டே இருக்கும். இத்தனை நரம்பு முனைகளின் தூண்டுதலால் ‘டோபமின்’ என்ற நரம்பு தூதன் இந்த இன்ப மையத்தில் அதிகம் சுரந்துவிட்டால் போதும். ‘ஆஹா, இன்பம்!’ என்ற உணர்வு பிரளயம் மனம் முழுக்க பரவி, உடம்பு முழுக்கத் ததும்பி வழிந்துவிடும்.

இப்படிப்பட்ட எழுச்சி அலைகளை ஏற்படுத்தும் இந்த ‘இன்ப மையம்’ மனித வர்க்கத்துக்கு மட்டும்தான் அதிக வலுவாக அமைந்திருக்கிறது. அதனால்தான் மானுட வர்க்கத்தால் மட்டும் இன்பம் என்ற ஒன்றை அனுபவிக்க முடிகிறது.

ஆட்டம், பாட்டம், வேட்டை, விளையாட்டு, பந்தம், பாசம், ஆராய்ச்சி, கேளிக்கை, விஞ்ஞானம், மெஞ்ஞானம், கலை, இலக்கியம்... என்று பலப்பல சமாச்சாரங்களும் இந்த இன்ப மையத்தைத் தூண்டி மன எழுச்சியை ஏற்படுத்த முடியும் என்றாலும், உடற்சேர்க்கை தூண்டி ஏற்படுத்தும் இன்பமே அலாதிதான்.

இத்தனை அலாதியாக இருப்பதனால்தான் இந்த உணர்வுகளை மானுட வர்க்கம் பெரிதும் கொண்டாடுகிறது. இன்று நேற்று அல்ல, காலங்காலமாக... கொஞ்ச நஞ்சமல்ல ரொம்ப அதிகமாக...

எந்த அளவுக்குத் தெரியுமா?

மற்ற உயிரினங்கள் புணர்ந்தால், அதற்கு ஒரே ஓர் அர்த்தம்தான்- அவை அடுத்த தலைமுறையை உருவாக்க முயல்கின்றன.

ஆனால், மனிதர்கள் புணர்ந்தால் அது வாரிசு உருவாக்க மட்டும் இல்லை. காதலிலே ரெண்டு வகை என்று திரைப் பாடலில் வருவதுபோல, மனித காமத்தில் பன்னிரெண்டு வகைகள் உண்டு. எல்லாம் வெவ்வேறு காரணத்திற்காக... வெவ்வேறு அர்த்தத்துக்காக...

# 4

## முதல் வகை காமம்!



‘**ஆ**ண் வர்க்கத்தின் ஒட்டுமொத்த தூக்கத்தை அன்றாடம் கெடுக்கும் ஸ்வப்பன சுந்தரி அவள். உடை மாற்றுவது போல காதலனை மாற்றிக் கொள்கிறாள்’ என்று பல பத்திரிகைகளில் பரவலாகக் கிசுகிசுக்கப்பட்ட கவர்ச்சிக் கன்னி. கைகளைப் பிசைந்துகொண்டு கண்ணீருடன் அமர்ந்திருக்க...

"டெல் மீ வாட் இஸ் ராங்?" என்று கேட்டு அந்த அடர்ந்த மௌனத்தை அப்புறப்படுத்த வேண்டியிருந்தது. நிமிர்ந்து, உலகிலுள்ள எல்லா துயரும் என் தோளில்தான் என்பது போல அவள் ஒரு பார்வை பார்க்க... அடப் பாவமே என்று இருந்தது.

"என்னை உங்களுக்குத் தெரியுமில்லை டாக்டர்?”

யாருக்குத்தான் தெரியாது! தலையசைத்து வைத்தேன்.

"என்னைப் பார்த்தா எல்லோரும் என்ன நினைக்கிறாங்க தெரியுமா? இவளுக்கு என்ன, அழகா இருக்கா, நிறைய பணம் பண்ணிட்டா. பவர்ல இருக்கிற பல ஆம்பிளைங்க இவ காலடியில கிடக்குறாங்க. அதிர்ஷ்டக்காரி இவளுக்கு என்ன குறைன்னுதான் பொறாமைப் படறாங்க. ஆனா, உலகத்துலேயே பெரிய குறை எனக்குத்தான் இருக்கு.




ச்சு... எனக்கே என்னைப் பிடிக்கல! நான் உயிர் வாழுறதுல எந்த அர்த்தமும் இல்ல. ஆனா, சாவுறது கோழைத்தனம்னு எனக்கே தெரியுது. அதான் உங்ககிட்ட வந்தேன்."

"யெஸ். வாட் கேன் ஐ டு ஃபார் யூ?"

"என்கிட்ட எல்லாமே இருக்கு டாக்டர். ஆனா, சின்னக் குழந்தைலேர்ந்து நான் ரொம்ப ஆசைப்பட்டது ஒண்ணே ஒண்ணுதான். எங்க அம்மா மாதிரி இல்லாம நான் ஒரு நல்ல தாயா இருக்கணும். எங்க

அப்பா மாதிரி ஒரு டம்மி கேரக்டரா இல்லாம ஒரு சாமர்த்தியசாலிய கல்யாணம் பண்ணி, நல்ல குழந்தைகளைப் பெத்துக்கணும். இப்படி ஒரு நல்ல பிள்ளையைப் பெத்தாளேனு எல்லோரும் பாராட்டுற மாதிரி வாழணும்.”



“ஸோ… பெத்துக்க வேண்டியதுதானே. அதுல என்ன பிரச்னை?”

“பிரச்னையே அங்கதான் டாக்டர். என்னால குழந்தை பெத்துக்க முடியாதுனு என் கைனகாலஜிஸ்ட் சொல்லிட்டாங்க. அதைக் கேட்டதுலேர்ந்து என் லைஃபே இருண்டு போயிட்டது மாதிரி இருக்கு!" என்று அவள் அழ ஆரம்பித்து விட்டாள்.

“சே சே... வெறும் ஒரு பிள்ளைய பெக்க முடியலன்ற ஒரே ஒரு சின்னக் காரணத்துக்காக ஏன் மொத்த வாழ்க்கையே வீண்னு முடிவு பண்றீங்க? பிள்ளையைப் பெக்கறது மட்டும்தானா வாழ்க்கை...? அவ்வளவு ஆசைனா ஒரு குழந்தைய தத்தெடுத்தாப் போச்சு.”

“ஊஹூம்! எனக்கு என் குழந்தைதான் வேணும்" அவள் தன் வயிற்றில் ஓங்கி ஒரு குத்து விட்டாள். “ஆனா அது முடியாத காரியமாமே…”

“முடியாத காரியம்னு எதுவுமே கிடையாதும்மா. இப்பதான் உடம்பு சேர்க்கையே இல்லாம, வெறும் உயிரணுக்கள் சேர்க்கை மட்டும் வெச்சே குழந்தைகளை உருவாக்க முடியுமே! குழந்தை அவ்வளவு அவசியம்னு பட்டா அது மாதிரி ஏதாவது ட்ரை பண்ணிப் பார்க்கலாம். ஆனா, இதுக்கு எக்கச்சக்க செலவாகும்”

“செலவைப் பத்தி கவலையில்ல. எனக்கே எனக்குனு ஒரு பிள்ளை பிறந்தா சரி" என்றவள் ஒரு வறட்டுச் சிரிப்புடன் என்னைப் பார்த்தாள். “கடவுளோட விளையாட்டைப் பார்த்தீங்களா? தினமும் எத்தனை தடவை எத்தனை போரோட உறவு வெச்சுக்கிறேன். ஆனா, ஆஃப்டரால் ஒரு பிள்ளைய பெக்க என்னால முடியல. அவஅவ தான் பெத்த பிள்ளைய குப்பைத் தொட்டியில அநாதையா போட்டுட்டுப் போறா! ஸம் டைம்ஸ், இதை நினைச்சா இது என்னடா வாழ்க்கைன்னு வெறுத்துப் போகுது!" என்று அவள் புலம்ப, வாழ்க்கை என்றால் என்ன என்று நான் அவளுக்கு உபதேசித்ததைப் பற்றி எல்லாம் வளவளக்காமல் ஓவர் டூ நம்ம மேட்டர்.

மேலே சொல்லப்பட்ட அந்த அப்சரஸின் அவஸ்தையைப் படித்த உங்களுக்குப் புரிந்திருக்கும்.

‘என்னதான் அழகு, அறிவு’ ஆற்றல், அந்தஸ்து இருந்தாலும் ‘பிள்ளைப்பேறு என்ற ஒன்றை அடைய முடியாவிட்டால் வாழ்க்கை முழுமை பெறாது’ என்று சிலர் எண்ணுகிற அளவிற்கு முக்கியமெனத் தோன்றுவதால், காமத்தின் முதலும், முக்கியமுமான வகை: இனவிருத்தி காமம் (Reproductive sex.) அதாவது, குழந்தை குட்டி வேண்டுமே என்று ஈடுபடும் உடல் உறவு.

ஆனால், உடலுறவு கொண்டால் மட்டும்தான் பிள்ளை குட்டி பெற்றெடுக்க முடியும் என்பதில்லை. இன்றைய நிலவரப்படி ஆண், பெண் என்ற இருபாலினர் இல்லாமல், அவர்களின் இனப்பெருக்க உறுப்புகளின் இணைப்பே இல்லாமல், அவர்களின் உயிரணுக்களை வைத்தே எத்தனை குழந்தைகளை வேண்டுமானாலும் உருவாக்கலாம் என்கிற அளவுக்கு விஞ்ஞானம் வளர்ந்திருக்கிறது. அதனால், பிள்ளை பெற மட்டும்தான் உடலுறவு என்கிற நம்பிக்கை இப்போது பொய்யாகி வருகிறது. இருந்தாலும், பிள்ளை பெறுவதற்கென்றே இயற்கையால் உருவாக்கப்பட்ட முறை என்பதால் உடலுறவு, மகப்பேறு அடைவதற்கான சுலபமான, சிக்கனமான வழி மட்டும் அல்ல. சுகமான வழியும் கூட.

ஆனால், மக்கள்தொகை பெருத்துப் போய்க்கொண்டே இருக்கும் இந்தக் காலத்தில் பிள்ளைப் பேறுக்காக உடலுறவு கொள்கிறவர்கள் மிகச் சிலரே. கருத்தடை சாதனம், கருக்கலைப்பு முறைகள், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் என்று பிள்ளைப் பேற்றைத் தடுக்கும் நபர்கள்தான் அதிகம்.

இப்படிப் பிள்ளைப் பேற்றைத் தடுத்திடும் இவர்கள் எல்லாம்

எதற்காகக் காமுறுகிறார்கள்? உடலுறவு என்பதே பிள்ளை பெற மட்டும்தானே? என்று வெகுளித்தனமாக யோசிக்க மனிதர்கள் என்ன இளிச்சவாயர்களா?

இந்த மனிதர்கள் ஒரே விஷயத்தை வெவ்வேறு விதமாகச் செய்வதில் வித்தகர்கள் ஆயிற்றே.

அப்படி வித்தியாச வித்தியாசமாக என்னென்ன செய்கிறார்கள்?

# 5

# தொட்டுக்கொள்ள ஒரு துணை!



**வி**தவிதமாக உறவு கொள்கிறார்களே மனிதர்கள் அதில் இனவிருத்திக்கான காமம் முதல் வகை. இப்போது காமத்தில் இரண்டாம் வகை! இதை விளக்க இரண்டு கதைகள் கைவசம் இருக்கின்றன.

கதை நம்பர் ஒன்:

அந்த இருபத்தியொரு வயது வாலிபன் தன் காதலியை அழைத்து வந்திருந்தான். இரண்டு பேரும் ரொம்பநேரம் அசடு வழிந்துகொண்டு இருந்துவிட்டு, நான் பேனாவும் கையுமாகக் காத்துக் கொண்டிருப்பதைப் பார்த்து, கடைசியில் திக்கித் திணறி ஒரு வழியாகச் சொன்னதாவது:

“இந்நதப் பொண்ணு என் காதலையே புரிஞ்சிக்க மாட்டேன்றா மேடம். இவளை நான் உயிருக்குயிரா காதலிக்கிறேன். இவளைத்தான் கட்டிப்பேன்னு என் வீட்டுல கூட சொல்லிட்டேன். அப்ப கூட என்னை நம்ப மாட்டேன்றா'' என்றான் தலைவன்.

“நம்பலைனு இல்ல மேடம் எனக்குப் பயமா இருக்கு” இது தலைவி.

“என்ன மேடம் பயம்? வேற யார் நான்தானே!”

“அப்பகூட இது தப்புதான், கல்யாணத்துக்கு முன்னால அத்துமீறி

பழகுவதை நான் அனுமதிக்க முடியாது!”



“இதுதான் மேடம் பிரச்னையே! என்னால இவளைத் தொடாம லவ்

பண்ண முடியல. நான் தொட்டா ‘பேச மாட்டேன்’டானு மூஞ்சைத் தூக்கி வெச்சிக்கிறா. ஒரு காதலன் அவளைத் தொடக்கூட எனக்கு உரிமை இல்லையா?”

“சும்மா தொட்டா பிரச்னை இல்லை மேடம். இவன் விஷமமா தொடறான். அது வேற எனக்கும் பிடிச்சித் தொலையுது. இவன் இப்படியே பண்ணிக்கிட்டு இருந்தா, எங்க நான் கட்டுப்பாட்டை இழந்திடுவேனோனு எனக்குப் பயமா இருக்கு. அப்புறம் நான் எப்படி எங்க அப்பா அம்மா முகத்துல முழிப்பேன்! இவன் இதைப் புரிஞ்சுக்கவே மாட்டேன்றான்.”

“நான்தான் இவளைக் கல்யாணம் பண்ணிக்கப் போறேனே, அப்புறம் எதுக்காக இவ பயப்படுறா!”

“அதான் கல்யாணம் பண்ணிக்கிட்டதும் நீ கேட்கறபடி நடந்துக்குறேன்னு சொல்றேனே.”

“அதுவரைக்கும் நான்! என்னை என்ன உணர்ச்சியே இல்லாத ஜடம்னு நெனச்சியா?" தலைவர் தாம்தூம் என்று திட்ட, தலைவி உடனே அழுது வைக்க, ஒரு வழியாக நானும் அவர்களுக்கு பஞ்சாயத்து செய்து வைத்தேன்.

சரி, விஷயத்திற்கு வருவோம். மேலே சொன்ன இந்த வாலிபன் மட்டுமல்ல, பொதுவாகப் பல வாலிபர்களும் காதலியிடம் எதிர்பார்ப்பது இதுபோன்ற தொட்டுப் பழகும் உரிமையைத்தான்.

இது திருமணத்துக்கு முன் ஏற்படும் களவுக் காதல் கலவரங்கள் என்றால் திருமணத்திற்குப் பின்?

கதை நம்பர் டூ:

அந்த இருபத்திமூன்று வயதுப் பெண்ணை அழைத்து வந்தது அவள் தாய். “கல்யாணமாகி ரெண்டு மாசமாச்சு டாக்டர். இன்னும் இவங்களுக்குள்ள எதுவுமே நடக்கலையாம்!" அம்மா பெருத்த விசனத்துடன் சொல்ல, மகள் முகம் சிவந்து, தலை கவிழ்ந்துகொண்டாள்.

“என்ன பிரச்னைனே தெரியல டாக்டர்! இவ மறுப்பே சொல்லலையாம் மாப்பிள்ளைதான் நெருங்கவே இல்லையாம். இப்ப என்ன பண்ணுறது டாக்டர்!" அம்மா பதட்டத்தில் படபடத்தாள். “வேற எவளையாவது லவ் பண்ணித் தொலைச்சானா! இல்ல ஆண்மையே இல்லாதவனா! கடவுளே! என் பொண்ணு வாழ்க்கை இப்படியா

ஆகணும். பேசிப் பார்க்கலாம் இல்லன்னா பேசாம டைவர்ஸ் பண்ணிடலாம்னா, இந்த மூதேவி மாட்டேன்னு அழறா...”

மகள் மௌன அழுகையுடன் நிமிர்ந்தாள். “எப்படியாவது அவரைச் சரி பண்ணிடுங்க டாக்டர். டைவர்ஸ் பத்தியெல்லாம் என்னால யோசிச்சுக்கூடப் பார்க்க முடியல. இது என்ன அவ்வளவு முக்கியமா? செக்ஸ் இல்லாம புருஷன் பொண்டாட்டியா வாழவே முடியாதா?”



“இப்படி அண்ணன் தங்கச்சி வாழ்க்கை வாழவா இவ்வளவு பணத்தைக் கொட்டி இந்தக் கண்றாவி கல்யாணத்தைக் செஞ்சு வெச்சேன். நான் வக்கீல்கிட்ட பேசிட்டேன் டாக்டர். புருஷன் பொண்டாட்டி ஒண்ணு சேரலைன்னா அந்தக் கல்யானமே செல்லாதுனு சட்டமே இருக்காமே!” என்று அந்த அம்மா ஆக்ரோஷமாகப் பேசினார்.

சரி, நம்ம மேட்டருக்கு வருவோம்.

முதலாம் கதையில் சொன்ன காதலானாலும் சரி, இரண்டாம் கதையில் வந்த பிரச்னையும் சரி, மனிதர்கள் நினைப்பது ஒன்றேதான்.

இவனுக்கு இவள் என்று தீர்மானித்து விட்டால், பிறகு உடலாலும் சேர்ந்துவிட வேண்டியதுதானே!

இப்படி சேராவிட்டால், அந்த உறவு உண்மை இல்லை என்ற கருத்து இருப்பதால்தான், சட்டம்கூட ‘தாம்பத்யம் கொள்ளாத திருமணம் செல்லுபடி ஆகாது’ என்கிறது.

ஆக, ஆண் பெண் உறவை உறுதி செய்திடும் பெரிய பொறுப்பில் இருக்கும் இந்தக் காமத்தில், இரண்டாம் வகை; ஜோடி சேர்க்கை காமம். (Pair formation sex)

சுயமாகத் தன் துணையைத் தேர்ந்தெடுத்த காதலர்கள் ஆனாலும் சரி, வீட்டுப் பெரிசுகள் பார்த்து கைத்தலம் பற்றி தந்த உறவானாலும் சரி உறவு என்ற ஒன்று ஏறுபட்டு விட்டால் அதனை வெறும் ‘யாரோ ஓர் ஆணும் பெண்ணும்’ என்ற தெளிவற்ற நிலையிலிருந்து ‘அவனும் அவளும் ஒரு ஜோடி’ என்ற மிகத் தெளிவான முடிவிற்குக் கொண்டு போவதே இந்த ஜோடி சேர்க்கை காமம்தான்.

சரி, ஒரு வழியாக ஜோடி சேர்ந்தாச்சு! இனி காமத்தின் அடுத்த அவதாரம் என்ன?

# 6

# மனஸ்தாபம் தீர்க்கும் மன்மதப் பசை!



பெரும்பாலான கணவர்களின் பெரும் வருத்தம் என்ன தெரியுமா? ‘வீட்டுக்கு வந்தா நிம்மதியா இருக்க முடியுதா! எக்கச்சக்கப் பிரச்னை, ஏற்கனவே ஆபீசுல ஏகப்பட்ட டென்ஷன். பொண்டாட்டியோட கொஞ்சம் நேரம் ஜாலியா பேசி சிரிச்சிக்கிட்டு இருந்தாலாவது மனசுக்கு ரிலாக்ஸா இருக்குமேனு பார்த்தா, எங்கே! அவளுக்கு வரவர இதுல இன்ட்ரஸ்டே இல்லையே! அவளுக்கு டி.வி. பார்க்கணும். என்னடா, இந்த மனுஷன் நமக்காகத்தானே இவ்வளவு கஷ்டப்பட்டு சம்பாதிச்சிட்டு வர்றான்ற கரிசனம் கொஞ்சமாவது வேண்டாமா?

கல்யாணமான புதுசுல நான் வர்ற நேரத்துக்கு அழகா டிரெஸ் பண்ணிக்கிட்டு, சிரிச்ச முகமா வாசல்ல காத்திருப்பா வாழ்க்கை படு இன்ட்ரஸ்டா இருந்துச்சி. இப்ப அழுக்கு வடிஞ்ச ஓர் அசிங்கமான நைட்டிய மாட்டிக்கிட்டு, எண்ணெய் வழியற முகத்தோட... சை! லைஃபே போரடிச்சிப் போச்சி!’

ஆண்களின் அவஸ்தை இது என்றால், பெண்களின் பெரும் புலம்பல் என்ன தெரியுமா?

‘காலைலேர்ந்து வீடு, குழந்தைனு மாடா உழைக்கிறேன். ஒருத்தரும் ஒத்தாசைப் பண்றதே கிடையாது. இந்த அழகுல ‘ஏய், அதை எங்கே வெச்சே? இதை எடுத்துக்குடேன்’னு உட்கார்ந்த இடத்திலே வேலை

வாங்குதுங்க! என்னடா இவளும் மனுஷிதானே. களைப்பா இருப்பாளேனு யாருக்காவது தோணுதா? இந்த மனுஷனுக்கு சாயங்காலம் வீட்டுக்குச் சீக்கிரமா வந்து பொண்டாட்டிகிட்ட நாலு வார்த்தை ஆசையா பேசணும்' வெளிய கூட்டிட்டுப் போய், வாய்க்கு ருசியா ஏதாச்சும் வாங்கித் தரணும்னு அக்கறை இருக்கா? மிஷின் மாதிரி வேலை செஞ்சுட்டு அக்கடானு போய் படுத்தா, அப்பவும் நிம்மதியா தூங்கவிடாம ஒரே இம்சை! சே.. சே.. இந்த மனுஷனைக் கட்டிக்கிட்டு நான் என்ன சுகத்தைக் கண்டேன்!' என்று கொட்டித் தீர்க்கும் பெண்களின் எண்ணிக்கை இன்று பெருகிக்கொண்டே இருக்கிறது.



இது ஒருவகை பிரச்னை என்றால், இதற்கு நேர்மாறான இன்னொரு வகை பிரச்னையும் உள்ளது.

‘கல்யாணமான புதுசுல தினமும் என்னைத் தொடாம அவருன்குத் தூக்கமே வராது. இப்ப அவருக்கு என்னாச்சோ தெரியல மாசக்கணக்கா எதுவுமே இல்லை. அவர் பாட்டுக்கு வேலைக்குப் போறார். டி.வி. பார்க்குறார். அப்படியே தூங்கிடுறார். பொண்டாட்டினு நான் ஒருத்தி இருக்கேனே, எனக்கும் உணர்ச்சி இருக்குனு தெரிய வேண்டாமா? நானும் யோசிச்சு யோசிச்சு பாக்குறேன்... என் மேல ஏதாவது கோபமா?

இல்ல சர்க்கரை வந்ததுனால ஆசை குறஞ்சிடுச்சா? இல்ல எனக்குத் தெரியாம இன்னொருத்தி யாராவது... ஒண்ணுமே புரியல. கோபம்கோபமா வருது. பாவம், பிள்ளைங்களைப் போட்டு பின்னி எடுக்குறேன்.' என்று கணவனின் தாபக் குறைவை எண்ணி தவித்துப் போகும் பெண்களின் எண்ணிக்கையும் ஏறுமுகமாக உள்ளது.

அவர்களது துணைவர்களை விசாரித்தால், 'என்னன்னே தெரியல. வேலை, அது இதுனு டைம் போறதே தெரியல. இத்தனை மாசமா ஆயிடுச்சு? இருக்காதே! என்னமோ, இப்பெல்லாம் அந்தக் கவனமே வரமாட்டேங்குது. அவ மேல எந்த மிஸ்டேக்கும் இல்லை. எனக்கும் ஒண்ணும் குறையெல்லாம் இல்லை. என்னன்னே தெரியல கேப் விழுந்து போச்சு. ஆபிஸ் டென்ஷனோ என்னவோ...' என்றுதான் வருகிறது பதில்.

'அது எப்படி இருந்தாலும், திருமணமான சில வருடங்களில் ஆசை அறுபது நாள், மோகம் முப்பது நாள் என்கிற கதையாகத் தாம்பத்யம் படிப்படியாகத் துவண்டுபோகிறது. சரி துவண்டு போகட்டுமே, அதனால் யாருக்கு என்ன இழப்பு? அதுதான் குழந்தை குட்டினு மெயின் வேலையெல்லாம் முடிஞ்சிடுச்சே. இனிமே தாம்பத்யம் இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? எல்லாம் ஒன்றுதானே' என்று அசட்டையாகவிட்டுவிட முடியாது.



காரணம், வெயும் குழந்தை குட்டிப் பெறுவதையும் தாண்டி தாம்பத்யத்துக்கு ஒரு முக்கியமான பணி இருக்கிறது.

ஒரே தாயின் வயிற்றில் பிறந்த பிள்ளைகளாக இருந்தாலும், சகோதரச் சண்டைகளும், பங்காளிப் பிரச்னைகளும் எவ்வளவு சுலபமாக ஏற்பட்டு, 'இனி என் முகத்துலேயே முழிக்காதே!' என்கிற அளவிற்குப் போகிறது.

ரத்த பந்தத்திற்கே இவ்வளவுதான் வலிமை என்றால் வெவ்வேறு தாய் தகப்பனுக்கு வெவ்வேறு குடியில் பிறந்து, வெவ்வேறு சூழ்நிலையில் வளர்க்கப்பட்ட இருவேறு மனிதர்கள், கணவன் மனைவி என்று திருமணத்தில் இணையும்போது, இந்தச் செயற்கை பந்தம் மட்டும் எப்படித் தாக்குப் பிடிக்கும்? தத்தளித்து விடத்தானே வாய்ப்பு அதிகம்!

அப்படி அந்தக் கணவனும் மனைவியும் ‘உன் முகத்துல முழிச்சேன்னா கேள்’ என்று பிரிய நேரிட்டால், அந்தப் பிரிவால் பாதிக்கப்படுவது, பாவம் ஒன்றும் அறியாத அவர்களது குழந்தைகள்தான். உலகிலுள்ள எல்லா ஜீவராசிக்கும் தாய் ஒருத்தியின் ஆரம்பகாலப் பராமரிப்பு மட்டும் இருந்தால் போதும். பிறகு அது வளர்ந்து சுயமாகத் தன் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளும். ஆனால், மனித குலத்தில் மட்டும்தான் இந்த ஒற்றை பெற்றோர் முறை செல்லாது. காரணம், மனித குழந்தையின் பெரிய மூளையை சரியான முறையில் செயல்படுத்த தாய் தந்தை என்ற இரண்டு பேரின் நெடுநாளையக் கூட்டுச் சேவைத் தேவைப்படுகிறது.

கூட்டுச் சேவை என்பதால் குழந்தையின் பெற்றோர் ஒரு நாள் இரண்டு நாளல்ல, ஆயுள் முழுக்க இணைந்தே இருந்தாக வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. ஆனால், எந்தவித ரத்த பந்தமும் இல்லாத இரண்டு நபர்கள், எத்தனை நாள்தான் ஒருவரை மற்றவர் சகித்துக் கொண்டிருக்க முடியும்? ஒரே அறையைப் பகிர்ந்துகொள்ளும் இரண்டு நண்பர்களுக்கே எத்தனையோ மனஸ்தாபங்கள் ஏற்படும்போது, ஒரே வீட்டில் வசிப்பவர்களின் நிலை?

இப்படி மனஸ்தாபம் வந்தாலும், அந்தத் தாம்பத்யத்தில் விரிசல் ஏற்படாமல் தவிர்க்கத்தான் இயற்கை ஒரு வலிமையான மன்மதப் பசையைப் போட்டு கணவனையும் மனைவியையும் இறுக்கமாக ஒட்டி வைக்கிறது. ஆனானப்பட்ட அந்த மன்மதப் பசைதான், காமம் நம்பர் மூன்று; அதை ‘ஸ்திரபந்தக காமம்’ (Pair maintenance sex) எனலாம்.

எத்தனை பெரிய வாக்குவாதம் வந்தாலும், ‘எங்கம்மா வீட்டுக்குப் போறேன்’ என்று அறிக்கை விட்ட பிறகும், அடிதடி என்று அனல் பறந்தாலும் அடுத்தநாளே எதுவுமே நடக்காதது போல கணவனும் மனைவியும் இணைந்து கொள்கிற மாயாஜாலத்திற்கு காரணமே இந்த மன்மதப் பசையான ஸ்திரபந்தக் காமம்தான். இந்த ஸ்திரபந்தக் காமம் இருக்கும் வரை இல்வாழ்க்கை இனித்துக் கொண்டே இருக்கும்.

மூன்று வகை காமம் ஓவர். ஆனால், இன்னும் ஒன்பது வகை இருக்கிறதே…?

# 7

# பெண் பிசாசு!



பன்னிரெண்டு வகை காமத்தில் நான்காம் வகை என்ன என்று தெரிந்துகொள்வதற்கு முன் இந்தக் கதையைக் கொஞ்சம் கேளுங்கள்.

ஓர் ஊரில் அமைதியான ஆசாமி ஒருவன் வாழ்ந்து வந்தான். யார் வம்பிற்கும் போகாத 'தான் உண்டு தன் வேலை உண்டு' என்று இருப்பவன். அவன் கெட்ட காலம், அவனுக்கு என்று வாய்த்த பெண் உறவினர்கள் அவனைப் பாடாய்ப்படுத்தி விட்டனர். அம்மா இல்லை. சித்தியோ சதிகாரி. அக்கா அரக்கி, காதலியோ கிராதகி. மனைவி எல்லோரையும் விட மோசக்காரி.

அப்போது, அவனுக்கு அழகான ஓர் ஆண் குழந்தைப் பிறந்தது. பிரசவத்தில் மனைவி இறந்துவிட, 'நல்ல காலம் பிறந்தது' என்று பிள்ளையை எடுத்துக் கொண்டான்.

'எனக்குதான் நிம்மதியா வாழ குடுத்துவெக்கல இத்தனை பெண்களோட மாட்டிக்கிட்டு திண்டாடிப் போய்ட்டேன். நான் பட்டதுன்பம் எதுவும் என் பையனுக்கு வரக் கூடாதுப்பா!' என்ற முடிவுக்கு வந்து, கைப்பிள்ளையோடு காட்டுக்குத் தப்பி ஓடினான்.

அங்கே குடில் அமைத்து, மனித நெடியே படாமல், முக்கியமாகப் பெண் வாசனையே இல்லாமல் தன் மகனைப் பாதுகாத்து வளர்த்து வந்தான். பையன் கொஞ்சம் பெரியவன் ஆனதும், "அப்பா, நீங்க

மட்டும் சந்தைக்குப் போய் என்னென்னமோ வாங்கிட்டு வர்றீங்களே என்னையும் கூட்டிட்டுப் போங்களேன்” என்று அடம் பிடித்தான்.



மகன் அழுவதைப் பொறுக்க முடியாமல், “சரி, வா. ஆனா, என் கையப் பிடிச்சுக்கிட்டேதான் இருக்கணும்” என்று பல நிபந்தனைகளை விதித்தார் அப்பா.

பையனும் சந்தோஷத்தில், “சரி சரி" என்றான்.

அப்பா அவன் ஆர்வத்தைக் கண்டு மகிழ்ந்தபடி, தெருவோரம் தெரிந்தவற்றைச் சுட்டிக்காட்டிச் சொல்லிக் கொடுத்தார். “இதுதான் குதிரை வண்டி, இது விசிறி, இது ராட்டினம்...”

“அப்பா, இது?" என்று பையன் சுட்டிக் காட்ட, நிமிர்ந்து பார்த்த அப்பா அங்கே ஓர் இளம் பெண் நிற்பதைப் பார்த்து முகம் சுளித்தார். “அதுவா! அதுதான் பிசாசு! அதுகிட்ட போயிடாதே. உன்னைப் பிடிச்சி உலுக்கி எடுத்துடும்" என்று எச்சரித்துவிட்டு பையனை வேகமாக அங்கிருந்து அப்புறப்படுத்தி, அவன் கவனத்தைத் திசை மாற்றினார். கடைசியாக நகரத்தை விட்டு மீண்டும் காட்டுக் குடிலுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்பாவும் மகனும் தூங்கங்வதற்குப் படுத்தபோது, மகன் தனக்குத் தானே சிரிப்பதைக் கவனித்தார் அப்பா.

“என்னடா, நீயா சிரிக்கிற?”

“இல்லப்பா அந்தப் பிசாசை நினைச்சேன். எவ்வளவு அழகா இருந்தது இல்லப்பா!" என்று மகன் ரசனை வழிய சொல்ல, அப்பாவுக்குப் ‘பகீர்’ என்று இருந்தது.

ஒரே ஒருமுறை, ஒரே ஒரு விநாடி மட்டுமே பார்த்த பெண்ணை அதுவும், ‘அது ஒரு பெண்’ என்று கூடத் தெரியாத பொடியன். பார்த்த அனைத்தையும் விட்டுவிட்டு அவளை மட்டும் எண்ணிச் சிரிக்கிறான் என்றால்...?

அது... அதுதான் இனக் கவர்ச்சி!

யாரும் சொல்லித் தராமல், கட்டுப்பாட்டை மீறி, ஆழ் மனதில் ஏற்கனவே ஊன்றிக் கிடக்கும் இதைத்தான் அடிப்படைத் தேவை ‘Physiological Need’ என்கிறோம்.

உயிர் வாழத் தேவையான அடிப்படை விஷயங்கள் என்றால் உணவு, உடை, உறைவிடம் என்று எதுகை மோனை சொட்டச் சொட்ட சொல்லிப் பழகிய நமக்கு உண்மையான அடிப்படைத் தேவைகள் தெரியவில்லை.

உளநலவியல் படி, உண்மையான உயிர்த் தேவைகள் என்னென்ன தெரியுமா? உணவு, உறக்கம், உஷ்ணம், உடல் சேர்க்கை, உடல் உழைப்பு.

அதனால்தான் யாரும் கற்றுத் தராமல், எவ்வித முன்னேற்பாடும் இன்றி, பருவம் அடைந்த உடனே ‘டான்’ என்று இனக் கவர்ச்சியும் ஏற்பட்டு விடுகிறது.

இப்படி அடிப்படைத் தேவையாக மனித மரபணுக்களிலும், நரம்பணுக்களிலும் மையம் கொண்டு தாக்குவதால், இந்த அடிப்படைத் தேவைதான் (Physiological sex) காமம் நம்பர் ஃபோர்.

இன்னும் மீதம் இருப்பது எட்டு...

# 8

## விதவிதமான பசி...



காமம் என்பது உணவு, உறக்கம், உஷ்ணம், உழைப்பு மாதிரி ஓர் அடிப்படைத் தேவை.

இந்த அடிப்படைத் தேவை எப்படி வெவ்வேறு விதமாக அவதாரம் எடுக்கிறது.

உதாரணத்துக்கு, உணவு உட்கொள்ளும் சாதாரண விஷயத்தை எடுத்துக் கொள்வோம். பொதுவாக, மற்ற மிருகங்கள் எல்லாம் எதற்காக உணவு உட்கொள்ளும்? வயிறு நிரம்ப, பசி போக, உடல் இயங்க, உயிர் வாழ அதற்குத்தான். ஆனால், மனிதர்கள் எதற்காக உணவு உட்கொள்கிறார்கள் தெரியுமா? அதே வயிறு நிரம்ப, பசி போக, உடல் இயங்க, உயிர் வாழத்தான் என்றால் இல்லை. அதையும் தாண்டி வேறு பல விஷயங்களுக்காகவும் மனிதர்கள் உணவு உட்கொள்வது உண்டு.

நம்மை சுற்றி இருப்பவர்களை ஒரு தரம் உற்றுப் பாருங்கள். அவர்கள் எதற்கெல்லாம் சாப்பிடுகிறார்கள்?

பொழுது போகவில்லை, போரடிக்கிறது என்று சாக்லெட்டும் பிஸ்கட்டும் சாப்பிடுகிறார்கள்!

அழுது ஓய்ந்த குழந்தைக்குச் சமாதானச் சின்னமாக வாங்கித் தரப்பட்ட ஐஸ்கிரீமை சமர்த்தாகச் சாப்பிடுகிறது.

'யார் முதல்ல சாப்பிடுதாங்கன்னு பார்க்கலாமா?' என்று பந்தயம் கட்டிக்கொண்டு, பிடிக்காத உணவையும் அவசர அவசரமாக விழுங்குகிறார்கள்!

'ரொம்ப வேண்டாம். கொஞ்சூண்டு, சும்மா ருசி பார்க்கத்தான்' என்று சாம்பிளுக்காகச் சிலர் சாப்பிடுகிறார்கள்.

கசக்கும் என்று தெரிந்தும் மருந்தாயிற்றே என்று வேண்டா வெறுப்பாக விழுங்குகிறார்கள்.

'பாடி டெவலப் பண்ணணும்' என்று முட்டைகளை உடைத்து கட்டாயத்திற்காகக் குடிக்கிறார்கள்.

'புதுசா திறந்த கடையாச்சே. ஐட்டம் எல்லாம் எப்படி இருக்கு'னு ஆராய்ந்து ஆராய்ந்து சாப்பிடுகிறார்கள்.

இது எல்லாம் போக, 'சாப்பிடுறதுக்கெல்லாம் ஒரு காரணம் வேணுமா? நான் சரியான சாப்பாட்டு ராமன்! அதான் இருக்கிறார்கள். உயிர்' என்றும் சாப்பிடுகிறவர்களும் இருக்கிறார்கள்.

ஆக, வெறும் உயிர்வாழ சாப்பிடுவது போய், வேறு ஏதேதோ காரணங்களுக்காகச் சாப்பிடும் விசித்திர விலங்குகள்தான் மனிதர்கள்.

போயும்போயும் இந்தச் சாப்பாட்டு விஷயத்தில் இத்தனை பழக்கமுறை இருக்கும்போது, உடல் சேர்க்கை விஷயத்தில் கேட்க வேண்டுமா? அதனால்தான் அதிலும் இனப்பெருக்கம், ஆண் பெண் பந்தம் ஆகிய அடிப்படைத் தேவைகள் போக, இன்னும் பலப்பல காரணக் காரியங்கள் உள்ளன.

அவற்றில் முதலாவது வகையைச் சொல்வதற்குமுன் ஒரு குட்டி பிளாஷ் பேக்:

ஹாஸ்டல் மெஸ்ஸே அரண்டு போகும் அளவிற்கு செமை அரட்டை அடித்தபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்போது ஆஸ்பிடல் ஆயாம்மா மெமோ புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு வர,

‘போச்சுடா! யாருக்கோ அவசர அழைப்பு!’ என்று ஒருவரை ஒருவர் ஆழ்ந்த அனுதாபத்துடன் பார்த்துக் கொண்டோம்.

அழைப்பு என் அருகில் அமர்ந்திருந்த அறுவை சிகிச்சை மேல்படிப்பு மாணவிக்கு. அவள் பாதி சாப்பாட்டில் எழுந்து கையைக் கழுவி விட்டு, கோட்டை மாட்டிக்கொண்டு ஆயாம்மாவுடன் போனாள்.

அப்போது போனவள் அர்த்த ராத்திரிதான் திரும்பி வந்தாள்.

“என்னய்யா! இவ்வளவு லாங் கேஸா?" என்று ஆச்சரியத்துடன் எங்கள் குண்டு புத்தகங்களிலிருந்து நிமிர்ந்தோம்.

“அந்தக் கொடுமைய ஏன்யா கேக்குற!" என மிகுந்த களைப்புடன் என் அருகில் ‘தொப்’ என்று விழுந்தாள். “என்னென்ன விசித்திரமெல்லாம் நடக்குதுயா இந்த உலகத்துல!”



“வை? வாட் ஹாப்பெண்ட்?”

“சின்னப் பையன்தான்யா. பதினஞ்சு பதினாறு வயசுதான் இருக்கும். அவன் பண்ண வேலையிருக்கே...”

“என்ன பண்ணான்?”

“சைக்கிள் கடையில வேலை செய்யுற பையனாம். சைக்கிள் டயருக்குக் காத்து அடிக்கிறதுதான் அவன் வேலையாம். சைக்கிளுக்குக் காத்தடிக்கிற டியூப்பை எடுத்து தன் உடம்புக்குள்ள வெச்சு

காத்தடிச்சிப்பானாம்!

“வாட்! வை?”

“அதுல அவனுக்கு ஒரு கிக்காம்! கர்மம்! தினமும் இப்படி காத்தடிச்சிப்பானாம். இன்னிக்கு உணர்ச்சி வசப்பட்டு ஜாஸ்தியா அடிச்சிட்டான். அவ்வளவுதான்... பலூன் மாதிரி குடலே வெடிச்சி சிதறி... பேட் ஷேப்! எமர்ஜென்ஸியா ஒப்பன் பண்ணோம்.”

“அடடா!”

“எத்தனை பைன்ட் ரத்தம்! எத்தனை பாட்டில் சலைன்! எத்தனை மணிநேர சர்ஜரி!" அவள் சோர்வுடன் கைகளை முறித்தாள். “காயத்தைக் குளோஸ் பண்றதுக்குள்ள போதும் போதும்னு ஆயிடுச்சு!”

“பிழைச்சிடுவானா?" என்றாள் ஒரு குழந்தை நல மேற்படிப்பு மாணவி, மிகவும் அக்கறையாக.

“உயிரைக் குடுத்து இத்தனை மணி நேரம் சர்ஜரி பண்ணியிருக்கோம். பிழைச்சிப்பான்னு நம்புவோம்...”

“பிழைக்கிறது ஒரு பக்கம். மறுபடியும் அந்த மக்கு இதுமாதிரி மடத்தனமா ஏதாவது பண்ணித் தொலைக்காம இருக்கணுமே!”

“கடவுளே! சைக்கிளுக்குக் காத்தடிக்கிற டியூப்பைப் போய்... சே சே!”

“எப்படியா! எப்படி அவனுக்கு இந்த மாதிரி செய்யணும்னு தோணுச்சு?" என்று எல்லோரும் திரும்பி என்னைப் பார்த்தனர்.

ஹாஸ்டலில் எல்லோருக்கும் இதே பழக்கம்தான் விசித்திரமாக ஏதாவது நடந்தால் போதும், மன நலவியல் மாணவி என்பதற்காக என்னைப் பிடித்து விளக்கம் கேட்பார்கள். அன்று அந்தப் பையனுக்கு நேர்ந்த விபத்து அடிக்கோடிட்டுக் காட்டுவது எதைத் தெரியுமா?

மனித மூளையின் மிகப் பெரிய பலம் மற்றும் பலவீனமே ‘இதுக்கு அப்புறம் என்ன? வேறு எப்படி இதைச் செய்யலாம்?’ என்கிற ஆராய்ச்சிப் போக்குதான்.

இந்த ஆராய்ச்சிப் போக்கு ஆரோக்கியமானதாக இருந்தால் அற்புதங்களைப் படைக்கும். அதுவே விபரீதமாகப் போனால் காமம் உட்பட எல்லாத் துறைகளிலும் பேரழிவுகளைச் சந்திக்க நேரலம்.

‘Testing the possibilities’ என்பார்களே ‘சாத்தியக் கூறுகளைப்

பரிசோதித்துப் பார்த்தல்’ அது மானுட மனதிற்கே உரிய அடிப்படைக் குணாதிசயம். காரணம், இந்த மிகப் பெரிய மனித மூளை! அதற்கு இருக்கும் அறிவுப் பசிக்கு எப்போதும் ஏதாவது தீனி தேவை. நாமாகப் போடாவிட்டால் தானாகத் தேடிக் கொண்டு மேய போய்விடும்.

எல்லாவற்றிலும் ஆராய்ச்சி செய்யும் இந்த மனித மூளை காமத்தை மட்டும் விட்டுவைத்துவிடுமா? சைக்கிளுக்குக் காத்தடிக்கும் டியூப்பின் மாற்று உபயோகத்தைக் கண்டுபிடித்த (காயப்பட்ட) இந்தப் பொடியன் முதல், கஜுராஹோ சிலையை வடித்த தீர்க்கதரிசிகள் வரை, எல்லோரும் உதாரணமாக நிற்பது, காமத்தில் ஐந்தாம் வகையான ஆராய்ச்சிக் காமத்துக்கே! (Explorative sex)

இன்றைய தேதியில், மனித உடல்சேர்க்கைப் பழக்கவழக்கங்களில் உள்ள ஏராளமான வக்கிரங்களுக்கும், விகாரங்களுக்கும் காரணமே இந்த ஆராய்ச்சிக் காமம்தான். ஆனால், கணவன் மனைவி என்கிற சுமுக அங்கீகாரம் பெற்ற ஜோடிக்குள் கொஞ்சமே கொஞ்சமாக ஆராய்ச்சிக் காமம் இருந்தால் உறவு என்பதே உறுதி ஆகிவிடும்.

அடுத்து காமம் நம்பர் ஆறு...

# 9

# தனிமையிலே இனிமை!



'மாதாமாதம் பணம் அனுப்புகிறோமே, மகன் எப்படிதான் படிக்கிறான் என்று விடுதிக்கு திடீர் விஜயம் செய்து பார்த்து விடலாம்' என அந்தக் கிராமத்து அப்பா ரோஸ் முறுக்கு, அதிரசம், சீடை சகிதம் மகன் அறையில் எழுந்தருளினார்.

அந்த நேரம் அறையில் மகன் இல்லை. ஓர் அப்பாவி ரூம்மேட் மட்டும் படுத்துக்கிடக்க அறையினுள் நுழைந்தார் அப்பா.

அறை முழுவதும் அரை நிர்வாணப் பெண்களின் புகைப்படங்கள். தரை எங்கும் முனைத் தீய்ந்த சிகரெட் துண்டுகள்.

துவைக்காத துணிகள் மலையாக ஒரு பக்கம் குவிந்தும், படிக்காத புத்தகங்கள் பரிதாபமாகப் புறமுதுகுக் காட்டியும் கிடக்க... அப்பா அறையை நோட்டம் இட்டார்.

எப்படிச் சமாளிப்பது என்று தெரியாமல் ரூம்மேட் திருதிருவென விழித்துக் கொண்டிருக்க, எப்படித் திட்டுவது என்று அப்பா ஒத்திகைப் பார்த்துக் கொண்டிருந்தார். எதிர் அறையில், திறந்த கதவுக்கு உள்ளே ஒரு மாணவன் கட்டிலில் மல்லாக்கப் படுத்துக் கொண்டு ஆழ்ந்த சிந்தனையுடன் மேலே உத்திரத்தை மெய்மறந்து பார்த்துக் கொண்டே இருந்தான். அப்பா அதைக் கவனித்துக் கொண்டிருக்கும்போது மகன் உள்ளே வந்தான்.



ஹாயாய் உள்ளே வந்தவன், அப்பாவைப் பார்த்ததும், “அப்பா…! எப்ப வந்தீங்க...?" என்று சமாளிக்க முயல,

அப்பா, “காலேஜில படிக்க வந்தியா இல்ல இப்படிக் கெட்டு குட்டிச்சுவரா போக வந்தியா? இதுக்கு நீ பேசாம ஊர்லயே மாடு மேச்சிட்டு இருந்திருக்கலாம். அந்த எதிர் ரூம் பையனைப் பார்! அவன் மூத்திரத்தைப் புடிச்சு குடிச்சாலாவது உனக்கு அறிவு வருதானு பார்! எவ்வளவு அக்கறையா படிச்சிட்டு, என்னமா யோசிச்சிக்கிட்டு இருக்கான். நீயும் இருக்கியே!" என்று அப்பா பையனை ஓங்கி அடி போட, அப்படி ஆரம்பித்த அப்பா மகன் வாக்குவாதம் முற்றி அடிதடி ஆகிவிட்டது. மகன் பட்டக் காயத்திற்கு சிகிச்சை செய்ய மருத்துவமனைக்கு வர, அவனைப் பரிசோதித்த மருத்துவர், அப்பா மகன் உறவில் ஏற்பட்ட விரிசலைப் போக்க ஒரு மனநல ஆலோசனை தேவை என்றார்.

“என்னப்பா நடந்தது?" என்று மகனைக் கேட்டதுதான் தாமதம்...

மகன் தன் ஆதங்கங்கள் அனைத்தையும் கொட்டோகொட்டென்று கொட்டித் தீர்த்தான்.

“அந்த ரகுவ அவர் என்னவோ பெரிய உதாரண புருஷன்னு நினைச்சிட்டு இருக்கார். நானாவது பத்திரிகையில் வர்ற படங்களை கட் பண்ணி ஒட்டி இருக்கேன். அவன் காசுக் குடுத்து பெரியபெரிய கவர்ச்சி போஸ்டரா வாங்கி சீலிங்ல ஒட்டி சதா சர்வ காலமும் அதையே பார்த்துகிட்டு படுத்துக் கிடக்குறான். அவன் யூரினை நான் குடிக்கணுமாம்!" அவமானம் தாளாது கண் கலங்கினாலும் உடனே சுதாரித்துக் கொண்டு நிமிர்ந்தான் மகன்.

“நானும் ஒண்ணும் கெட்ட பையன் இல்லை டாக்டர். எப்பயாவது பொழுது போகலேன்னாதான் இந்த மாதிரி படம் பார்க்குறது, மத்ததெல்லாம்... மத்தபடி பரீட்சை நேரத்துல இதையெல்லாம் ஏறக்கட்டிட்டு ராத்திரி பகலா படிக்கிறேன். அதெல்லாம் அந்த ஆளுக்கு எங்க புரியுது!”

அந்த ஆளுக்குப் புரிகிறதோ? இல்லையோ? ஆனால், மானுட குணம் என்ன தெரியுமா? தனிமைக் கிடைத்து, செய்வதற்கு எதுவுமே இல்லாது போனால், இந்த வெறுமையைத் தவிர்க்க, பொழுதை எப்படியாவது போக்க, ஏதாவது ஒரு சுய ஸ்பரிச நடவடிக்கையில் ஈடுபடுவார்கள். அப்படியாவது தன்னைத் தானே தேற்றிக் கொள்வது என்பதுதான் மானுடர்களின் இயற்குணம்.

பருவைக் கிள்ளுவது, நகத்தைக் கடிப்பது, மூக்கை, காதைக் குடைவது, தலைமுடியை இழுத்துக் கொண்டே இருப்பது... என்று சாதாரண உடல் பாகங்களை ஸ்பரிசிப்பதில் ஆரம்பித்து, ‘பிறர் எதிரில் தொடக்கூடாது என்று கருதப்படும் பாகங்களை ஸ்பரிசிப்பது வரை இந்தச் சுய ஸ்பரிசம் எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால், இந்த Auto arousal நடவடிக்கைகள் தரும் இதம், மீண்டும்மீண்டும் அதையே செய்ய தூண்டும் என்பதால் காலப் போக்கில் அதுவே ஒரு பழக்கமாகி விடுகிறது.

ஆரம்பத்தில் ‘தனிமை கிடைக்கும்போது மட்டும்’ என்று ஆரம்பிக்கும் இந்த ஸ்பரிசம், போகப்போக ‘தனிமையை நாமே ஏற்படுத்திக் கொண்டு ஈடுபட்டால் என்ன?’ என்று யோசிக்கவும் தூண்டி விடுகிறது.

தனி அறை, பிறர் பார்வைப் படாத ஒதுக்குப் புறம், எவர் இடையூறும் ஏற்படாத சூழல் என்பது போன்ற சந்தர்ப்பங்கள்

கிடைத்தால் உடனே ஈடுபடத் தூண்டும் இந்த வகை காமம்தான் காமம் நம்பர் சிக்ஸ்: பொழுதுபோக்கு காமம் (Occupational Sex.)

‘சுய இன்பம் செஞ்சியோ, நீ அழிஞ்சே போவ!’ என்ற ரீதியில் ஊடகங்களில் சொல்லப்படும் பயமுறுத்தலான பிரச்சாரங்களையும் தாண்டி, இன்னும் பல வாலிப, வயோதிக அன்பர்கள் இந்த வகை காமத்தில் ஈடுபட்டுக் கொண்டேதான் இருக்கிறார்கள்.

அதற்குக் காரணங்கள் பல இருக்கின்றன. அதுபற்றி பேசுவதற்கு முன் மீதமுள்ள காமத்தைப் பார்த்துவிடலாமே…

# 10


# இறுக்கம் தவிர்...



அலுப்பு நிவாரணியாகப் பயன்படுவது பொழுதுபோக்குக் காமம். இப்போது அதற்கு நேர் எதிரான ஒருவகைக் காமத்தைப் பற்றித் தெரிந்துகொள்வோம். அதற்கு முன், கொஞ்சம் அதைப் பற்றிய உளவியல் அடிப்படை ஒன்றை சொல்லி விடுகிறேன்.

ஆடு, மாடு, கோழி, நாய் மாதிரியான பிராணிகளை நிச்சயம் பார்த்திருப்பீர்கள். அவற்றுக்குள் எப்போதாவது சண்டை வந்து பார்த்தது உண்டா?

உதாரணத்துக்கு இரண்டு சேவல்கள் போடும் சண்டையை எடுத்துக் கொள்வோம். சேவல் நம்பர் ஒன் சேவல் நம்பர் டூவோடு இடும் சண்டை இது. இரண்டும் தத்தம் பலத்தை எல்லாம் கொட்டி ஒன்றை மற்றொன்று கொத்தி, இடித்து, முட்டி மோதிக்கொள்ளும். சண்டையின் க்ளைமாக்ஸை, நாம் ஆர்வத்தோடு எதிர்நோக்கும் போது இரண்டு சேவல்களுக்கும் 'மல்டிபிள் பெர்ஸனாலிட்டி டிஸ் ஆர்டர்' வந்தது போல திடுதிப்பென்று 'சண்டையா, நாங்களா? இல்லையே!' என்பது மாதிரி படுசாந்தமாக, மிக மும்முரமாகத் தீனியைக் கொத்தும். இறக்கையைச் சுத்தம் செய்யும். கூடு கட்டும். அதே நேரத்தில் பெட்டைக்கோழி அந்தப் பக்கம் வர நேர்ந்தால் ஓடிப்போய் அதனோடு கொஞ்சிக் குலாவும்.



இத்தனை நேரம் நானா, நீயா என்று சண்டைப் போட்ட சேவல்கள் சண்டைக்கு ஒரு முடிவு தெரியாமல், பாதியிலேயே விட்டுவிட்டு கொஞ்சமும் சம்பந்தமே இல்லாத, அன்றாட நடவடிக்கைகளை படு சிரத்தையாகச் செய்து கொண்டிருக்கிறதே என்று நமக்கு கடுப்பு வரும்.

ஆனால், சேவல்கள் அந்த நேரத்திற்குச் சண்டையை மறந்து வேறு வேலையைப் பார்க்கப் போய்விடும். ‘இதென்னடா முரண்பாடான நடவடிக்கையாக இருக்கே!’ என்று யோசிக்க வைக்கும் இது மாதிரியான சம்பந்தமற்ற நடவடிக்கையை ‘Displacement Activity’ என்கிறோம்.

சில காரியங்களைச் செய்யும்போது ஏகப்பட்ட டென்ஷன், படபடப்பு, இறுக்கம் ஏற்படும். இந்த உச்சகட்ட இறுக்கத்தைவிட்டு மீண்டு வராவிட்டால் அசௌகரியம் நேரும். மனம் சஞ்சலப்பட்டு செய்யும் வேலையிலும் கவனம் சிதறும். இனி செய்யவேண்டிய வேலைகளும் தடைப்படும். இப்படி நேராமல் தடுக்க, கைவசம் உள்ள டென்ஷனான காரியத்தை விட்டு, ரொம்பப் பழக்கமான, நடவடிக்கையை இழுத்துப்போட்டுச் செய்தால் மனம் உடனே சாந்தமாகிவிடும். பதட்டமும் தணிந்து போய்விடும். அடுத்த வேலையைப் பார்க்கும் தெளிவும் ஏற்படும். இதுதான் இந்த டிஸ்பிலேஸ்மென்ட் ஆக்டிவிட்டியின் சூட்சுமம்.

சரி, இது சேவல்களுக்கு ஓ.கே. வாட் அபவுட் பீபிள்?

மனிதர்களிலும் இப்படிப்பட்ட டிஸ்பிலேஸ்மென்ட் ஆக்டிவிட்டிகள்

ரொம்பவே சகஜம். தன்னை அறியாமல் பதட்ட நேரங்களில் மனிதர்களும் பல டிஸ்பிலேஸ்மென்ட் ஆக்டிவிட்டிகளை அனிச்சையாகச் செய்கிறார்கள்.

முக்கியமான நேர்காணலுக்காகக் காத்திருப்பவன் தேவையே இல்லாமல், சரியாக இருக்கும் முடியை அடிக்கடி கோதி சரி செய்வது...

பரீட்சை டென்ஷன் தாங்காத மாணவன், தேர்வுத் தாளின் ஓரத்தில் கொஞ்சமும் சம்பந்தம் இல்லாமல் பொம்மை வரைவது…

தொலைக்காட்சி பார்ப்பது... புகையை ஊதித் தள்ளுவது...

பாக்குப் போடுவது... குளிர்பானம் குடிப்பது...

உலாத்துவது... புத்தகத்தைப் படிக்காமல் வெறுமனே புரட்டுவது...

என்று பல இறுக்க நிவாரண டிஸ்பிலேஸ்மென்ட் ஆக்டிவிட்டிகளை மனிதர்கள் அனிச்சையாகச் செய்துகொண்டு இருக்கிறார்கள். இந்த டிஸ்பிலேஸ்மென்ட் ஆக்டிவிட்டிகளின் வரிசையில் இன்னொரு முக்கியமான நடவடிக்கைதான் காமம் நம்பர் செவன்: இறுக்க நிவாரண காமம்.

போர்முனையில் தினம்தினம் எதிரியோடு மோதும் வீரன், ஓய்வு கிடைத்த மாத்திரமே ஏதாவது ஒரு பெண் கிடைத்தால் போதும் என்று எவளோ ஒருத்தியின் அணைப்பில் தன்னை மறந்து தணிவது...

தினம்தினம் வீட்டு நிர்வாகம், குழந்தைகள் படிப்பு, பெரிசுகளின் பிக்கல் பிடுங்கல், போதாக்குறைக்கு சமையல், சலவை, சீரியல் என்று எத்தனையோ மன இறுக்கங்களோடு மல்லுக்கட்டும் இல்லத்தரசி, எப்போதுடா கணவர் வருவார், அவர் தோளில் சாய்ந்து எல்லாவற்றையும் மறந்து கிடக்கலாம் என்று ஏங்குவது...

‘வேலையில் ஒரே டென்ஷன்! எல்லாத்தையும் ஏறக்கட்டிட்டு கொஞ்ச நேரம் நிம்மதியா இருக்கலாமனுதான்!’ என்று மனைவியை வெளியூருக்கு பேக் அப் பண்ணி’ அவள் கை வளைவில் கவலை மறக்க முயலும் கணவன்.

‘பாடம், படிப்பு, பரீட்சை, செம டென்ஷனப்பா!’ என்று இறுக்க மிகுதியைச் சமாளிக்க, தன்னைத் தானே சமாதானப்படுத்திக் கொள்ளும் வாலிபன்... என்று பலரும் இறுக்க நிவாரணத்துக்குப் பயன்படுத்துவது இந்த சாந்தம் தரும் காமம் நம்பர் செவைனைத்தான்!

வெறும் சருமம், சதைகளின் சேர்க்கை. அதற்கு இத்தனை

பயன்களா என்று வியக்கத் தோன்றுகிறதா? அதற்குள் ஆச்சரியப்பட்டால் எப்படி இன்னும் ஐந்து வகை பாக்கி இருக்கிறதே!

# 11

## நிறைய பெண்கள் = அதிக அந்தஸ்து!



“இந்தப் பொண்ணுங்களோட ஒரே ரோதனையா போச்சுடா மச்சான். சும்மா கொஞ்சம் ஃபிரெண்டலியா பேசுனா போதும். உடனே கண்ணு காட்டுறது, கார்ட் குடுக்குறதுனு கிளம்பிடுறாளுங்க! சே சே, இதுங்ககிட்டேர்ந்து தப்பிக்கிறதுக்குள்ள போதும்போதும்னு ஆயிடுதுடா!" அடுத்த கம்பார்ட்மெண்ட்டில் குமைந்து கொண்டிருந்தான் ஒருவன்.

‘கேட்டியா இந்தக் கொடுமையை!’ என்பது போல என்னை இடித்து, கண்களை உருட்டிக் காட்டினாள் என்னுடன் இருந்த சக தோழி.

‘யார் இந்த ஆடவர் குல திலகம்?’ என்று தெரிந்துகொள்ளும் ஆர்வம் சக தோழிக்கு. ஏதோ முக்கியமான வேலையாகச் செல்வது போல அவன் கம்பார்ட்மெண்ட்டைத் தாண்டிப் போய் திரும்பி வந்தவள், “ச்சு, மஞ்சள் சட்டைப் போட்டிருந்தான். மூஞ்ச பார்க்க முடியல!" என்று அலுத்துக் கொண்டாள்.

அவள் குறையை நிவர்த்தி செய்யவே வந்தவன் போல அந்த மின்னலடிக்கும் மஞ்சள் சட்டைக்காரன் எங்களைக் கடந்து போக, “இவனேதான்!” என்றாள்.

அவனை மைக்ரோஸ்கோப் அடியில் மாட்டிய ஸ்பெசிமனைப்

போல உற்றுப் பார்த்தோம்.

வெடவெட என்று ஒல்லியான தேகம். வளராமல் வம்பு பண்ணிய மெல்லிய அரும்பு மீசை. ஸ்டைலான உடையுடன் திமிரான நடை. எல்லாம் இருந்தும், தன்னம்பிக்கைக் குறைவால் துவண்ட தோள்கள்...

“அடப்பாவி! இத்துணூண்டா இருந்துக்கிட்டு இந்தப் பேச்சு பேசுறானா!" என்று வியந்தாள்.

“இத்துணூண்டா இருக்குறதனாலதான் இந்தப் பேச்சு பேசுறான், பாவம்" என்றதுதான் தாமதம்.

“ஏன், ஏன் அப்படிச் சொன்னே!" என்று என்னை நச்சரிக்க ஆரம்பித்து விட்டாள்.

ஈகோ பற்றியும் அதன் தற்காப்பு நடவடிக்கைகளான ஈகோ Defence Mechanisms பற்றியும் சொல்ல வேண்டியதாயிற்று. “மத்த ஆம்பிளைங்க முன்னாடி தன் ஸ்டேட்டஸை உயர்த்திக் காட்டிக்க அவன் வெச்சிருக்கிற யுக்தி இது.”

“அய்யய்யே! என்ன கண்ட்ராவி யுக்தியோ, இப்ப சின்னப் பையனா இருக்கறதனால இதுமாதிரி இம்மெச்சூர்டா நடந்துக்குறானோ? மெச்சூர் ஆனா சரியாயிடுவானில்ல..." என்று நம்பிக்கையாகக் கேட்டாள் சகா.

“இவனாவது சோட்டா பச்சா. இவனைவிட ரெண்டு மூணு மடங்கு பெரிசுங்ககூட இதையேதான் பண்ணுறாங்க. சில விஷயங்கள்ல எப்பவுமே மெச்சூரிட்டி வர்றதே இல்லை!”

‘யார், என்ன, எப்படி, எப்போது...’ என்று சகா நச்சரிப்பு தொடர, மாச்சு மற்றும் பிச்சு கதையை அவளுக்குச் சொல்ல வேண்டியதாயிற்று.

மாச்சு, பிச்சு இருவரும் ஒரே துறையைச் சார்ந்தவர்கள். தொழிலை ஒன்றாகவே ஆரம்பித்து, பிறகு பிரிந்து நீயா? நானா? என்று போட்டியிட்டுக் கொள்பவர்கள். ஆனால், வெளி விசேஷங்களில் பார்த்துக் கொண்டால், மற்றவர்கள் எதிரில், ‘நாங்கள் இருவரும் ஒரே பெஞ்சில் அடுத்தடுத்த இருக்கைகளில் உட்கார்ந்திருந்த உயிர்த் தோழர்கள்’ என்று நட்பு நயம் சொட்டச் சொட்ட பேசிக் கொள்வார்கள்.

இந்த நட்பு தோற்றத்துக்குள் இருவருக்கும் அப்படி ஒரு பனிப்போர். வீடு, கார், சொத்து, செல்வாக்கு என்பதில் ஆரம்பித்து பெண்கள் விஷயம் வரை...

மாச்சு சரியான ஸ்திரீலோலன். எங்கு கவர்ச்சிகரமான பெண்களைப் பார்த்தாலும் அவர்களை ஆட்கொள்வதே குறியாகத் திரிவான். இப்படி மாச்சு தன் கண்ணில்பட்ட பெண்களைப் புடைத்து, பிடித்தவர்களைப் பொறுக்கி எடுப்பான். ஆனால், பிச்சு, மாச்சு தேர்ந்தெடுத்த அதே பெண்களைக் கவர்ந்து தன் வசப்படுத்தி விடுவான். இப்படி ஒருத்தி ரெண்டு பேரல்ல டஜன் கணக்கில் கைமாறினார்கள் பெண்கள்.



இந்த உலகில் அப்படி ஒன்றும் பெண்களுக்குப் பஞ்சம் இல்லை. பிறகு ஏன் மாச்சு குறிவைத்த பெண்களையே பிச்சு மெனக்கெட்டு பிடித்துக் கொண்டு வந்தான்? காரணம், பெண்ணோடு புணர்வதால் ஏற்படும் சில நிமிட சுகமல்ல. பெண்ணை ஆட்கொள்வதால் ஏற்படும் நெடுநாள் அந்தஸ்து!

பெண்ணுக்கும் அந்தஸ்துக்கும் எங்கு இருந்து வந்தது கனக்ஷன் என்று திகைக்கிறீர்களா?

மற்ற விலங்குகளுக்கு எந்தச் சம்பந்தமும் இல்லைதான். ஆனால், வானர இனத்தைச் சேர்ந்த சிம்பன்ஸி, கொரில்லா, பொனேபோ, மானுடர்கள் ஆகிய விலங்குகளுக்குள் ஒரு பொதுவான மரபு இது. பெண்ணை அடைவதை ஓர் அந்தஸ்தைக் அதிகரிக்கும் செயலாகவும், பெண்ணை விட்டுத் தருவதை ஓர் அந்தஸ்தைக் குறைக்கும் செயலாகவும் கருதுகின்றன இந்த வானரங்கள்.

சிம்பன்ஸிகளுக்குள் மூளும் அநேக சண்டைகளுக்குக் காரணமே ‘இந்தப் பெண் யாருக்கு?’ என்ற போட்டிதான். மானுடத்திலும் அதே நிலவரம்தான். ஸ்பார்டா தேசத்து ராணி ஹெலன், டிராய் இளவரசன் பாரிஸோடு ஓடிப்போனபோது அவள் கணவன் கவலைப்பட்டது மனைவி போனது பற்றி அல்ல. மானம் போனது பற்றி மட்டும்!

அவ்வளவு ஏன், அவதார புருஷனான ராமனும், லங்கேஸ்வரனான இராவணனும்கூட போரிட்டது ஆஃப்டரால் ஒரு பெண்ணுக்காகத்தானே!

ஆக, மானுடர்களின் வானர மரபணுக்களில் பெண் = அந்தஸ்து என்கிற ஈக்குவேஷன் மிக வலிமையாக ஊன்றி இருக்கிறது. அதே ஈக்குவேஷனைக் கொஞ்சம் விஸ்தரித்து, நிறைய பெண்கள் = நிறைய அந்தஸ்து என்கிற ஈக்குவேஷனையும் உண்டாக்கி இருக்கிறது.


இப்படியாக, இத்தனை தீவிரமாக மானுடர்கள் தங்கள் அந்தஸ்தை அதிகரிக்க ஈடுபடும் புணர்ச்சிதான், காமம் நம்பர் எட்டு: அந்தஸ்து காமம் (Status Sex)

இந்த அந்தஸ்து காமத்திலேயே நிறைய பிரிவுகள் இருக்கின்றன. ஆனால், அதற்கு முன்னால் இன்னும் நான்குவகை காமங்கள் மீதம் இருக்கிறதே...

0

# 12

## கற்க கலவியுற...



‘எட்டு வகை காமத்தைப் பற்றி தெரிந்து கொண்டாயிற்று. இனி ஒன்பதாம் வகை காமத்தைப் பற்றி தெரிந்துகொள்ள இந்த இரண்டு கதைகளைக் கொஞ்சம் படியுங்கள்.

கதை நம்பர் ஒன்:

இன்னும் ஒரே வாரத்தில் இளவரசன் ராமாவுக்குத் திருமணம். இளவரசன் ராமா என்றதும் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி என்று எண்ணிவிட வேண்டாம். இந்த ராமா சியாம் நாட்டின் இளவரசன். சியாம் என்று அந்தக் காலத்தில் அழைக்கப்பட்ட தாய்லாந்தின் அரச குடும்ப ஆண்களுக்கு ராமா என்று பெயர் வைப்பதுதான் மரபு. அந்த வரிசையில் நமது கதாநாயகன் ராமா நம்பர் நான்கு.

ராமாவுக்கு அப்போது பதினைந்து வயது. அந்தக் காலத்து வழக்கம் போல அவனுக்கும் சிறு வயதிலேயே திருமணம் புரிய அவன் பெற்றோர் எண்ணினர். அப்போது பார்த்து அடுத்த நாட்டு இளவரசியின் வரனும் கைகூட திருமணம் நிச்சயமானது.

ஆனால், இதில் ஒரு பிரச்னை இருந்து. ராமா வாள் வீச்சு, யானை ஏற்றம், வரி விதிப்பு... போன்ற புற விஷயங்களில் புலி. ஆனால், மனைவியை எப்படி மகிழ்விப்பது என்பது மாதிரியான அக விஷயங்களில் வெறும் பூஜ்யம்! மருந்துக்குக் கூட இதைப் பற்றி

கொஞ்சமும் அறிந்திராத வெகுளி.

இந்த அனுபவக் குறைவால் அவன் ஏதாவது சொதப்பி வைத்துவிட்டால், புகுந்த வீடு வரும் புது இளவரசி கோபித்துக் கொள்வாள். அரச குடும்பமே வேதனைக்கு உள்ளாகுமே!

இவ்வளவும் யோசித்து, இப்படி எதுவும் ஏடாகூடமாகி விடக் கூடாதே என்பதற்காக ராமாவை ராஜமரியாதையுடன் ஒர் உல்லாசபுரிக்கு அழைத்துச் சென்று, கலவியல் தொழிலாளி ஒருத்தியின் பொறுப்பில் அவனை விட்டனர்.

திருமணத்திற்கு முன் ராமாவுக்கு சகல விதமான கலவியல் பயிற்சியும் அளித்து அவனை ஒரு கைதேர்ந்தக் காதலனாக மாற்றித் தரும்படி அந்தக் கலவியல் தொழிலாளிக்குக் கட்டளை இடப்பட்டது.

ராமா ஒரு வாரம் அங்கேயே தங்கியிருந்து முழுப் பயிற்சியும் மேற்கொண்டு, இனி இவன் இல்வாழ்க்கைக்குத் தகுதியானவன்!' என்ற சர்டிஃபிகேட் பெற்ற பிறகே மீண்டும் அரண்மனைக்கு அழைத்துச் செல்லப்பட்டான். பிறகென்ன ராமாவும் இல்லத்தரசியும் குடும்ப வாழ்க்கைத் துவங்கிய சில காலத்திலேயே ராமா நம்பர் ஐந்து அவதரித்தான்! இது சம்சாரத்திற்காகத் தன்னைத் தயார்படுத்திக் கொண்டவனின் கதை.

கதை நன்பர் டூ:

சன்யாசத்திற்காகத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொண்ட ஒருவனின் கதையும் இருக்கிறது. அவன்தான் நம் கதை நம்பர் டூ-வின் கதாநாயகன் சித்தார்த்தா.

சித்தார்த்தா என்றவுடன் கௌதமனாகப் பிறந்து பிறகு புத்தராக மாறிய அந்த இளவரசன் என்று எண்ணிவிட வேண்டாம். இது வேறு சித்தார்த்தா.

இந்த சித்தார்த்திற்கும் புத்தரைப் போலவே வாழ்க்கையை முழுமையாகப் புரிந்துகொண்டே ஆக வேண்டும் என்று வேட்கை இருந்தது. மகன் இப்படி அதிபுத்திசாலியாக இருப்பதை உணர்ந்த அவன் அப்பா, அவன் அறிவுப்பசியைத் தனித்து லௌகீக வாழ்க்கையில் ஈடுபடுத்த விரும்பினார். ஆனால், அவர் முயற்சிகள் எல்லாவற்றையும் மீறி சித்தார்த்தா துறவறம் மேற்கொண்டே தீருவது என்று தீவிரமாக இருந்தான்.

அவனைத் தடுப்பதில் அர்த்தமே இல்லை என்று புரிந்துகொண்ட

அப்பா, அதற்கு மேல் அவனைக் கட்டுப்படுத்தவில்லை. மற்ற துறவிகளை விட இவன் கொஞ்சம் அறிவுக் களஞ்சியமாக இருந்ததால் எல்லாவற்றையும் துருவித் துருவிக் கேட்டான். இவ்வளவு புத்திசாலித்தனம் உனக்கே ஆபத்து என்று கூட சிலர் எச்சரித்தார்கள். போகப்போக அவனுக்கு சமண மதம் சலித்துவிட, அடுத்து பௌத்த மதத்தைப் பற்றி தெரிந்துகொள்ளப் புறப்பட்டான்.



அப்போது ஒருவர், ‘எதை நீ துறந்தாய், உன்னைத் துறவி என்று ஏற்றுக்கொள்ள? மது அருந்தியது உண்டா? மாது அறிந்தது உண்டா...?’ என்று கேள்விக் கேட்டுக் குட்டையைக் குழப்ப, ‘சரி, அனுபவித்துவிட்டு துறந்து விடுகிறேன்’ என்று சித்தார்த்தா மரவுரி களைந்து மானுட உடை

அணிந்து நகருக்குப் போனான். மிகப் பிரசித்தி பெற்ற ஒரு விலைமாதுவான கமலாவிடம் போய், 'என்னை உன் மாணவனாக ஏற்றுக்கொள். உன் கலைகளை எனக்குக் கற்றுக்கொடு' என்று அப்ளிகேஷன் போட, கமலாவும் அவனைத் தன் மாணவனாக ஏற்றுக்கொண்டாள். மது, மங்கை, மாளிகை வாசம் என்று சகல சுகங்களையும் அவனுக்கு அறிமுகப்படுத்தி வைத்தாள்.

அதைத் தெரிந்துகொண்டு, லௌகீக சுகங்களை அனுபவித்த பிறகு சித்தார்த்தா அவற்றை எல்லாம் துறந்தானா? இல்லையா? என்றெல்லாம் அறிவு ஜீவித்தனமாக ரூட் மாறிப் போக வேண்டாம். ஓவர் டூ நம்ம மேட்டர், காமம் நம்பர் 9: கலவிக் கல்வி.

மானுடம் மாதிரி பரிமாண வளர்ச்சியின் உச்சத்தில் இருக்கும் விலங்குகளுக்கு மூளையின் அமைப்பே ரொம்பவும் நேர்த்தியானது.

மீன், தவளை, முதலை, மயில்... போன்ற முட்டையிடும் மிருகங்களுக்கு உடல் சேர்க்கை வாழ்வியல் விஷயங்கள் வெறும் ஓர் உந்துதலின் அடிப்படையில் அமைந்தவை.

ஆனால் யானை, பாண்டா, சிம்பன்ஸி, மானுடம் மாதிரியான பாலூட்டும் உயர் பிராணிளுக்கு வெறும் உந்துதல் மட்டும் போதாது.

உடற்சேர்க்கை, உணவு உட்கொள்ளுதல், வேட்டையாடுதல், குட்டிகளை வளர்த்தல்... போன்ற எல்லா நடவடிக்கைகளும் பயின்றால் மட்டுமே சாத்தியம் ஆகின்றன. பயிலுதலின் அவசியத்தை விளக்க 'சீசீ உதாரணத்தைச் சொல்லலாம்.

*சீசீ* என்றதும் தமிழின் உதாசின இரட்டைக் கிழவி என்று நினைத்துவிடாதீர்கள். இந்தச் *சீசீ* என்றால் சீனத்து மொழியில் 'அழகான சின்னப் பெண்' என்று அர்த்தம். இந்தப் பெயர் கொண்ட அந்த அழகான சின்னப் பெண் யார் தெரியுமா? பீஜிங் ஜூவில் வாழ்ந்து வந்த அரிய வகை ராட்சத பாண்டா கரடிதான்!

இது அழிவின் விளிம்பில் இருக்கும் விலங்கு வகை என்பதால் ஏகப்பட்ட பாதுகாப்பு. தனிமையில் வளர்ந்த அவளது உலகில் கூண்டுக் கம்பிகள், பார்வையாளர்கள் தவிர வேறு யாருமில்லை. *சீசீ* பருவமடைந்து பெரியவளானபோது, அவளை ஓர் ஆண் பாண்டாவோடு இணைத்து அந்த அரிய இனத்தைப் பெருக்குவதற்குப் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

அப்போது மாஸ்கோ ஜூவிலிருந்த 'அன்அன்' என்ற ஆண் பாண்டாவைப் பற்றிய தகவல் வெளி வர, *சீசீ* மாஸ்கோவிற்குக்

கொண்டு செல்லப் பட்டாள். அங்கே ‘அன்அன்’, ‘*சீசீ*’ இருவரும் தனிமையில் சந்தித்தும் சந்ததி மட்டும் உருவாகவே இல்லை.



காரணம், தனிமையிலே வளர்க்கப் பட்டதால், தன் இனத்தின் பழக்கவழக்கங்களைக் கற்றுக்கொள்ள சந்தர்ப்பமே இல்லாது போன அந்த இரண்டு பாண்டாக்களுக்கும் இனம் சேருவது எப்படி என்று தெரிந்திருக்கவில்லை. கடைசிவரை இந்த ஜோடி குட்டிகளை ஈனாமலே போக, இறுதியில் செயற்கை முறையில் பாண்டா அபிவிருத்திச் செய்யப்பட்டது.

இப்படிப்பட்ட சிக்கல்கள் வந்து வம்சம் தடைபட்டுப் போய்விடக் கூடாது என்றுதான் காலங்காலமாக மானிட வர்க்கத்தினர் கல்வெட்டு, கோயில் சிற்பம், கிளுகிளு படங்கள் என்று பலப்பல ஊடகங்களின் வாயிலாகக் கலவிக் கல்வியை சிலபஸ் போட்டுக் கற்றுக்கொடுத்துக் கொண்டே இருக்கிறார்கள். சராசரி அறிவுத்திறன் உள்ளவர்களுக்கு இந்தக் கேள்வி ஞானமே போதும். துணை வாய்த்த பிறகு வாரிசு உருவாக்க உதவும். ஆனால், அனுபவ ஞானமிருந்தால்தான் ஆச்சு என்று அடம் பிடிக்கிறவர்களும் இருக்கத்தானே செய்கிறார்கள்! இப்படி அவசியமற்று ஆபத்தோடு விளையாடுகிறவர்களை அடக்கத்தான் எச்.ஐ.வி. வைரஸ் மாதிரியான எம தூதர்கள் காத்திருக்கிறார்கள்!

# 13

## மன்மத மாந்திரீகம்!



**அ**திர்ச்சியூட்டும் அடுத்த காம வகை பற்றி இப்போது பார்ப்போம்.

‘கொஞ்சம்கூட அறிவே இல்லாத ஜனங்களா இருக்காங்களே! இவங்களுக்கு எல்லாம் அடிப்படை அறிவை சொல்லித் தர்றதுக்குள்ள உயிர் போயிடும் போலிருக்கே’ என்று அந்த சமூக மருத்துவ இயல் நிபுணர் புலம்பினார்.

"ஒய்? வாட் ஹாப்பெண்ட?”

“அந்தக் கொடுமைய ஏம்மா கேக்குற? மூட நம்பிக்கைக்கு ஓர் அளவே இல்லாமப் போச்சு! எதைத்தான் செய்யுறதுன்ற அறிவே இல்லாமல், ஆட்டு மந்தை மாதிரி ஒருத்தன் பண்ணுற தப்பை அப்படியே எல்லாரும் ரீப்பீட் பண்ண இவங்களுக்கு எதுக்கு ஆளாளுக்கு ஒரு தனித்தனி மூளை?”

“அப்படி என்ன சார் ஆச்சு?”

“என்ன ஆச்சா? என்ன பண்ணி இருக்காங்க தெரியுமா? ஒரு குறிப்பிட்ட மிருகத்தோட உறவு வெச்சுக்கிட்டா பால்வினை நோய், எச்.ஐ.வி. மாதிரியான பிரச்னைகள் போயிடும்னு எவனோ கட்டிவிட்ட வதந்திய நம்பி, எல்லா மடப் பசங்களுமே போய்... சை! அந்த ஊர் சுத்துவட்டாரத்துல இருந்த அந்த மிருகங்கள் அனைத்தும்

பொத்துபொத்துனு விழுந்து செத்துப் போயிடுச்சாம். ஒரே அடியா எப்படிச் செத்ததுன்னு போஸ்ட் மார்ட்டம் பண்ணிப் பார்த்தப்பதான் இந்த மூடநம்பிக்கைய நம்பி இந்த மடச் சாம்பிராணிங்க பண்ண காரியமே தெரிய வந்தது. சே சே, இந்த மாதிரிப்பட்ட ஜனங்களை எல்லாம் என்ன பண்ணா தகும்!”



அவர் சினம் ஆற அவகாசம் தந்து நான் அமைதி காத்தேன்.

“டி.வி. ரேடியோ, பத்திரிகைனு செக்ஸ் எஜுகேஷன் பத்தி எவ்வளவோ சொல்லுறோம் அதெல்லாம் அவங்க மனசுல பதியமாட்டேங்குது. ஆனா, இந்த மாதிரி மட்டமான பொய் வதந்தி முட்டாள்தனமான மூடநம்பிக்கை மட்டும் எப்படிதான் டக்கு டக்குனு பதிஞ்சு போகுதோ!

இந்த மாதிரி அறியாமைதான் எல்லாப் பிரச்னைக்கும் காரணம்னு செக்ஸ் எஜுகேஷன் குடுக்க எவ்வளவு போராடுறோம்?

செக்ஸ்ன்னாலே எல்லாரும் உணர்ச்சி வசப் படறாங்க,எஜுகேஷனை கோட்டை விட்டுடுறாங்க. இதுக்கு நடுவுல எச்.ஐ.வி. வேற எமனாட்டம் பரவிக்கிட்டே போகுது. அதுக்கு ஒரு காண்டோமை யூஸ் பண்ணித் தொலையுங்கன்னா அதைச் செய்ய அவ்வளவு தயங்குறாங்க. ஆனா, மிருகம்னுகூட பார்க்காம இதைப் போய்... இதுக்கு மட்டும் கொஞ்சமாவது தயங்குறாங்களா!"

அந்த டாக்டரின் ஆதங்கம் நியாயமானதுதான். பாலியல் நோய்கள் ரகசியமாக... ஆனால், ராட்சசத் தனமாகத் தாக்குதல் புரிந்துகொண்டே போகும் இந்த வேகத்திற்கு நாட்டின் பொருளாதாரத்தை உயர்த்தும் ஊன்றுகோல்களான இளைஞர்கள் எல்லாம் இரையாகிவிட்டால் நாம் என்ன ஆவது? நாடு என்ன ஆவது?

இந்த அச்சுறுத்தும் எச்.ஐ.வி. அசுரனைச் சமாளிக்க முடியாமல் எல்லோரும் திண்டாடிக் கொண்டிருக்கும் இந்த நேரத்தில் மிருகத்துடன் கலவி கொள்ளும் வக்கிரமான மூட நம்பிக்கை வேறு!

ஆனால், மானுட வரலாற்றை ஒரு தரம் புரட்டிப் பார்த்தால்' மானுட கலவியியல் நடைமுறைகளில் இது முதல் மூடநம்பிக்கை இல்லை தெரியுமா?

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் கொடிகட்டிப் பறந்த கிரேக்க ஏகாதிபத்தியத்தின் பிரஜைகளிடம் இதுபோன்ற ஒரு மடத்தனமான மூடநம்பிக்கை இருந்தது. கிரேக்கர்களின் இஷ்ட தெய்வம் அஃப்ரதைதி என்கிற பெண். 'அஃப்ரதைதி அழகு, செல்வம், மக்கட்பேறு, கலவியியல் மாதிரியான விஷயங்களுக்கு விசேஷமான தெய்வம். அஃப்ரதைதியின் அருள் இல்லாமல் வாழ்க்கையே இல்லை என்று கிரேக்கர்கள் நம்பினர். அவளின் ஆசியை நேரடியாகப் பெற அவளது ஆலயத்திற்குப் போவார்கள். அந்த ஆலயத்தில் திருப்பணி செய்யும் பூசாரினியுடன் உறவு கொண்டால், அஃப்ரதைதியின் அருள் கிட்டும் என்ற நம்பிக்கை அப்போது மேலோங்கி இருந்தது. ஆண், பெண், கிழவர், குமரா என்ற பாகுபாடின்றி பலரும் ஆலய வாசலில் வரிசை கட்டிக் கொண்டு நிற்பார்களாம். அஃப்ரதைதியின் திருப்பணியாளருடன் உறவுகொள்வது என்பது அந்தக் காலத்தவரின் பக்தியைக் குறிக்கும் செயலாகவே கருதப்பட்டதாம். இந்த மூடநம்பிக்கையால் சிஃபிலிஸ் மாதிரியான பாலியல் தொற்று நோய்கள் உருவாயின என்று இப்போது புரிந்திருந்தாலும், பண்டைய கிரேக்கர்கள், பாவம், அறியாமையில் இதனை ஒரு நேர்த்திக்கடனாகவே நினைத்தார்கள்.

கிரேக்கர்கள் இதுமாதிரி மூடநம்பிக்கையில் மூழ்கியிருந்த அதேசமயம் எகிப்து நாட்டு மக்களிடம் வேறொரு விதமான கலவியல் மூடநம்பிக்கை மண்டிக் கிடந்தது. கிட்டதட்ட இரண்டாயிரம் ஆண்டுகளாக .ஃபேரோ மன்னர்களால் ஆளப்பட்ட தேசம் எகிப்து, அதனாலேயோ என்னவோ அரச பதவி, சிற்றரசு பதவி ஆகிய ஆட்சி இடங்களைப் பிடிக்க அந்த ஊர் மக்களிடம் ஏகப்பட்ட போட்டி நிலவியது.



அந்தப் போட்டியில் ஜெயிக்க ஒரு மூடநம்பிக்கையை நம்பினார்கள் எகிப்தியர்கள். புதிதாகப் பூப்படைந்த இளம் பெண்ணோடு, குறிப்பிட்ட நாள், கிழமை, நட்சத்திரம் பார்த்து உறவு கொண்டால் போதும்... ஆட்சி, அந்தஸ்து, ஆள் பலம் எல்லாமே இயல்பாகக் கிடைத்துவிடும். என்ற மூட நம்பிக்கைதான். என்ன அபத்தம்!

கிரேக்கம், எகிப்தில் இந்தக் கூத்து என்றால் இந்தியாவிலும் இன்னொரு தமாஷான மூட நம்பிக்கை இருந்தது. பூத உடலோடு உறவு கொண்டால், யாருக்கும் கிடைக்காத அதிஷ்டமா சித்திகள் கிட்டும் என்று சில வகை நாகா துறவிகள் நம்பினார்கள்.

உண்மையில் பதவி, ஆயுள்... போன்ற இன்னும் பிற விஷயங்களுக்கும் உடல் சேர்க்கைக்கும் எந்தச் சம்பந்தமே இல்லை. ஆனால், ஒருவகை மேஜிக்கினால் இரண்டையும் சம்பந்தப்படுத்தி மானுடர்கள் ஈடுபடும் இந்த வகை காமம்தான், காமம் நம்பர் 10: மாந்திரீக காமம்’ அல்லது அக்கல்ட் செக்ஸ். (Occult sex)

# 14

## கலையாத தவம்!



இன்பமூட்டும் காமத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்கு முன் மூன்று முக்கி ய மனிதர்களைப் பற்றிய தகவல்களைத் தெரிந்துகொள்வோம்.

கௌசிகன்:

இவர் சத்ரிய வம்சத்தைச் சேர்ந்த ஒரு ராஜா. போர் வலிமையை விட, தவ வலிமையே மேல் என்று புரிந்தது கொண்டார். எனவே, தானும் ஒரு முனிவராக மாற வேண்டும் என்ற ஆசை அவருக்கு. ஆனால், அந்தக் காலத்தில் காமம், குரோதம், லோபம், மோகம்... போன்ற ரஜஸ் குணங்களைக் கொண்ட மனிதர்களால் சாத்வீக மார்க்கத்தை அடையவே முடியாது’ என்று பலர் நம்பினர். அந்த நம்பிக்கையைப் பொருட்படுத்தாமல் கௌசிகன் கடுந்தவத்தில் ஆழ்ந்தார். கர்வம், கோபம், இரக்கம், பந்தபாசம்... என ஒவ்வொரு உணர்ச்சியாக வென்றுகொண்ட போனார்.

இத்தனை தீவிர தவத்தைப் புரிந்துகொண்டே போனால், இவர் உண்மையிலேயே ஒரு பிரம்ம ரிஷி ஆகிவிடுவாரோ? என்று பயந்த எதிராளிகள் அவர் தவத்தைக் கலைக்க ஒரு வழியைத் தேடினர். மேனகை என்ற பெண்ணை ஏவினர். எத்தனையோ உணர்ச்சிகளை அடக்கி ஆட்கொண்ட கௌசிகனால் காமத்தை அடக்க முடியவில்லை.

தவம் கலைந்து போனது. கடைசியில் தன் தவறைத் திருத்திக் கொண்டு கௌசிகன் என்கிற சாதாரண அரசன், விஸ்வாமித்ரன் என்கிற ராஜரிஷி ஆனார். எப்போது? காமம் என்கிற உணர்வை வென்ற பிறகுதான்!



சித்தார்த்தர்:

விஸ்வாமித்ரரின் கதை இப்படி என்றால், அவருக்குப் பின்வந்த காலத்தில் தவத்தில் மூழ்கிய சித்தார்த்தருக்கும் இதே சோதனைதான் நேர்ந்தது. தன் அரச பதவி, மனைவி, மகன், ஆசாபாசம், விருப்பு வெறுப்புகள் எல்லாவற்றையும் துறந்து, ஞானம் மட்டும்தான் குறி என்று அரச மரத்தடியில் அமர்ந்தார் சித்தார்த்தர். மரா என்கிற மாயப் பிசாசு, சித்தார்த்தரை சீண்டிப் பார்க்க பல பேரழகிகளின் உருவங்களை உலவ விட்டானாம். சபலம், மோகம், காமம் எல்லாம் உணர்ந்தும், அரும்பாடுபட்டு அதை அடக்கிய பிறகுதான் சித்தார்த்தார் என்கிற சாமானியன், கௌதம புத்தர் எனும் மகான் ஆனார்.



இதெல்லாம் இரண்டாயிரத்து சொச்சம் ஆண்டுகளுக்கு முன் நடந்த கதைகள்தானே இன்றைய நிலைக்கு வாரும் என்கிறீர்களா?

சரி; இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு மதகுருவின் கதையை எடுத்துக் கொள்வோம்.

தலாய் லாமா:

ஒரு சாதாரண குடியானவக் குடும்பத்தில் பிறந்த லாமா தோன்துப் இன்றைய தேதிக்கு மிகப் பரவலாக மதிக்கப்படுகிற மகானாக உயர்ந்திருக்கிறார். உலகமே அவரை ‘தலாய் லாமா’ என்று போற்றி வணங்குகிறது. இந்த உயரிய பதவியை அடைய அவர் எதையாவது இழக்க வேண்டி இருந்ததா? என்று ஒரு பிரபல ஆங்கலப் பத்திரிகைப் பேட்டியின்போது கேட்கப்பட்டது. அதற்கு தலாய் லாமா ஒளிவு மறைவு இன்றி சொன்னது என்ன தெரியுமா?! “ஆமாம். செக்ஸ் என்றால் என்ன என்று தெரிந்துகொள்ளும் பாக்கியத்தை இழந்தேன். அது ஒரு பெரிய இழப்பு!”

ஆக, விஸ்வாமித்ரர் முதல் தலாய் லாமா வரை காமத்தைத் துறந்தால்தான் முக்தி என்று மானுடர்கள் எண்ண என்ன காரணம்?

பிள்ளை பிறக்க உதவும் இனச்சேர்க்கை காமம்.

ஜோடி சேரத் தூண்டும் இரண்டாம் வகை காமம்,

ஜோடி நிலையை நீடிக்கச் செய்யும் மூன்றாம் வகை காமம்.

உடலின் அடிப்படைத் தேவையாக ஊறிப்போன நான்காம் வகை காமம்,

‘வேறு எப்படியெல்லாம் விஸ்தரிக்கலாம்?’ என்று ஆராயத் தூண்டும் ஐந்தாம் வகை காமம்.

பொழுதைப் போக்க உதவும் ஆறாம் வகை காமம்,

இறுக்கம் தவிர்க்க உதவும் ஏழாம் வகை காமம்,

அந்தஸ்தை அதிகரிக்க உதவும் எட்டாம் வகை காமம்,

கலவிக் கல்வியை மேம்படுத்தும் ஒன்பதாம் வகை காமம்,

மாந்திரீக சக்திகள் தருவதாய் நம்பப்படும் பத்தாம் வகை காமம்...

இந்த பத்து வகைகளுமே, காமத்தின் இரண்டாம் தரப் பிரயோகங்களே. இவை எல்லாவற்றையும் கடந்து, மானுடர்கள் மிகவும் விரும்பிக் காமுற இன்னொரு காரணம் இருக்கிறது. அதுதான் ‘இன்பம்.’

வேறு எந்த நடவடிக்கைக்கும் இல்லாத இந்த ‘இன்ப’ உணர்வு, காமத்திற்கு மட்டும் கூடுதலாக இருக்கிறது. அதனால்தான் ‘எங்கே, எப்போது, எப்படியாவது’ என்று இதை ஒரு பிரதான நடவடிக்கையாக மானுடர்கள் மேற்கொள்கிறார்கள்.

இப்படி எந்தக் கிளைக் காரணத்திற்காகவும் இல்லாமல், வெறும் இன்பம் என்கிற வேர் காரணத்திற்காக வேட்கையில் ஈடுபடும் இந்த வகை காமம்தான், காமம் நம்பர் 11: இன்பமூட்டும் காமம் (Self Rewarding Sex)

இந்தக் காமம் தரும் போதைதான் இருப்பதிலேயே மிகச் சக்தி வாய்ந்த போதை. இதை அடக்கத் தெரிந்தால்தான் மறுமையிலிருந்து முக்தி பெற முடியும் என்று மானுடர்கள் நம்புகிறார்கள்.

மறுமையா? இதென்ன சம்பந்தமின்றி மறுமையைப் பற்றியெல்லாம் பேசிக்கிட்டு என்று ஆடசேபிக்கிறீர்களா? Everything in this universe is related to every other thing in this universe என்பார்கள். அதுபோல மறுமைக்கும், மோகத்துக்கும் எக்கச்சக்க சம்பந்தம் இருக்கிறது.

# 15

## உலகின் முதல் தொழில்!



மானுடர்கள் வானர இனத்தைச் சேர்ந்தவர்கள்தான் என்று உறுதியான பிறகு, மானுட நடத்தையைப் புரிந்துகொள்ள வானர நடத்தையை உற்றுக் கவனிக்கும் Primatology என்கிற தனித்துறை உருவானது. இப்படி Primates என்கிற இந்த வானரங்களைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக சிம்பன்ஸி, கொரில்லா, பொனோபோ ஆகிய வானர வகைகளை ஆராய்ச்சிக் கூடத்திற்கு விஞ்ஞானிகள் கொண்டு வந்தார்கள். பலப்பல சோதனைகளை நடத்தி, இந்த வானரங்களின் குணாதிசயங்களைப் புரிந்து கொள்ள முயன்றார்கள். பரிசோதனைகளின் முடிவுகளைப் பார்த்ததும், ‘அடேங்கப்பா! மனிதர்களைப் போலவே இருக்கிறதே!’ என்று வியக்க நேர்ந்தது.

அப்படி ஒரு பரிசோதனையில் ஓர் ஆண் சிம்பன்ஸிக்கு மட்டும் ஒரு பெரிய தர்பூசணி பழம் தரப்பட்டது. அந்த ஆணிடம் தர்பூசணி இருப்பதைப் பார்த்ததும் உஷாரான ஒரு பெண் சிம்பன்ஸி ஓடிவந்து அந்த ஆணை நெருங்கி, நைஸ் பண்ணி, அதற்குப் பேன் பார்த்து, தலை கோதி, கொஞ்சி, கண்டுகொள்ள ஆரம்பித்தது. அந்த ஆண் இதிலேயே அசந்துகிடக்க, தர்பூசணியை அபேஸ் செய்துகொண்டு போய்விட்டது பெண் சிம்பன்ஸி!



அதைப் பார்த்த விஞ்ஞானிகளுக்கு இன்னொரு யோசனை தோன்ற, அதே மாதிரி ஒரு தர்பூசணியை ஒரு பெண் சிம்புக்குக் கொடுத்துப் பார்த்தார்கள். இந்த முறை அதைக் கவனித்த ஓர் ஆண், ஓடிப்போய் தர்பூசணிக்காரியைத் தாஜா செய்து, தகராறு பண்ணி, பழத்தைத் தட்டிப் பறிக்க முயன்றது. இதைத் தொடர்ந்து வானரங்களின் வேறு பல விசித்திர நடத்தைகளை விஞ்ஞானிகள் ஆராய ஆரம்பித்தார்கள்.

மற்ற எந்த ஜீவராசிகளிடமும் இல்லாத இந்தப் பழக்கம் இப்படி அப்பட்டமாக எதிர்ப்பாலின ஆசாமியைக் கவர்ந்து, காரியத்தைச் சாதிக்கும் இந்தத் தன்மை வானர குலத்துக்கு மட்டும்தான் உண்டு!

வானர குலத்திலேயே மிக அதிக எண்ணிக்கையில் உலவி வந்து கொண்டிருக்கும் மானுடர்களுக்கும் அதே தன்மை உண்டு. பின்னே, சும்மாவா! நிலம், நீர், வரவர வாயுகூட என்று இயற்கையில் அமைந்த பஞ்சபூதங்களுக்கு ஒரு விலையை நிர்ணயித்து வணிகம் செய்யும் தன்மை கொண்டவர்களாயிற்றே! இந்த வளங்களுக்கே விலை உண்டு

என்றால் சுகங்களை மட்டும் விட்டு வைப்பார்களா! அதிலும் இந்தச் சுகங்களில் வேறு 11 வகை இருந்ததே!

ஆனால், இந்தப் பதினோரு வகை கலவுறவுக்கும் விலை பேசிவிட முடியாதே. இனப்பெருக்கம், ஜோடி சேர்க்கை, ஜோடி நீடிப்பு போன்ற காமம் நம்பர் ஒன்று. இரண்டு, மூன்று எல்லாம் ஒரு நிலையான உறவின் மேம்பாட்டு முறைகள் என்பதால் அவற்றுக்கு அப்பட்டமான விலை நிர்ணயம் சாத்தியமில்லை.

ஆனால், இந்த மைனஸ் மூன்றைத் தவிர மீதமுள்ள எட்டுவகை காமங்களும் பந்தபாச அடிப்படையோடு நிகழ்வதில்லை என்பதால் இவற்றுக்கு விலை பேசமுடியும். இப்படிப் பொருளாதார அனுகூலத்திற்காக ஈடுபடும் காமம்தான், கடைசி வகை காமம் நம்பர் பன்னிரெண்டு.

காசுக்குக் கலவி என்ற இந்த வகை கமர்ஷியல் செக்ஸ்தான் உலகின் முதல் தொழில். காசு பணம் என்கிற உருவகம் மனித மூளையில் உருவாவதற்கு முன்பே 'பொருளுக்காகப் புணர்ச்சி' என்று பண்ட மாற்று முறையில் நடந்தது. இது மானுட வரலாற்றின் மிகப் பழமையான தொழிலும்கூட!

இந்த கமர்ஷியல் செக்ஸில்கூட இரண்டு கிளைப் பிரிவுகள் உள்ளன. ஒன்று 'கலவிக்கு விலை' என்ற நேரடி விபச்சாரம். இன்னொன்று அதன் மேலோட்டத்தை மட்டும் மிகைப்படுத்திக் காட்டும் 'கவர்ச்சிக்கு விலை' என்ற ராஸ லீலை!

இப்படிப் பொருள் செலவழித்துப் புணரும் ஒரே ஜீவராசி மானுடம்தான்! உலகில் வேறு எந்த மிருகத்திற்கும் இல்லாத ஒரு வினோத பழக்கமாக இந்த மானுடர்கள் மட்டும் காமத்திற்கு இத்தனை முக்கியத்தை ஏன் தருகிறார்கள்?

ஏனென்றால், மற்ற மிருகங்களுக்கு காமம் என்றால் 'பிள்ளை பெற மட்டும்' என்ற மனப்பான்மை இருப்பதால் அவற்றுக்குக் காமம் என்பது ஒன்லி ஒன் வகை.

ஆனால், மானுடர்களுக்கு இனப்பெருக்கத்தைத் தவிர, இதர பல இனம் சேரும் காரணங்கள் இருப்பதால், அவர்களுக்குக் காமம் என்பது ஒரு டஜன் வகை!

மற்ற மிருகத்திற்கு ஒரே ஒரு காரணம், மானுடத்துக்கு மட்டும் ஒரு டஜன் காரணம் என்றால் இயற்கைக்கு மானுடர்களின் மீது ஒரு தனி பிரியம் ஏற்பட்டு அந்தத் தாராளத்தில் 'வெச்சிக்கோ, ஒரு டஜன்! வெச்சி

விளையாடு, என்ஜாய்!' என்று கணக்கு வழக்கு இல்லாமல் அள்ளி வழங்கி விட்டதா?

அதுதான் இல்லை! எல்லாம் கணக்காக... காரணத்திற்காக... நிறைய அர்த்தங்களோடு செய்த ஏற்பாடுதான் இது.

என்ன கணக்கு? என்ன காரணம்?

# 16

## மனிதன் ஜெயித்த ரகசியம்!



மற்ற மிருகங்களுக்கு ஒரே ஒரு வகைதான் காமம். ஆனால், மனிதர்களுக்கு மட்டும் ஒரு டஜன் வகை காமம். இந்த இயற்கைக்கு ஏன்தான் இத்தனை ஓர வஞ்சனை என்று நினைத்தால்... இதற்குப் பின்னால் ஒரு பெரிய கதையே இருக்கிறது!


அது என்ன கதை என்று சொல்வதற்கு நான் உங்களை ஒரு மூன்றரை மில்லியன் வருடத்திற்கு முன்னால் அழைத்துப்போய் ஒரு நீளமான ஃபிளாஷ்பேக்கைக் காட்ட வேண்டும்.

அடர்ந்த ஆப்பிரிக்கக் காடுகள். மண்டையைப் பிளக்கும் சுளீர் வெயில். பிசுபிசுப்பாகப் படரும் வெப்பக் காற்று. அந்த அத்துவானக் காடுகளின் உயரமான மரங்களின் மேல் பலவகை வானரங்கள் குடி இருந்தன.

உருண்டு திரண்ட உயரமான வானரங்கள் சில. ஒல்லியாக, மெலிசாகப் பூஞ்சையான வானரங்கள் சில. இரண்டுக்கும் இடைப்பட்ட கட்டையான, குட்டையான வானரங்கள் சில.

இப்படிப் பலதரப்பட்ட வானரங்கள் எல்லாம் ஒரே இடத்தில் வசிக்க, மரத்தின்மேல் உணவு, உறைவிடம், வாழும் வசதி, வாழ்க்கைத் துணை ஆகியவற்றுக்குக் கடும் போட்டி நிலவியது. எளியாரை, வலியாரை ஏய்ப்பதென்பது வானரத்திற்கே வழக்கமான குணம்.

எனவே, பெரிய சைஸ் வானரங்கள் எல்லாம் கூடி, அந்தப் பூஞ்சை வானரங்களை மரத்திலிருந்து விரட்டி கீழே தள்ளிவிட்டன.



மரத்தை விட்டு தொப்பென்று பூமிக்கு வந்து விழுந்த அந்தப் பூஞ்சைகள் தரை வாழ்க்கையைப் பற்றி எதுவுமே தெரியாத தற்குறிகள். அவற்றைச் சுற்றி இருந்த நிலவாழ் பிராணிகள் கூரிய பற்கள், நீளமான நகங்கள், கொத்திக் கொல்லும் விஷம், பாய்ந்தோடும் வேகம், இருளில் துல்லியமாகப் பார்க்கும் கண்கள், இரையை மோப்பம் பிடிக்கும் நாசி... என்று புதிதுபுதிதாக யுக்திகளை வைத்திருந்தன. இப்படித் தற்காப்புடன் இருந்த மிருகங்களுக்கு இடையே எந்தச் சுயபாதுகாப்பு யுக்தியும்

இல்லாத நிராயுத பாணியாக அந்தப் பூஞ்சை வானரங்கள் மாட்டிக் கொண்டன.

கேட்க வேண்டுமா! காட்டுவிலங்குகளுக்குக் கொண்டாட்டமாகிப் போனது! ஏற்கெனவே, எண்ணிக்கையில் குறைவாக இருந்த அந்தப் பூஞ்சை வானரங்கள் கூண்டோடு அழிந்து போகும் ஆபத்திற்கு உள்ளாகி Endangered Species ஆயின.

ஆனால், இயற்கைக்கு இரக்கம் கிடையாதே. ‘திறமையிருந்தால் பிழைச்சுக்கோ, தெரியலையா தொலைஞ்சு போ’ என்ற Survival of the Fittest மட்டும்தானே இயற்கையின் ஒரே விதி.

ஆனால், இந்தப் பூஞ்சை வானரங்களுக்குப் பிழைத்துக் கொள்ளும் எந்தப் பெரிய திறமையும் இல்லை. ஏதோ மரக் கிளைகளில் தொங்கியபடி நடந்த பழக்கத்தில், பின் இரண்டு கால்களால் மட்டும் நடக்கும் சர்க்கஸ் வித்தை தெரியும். பழம் தேடித் தின்ற பழக்கத்தால் விதவிதமான நிறம், மணம், சுவை உணரத் தெரியும். தன்னைவிட பெரிய வானரங்களிடம் அண்டிப் பிழைத்த பழக்கத்தால் விட்டுக் கொடுத்து அனுசரித்துக் கூட்டமாகக் வாழத் தெரியும். ஆனால், இப்படிப்பட்ட சொற்ப திறமைகளை வைத்துக்கொண்டு புலி, சிங்கம், சிறுத்தை, பாம்பு, கழுகு மாதிரியான பொல்லாத பிராணிகள் மத்தியில் எப்படி உயிர் பிழைத்து வாழ்வது? ஏதாவது அதிசயம் நிகழ்ந்தால் ஒழிய இந்தப் பூஞ்சை வானரங்கள் வாழ்வதற்கு வழியே இல்லை.

ஆனால், அதிர்ஷ்டவசமாக அந்த அதிசயமும் நிகழ்ந்தது

விரல்விட்டு எண்ணிவிடும் சொற்ப எண்ணிக்கையில் வாழ்ந்த அந்த அரிய, சிறிய வானரம்தான் இன்று உலகில் நம்பர் ஒன் எண்ணிக்கையை எட்டிப் பிடித்து ‘பூமி போறாது, ஆகாயத்தையும் அளந்து பார்த்திடுவோம்’ என்று சொல்லும் வல்லமையைப் பெற்று மானுடர் என்ற திருநாமத்துடன் உலவி வருகிறது. அதனை இத்தனை தூரத்துக்கு முன்னேற்றிய அந்த அதிசயம்தான் என்ன?

மற்ற மிருகங்கள் கஞ்சத்தனமாக வருடத்தில் சில வாரங்கள் மட்டும், பருவகாலத்தில் மட்டும் என்று சிக்கனமாக இனம் சேர்ந்து கொண்டிருக்க, அதற்கு நேர் எதிரான யுத்தியைக் கடைபிடித்தனர் மனிதர்கள். காலம், நேரம், பருவம், உருவம் கருதாமல் வருடத்தின் முன்னூற்றி அறுபத்தைந்தே கால் நாட்களும் தாராளமாக உறவு கொண்டனர். வதவதவென்று பிள்ளைகளைப் பெற்றுப் போட்டு தனி மரத்தைத் தோப்பாக்கினர். இந்த மிதமிஞ்சிய கலவுறவு வேட்கையால்

மளமளவென எண்ணிக்கை பெருக்கி, பல விக்கெட் வித்தியாசத்தில் பிற வானரங்களை வென்றார்கள்.

ஆக, வெறும் பூஞ்சை வானரம் என்ற அவல நிலையிலிருந்து, மகா கனம் பொருந்திய மானுடர்களாக அவர்களை மாற்றியதே அந்தப் பேரதிசயமான கலவுறவு பெருக்கெடுப்புதான்.

ஆனால், இந்தப் பேரதிசயம் கூட அத்தனைச் சுலபமாக நடந்து விடவில்லை. நான்கு கால் நடை, பழம் தின்னி வாழ்க்கை, பருவ காலக் கலவுறவு என்கிற வானர வாழ்க்கை முறையிலிருந்து, இரண்டு கால் நடை, மாமிச பட்சிணி வாழ்க்கை, வருடம் முழுவதும் கலவுறவு என்கிற மானுட வழிக்கு மாற ரொம்பவே மெனக்கெட வேண்டி இருந்தது.

காரணம், நான்கு கால் நடை, பருவகாலக் கலவுறவு என்கிற முறையில் இனச்சேர்க்கை என்பதே வேறு விதம். ஆண் மிருகமும் பெண் மிருகமும் தனித்தனியாக வாழலாம். பருவகாலம் வந்தவுடன் பெண் உடம்பில் சில புது வாசனைகள் கிளம்பும். அதை உணர்ந்ததும் ஆண்கள் இயல்பாகப் பெண்ணின் பின்னால் ஆஜராகி விடும். பெண் கருவுறத் தயாராக இருக்கிறாளா? இல்லையா? என்பதை அவள் பின்பகுதியைப் பார்த்தே தெரிந்துகொள்ள முடியும். தசைகள் உப்பிச் சிவந்திருந்தால் பிள்ளை பெறும் கருமுட்டை அவளுக்குள் தயாராகிக் காத்திருக்கிறது என்று அர்த்தம். இப்படி ‘முட்டை ரெடி’ என்று சமிக்ஞை தரும் பெண்ணைத் தேடிப்பிடித்து உறவு கொண்டால் முடிந்தது வேலை!


ஆனால், இந்த இரண்டு கால் நடையில் ஒரு பெரிய அசௌகரியம் என்னவென்றால், பெண்ணின் பின்னால் போய் ‘முட்டை ரெடியா?’ என்பதைக் கண்டுபிடிக்க முடியாது. காரணம், அவளின் சமிக்ஞை உறுப்புகள் எல்லாம் கண்மறைவாகி விட்டன. ‘உப்பிச் சிவந்தால்தான் சேரணும்’ என்று ஆண் மிருகங்களின் மூளையில் மரபணுக்கள் ஏற்கனவே இனச்சேர்க்கை விதியை அழுத்தமாக எழுதிவிட்டன. அதை அனுசரித்தால்தான் இனப்பெருக்கமே நிகழும்.

ஆனால் இந்த உப்பல், சிவத்தல் தென்படாவிட்டால் இனம் சேருவது எப்படியாம்? அதற்கும் மரபணுக்கள் ஒரு வழியைக் கண்டுபிடித்தன

அது என்ன வழி...?

# 17

# ஆண்களுக்கு கோடி, பெண்களுக்கு நூறு!



**உ**ப்பிச் சிவந்திருந்தால்தான் உறவுகொள்ள வேண்டும்! இதுதான் ஆண் மூளைக்கு மரபணுக்கள் விதித்த கறாரான கடிவாளம். மனித ஆண்களுக்கு மட்டுமல்ல சிங்கம், புலி, யானை மாதிரியான பெரிய மிருகங்களிலிருந்து பல்லி, புழு, பூச்சி மாதிரி எளிமையான பிராணிகள் வரை எல்லா ஆண்களுக்கும் அதே விதிதான்.

அப்படி என்னதான் பெருசா இருக்கு இந்த உப்பல், சிவத்தல் மேட்டரில்? அதைத் தெரிந்துகொள்ள கொஞ்சம் ஜெனடிக்ஸ் பற்றி சொல்லிவிடுகிறேன்.

எல்லா உயிர்களும் மரபணுக்களால் ஆனவை. இத்தனை மரபணுக்கள் இருந்தால் அது இந்த உயிரினமாகும் என்று சுலபமாகச் சொல்லிவிடும் அளவுக்கு, ஒவ்வொரு உயிரினத்துக்கும் ஒரு குறிப்பிட்ட மரபு எண் உண்டு. உதாரணத்துக்கு, மனிதர்களின் மரபு எண் 46. அதாவது, அவர்கள் உடம்பில் உள்ள எல்லா செல்களிலும் மொத்தம் 46 குரோமோசோம்கள் உள்ளன. இதில் 23 அம்மாவிடமிருந்து அவள் கருமுட்டை வழியாக வந்தவை. மீதமுள்ள 23 அப்பாவிடமிருந்து அவன் விந்தணு வழியாக வந்தவை. 23+23=46 என்று மனித உடலில் எல்லா செல்களிலும் மரபணுக்கள் டபுள் ஆக்ஷன் செய்கிறது. ஒரே ஓர் இடத்தில் மட்டும் இந்த நாற்பத்தி ஆறு பாதியாக வகுந்து மோனோ ஆக்ஷனுக்கு மாறிவிடுகிறது.

இப்படி இரட்டை வேடமாக (Diploid) இருக்கும் இந்த மரபணுக்கள், ஒற்றை வேடமாக (Haploid) மாறுவது என்பது அத்தனை லேசுப்பட்ட காரியம் அல்ல. மரபணுக்களைப் பிரித்து, புடைத்து, குலுக்கிப் போட்டு, கலந்து, மறுபடியும் சம பாதியாகப் பிரித்து, தனித்தனி அறை மரபணு செல்களாக ஹப்லாய்டாக மாற்றுவது என்பது ரொம்ப நுணுக்கமான வேலை. இதைச் செய்ய எக்கச்சக்க உழைப்பு, உயிர்ச் சக்தி, ஊட்டச்சத்து, ஊக்க ரசாயனங்கள் தேவை. ஒரு சிறு தவறுகூட நேராமல் ரொம்ப உஷாராக, இந்த மரபணு பாகப் பிரிவினையை நடத்த எக்கச்சக்க தொழில்நுட்பம் தேவை. எந்தத் தொந்தரவும் இல்லாமல் செல்களை வகுத்தெடுக்க ஒரு பிரத்தியேக லொகேஷன் தேவை.


இதற்காகப் பிரத்தியேகமாக ஒதுக்கப்பட்ட அந்த லொகேஷன்தான் இனப்பெருக்க உறுப்புகளான ஆணின் விந்தகம், பெண்ணின் சினையகம். இந்த இரண்டு திசுக்களுக்கு மட்டும்தான் ஒரு முழு ஹப்லாய்டு செல்லை உடைத்து இரண்டு ஹப்லாய்டு செல்களாக மாற்றும் மாயசக்தி உள்ளது. இப்படித் தயாராகும் ஆணின் ஹப்லாய்டு செல்லை விந்தணு என்றும், பெண்ணின் ஹப்லாய்டு செல்லை கருமுட்டை என்றும் அழைக்கிறோம்.

இரண்டுமே ஹப்லாய்டு செல்கொண்ட பாதி மரபணு குடுவைகள்தான். பிறகேன் ஆண் தயாரித்ததற்கு விந்தணு என்றும்’ பெண் தயாரித்ததற்கு கருமுட்டை என்றும் வெவ்வேறு பெயர்களை வைத்தார்கள்? என்ற கேள்வித் தோன்றினால்... சபாஷ்! சரியான கேள்வி.

இரண்டுமே 23 குரோமோஸோம்களைக் கொண்ட ஹப்லாய்டு செல்கள்தான். ஆனால், இரண்டுக்கும் எக்கச்சக்க வித்தியாசங்கள் உள்ளன.

ஆணின் விந்தணு அவன் உடம்பில் இருப்பதிலே மிகக் குட்டியூண்டு செல். பெண்ணின் கருமுட்டை மனித உடம்பின் மிகப் பெரிய செல்களில் ஒன்று.

ஆணின் விந்தகம் வாலிபம் தொடங்கி வாழ்நாள் முழுக்க, ஒரு நாளைக்குப் பல மில்லியன் விந்தணுக்களை உற்பத்தி செய்யும். ஆனால், பெண்ணின் உடல் மாதத்திற்கு ஒரே ஒரு முட்டையைத்தான் தயாரிக்கிறது. அதுவும், பருவம் அடைந்ததிலிருந்து மாதவிடாய் நின்று போகும் அந்த முப்பத்து சொச்ச ஆண்டுகள் வரை மட்டுமே உருவாகும். கூட்டிக் கழித்துப் பார்த்தால், வாழ்நாள் முழுவதுக்கும் தோராயமாக வெறும் நானூறு முட்டைகள் மட்டுமே!



ஆண்களுக்கு மட்டும் ஒரு நாளைக்குப் பல கோடி, பெண்களுக்கு ஒரு வாழ்நாளில் சில நூறுகள் மட்டும் ஏன்? அதற்கும் காரணம் இருக்கிறது. ஆணின் விந்தணு எளிமையானது. ஓர் ஏவுகணை வடிவ குடுவை. அதனுள்ளே அந்த 23 குரோமோஸோம்கள். அதன் கீழே நீந்திச் செல்லத் தோதாக ஒரு நீளமான வால்! தட்ஸ் ஆல், விந்தணு ரெடி! அதனால்தான் ஒரு நாளைக்குப் பல கோடி விந்தணுக்கள் சாத்தியமாகிறது.

இதற்கு நேர்மாறாக கருமுட்டை. இது ரொம்ப சிரமமான ஒரு தயாரிப்பு. ஒரு மாதம் முழுக்க போராடி, ஒரே ஒரு முட்டையைத் தயாரிப்பதற்குள் சினையகம் ஒய்ந்துபோய் விடுகிறது. பிறகு அடுத்த மாதம் முழுக்க லீவு எடுத்து தன்னை ஆசுவாசப்படுத்திக் கொள்ளும். அதனால், பக்கத்திற்கு ஒன்று என இரண்டு சினையகங்கள் தேவைப்படுகின்றன. முறைவாசல் மாதிரி ஒரு மாதம் வலது வேலை செய்தால், மறு மாதம் இடது டேக் ஓவர் செய்துகொள்ளும்.

விந்தணுவைப் போல கருமுட்டையிலும் 23 குரோமோஸோம்கள்தான். ஆனாலும் முட்டை ஏவுகணை வடிவில் இருப்பதில்லை. அதைவிட ஆயிரம் மடங்கு பெரியதாக இருக்கிறது. உயிர் வளங்களின் கிடங்காக, வளரும் கருவைச் சுமந்து, போஷாக்கு

அளித்து பாதுகாக்கத் தேவையான எக்கச்சக்க கிலோ ஜுல் சக்தி நிரம்பிய உருண்டையாக உருவாகிறது. இத்தனை எரிபொருளை முதலீடு செய்து உருவாக்குவதால் முட்டை என்பது காஸ்ட்லியான பொருள். அதனால்' அவை குறைந்த எண்ணிக்கையில் உற்பத்தி ஆகின்றன.

ஆக, இத்தனை வித்தியாசங்கள் இருப்பதால்தான் ஆணின் சிறிய சைஸ் ஹப்லாய்டு செல்லை விந்தணு என்றும், பெண்ணின் பெரிய சைஸ் ஹப்லாய்டு செல்லை கருமுட்டை என்றும் அழைக்கிறோம்.

எல்லாம் சரி. ஆனால், இந்த ஹப்லாய்டு செல்களை இவ்வளவு பிரயத்தனப்பட்டு உருவாக்குபவை தனித்தனி உடல்கள். இத்தனை மெனக்கட்டு உருவான இந்த ஹப்லாய்டு செல்கள் கலந்தால்தான் அடுத்த தலைமுறை உருவாகுமெனில் இந்தச் செல்களைச் சுமந்த சரீரங்கள் முதலில் சந்திக்க வேண்டும்!

அதற்கும் ஒரு வழி வைத்திருந்தன மரபணுக்கள். பெண்ணின் கருமுட்டை தயாரானதுமே அவள் உடம்பில் பல ரசாயனங்களைப் பாய விடுகின்றன. சில ரசாயனங்கள் ரம்மியமான வாசனையைக் கிளப்பி, ஆண்களைச் சுண்டி இழுத்து பெண்ணைத் தேடி வர வைப்பன. மோப்பம் பிடித்து பெண்கள் கூட்டத்தைத் தேடி ஆண் வந்து சேர்ந்தால் இத்தனை பெண்களில் யாருடைய கருமுட்டை தயார் என்பதை காட்சி சமிக்ஞையில் வெளிப்படுத்தும். அந்தப் பெண்ணின் நரம்பு முனைகளில் சில ரசாயனங்கள் உளறி, அதன் உபயத்தால் அவள் இனப்பெருக்க உறுப்புகளில் இரத்த ஓட்டம் கூட, திசு தடித்து சிவந்துபோகும். அந்த Visual signal கண்டதுமே, 'கண்டேன் கருமுட்டையை!' என்று ஆண் தன் ஹப்லாய்டு செல்களை அந்தப் பெண்ணிடம் முதலீடு செய்தால் அப்புறமென்ன, 23+23=46 என்று புது உயிர் அவதரிக்கத் தயாராகி விடுகிறது.

இந்த விஷுவல் சிக்னலைக் கண்டுகொள்வது மற்ற மிருகங்களுக்கு ரொம்ப சுலபம். ஜஸ்ட் பெண்ணின் பின்னால் போய் ஒரு லுக் விட்டால் தெரிந்துவிடும். ஆனால், இரண்டு கால்களில் செங்குத்தாக நிற்கும் மனிதர்களில் இந்தச் சமிக்ஞையை எப்படிக் கண்டுபிடிப்பதாம்?

இந்த நிமிர்ந்த நன்னடைக்காக இடுப்பு எலும்புகள் சுழன்று, இனப்பெருக்க உறுப்புகள் புரண்டு போய்விட்டன. சமிக்ஞைகள் காணாமல் போயின. 'சமிக்ஞையாவது மண்ணாங்கட்டியாவது. சும்மா மானாவாரியாக உழுதுவை! இப்ப பிள்ளை பிறக்கலன்னு யார் அழுதா!' என்று இன்றைய மனிதர்கள் அலட்சியமாக யோசிக்கலாம். ஆனால்,

அந்தக் காலத்தில் குழந்தைகள் என்பது பெரிய விஷயம்.

# 18

## ஆனந்தத் தாண்டவம்!



அழிந்துவிடும் அபாயத்தில், மிகச் சின்னக் கூட்டமாக, வாழ்ந்து வந்த அந்தக் காலத்து ஆதி மனிதர்களுக்குப் பிள்ளைகள்தான் ஒரே சொத்து. தங்கள் மரபணுக்களை விரயம் செய்ய அவர்கள் விரும்பவில்லை. 'மகசூல் அதிகமாக இருக்கும்' என்ற உத்தரவாதம் இல்லாமல், சும்மா குருட்டுப் போக்கில் மரபணுக்களை முதலீடு செய்ய அவர்களால் முடியவில்லை.

காணாமல் போன சமிக்ஞை, அதைக் காணாமல் சேரமுடியாத ஆண்களுக்கு ரொம்பவே இக்கட்டான சூழ்நிலைதான். ஆனால், மரபணுவா கொக்கா! இதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தன மனித மரபணுக்கள்.

மற்ற மிருகங்களுக்கு பின்புறம் தெரியும் சமிக்ஞையை மனிதர்களுக்கு மட்டும் முன்புறம் தெரியும்படி அபவுட் டர்ன் அடிக்க வைத்தன. மற்ற மிருகங்களுக்கு இடுப்பு எலும்போடு இணைந்திருந்த சமிக்ஞை திசுவை மனிதர்களுக்கு மட்டும் மார்பு எலும்போடு இணைத்து வைத்தன. விளைவு?

கஷ்டப்பட்டு பின்னால்போய் பார்த்துத் தெரிந்துகொள்ளும் அவசியம் இல்லாமல், நேருக்குநேர் பார்த்து 'முட்டை ரெடியா?' என்று தெரிந்துகொள்ளும் சாமர்த்தியம் படைத்த ஒரே மிருகம் என்ற புதிய

மேன்மையைப் பெற்றார்கள் மனிதர்கள்!

அது மட்டுமா? இந்தப் பூலோகத்தில் உள்ள எல்லாப் பிராணிகளுக்குமே ‘முட்டை ரெடி’ என்று அறிவிக்கும் அந்தச் சமிக்ஞை உறுப்புகள், பருவகாலத்தில் மட்டும்தான் பெரிதாகி ஆணை ஈர்க்கும். மற்ற நேரங்களில் எல்லாம் கப்சிப் என்று அடங்கிக் கிடக்கும். ஆனால், மனிதர்களில் மட்டும் இந்த ‘முட்டை ரெடி’ சமிக்ஞைகளான மார்பகங்கள் பருவம் அடைந்த காலம் முதல் பரலோகம் போய்ச்சேரும் காலம் வரை அதே உப்பிப் புடைத்த நிலையிலேயே இருக்கின்றன.

இதற்குப் பின்னால் இருக்கும் பரிணாம சூட்சுமத்தைச் சொல்வதற்கு முன், (IRM) பற்றிய சில சுவாரசியமான ரகசியங்களை உங்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும்.

இந்த IRM மை முதன் முதலில் கண்டுபிடித்தவர் நிகோ டின்பெர்கென் (Niko Tinbergen) என்ற ஒரு டச்சு நாட்டு உயிரியல் விஞ்ஞானிதான். இந்த மனிதருக்கு மிருக நடத்தையைப் புரிந்து கொள்வதில் அப்படி ஓர் ஆர்வம். அதற்காக ஸ்டிக்கில் பேக் (Stickle Back) என்ற வகை குட்டி மீன்களைச் சந்திக்க குளத்துக்குள் போய்விட்டார். குளத்துக்குள் மூழ்கி இந்த மீன்களின் அந்தரங்க வாழ்வைப் பதிவு செய்தபோதுதான் ஒரு முக்கியமான விஷயத்தைக் கவனித்தார் நிகோ.

இந்த ‘ஸ்டிக்கில் பேக்’ ஆண், சும்மா அநாமத்தாக மிதந்துகொண்டே இருந்தது. பெண் மீனைக் கண்டதுமே ஓர் ஆனந்தத் தாண்டவமே திடுதிப்பென்று ஆட ஆரம்பித்து விடுமாம். இதுவே, ஓர் ஆண் மீன் அதன் பேட்டை பக்கம் வந்தால் ஒரே ருத்ரதாண்டவம்தான்.


அது சரி, அதுவே குட்டியூண்டு மீன் அதற்கு ஆண் எது, பெண் எது என்ற வித்தியாசம் எப்படித் தெரியும் என்று மேலும் நெருங்கிப் பார்த்தால் பெண் மீனின் அடி வயிறு முட்டைகளால் நிரம்பி புடைத்துக் கொண்டிருப்பதும்’ ஆண் மீனின் அடிவயிற்றில் சிவப்புக் கீற்று ஒன்று இருப்பதும் தெரிய வந்தது.

இதைப் பார்த்த நிகோவிற்கு ஓர் அதி அற்புதமான ஐடியா ஜனித்துவிட, பெண் மீனைப் போல ஒரு பொம்மையைச் செய்து ஆண் அருகே கொண்டு போனாராம். மிகத் தத்ரூபமான பெண் பொம்மை, ஆனால், அந்த முட்டை வீக்கம் மட்டுமில்லை என்றால் ஆண் மீன் அதைக் கண்டுகொள்ளவில்லை. மோசமான உருவ ஒற்றுமை கொண்ட ஒரு பொம்மை ஆனால், அடிவயிற்றில் மட்டும் அந்த வீக்கத்தோடு

இருந்ததால் அதைப் பார்த்ததுமே ஆண் மீன் ஆனந்தத் தாண்டவத்தில் துள்ளிக் குதித்ததாம்! இதுவே ஒரு சிகப்பு கலர் பேனா மூடி பக்கம் வந்தாலும் போச்சு அதே ருத்ர தாண்டவம்தான்!

இதைக் கவனித்த நிகோ கூட்டிக் கழித்துப் பார்த்துக் கண்டுபிடித்தது என்ன தெரியுமா? ஆண்மீன் ஆனந்தத் தாண்டவம் ஆடியதெல்லாம் பெண் மீனைப் பார்த்தல்ல; வெறும் அவளது உப்பிய வயிறு என்கிற சமிக்ஞையைப் பார்த்து மட்டுமே! அதேபோல, ருத்ரதாண்டவம் ஆடியது ஆண் எதிரியைப் பார்த்தல்ல வெறும் அவன் அடிவயிற்றில் இருந்த சிவப்புக் கீற்றை மட்டும் பார்த்து. அப்படியானால், உப்பிய வயிறு = ஆனந்தத் தாண்டவம், சிவப்புக் கீற்று = ருத்ரதாண்டவம் என்று அந்தக் குட்டி மீனின் குட்டி மூளையில் ஒரு நிரந்தர விதி பொதிந்திருந்ததோ?

நிகோவை இந்தக் கேள்வி குடைந்தெடுக்க, மீனைவிட பெரிய மிருகங்களில் இதே மாதிரியான பரிசோதனைகளை நடத்தினார். என்ன ஆச்சரியம்! தாய் காக்கா, குயில் குஞ்சு என்று பாகுபடுத்தத் தெரியாமல் ஆசையாக இரை ஊட்டக் காரணம், குயில் குஞ்சின் வெளித் தோற்றமல்ல. அந்தக் குஞ்சின் சிவந்த, திறந்த வாய் தந்த ‘தாயே பசிக்குதே!’ சமிக்ஞையினால் மட்டுமே. ‘சிவந்த + திறந்த வாய் = உணவு அளி’ என்பது காகத்தின் மூளையில் பதிந்திருந்த கட்டளை.



datamiss

தாயிடம் இருந்து பிரித்து கூண்டில் தனிமையில் வளர்க்கப்பட்ட குட்டிக் குரங்குகளுக்கு இரண்டு வகை பொம்மைகளைக் கொடுத்துப் பார்த்தார்கள். ஒன்று பால் தரும் முகமில்லாத இரும்புக் கம்பி பொம்மை. இன்னொன்று பால் புட்டி இல்லாத, ஆனால் முகம், இரண்டு கண்கள் கொண்ட துணி பொம்மை. குட்டிக் குரங்கு எந்தப் பொம்மையைத் தேர்ந்தெடுத்தது என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? பால் பாட்டில் பொம்மையையா? ஊகூம்! கண், முகம், கொண்ட பாலற்ற துணி பொம்மையை! காரணம், குரங்குகளைப் பொறுத்தவரை 'மெத்து, மெத்து + இரண்டு கண்கள் = தஞ்சம் புகு' என்பதுதான் விதி.

மீன், குயில், குரங்கு எல்லாம் சரி, மனிதர்கள் கதி என்னாச்சு என்று நீங்கள் யோசிப்பது புரிகிறது. புதிதாகப் பிறந்த பச்சிளம் மனிதக் குழந்தைக்குக் கண் தெளிவாகத் தெரியாது. யார் தாய், யார் செவிலி, யார் டாக்டர், யார் ஆயா என்பது தெரியாது. ஒரு பெண், குழந்தையைத் தன் நெஞ்சோடு தூக்க நேர்ந்து, அவள் மார்பு குழந்தையின் கன்னத்தில் லேசாக பட்டால் போதும். படக் என்று திரும்பிப் பால் அருந்த ஆரம்பித்துவிடும் பாப்பா. காரணம், 'கன்னத்தில் உரசும் முதல் திசு = பால் அருந்த முயன்றிடு' என்பது மனிதக் குழந்தையின் மூளையில் பதிந்த விதி.



ஆக, ‘இப்படி இருந்தால், இப்படி ரியாக்ட் செய்ய வேண்டும்’ என்ற இந்த வகை விதிகள் ஏற்கனவே பிராணிகளின் மூளைகளிலும் முன்பதிவு செய்யப்பட்டுள்ளன.

இப்படி முன்பதிவு செய்யப்பட்ட எதிர்வினை எச்சத்தைத்தான் Innate Releasing Mechanism (IRM) என்கிறார் நிகோ.

இப்படி மனித மூளையில் பதிந்திருக்கும் பலவித IRM களில் முக்கியமான ஒன்று என்ன தெரியுமா? ‘ஒரு பிளவின் இரு பக்கமும் சதைப் பிண்டம் = உறவு கொண்டு விடு’ என்பதுதான்.

இதென்ன கண்றாவி பிளவு, சதைப் பிண்டம். வாட் நான்சென்ஸ் என்று கூட நீங்கள் ஆட்சேபிக்கலாம். பட் வெயிட், வெயிட்... இதற்குப் பின்னால் நிறைய சென்ஸ் இருக்கிறது!

# 19

## “வம்சத்தை விருத்தி செய்ய வாடா!”



மனிதர்கள் மூன்று மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வரை வானரங்களாக இருந்தவர்கள்தானே!?

வானர இனப்பெருக்கம் என்பது பருவகாலத்தில் மட்டும் நிகழும் ஒரு நடவடிக்கை!

இனச்சேர்க்கைப் பருவம் வந்ததும் பெண் குரங்கின் உடலில் ஊறும் சில புது ரசாயனங்களால் அதன் பின்பகுதி வீங்கி, சிவந்து போய்விடும். இதனால், முதுகுத் தண்டின் பிளவிற்கு இருபுறமும் இடுப்புச் சதை உப்பித் தெரியும். இது ஆண் குரங்குகளை, ‘ஹே வானரமே, வம்சத்தை விருத்தி செய்ய வாடா!’ என்று தூண்டும் IRM.

ஆண் வானரங்களின் மூளையில் இந்தப் ‘பிளவின் இருபுறம் சதை உருண்டை’ என்பது ‘இனப்பெருக்கத்தில் ஈடுபடு’ என்று அறிவுறுத்தும் ஒரு முன்பதிவு செய்யப்பட்ட எதிர்வினை எச்சம். (Innate Releasing Mechanism). எனவே, இந்தப் பிளவு, சதைச் சமாச்சாரத்தைக் கண்டதுமே அனிச்சைச் செயலாக ஆண் வானரங்கள் நான் முந்தி நீ முந்தி என்று போட்டி போட்டுக் கொண்டு எதிர்வினை ஆற்றிட ஓடோடி வந்துவிடும்.

என்னதான் நாகரீகம், கலாசாரம், கல்வி, கலை, மெய்ஞானம் என்று

முன்னேறி இருந்தாலும், அடிப்படையில் மனிதர்களும் வானரங்கள் தானே?!



அதனால்தான் பிளவு சதை மாதிரியான, இந்த ஐம்பது மில்லியன் ஆண்டின் பாரம்பரியத்தை இன்னும் மனிதர்கள் அடிபிறளாமல் அப்படியே பின்பற்றி வருகிறார்கள்! அதற்கு ஆதாரம். மனிதர்களின் பிரதான கலை வடிவமான சினிமாதான்!

கதாநாயகியின் பிளவுகளையும் சதை மடிப்புகளையும் மிக மும்முரமாக கேமிரா மொய்த்துக் கொண்டிருக்கும் அந்த ஒரே ஓர் ஆதாரம் போதுமே. மனிதர்கள் இன்னும் முழு வானரங்கள்தான் என்பதை நிருபிக்க!

ஆனால், வாரங்களுக்கும் மனிதர்களுக்கும் இதில் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. வானரங்களுக்கு இந்தப் பிளவு சதை! பருவகாலத்தில் மட்டும்தான் தென்படும். மற்ற நேரத்தில் மறைந்துவிடும்.

ஆனால், மனிதப் பெண்களில் மட்டும் இந்தப் பிளவுசதை IRM கிட்டத்தட்ட ஐம்பது ஆண்டுகளுக்குத் தொடர்ந்து அப்படியே இருக்கிறது! ஏன் தெரியுமா? மனிதர்களுக்கு மட்டும்தான் இந்த IRM மை 'ஆனி'லேயே வைத்துக் கொள்ளும் அவசியம் உள்ளது. மற்ற மிருகங்களுக்கு ஆளுக்கு ஒரு வாழ்வியல் யுக்தி இருந்தது. அதிகபட்ச பார்வைக் கூர்மை, அதிகபட்ச மோப்ப சக்தி, அதிகபட்ச ஓட்ட வேகம், அதிகபட்ச பல்கூர்மை என்று ஒவ்வொரு மிருகமும் கைவசம் ஓர் ஆயுதத்தை வைத்திருந்தது. ஆதி மனிதன் கல் ஆயுதங்களைக் கண்டுபிடிப்பதற்கு முன்னால் அவன் ஒரு முழு நிராயுதபாணி. உயிர் வாழ அவனுக்கு இருந்த ஒரே யுக்தி அதிகபட்ச இனப்பெருக்கம் மட்டுமே. இந்த அதிகபட்ச இனப்பெருக்கத்துக்கு அதிகபட்ச இனச்சேர்க்கை தேவையாகும். இனச்சேர்க்கை புரிய 'முட்டை ரெடி' என்ற சமிக்கை தேவை. அதனால்தான் மரபணுக்கள் மனிதப் பெண்களுக்கு மார்பக வடிவில் பழைய IRM மை புது லொக்கேஷனுக்கு மாற்றி, நிரந்தரமாக 'ஆன்'னில் வைத்தன.

அதெல்லாம் சரி, 'இப்படி இருந்தால், இப்படி ரியாக்ட் செய்' என்ற இந்த முன்பதிவு செய்யப்பட்ட எதிர்வினை எச்சங்கள் (Innate Releasing Mechanism) எங்கிருந்து வந்தன?

இந்த விதிகளை எழுதியது யார்? ஏன் எழுதினார்கள்?

இந்த IRM தான் இந்தச் சூழ்நிலைக்கு உதவும் என்பதைத் தெரிந்த அந்த அறிவாளி யார்?

# 20

# ஆசிட் அற்புதம்!



**‘ம**னிதப் பெண்களின் மார்பகம் போன்ற சுவாரசியமான IRM களை மூளை நரம்புகளில் முன்பதிவு செய்துவைத்த அந்த அறிவாளியின் பெயர் ‘டியாக்சிரைபோ நியுகிளிக் ஆசிட்’, சுருக்கமாக DNA, என்றும் சொல்லலாம்.

‘என்னது! ஆசிடா? இந்தக்கழிப்பறையை கழுவ யூஸ் பண்ணுவோமே, அதுவா? அதுவா இப்படி ஒர் அழகான, அம்சமான IRM மை உற்பத்தி செய்தது? நம்ப முடியவில்லையே!’ என்று நீங்கள் ஆட்சேபித்தால், உங்கள் ஆட்சேபித்தால் ஓவர் ரூல் செய்யவேண்டி வரும். என்ன செய்வது, அறிவியலில் இது மாதிரியான ஆட்சேபனைகளும் ஆச்சரியங்களும் ரொம்ப சகஜம்.

டி.என்.ஏ ஓர் ஆசிட்தான் என்றாலும், ஒரு சாதாரண கழிப்பறை கழுவும் ஆசிட் சோப்ப ஆசிட் அல்ல. அதையெல்லாம் தாண்டி ரொம்பவே சக்தி வாய்ந்தது. அப்படி என்ன பெரிய சக்தி என்றால், இந்த ஆசிட் உருவான கதையை உங்களுக்குச் சொல்ல வேண்டி இருக்கும். இது கொஞ்சம் பெரிய கதை என்பதால் சுருக்கமாகச் சொல்ல முயல்கிறேன்.

கிட்டத்தட்ட முன்னூத்தி சொச்ச மில்லியன் ஆண்டுகளுக்கு முன்… கல் தோன்றி, மண்ணும் தோன்றி, அதற்கு மேல் வேறெதுவும்

தோன்றாமல், மற்ற கிரகங்களைப் போலவே பூமியும் புறம்போக்காகக் கிடந்த அந்தக் காலத்தில்... தெய்வ சங்கல்பமா? விண்வெளியிலிருந்து வந்து விழுந்த விதையா? இன்னும் பெயர் வைக்காத கதிரியக்கத்தின் கைங்கரியமா? இல்லை, எல்லாம் கலந்ததால் ஏற்பட்ட ஒரு வித விண்வெளி விபத்தா? என்ன காரணம் என்றே தெளிவாகத் தெரியாதபடிக்கு திடீரென பூமி பூப்பெய்தி வயதுக்கு வந்துவிட்டது!

அதுவரை ஆகாயம், நீர், நிலம், காற்று, நெருப்பு என்ற இந்த ஐந்து பூதங்களையும் தவிர சொல்லிக் கொள்ளும்படியாக வேறு எந்த விசேஷமும் நிகழ்ந்திராத வெற்றுக் கிரகமாக இருந்த இந்தப் பூமியில், திடீரென ஒரு புதுவித புரதத் துகள் உருவானது! அதுவும் ஏதோ காமாசோமா புரதத் துகள் அல்ல. சதாசர்வ காலமும் என்று. 'காமம், காமம்' என்று 'காமமே கண்ணாக இருக்கும்' மகா செக்ஸி துகள் அது! அதற்குப் பெயர்தான் DNA.



சதா காமம் என்றே இருக்கும் என்றால் பெரிய வஸ்தாதாக இருக்கும் போலிருக்கே! என்று நீங்கள் வியந்தால். நோ, இது பெரிய வஸ்தாது இல்லை. உண்மையில் இது கண்ணுக்குக் கூடத் தெரியாத குட்டியூண்டு வஸ்து. இதைப் பார்க்க ரொம்பப் பெரிய சக்திவாய்ந்த நுண்ணோக்கிக் கருவிகள் தேவை. அப்படிப் பெரிதுபடுத்திப் பார்த்தாலும், இந்த DNA மிகக் குட்டியூண்டு மயிர்ச் சுருள் மாதிரிதான் தெரியும்.

பார்க்க இப்படிச் சொற்ப மயிர்ச்சுருள் மாதிரி தெரிந்தாலும்' இந்த அண்டசராசரத்தில் வேறு எதற்கும் இல்லாத ஒரு மாபெரும் சக்தி இந்தப் புரதச் சுருளுக்கு மட்டும்தான் உண்டு. இது ஒன்றுக்கு மட்டும்தான்

தன்னைத்தானே சிருஷ்டி செய்துகொள்ளும் சக்தி உண்டு! யோசித்துப் பாருங்கள்... மலை பெரியதுதான். ஆனால்' அதனால் ஒரு ஜூனியர் மலையைப் பிரசவிக்க முடியாது! கடல் பெரியதுதான் ஆனால், கடலால் ஒரு குட்டி குட்டையையாவது பெற்றுப்போட முடியுமா? பட் திஸ் துகள்! அதுவே அத்தணூண்டுதான்; ஆனால், அதனால் மட்டும் தன் அடுத்த வாரிசை உருவாக்க முடியும். அதுவும் ஒரு தடவை, இரண்டு தடவை அல்ல. மீண்டும் மீண்டும் இதே வேலையாக, வாரிசுகளை உருவாக்கிக் கொள்ள முடியும். காரணம், இதற்கு மட்டும்தான் 'உயிர்' என்கிற அந்த அதிசய ஆக்க சக்தி உள்ளது.

இந்த உயிர் ஒரு விவரிக்க முடியாத விவகாரம்தான் என்றாலும், இந்தப் பிரபஞ்சத்திலே ரொம்ப அரிதான, அபூர்வமான, அபாரமான ஒரு சக்தி இது. விலை மதிப்பே இல்லாத உயர்வான விவகாரம் இது. போனால் மறுபடி வராதது... என்பதெல்லாம் தெரிந்துதான். ஆனால், டி.என்.ஏ. உயிரைத் தனக்குள் மிகப் பத்திரமாக ஒளித்து வைத்திருந்து, சமய சந்தர்ப்பம் பார்த்து, சூழ்நிலைகள் சாதகமாக மாறும்போது சட்டுபுட்டு என்று இந்த உயிர்வைப்பு ரகசியங்களைப் பிரதி எடுத்து அடுத்த தலைமுறைகளுக்கு பார்சல் கட்டி அனுப்பி வைக்கிறது.

இப்படி ஒரு தலைமுறை தன் அடுத்த தலைமுறைக்கு பார்சல் கட்டித் தரும் டிஜிட்டல் உயிர் வைப்பு தகவலைத்தான் மரபணுக்கள் (Genes) என்கிறோம். இந்த அடுத்த தலைமுறை டிஎன்.ஏ.வும் வளங்களை நகர்ந்து, வளர்ந்து பெரிதானதும் முதல் வேலையாக இந்த உயிர் வைப்பு ரகசியங்களான மரபணுக்களைத் தனது மறு தலைமுறைகளுக்கு பார்சல் கட்டித் தருவதே குறியாக இருக்கிறது. இப்படித் தலைமுறை தலைமுறையாக பார்சல் கட்டிக் கொண்டிருக்கும்போது ஒவ்வொரு தலைமுறைக்கும் உயிரை இன்னும் கொஞ்சம் பெட்டராகப் பாதுகாக்க ஏதாவது புது யுக்தி தெரிய வந்தால், அதையும் ஏற்கனவே இருக்கும் ரகசியங்களோடு சேர்த்து பார்சல் கட்டி அனுப்பிவிடும்.

'இந்த டி.என்-ஏ.வே மயிரினும் மெல்லிய மேட்டராக இருக்கும்போது இது எப்படிச் சமய சந்தர்ப்பம் பார்த்து, சூழ்நிலைகள் சாதகமாக இருக்கின்றனவா? இல்லையா? என்றெல்லாம் உணர்ந்து செயல்படுகிறது?' என்று உங்களுக்குக் கேட்கத் தோன்றுகிறதா? குட், தன்னைத் தானே தற்காத்துக் கொள்ள இந்த DNA செய்த ஏற்பாடுதான் இந்த உடல், அதன் உறுப்புகள், அதன் உணர்வுகள். இதையெல்லாம் ஒருங்கிணைக்க உருவாக்கப் பட்டதுதான் அதன் மூளை. இந்த மூளையை மேய்க்க உருவானதுதான் அதன் உள்ளம். எல்லாம் சரி, ஆனால், நம்ம டாபிக் காமம்தானே, காமத்திற்கும் இந்த DNA -வுக்கும்

என்ன சம்பந்தம் என்கிறீர்களா? உண்மையில் எக்கச்சக்க சம்பந்தம் இருக்கு. ஆனால், எல்லாமே இதுவரை பார்த்திராத, கேட்டிராத, ஏன், நினைத்திராத புத்தம் புதுச் சமாச்சாரங்கள்.

So please be warned. உங்களைத் திடுக்கிட வைக்கும் பல அக்மார்க் அறிவியல் ரகசியங்களும், இதுவரை நீங்கள் உண்மை என்று நினைத்திருந்ததை எல்லாம் ஊதித் தள்ளிவிடும் தகவல்களும் இனி வரவிருப்பதால், கொஞ்சம் விழிப்போடுப் படித்திடுங்கள்.

# 21

# ஜித்து ஜீன்ஸ்!



இந்த DNA -வுக்கும் செக்ஸுக்கும் என்ன அப்படிப்பட்ட சம்பந்தம்? என்பதெல்லாம் கொஞ்சம் ஹை லெவல் மேட்டர் என்பதால் அப்படியே போட்டு உடைக்க முடியாது. உங்களை ஓரளவுக்குத் தயார் பண்ணிவிட்டுத்தான் இது மாதிரியான பயங்கர ரகசியங்களைச் சொல்ல முடியும்.

அதனால், அறிவியல் ஆழ்கடலில் குதிக்கத் தயாராகுங்கள். உங்களைச் சுற்றி 'தான் உண்டு தன் வேலை உண்டு' என்று கருமமே கண்ணாக உலவிக் கொண்டிருக்கும் மனிதர்களை ஒரு தரம் பாருங்கள். What do you see?

தோல், சதை, எலும்பு, ரத்த நாளம் என்று மேலோட்டமாகத் தெரியும் சமாசாரங்களைத் தவிர்த்து உங்கள் கண்களை 'மைக்ராஸ்கோப்புகளாக்கி உற்றுப் பாருங்கள். இப்போது தெரிகிறதா, அவர்கள் எல்லாம் மனிதர்களே இல்லை. மானுடம் என்கிற மாறுவேடம் அணிந்த மரபணுக்கள்!

மரபணுக்களா... எங்கே என்கிறீர்களா...? இவற்றை வெற்றுக் கண்களால் பார்க்க முடியாது. மிகவும் சக்திவாய்ந்த நுண்ணோக்கி வழியே பார்த்தால் மனித உடம்பு முழுக்க சாரைசாரைய அணிவகுத்து நிற்கும் குட்டிக்குட்டி செல்கள் தெரியும். இந்தக் குட்டிக்குட்டி செல்களின்

மத்தியில் அதைவிட குட்டியூண்டான ஒரு பாதுகாப்பு வளையத்திற்குள் கப்சிப் என்று சந்தடியே இல்லாமல் சுருண்டுக் கிடக்கின்றனவே.. அவைதான் குரோமோசோம் எனப்படும் மரபணுக்கள். பார்க்க யாரோ சீவி சுருட்டிப் போட்ட மயிர்ச்சுருள் மாதிரி இருந்தாலும், இதைக் கொஞ்சம் உதறி உரித்துப் பார்த்தால் ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்!



அத்துணூண்டு சுருளுக்குள் ஆயிரமாயிரம் ஜீன்கள் பதுங்கிக் கிடக்கின்றன. இந்த ஜீன்கள் மகா ஜித்து பார்ட்டிகள்! பார்க்க அற்பமாக, வெறும் சில நானோமீட்டர் நீளம் கொண்ட DNA சங்கிலி மாதிரி தெரிந்தாலும், அத்தனை குறைந்த இடத்திற்குள் பிறப்பு ரகசியம், இறப்பு ரகசியம், பிரம்ம ரகசியம் மாதிரியான மகா முக்கியமான மேட்டர்களை ஒளித்து வைத்திருக்கின்றன!

மனித மரபணுவில் மொத்தம் முப்பதாயிரம் ஜீன்கள் இருப்பதாகக் கண்டுபிடித்திருக்கிறார்கள். இத்தனை ஜீன்கள் இருந்தாலும் அவற்றின் ஒற்றுமையான ஒரே குறிக்கோள் என்ன தெரியுமா? எப்படியும் உயிர்

பிழைச்சிக்கணும் எனும் Survival தான்.

Survival ஒன்றே குறியாக இயங்குவதனால், எப்போது, என்ன செய்தால் எவ்வாறு பிழைத்துக் கொள்ளலாம் என்பது மாதிரியான வாழ்வியல் வித்தைகள் எல்லாம் இதற்கு அத்துபடி! ‘தான் உயிர் பிழைத்து தன்னுடைய தலைமுறைகள் வடிவில் தொடர்ந்து அழிவின்றி நிரந்தரமாக வாழவேண்டும்’ என்பதிலே சிரத்தையாக இருப்பதனால் இந்த ஜீன்கள் சதா தன்னலம் கருதியே எல்லாக் காரியங்களும் செய்கின்றன. இதனாலே இவற்றை Selfish Genes என்கிறார்கள்.

ஆனால், ‘இந்த ஜீனே மிகச் சிறிய DNA துகள். வெயிலில் கொஞ்சநேரம் கிடந்தால் அப்படியே உருக்குலைந்து ஒன்றுமில்லாமல் போய்விடும் அளவிற்கு ரொம்ப மென்மையான மேட்டர். இது எப்படித் தன்னலம் தவறாமல் தழைக்குமாம்?’ என்று நீங்கள் யோசித்தால்... ஜீன்கள்தான் எல்லா ஜித்து வேலைகளும் தெரிந்த ஜகஜ்ஜாலக் கிலலாடிகளாயிற்றே... இந்த ஜித்து ஜீன்கள் வெயில், மழை, கதிர்வீச்சு, பனி மாதிரியான ஆபத்துகளிலிருந்து தன்னைத் தற்காத்துக் கொள்ளவே, தன்னைச் சுற்றியிருக்கும் கச்சாப் பொருட்களான ஆக்ஸிஜன், கார்பன், நைட்ரஜன் வகையறா வாயுக்களை எல்லாம் உருமாற்றி, தனக்குத் தானே ஒரு ஸ்தூல உடலை உருவாக்கிக் கொண்டு இந்த உடம்பிற்குள்ளே சூட்சுமப் பொருளாக பதுங்கியே கிடக்கின்றன.

ஆனால், இந்த ஸ்தூல உடலான Phenotype பை இயக்க வேண்டுமானால் அதற்கு எரிபொருள் அவசியப்படுமே. எரிபொருள் வேண்டுமானால் உணவு வேண்டுமே. உணவை உள்வாங்க ஒரு வயிறு வேண்டும். அதற்காக ஒரு இரைப்பையை உருவாக்கின இந்தச் சூட்சும ஜீன்கள்.

வயிறு ஒகே ஆனால், அது நிரம்ப உணவைத் தேடிப் போக வேண்டும். அதற்கு நகர்ந்து புலம்பெயரும் உறுப்புகள் தேவை. அதற்காகத் தசைகளை உருவாக்கியது.

தசைகள் ஒ.கே. ஆனால், அவற்றை ஒருங்கிணைத்து ஏவல் புரிய ஒரு சாதனம் வேண்டும். அதற்காக நரம்புகளையும் அவற்றை இயக்க ஒரு மூளையையும் உருவாக்கின ஜீன்கள்.

மூளை ஒ.கே. ஆனால், உள்உலகம் வெளிஉலகம் என்ற இரண்டையும் உணர்ந்து ஜீன்களுக்குத் தூது செல்ல ஒரு இடைத் தரகன் இருந்தால்தானே ஜீன்களின் வேலைப்பாடு சரியா? தவறா? என்பதை

உணர்த்த முடியும். அதற்காக ஓர் உள்ளத்தை உருவாக்கின இந்த மகா ஜித்து ஜீன்கள்.

இந்த உடல், அதன் தோல், சதை, ரத்தம், எலும்பு அதன் வயிறு, மூளை, மனம் என்று ஒவ்வொரு தனி படைப்புமே பிரமாதம்தான் என்றாலும் இவை அனைத்துமே ஜீன்களைப் பொறுத்தவரை வெறும் எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸ்தான்.

என்ன, எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸா!

# 22

## பிரம்ம ரகசியம்!



ஜீன்கள் அத்தனை வேலைகளையும் மெனக்கெட்டு இந்த உடல், சதை, வயிறு... போன்ற எக்ஸ்ட்ரா ஃபிட்டிங்ஸை உருவாக்கியது கலாரசனைக்காகவோ, படைப்பாற்றலைக் காட்டி பீற்றிக் கொள்வதற்காகவோ இல்லை.


பின்னே எதற்காக? தான் வசதியாகக் குடியிருந்து தன்னுடைய ஒரே பிறவிப் பயனான வம்சவிருத்தியைத் தொந்தரவு இல்லாமல் செய்து வரத்தான்!

இந்த முக்கியமான பணியை நிறைவேற்ற ஜீன்கள் உருவாக்கிய அதிஅற்புதமான மெயின் பாகம்தான் இனப்பெருக்க உறுப்புகள்!

இந்த இனப்பெருக்க உறுப்புகளில் மட்டும்தான் ஒரு புது உயிரை உருவாக்கத் தேவையான அத்தனை செய்முறைக் குறிப்புகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. இந்தப் பிரம்ம ரகசியப் பதிவைத்தான் ‘ஜீனோம்’ என்கிறோம்.

இந்த ஜீனோம் காலம், நேரம், சூழல், சந்தர்ப்பம் சாதகமாக இருக்கிறதா என்று காத்துக்கொண்டே இருக்கும். எல்லாம் அனுகூலமாக அமைந்து இயற்கை ஜூட் சொன்ன மறுகணமே, மடமடவென ஒரு புது உயிரை உருவாக்கிவிடும். அத்தனை நுட்பமான இந்த ஜீனோமைக் கட்டிக் காப்பதுதான் ஜீன்களின் முழுநேர வேலை.


காரணம், ஒரு பக்கம் நம்முடைய ஹீரோ ஜீன்கள் தன்னைத் தற்காத்து தலைமுறைகளை உருவாக்க ரொம்ப பிரயத்தனப்பட்டு உடல், பொருள், ஆவியை உருவாக்கி வைக்க, இன்னொரு பக்கம் இதைக் கெடுப்பதே குறி என்று திரிகின்றன சில வில்லன் ஜீன்கள்!



இந்த வில்லன் ஜீன்கள் இருக்கின்றனவே மகா சோம்பேறிகள்! தானாக ஓர் உடம்பை உருவாக்கி, அதற்குத் தீனி போட்டு, வளர்த்து பிறகு இனத்தைப் பெருக்கிக் கொள்ள அவற்றுக்குப் பொறுமை இல்லை. கள்ளச்சாவியைப் போட்டு ஹீரோ ஜீனின் ஜீனோமை உடைத்து உள்ளே போனோமா... உள்ளதை எல்லாம் சுருட்டிக் கொண்டு ஓனர் ஜீனோமை அழித்தோமா.. என்று குறுக்குவழியில் வாழும் இந்த விபரீத ஜீன்களைத்தான் விஷக் கிருமிகள் என்கிறோம்.

உதாரணத்துக்கு, எச்.ஐ.வி. கிருமி! எத்தனை சின்னதாக இருந்து கொண்டு மாபெரும் அறிவாளியான மனிதனையே ஆட்டிப் படைக்கிறது. இப்படி இந்த ஹீரோ ஜீன்களுக்கும் வில்லன் ஜீன்களுக்கும் இடையே நடக்கும், 'யார் ஜெயிக்கிறானு பார்த்துடலாம்' டைப் ஆயுதப் போர் கடந்த மூன்னூறே கால் மில்லியன் ஆண்டுகளாக நடந்து கொண்டுதான் இருக்கிறது! இந்தப் பாழாய்ப்போன கிருமி ஜீன்களிடம் ஜீனோம் சிக்கினால், பிழைப்பது பெரும் கஷ்டமாகிவிடும் என்று இந்தப் புத்திசாலி ஹீரோ ஜீன் மகா கெட்டிக்காரத்தனமான ஒரு

யுக்தியைக் கையாண்டது.



முழு ஜீனோமையும் ஒரே இடத்தில் ஒளித்து வைத்தால்தானே கிருமிகள் வந்து முதலுக்கு மோசம் செய்யும். அதற்குப் பதில் ஜீனோமை இரண்டாக்கி இரு வெவ்வேறு உடல்களில் பதுக்கி வைத்துவிட்டால்...! காலம் கூடி வரும்போது இந்தப் பாதி பாதி இரண்டு ஜீனோம்களும் கூடி முழுமையடைந்து புது உயிர் படைக்கத் தயாராகிவிடுமே!

இப்படி அறிவார்த்தமாக யோசித்து ஜீன்கள் உருவாக்கிய இரண்டு தனி ஜீனோம் ஒளிவு சாதனங்களை ஆண் உடல், பெண் உடல் என்று அழைக்கிறோம்! தங்களது இனப்பெருக்க உறுப்புகளில் அறை ஜீனோமுடன் உலவிக் கொண்டிருக்கும் இந்த ஆண் உடலும், பெண் உடலும் சேர்ந்தால்... மேட்டர் ஓவர்! ஆனால், இதில்தான் பல சிக்கல்களே ஏற்படுகின்றன. குறிப்பாக மனித குலத்தில் மிகுதியான சிக்கல்கள் ஏற்படுகின்றன.

அது என்ன சிக்கல்....?

# 23

# ஆணே இல்லாத ஆதி உலகம்!



இதுநாள் வரை உண்மை என நம்பிய எல்லாவற்றையும் ஊதித் தள்ளும் விஞ்ஞான விஷயங்களை, திடுக்கிடும் தகவல்களைக் கேட்க தயார் எனில் உங்களுக்கான முதல் அதிர்ச்சி இதோ:

ஆரம்ப உலகில் ஆண் என்ற ஒரு பாலினமே கிடையாது. எல்லா உயிருமே ஒரு காலத்தில் பெண் வடிவாகத்தான் இருந்தன.

நோ ஆண்! ஒன்லி பெண்! என்றால் இது நம்புற மாதிரியா இருக்கு? என்று நீங்கள் வியக்கலாம். ஆனால், விஷயம் இதுதான்... பெண் ஆதி, ஆண் அவளின் பாதி. ஒற்றை செல் உயிரினம் முதல் பல செல் பிராணி வரை எல்லாமே வெறும் பெண் வடிவாக உலவிக் கொண்டிருந்த காலம் அது. நோய் உண்டாக்கும் கிருமி ஜீன்களிடமிருந்து தன் ஜீனோமைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நமது கதாநாயக ஜீன்கள் ஆண், பெண் பாலின பிரிவினையை உருவாக்கின. பெண் உடம்பிலிருந்து ஆண் என்ற ஒரு மாறுபட்ட ஜீவராசியை உற்பத்தி செய்தன.

அதெப்படி ஆணை திடுதிப்பென்று உற்பத்தி செய்யும் இந்த ஜீன்கள் என்று யோசிக்கிறீர்களா?

உங்கள் பார்வைக்கு வேண்டுமானால் ஆண் ஒரு தனி பாலினம், பெண் இன்னொரு தனி பாலினம் என்றும் இரண்டிற்கும் ஏகப்பட்ட வித்தியாசங்கள் என்றும் தோன்றலாம். ஆனால், ஜீன்களின்

பார்வையில் ஆண், பெண் இரண்டிற்கும் ஓர் அடிப்படை வித்தியாசம் மட்டும்தான். பெண் உடம்பில் ‘ஈஸ்டிரடயால்’ என்ற ஹார்மோன் மேலோங்கி இருக்கும். இந்த ஹார்மோன் அந்தப் பெண்ணை கொழுக்மொழுக் என்று உருமாற்றி, கர்ப்பப்பை, கருமுட்டைகளை உருவாக்கி, தாய்மைக்கு உரியவளாக அவளை மாற்றுகிறது. ஆக, எல்லாப் பெண் தன்மைக்கும் அடிப்படைக் காரணம் அந்த ஈஸ்டிரடயால் என்கிற அந்த ஒற்றை ஹார்மோன்தான்.



இதற்கு நிகராக ஆணின் உடலில் ஊறும் ஹார்மோன்

டெஸ்டோஸ்டிரோன். (Testosterone) அவனை உருண்டு திரண்டவனாக உருமாற்றி, விந்தணு, விரைப்பு உறுப்பு ஆகியவற்றை உருவாக்கி, ஆண்மை என்று சொல்லப்படும் அனைத்து அம்சங்களையும் உண்டாக்குவது இந்த டெஸ்டோஸ்டிரோன் என்ற அந்த ஒற்றை ஹார்மோன்தான்.

ஆனானப்பட்ட இந்த ஆணை உருவாக்கும் டெஸ்டோஸ்டிரோன் என்ற ஹார்மோன் முதன்முதலில் எங்கிருந்து வந்தது தெரியுமா? பெண்மைக்குக் காரணமான ஈஸ்டிரடயாலில் இருந்துதான்!

அதெப்படிப் பெண்மைக்குரிய ஹார்மோனான ஈஸ்டிரடயால் அதற்கு நேர் எதிரான ஆண்மை அம்சங்களை ஏற்படுத்தும் ஹார்மோனான டெஸ்டோஸ்டிரோனாக உருமாறும்? என்று நீங்கள் யோசித்தால்... இந்த ஜீன்கள் மகா ஜித்து பார்ட்டிகள் அவற்றால் ஆகாதது எதுவுமே இல்லை. ஈஸ்டிரடயாலை கொஞ்சம் தட்டி, பூசி, பட்டிப் பார்த்து சில கிளை அணுக்களை மாற்றி அடுக்கி வைத்தால் டெஸ்டோஸ்டிரோன் ரெடி!

ஆதி காலத்தில் எல்லா மிருகங்களும் எந்த மாதவமும் செய்யாமலே மங்கையராகப் பிறந்து கிடந்தன. அவற்றில் ஒரே ஒரு மிருகத்தின் ஜீன்கள் மட்டும் ஈஸ்டிரடயாலைப் புரட்டிப் போட்டு டெஸ்டோஸ்டிரோன் உருவாக்கும் புது வித்தையை எதேச்சையாகக் கண்டுபிடித்தன. அதுவரை கரு சுமந்து சூல் கொண்டு, முட்டை இட்டோமா என்று தேமே என்று கிடந்த ஓல்டு ‘ஃபேஷன் பெண்களைப் போல இல்லாமல் இந்த நவீனயுக பெண், தன் உடலில் ஊறிய டெஸ்டோஸ்டிரோனின் உபயத்தால் ஒரு புது தந்திரத்தை உருவாக்கினாள்.

இந்தக் கரு சுமந்து, சூல்கொண்டு, வயிறு வீங்கி, மூச்சை அடக்கி முட்டைகளை முக்கி வெளியேற்றும் வேலையை வைத்துக் கொள்ளாமல், தனக்குள் உருவான முட்டைகளை நைஸாக ஓர் ஓல்டு ஃபேஷன் பெண்ணின் வயிற்றுக்குப் பார்சல் கட்டிவிட்டால்... மடியில் கனமில்லாமல், முட்டையை முக்கும் அவஸ்தையில்லாமல் தப்பித்துக் கொள்ளலாமே!

ஆனால், இதில் ஒரே ஒரு பிரச்னை இருந்தது. இதன் உடம்பில் உருவான முட்டைகளை எப்படி அதன் உடம்பிற்குள் அனுப்புவதாம்? அதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தன இந்த நவீன பெண்ணின் மரபணுக்கள். இவள் வயிற்றிலிருந்து ஒரு மெல்லிய குழாயை வளர விட்டால், இந்த Ovipositor ரை லாகவமாக ஒல்டு ஃபேஷன் பெண்ணின்

முட்டைப் பையினுள் நுழைத்து, தன் முட்டைகளை எல்லாம் தாரை வார்த்துத் தந்து விடலாம்.

இப்படி நவீன பெண்ணின் மரபணுக்கள் எல்லாம் தங்கள் வேலையைக் குறைத்துக் கொள்வதில் சாமர்த்தியமாக இருக்க, ஓல்டு ஃபேஷன் பெண்களின் மரபணுக்கள் மட்டும் சும்மா இருக்குமா என்ன?

தனக்கு எந்த ஆதாயமும் இல்லாத காரியத்தைத்தான் எந்த மரபணுவும் அனுமதிக்காதே! ஆனால், இன்னொருவரின் கருமுட்டைகளைத் தன் வயிற்றில் சுமந்து முக்கிப் பெற்றெடுப்பதில் அப்படி என்ன பெரிய ஆதாயம் இருக்க முடியும்?

இருந்ததே ஒரு மிகப் பெரிய ஆதாயம்! தன் உடம்பில் உருவான இரண்டு அரை ஜீனோம்களைக் கொண்ட கருமுட்டைகளை இணைத்து ஒரு முழு ஜீனோம் உயிராக உருவாக்குவது போல இல்லாமல், வெளியிலிருந்து கிடைக்கும் விதம்விதமான கருமுட்டைகளில், உயர் ரக சரக்காகப் பார்த்துத் தேர்ந்தெடுத்து தன் கருமுட்டைகளோடு இணைத்தால், வீரியம் மிகுந்த அடுத்த தலைமுறை உருவாகுமே!

உயர் ரக கருமுட்டைகளை இப்படி ஸ்வீகாரம் செய்தால் உயிர் வாழும் வீரியம் கூடி ‘சர்வைவல்’ சுலபமாகும். ‘சர்வைவல்’தான் ஜீன்களின் ஒரே குறிக்கோள் என்பதால், ‘முட்டை எங்கிருந்து வந்து கலந்தாலும் பரவாயில்லை. வீரியம் மிகுந்த குட்டிகள் உருவானால் சரி’ என்று அனுமதித்தன. ஆனால், ஒரு கண்டிஷனுடன்; ஒசத்தி சரக்கா இருந்தா மட்டும்தான் ஒகே!

இப்படி ஓல்டு ஃபேஷன் பெண்கள் ஒசத்தி சரக்கு மட்டும்தான் ஏற்றுக் கொள்ளப்படும் என்று நிபந்தனை விதித்ததால், நவீன பெண் தன்னிடம் இருப்பது ஒசத்தி சரக்குதான் என்பதை விளம்பரப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளானது. அதனால், தன்னைத்தானே கவர்ச்சியானதாக, அழகானதாக, மேன்மையானதாகக் காட்டிக் கொள்ள அது செய்துகொண்ட உடல் மாற்றங்களினால்... காலப் போக்கில் இந்த நவீன பெண்கள் டெஸ்டோஸ்டிரோனின் தாக்கத்தால் மெல்லமெல்ல உருமாறி’ கடைசியில் ‘ஆண்’ என்ற புதிய திருநாமத்தைப் பெற்றனர்.

உங்களைச் சுற்றியுள்ள எல்லா மிருகங்களையும் பாருங்கள். ஆண் மயிலின் நீளமான தோகை, ஆண் சேவலின் அழகான கொண்டை, ஆண் யானையின் பளபள தந்தம், ஆண் சிங்கத்தின் அடர்ந்த பிடரி, ஆண் மீனின் மினுமினு செதில்கள், ஆண் மானின் வளைந்து நெளிந்த கொம்பு, அவ்வளவு ஏன் ஆண் பூச்சியின் அழகான றெக்கை... என்று

அந்தக் காலம் தொட்டு இந்தக் காலம் வரை தன் கவர்ச்சியை மிகைப்படுத்திக் காட்டி ‘என் மரபணுக்களை ஏற்றுக் கொள். பார் எவ்வளவு நல்ல சரக்குனு!’ என்று பெண் மிருகங்களைக் கவர முயல்கின்றன ஆண்கள்.

அதற்குப் பெண் மிருகங்களின் ரியாக்ஷன் என்ன...?

# 24

## காதல் கணக்குகள்!



கண்ணுக்குத் தெரியாத மிகக் குட்டியூண்டு பாக்டீரியா முதல், உலகத்திலே பெரிய விலங்கான திமிங்கலம் வரை எந்த வகை உயிரினமானாலும் இனச்சேர்க்கை என்று வரும்போது மரபணு கடைப்பிடிப்பது ஒரே ஒரு விதியைத்தான். ஆண் மிருகம் தன்னை விளம்பரப்படுத்திக் கொள்ளும். பெண் மிருகம் அவற்றில் சிறந்ததாய் ஒன்றைத் தேர்வு செய்யும்.


மான் இனத்தின் நேர்த்தியான நெளிவு சுளிவுள்ள கொம்பாகட்டும், மயில் இனத்தின் அழகானப் பளபள தோகை ஆகட்டும், மனித ஆணின் பந்தா காரும் பருமனான பர்ஸும் ஆகட்டும்.. அடிப்படையே இதுதான். ஆணினம் தன் கவர்ச்சியைக் கடைபரப்பும், பெண்ணினம் சிறந்ததோடு சேரும்.

இதெல்லாம் என்ன இப்படிக் கணக்குப் பார்த்து உறவு கொள்வதாவது! உறவு என்றால் ஒரு ரொமான்ஸ் வேண்டாமா என்று ஆட்சேபிக்கக் கூட உங்களுக்குத் தோன்றலாம். ஆனால், என்ன செய்வது இயற்கையின் படைப்பே அப்படித்தான். எந்த உயிரினமும் லாப நஷ்டக் கணக்குப் பார்க்காமல் எந்தக் காரியத்திலும் ஈடுபடுவதில்லை. சாதாரண அன்றாட அற்ப நடவடிக்கைகளுக்கே இவ்வளவு கணக்கு பார்க்கும்போது, பிறவிப்பயன் என்று எல்லா உயிரினங்களும் நினைக்கும் இனவிருத்தியில் எவ்வளவு கணக்குப்

பார்க்க வேண்டிவரும்.

இந்தக் கணக்கைக் கூட மிருகங்கள் எவ்வளவு துல்லியமாகப் பார்க்கின்றன என்று தெரிந்தால் ரொம்பவே ஆச்சரியப்பட்டுப் போவீர்கள்.

இதைப் பரிசோதிப்பதற்காக விஞ்ஞானி ஒருவர், ஒரு தோட்டத்தில் இருந்த அத்தனை ஆண் மயில்களின் தோகை நீளத்தை அளவு எடுத்தார். அந்தந்த மயிலின் தோகை நீள அளவைச் சின்ன அட்டையில் எழுதி அதன் காலில் கட்டி வைத்தார். பிறகு பெண் மயில்களைத் தோட்டத்திற்கு அனுப்பினார். பெண்களைப் பார்த்ததும் ஆண் மயில்கள் எல்லாம் ‘என்னைப் பார் என் அழகைப் பார்’ என்று வர்ணஜலத் தோகையை விரித்துக் காட்டின. பெண் மயில்களும் விரித்த தோகைகளை உற்றுஉற்றுப் பார்த்து, சுற்றிச்சுற்றி வந்தன. கடைசியில் அத்தனை பெண் மயில்களும் தேர்ந்தெடுத்தநு யாரைத் தெரியுமா? சொன்னால் நம்ப மாட்டீர்கள்... அந்தக் கூட்டத்திலேயே மிக நீளமான தோகையைக் கொண்டிருந்த ஆணைத்தான் அத்தனை பெண்களும் தேர்ந்தெடுத்தன.



போயும்போயும் ஐந்தே அறிவைக் கொண்ட ஒரு மயில் கூட்டம்! எண்ணும் தெரியாது. எழுத்தும் தெரியாது . ஜாண் எவ்வளவு நீளம், முழம் எவ்வளவு தூரம் என்பது கூடத் தெரியாத இந்த மயில்கள். அவை எப்படி எந்தத் தோகை நீளமானது என்று கண்டுபிடித்தன? சரி, தோகையின் நீளத்தில் அப்படி என்ன இருக்கிறது என்று அதற்கு இத்தனை முக்கியத்துவம் தருகின்றன?

மயிலின் அகராதியில் உயர் ரக மரபணுவிற்கு அடையாளமே நீளமான தோகைதான். ஆக, பெண் மயில்கள் தேர்ந்தெடுத்தது வெறும் நீண்ட தோகையை அல்ல' அதன் பின்னணியில் இருக்கும் சிறந்த மரபணுக்களை! என்னமோ கடை வீதியில் மிகச் சிறந்த சரக்கை விலைபேசி வாங்குவது போல இந்தப் பெண் ஏன் இப்படி பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுக்கிறதாம்?

சும்மாவா? இந்த இனவிருத்தி என்கிற வணிகத்தில் பெண் முதலீடு செய்வது விலைமதிப்பில்லாத அவளுடைய கருமுட்டையை ஆயிற்றே! குறைந்த எண்ணிக்கையில் மிகச் சிரமப்பட்டு உருவாக்கும் இந்த முட்டைகளோடு கலக்க ஓர் அருகதை வேண்டாமா? அதனால்தான் இருப்பதிலே மிக உயர்வான சரக்கைத் தேடிப் பிடித்து தேர்ந்தெடுக்கிறது இந்தப் பெண் மயில். சரி, இந்தத் தோகை நீளம் கணக்கெல்லாம் மயில் இனத்திற்கு ஒகே.

மனித இனத்திற்கு?

மனித இனத்திலும் சிறந்த ஆணைப் பெண் தேர்ந்தெடுக்கும் அதே கொள்கையைத்த என் கடைப்பிடிக்கிறார்கள். பிள்ளைப் பேற்றில் பெண்ணின் முதலீடு மிக அதிகம். அரும்பாடுபட்டு ஒரு கருமுட்டையை உருவாக்கி’ அதை விந்து அணுவோடு கலந்து கருவாக்கி, அதைக் கர்ப்பப்பையில் சுமந்து, தன் உடல், பொருள், ஆவி அனைத்தையும் கொடுத்து கருவை சிசுவாக்கி, சிசுவை பெரும் வலியோடு ஈன்றெடுத்த பிறகும் பிள்ளை அவளை உறிஞ்சியேதான் உயிர் வாழ்கிறது. பிள்ளை வளர்ந்து பெரிதான பிறகும்கூட, அதன் வளர்ப்பில் அவள் பங்கு ஆணைவிடப் பலமடங்கு அதிகம்!

அதே பிள்ளைப் பேற்றில் ஓர் ஆணின் முதலீடோ மிகக் குறைவே. கொஞ்சம் விந்தணு. கொஞ்சம் விநாடிகள், கொஞ்சம் உடலசைவுகள்... அவ்வளவுதான். இத்தனை சொற்ப செலவில் ஆண் தன் குலத்தை அபிவிருத்தி செய்துகொள்ளலாம். இந்த விந்து வெளியேற்றத்திற்குப் பிறகும் இவன் அங்கேயே இருந்து பிள்ளை பராமரிப்பில் பங்கு கொண்டால்தான் ஆயிற்று என்ற கட்டாயமும் இல்லை. அவன் இல்லாவிட்டாலும் பெண்ணே எப்படியாவது சமாளித்து வளர்த்து விடுவாள்.

இப்படியாக மரபணுக்கள் முதலீடு, எரிபொருள் செலவு என்ற கண்ணோட்டத்தில் பார்த்தால் பிள்ளைப்பேறு சமாச்சாரத்தில் ஆணைவிடப் பெண்ணுக்குத்தான் முதலீடு அதிகம். இவ்வளவு பெரிய முதலீடு செய்யும்போது எவ்வளவு எச்சரிக்கையாக இருக்க வேண்டும்! அதனால்தான் பெண்கள் பார்த்துப்பார்த்து ஆண்களைத் தேர்ந்தெடுக்கிறார்கள்.

# 25

## செக்ஸ் சடங்குகள்!



மயில் தோகையின் மர்மத்தைப் பற்றி தெரிந்து கொண்டதற்கே அசந்து போயிருப்பீர்கள். இன்னும் இந்த மரபணுக்கள் செய்யும் மாயாஜால வேலைகள் தெரிந்தால் பிரமித்துப் போவீர்கள்.

கண்ணுக்கே தெரியாத குட்டியூண்டு புரதச் சுருளாக இருந்துகொண்டு இந்த ஜீன்கள் செய்யும் ஜித்து வேலை இருக்கிறதே... தன்னைச் சுற்றி உடம்பு என்ற ஒரு கவசத்தை உருவாக்கி, இந்தக் கவசம் உயிர் வாழ உறுப்பு என்ற பல அவயவங்களை உண்டாக்கி வைத்தன. இந்த அவயங்களின் உபயத்தால் வளர்ந்து முதிர்ந்ததும் தன் தலையாய பணியான வாரிசு உற்பத்தியை செய்துகொள்கின்றன. அதுவும் எப்படி? இனப்பெருக்க உறுப்புகள் கட்டிக் காக்கும் உயிர் உருவாக்கல் ரகசியங்களை, ஜீன்களின் ஜென்ம விரோதியான கிருமிகள் கையிலிருந்து காப்பாற்ற, உயிர் உருவாக்கும் ரகசிய திட்டமான ஜீனோமை இரண்டாகக் கிழித்து இரண்டு தனித்தனி உடம்புகளில் பதுக்கி வைத்தது.

இப்படி உருவான இந்த இரண்டு தனித்தனி உடம்புகளையும் சும்மா அப்படியே விட்டுவிட்டனவா இந்த ஜீன்கள்? இதில் ஒன்றின் ரசாயனத்தை உருமாற்றி டெஸ்டோஸ்டெரான் என்ற புதுவகை ஹார்மோனை உருவாக்கி, டெஸ்டோஸ்டெரானின் டிங்கரிங் வேலையால் ஒருவகை உடம்பு மட்டும் படு சுறுசுறுப்பாக வளர்ந்து,

பிறகு ‘ஆண்’ என்ற புது அந்தஸ்தைப் பெற்றது.



இந்த டெஸ்டோஸ்டெரான் இல்லாத ஓல்டு பேஷன் உடம்புகள் யுகயுகமாக வந்த வழக்கம்போல அப்படியே, ‘பெண்’ பாலாக இருந்தது. எனவே, இனி ஆண் உடம்பில் ஒளிந்திருக்கும் அரை ஜீனோம், பெண் உடலில் ஒளிந்திருக்கும் இன்னொரு அரை ஜீனோமோடு சேர்ந்தால்தான் ஜீன்களின் வாரிசு உருவாக்கல் திட்டம் கைகூடும் என்ற நிலையும் வந்தது.

மற்ற ஜீவராசிகளுக்கு இந்தத் திட்டம் சூப்பராக ஒர்க் அவுட் ஆனது. ஆண் மலர் மகரந்தத்தூள், பெண் மலர் சூல் என்று தத்தம் அரை ஜீனோமோடு காத்திருக்கும். காற்றோ, நீரோ, வண்டோ, வேற விலங்கோ அந்தப் பக்கம் வந்து மகரந்தத் தூளை சூலோடு சேர்க்கும். அந்தத் தரகர் வேலையைச் செவ்வனே செய்தால் அரை ஜீனோம் + அரை ஜீனோம் = புது உயிர்! மேட்டர் ஓவர்!

மீன் மாதிரியான சின்ன உயிர்களில் இதற்கு ஒரு படி மேலே போய் ஆண் மீனும், பெண் மீனும் அருகருகில் நீந்தி வந்து, நிற்கும். ஆண் மீன் ‘ஐ லைக் யூ’ என்று சமிக்ஞை தந்து, பெண் மீனும் ஓகே சொல்லிவிட்டால், இரண்டும் ஒரே சமயத்தில் தத்தம் உடம்பில் அதுவரை அடைத்து வைத்திருந்த அரை ஜீனோம்களை எல்லாம் மடமடவென்று வெளியேற்றுகின்றன. பிறகு அவை தண்ணீரில் மிதந்து ஒன்றை ஒன்றை இடித்து, உடனே கலந்து இந்த அரை ஜீனோம்கள் எல்லாம் கூடி முழு ஜீனோமாகி புது உயிர்களை உருவாக்கிக்

கொள்ளும். உடம்பிற்கு வெளியே நடக்கும் இதுமாதிரி கருவுறுதலைத்தான் External Fertilization என்கிறோம்.

சரி, மீன் மாதிரி லிட்டில் ஜந்துவுக்கு இது ஓகே. இவை ஜீனோமை சும்மா அப்படியே வெளியில் தள்ளினால் சுற்றி தண்ணீர் இருக்கிறது. மிதந்து, கலந்து உயிர் உருவாக்குகிறது. வாட் அபவுட் நிலவாழ் பெரிய ஜந்துக்கள்? இந்த நிலவாழ் ஜீவராசிக்கு ஜீன்கள் இரண்டு புது உறுப்புகளை உருவாக்கித் தந்தன. ஒன்று, பெண் உடம்பின் அரை ஜீனோமுக்கு செல்லும் ஒரு குறுக்குப் பாதையான வஜைனா. இரண்டு, ஆண் உடம்பில் உள்ள அரை ஜீனோம்களை பெண் உடம்புக்குள் செலுத்தும் சிரின்ஜ் மாதிரி வடிவமைக்கப்பட்ட விரைப்பு உறுப்பான பீனிஸ்.

இந்த விரைப்பு உறுப்பினால் ஆண் மிருகம் பெண் மிருகத்தின் உடம்புக்குள் தன் அரை ஜீனோம்களை இடமாற்றம் செய்கிறது. பெண் மிருகத்தின் உள்ளேயே இந்த இரு ஜீனோம்களும் கலந்து முட்டை உருவாகிடுமே. அப்புறம் முட்டை இட்டு, குஞ்சு பொரித்தால் மேட்டர் ஓவர்! இந்த டெக்னிக் பல்லி, ஆமை, டைனாஸோர் மாதிரியான ஊர்வனவற்றுக்கு ஓகே! பரிணாம வளர்ச்சயில் இதற்குப் பின்வரும் பறவைகளுக்குக் கூட ஓகே.

ஆனால், பறப்பனவும், ஊர்வனவும் பல முட்டைகள் இட்டு, அதில் சிலதானே பிறந்து, பிழைக்கின்றன. மரபணுக்களின் கணக்கில் இது வீண் விரயமாகத் தோன்றியது. உடனே அடுத்த கட்ட ஜீவராசிகளை உருவாக்க ஆரம்பித்தன. இந்த வகை ஜீவராசிகள் முட்டையை முன்கூட்டியே இட்டு, பிறகு வெளியே வைத்து அடை காக்காமல், முட்டையை உள்ளேயே வைத்து அடைகாக்கும். இவற்றைத்தான் பாலூட்டிகள் என்போம்.

இந்தப் பாலூட்டி வகையைச் சேர்ந்த ஆடு, மாடு, நாய், பூனை, டால்ஃபின், யானை, திமிங்கலம் மாதிரி பெரிய சைஸ் பிராணிகள் கூட ஏன், எதற்கு என்று கேள்வி கேட்காமல், பருவகாலம் வந்ததும் ஆணும், பெண்ணும் இனப்பெருக்கத்தில் ஈடுபடும். No questions asked.. ஒரே ஒரு பாலூட்டியைத் தவிர. எதற்கு எடுத்தாலும் ஏன்? எதற்கு? இதைச் செய்தால் எனக்கென்ன கிடைக்கும்? என்று சதா ஆதாயம் தேடும் மானுடர்கள்தான் அந்த ஒரே விதிவிலக்கு.

வேலை மெனக்கெட்டு ஆணும், பெண்ணும் ஒருவரை ஒருவர் தேடிக் கண்டுபிடித்து, குழாய் எங்கே, சிரிஞ்ஜ் எங்கே என்று ஆராய்ந்து, பிறகு ஜீனோம்களைப் பரிமாறி, அதைச் சுமந்து, பெற்று, வளர்த்து... ஒ,

வாட் எ போர்! என்று இந்த மகா புத்திசாலியான மனித ஜன்மங்கள் யோசித்து, யார் செய்வார் இனப்பெருக்கத்தை என்று தர்ணா செய்துவிட்டால்? இந்தப் பிரச்னையையும் தீர்க்க ஜீன்கள் ஒரு வழியைக் கண்டுபிடித்தன.

அது என்ன வழி...?

# 26

## ஆசையினாலை மனம்...



மற்ற உயிரினங்கள் ஏன்? எதற்கு? என்று எந்த எதிர்க் கேள்வியும் கேட்காமல், 'தங்கள் சித்தம், என் பாக்கியம்' என்று மரபணுக்கள் தீட்டும் இனவிருத்தி திட்டங்களுக்கு அப்படியே ஆமாம் சாமி போட்டு, இனச்சேர்க்கையில் ஈடுபடுகின்றன. ஆனால், மனித வர்க்கம் மட்டும் 'அஸ்குபுஸ்கு! நீ சொன்னா நான் செய்திடுவேனா? இதைச் செய்தால் எனக்கு என்ன லாபம்?' என்று படு உஷாராகக் கேள்வி கேட்டிட... சும்மா விடுமா இந்த DNA. மனிதர்களையும் தன் வழிக்குக் கொண்டு வர ஜீன்கள் சிலவற்றை ஏவியது.

இந்த ஜீன்கள் செய்த ஜால வேலையால் உலகில் வேறு எந்தப் பிராணிக்கும் இல்லாத அளவிற்கு செக்ஸியோ செக்ஸியான பாகம் என்று மானுடர்களுக்கு உருவாக ஆரம்பித்தது. அது எப்படித் தெரியுமா? ஓவர் டூ கி.மு. இருநூறு மில்லியன் ஆண்டு...

மண்புழு மாதிரியான முதுகெலும்பு இல்லாத ஜீவராசிகள் ரயில்வண்டி மாதிரி பெரிய சைனில் பூமியில் உலவிய காலம் அது. மண்புழுவில் பெரிய விசேஷம் ஒன்று உண்டு. அவைதான் உலகின் முதல் அர்த்தநாரிகள்! ரியலி! மண்கபுழுவின் இடுப்புப் பகுதியில் இரண்டு வகை இனப்பெருக்க உறுப்புகள் இருக்கும். ஒன்று ஆண், இன்னொன்று பெண். அதனால், எதிர்பாலினத்தைத் தேடி இனச்சேர்க்கைப் புரிந்து தலைமுறைகளை உருவாக்கும் தலைவலிகள்

மண்புழுவுக்கு இல்லை!



ஜஸ்ட் தன்னுள் இருக்கும் ஆண் கேமீட்டும் (அரை ஜீனோமுக்கு இப்படி ஒரு பெயர்) ஒரு பெண் கேமீட்டும் கலந்து முட்டை உருவானால் மேட்டர் ஓவர். முட்டையை மணலோடு மணலாகப் புதைத்து வைத்தால் கொஞ்ச காலத்திற்குப் பிறகு ஒரு புத்தம்புது மண்புழு ரெடி! இப்படி இனப்பெருக்க விஷயத்தில் தன்னிறைவாக இருந்ததால் மண்புழு மாதிரியான ஜீவராசிக்குப் பெரிய சைஸ் மூளையே தேவைப்படவில்லை. அதனால், மரபணுக்கள் மண்புழுவிற்கு மூளையை படைக்கவில்லை!

அது சரி, மூளைக்கும் அந்தரங்கத்திற்கும் என்ன சம்பந்தம் என்று அதற்குள் யோசிக்க ஆரம்பித்து விடாதீர்கள். முழுக் கதையையும் முதலில் கேளுங்கள். காலம் கி.மு.150 மில்லியன் ஆண்டுகளுக்கு முன், மீன் மாதிரியான முதுகெலும்பு உள்ள பிராணிகள் முதன் முதலில் உருவாகி வந்த சமயம் அது. மீன்களில் அர்த்தநாரிகள் இல்லை. ஆண் தனி, பெண் தனி. ஆனால், மீன்கள் உடம்பால் சேர்ந்து உறவு கொள்வதில்லை. ஜஸ்ட் ஒன்றோடு மற்றொன்று ஓட்டி நின்று தத்தம் கேமீட்டுகளை கடலுக்குள் தாரை வார்த்தால் கடல் நீரில் நீந்தி, ஆண் கேமீட்டும் பெண் கேமீட்டும் ஒன்றோடு ஒன்று கலந்துகொள்ளும். ஆனால், ஆண் எது, பெண் எது என்று புரிந்தால்தானே பக்கவாட்டில் ஒட்டி நின்று இந்தப் புறவழி பிள்ளைப்பேற்றை நடத்த முடியும். அதனால், மீன் வகையறா விலங்குகளுக்குக் குட்டியாக ஒரு மூளையை

உருவாக்கித் தந்தன மரபணுக்கள். இந்த மூளையின் உபயத்தால் காலம், நேரம், சூழல், எதிர்ப் பாலினம், ஆபத்து... போன்ற பலவற்றை உணர்ந்து மீன் வகையறாக்களால் புற புணர்ச்சிக் கொள்ள முடிந்தது.

மீனுக்கு அடுத்த கட்டமாக உருவானவை தவளை வகையான Amphibians, இவை தரையில் வாழ்ந்தாலும் பருவகாலம் வந்துவிட்டால் ‘டாண்’ என்று தண்ணீரைத் தேடிப் போய்விடும். ஆண் தவளை தன் பெரிய தொண்டையை வைத்து கொரக்... கொரக்... கொரக்.. என்று சத்தங்களை எழுப்பிப் பெண் தவளையை நைஸ் பண்ணி பக்கத்தில் வரவழைக்கும். பெண் தவளையும் ஆணின் குரல் அழகில் மயங்கி வந்தால், இரண்டும் உரசி நின்று தத்தம் கேமீட்டுகளை வெளியேற்றும். மழை நீரில் கேமீட்டுகள் முட்டி மோதி கலந்து முட்டையாகும். முட்டை என்னவாகும் என்பதுதான் உங்களுக்கே தெரியுமே!

இந்தத் தவளை இன ரொமான்ஸ் நிகழ ஆண் யார், பெண் யார் என்பது மட்டும் தெரிந்தால் போதாதே. சிறந்த ஆண் யார் என்று அவன் குரலை வைத்து பெண் தேர்வு செய்வதால், சீர்தூக்கிப் பார்க்கும் திறன் படைத்த கொஞ்சம் பெரிய மூளை இவைகளுக்குத் தேவைப்பட்டது. உடனே மரபணுக்களும் ‘டன்!’ சொல்லியது. இப்படித்தான் தவளை இனத்திற்கு மீனைவிடப் பெரிய மூளை வந்ததாம்!

ஒகே, தவளை கதை அப்படி. ஆனால், அதற்குப் பிறகு, கி.பி. நூறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் உருவான முதலை, ஆமை, டைனோஸார் மாதிரியான மிருகங்களின் கதை இதைவிட ரொம்ப தமாஷ். ஆண் ஒன்று, பெண் ஒன்று இரண்டும் உருவம், ஆரோக்கியம், திறமை... என்று பல விவகாரங்களைச் சரிபார்த்த பிறகே நெருங்கும். ஆண் ஆமை பெண்ணினுள் தன் கேமீட்டுகளை முதலீடு செய்ய, பெண் தன் உடம்பில் அதை உள்வாங்கி தன் கேமீட்டுகளோடு கலந்து முட்டைகளாக்கும். முட்டை வெளியேற ரெடியானதும் பெண் ஆமை குடுகுடு என்று ஓடிப்போய் ஒரு பள்ளம் தோண்டி, அந்தப் பள்ளத்துக்குள் தன் முட்டைகளை இட்டு வைக்கும். அந்த முட்டையின் கதி என்ன என்று தெரிந்துகொள்ள காத்திராமல், அதற்கு மேல் முட்டை அம்னீஷியா வந்தது மாதிரி அதை மறந்துவிட்டுப் போய்விடும்! காரணம், ஆள் பார்த்துச் சேரவும், சகுனம் பார்த்துக் குழிதோண்டி முட்டை இடவும் தெரிந்த ஆமைக்கு, எதிர்காலம் என்ற ஒன்று இருப்பதே தெரியாது. அதன் மூளை டிஸைன் அப்படி!

அது அப்படி என்றால், கி.பி. 65 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் உருவான பறவை இனம் இருக்கிறதே அது செம ஷார்ப்!

பருவகாலம் வருவதற்கு முன்பே ஆண் பறவை கூட்டைக் கட்டி வைக்கும். அழகாகப் பாடி தோகை விரித்து ஆடும். இப்படித் தன் திறமையை வெளிப்படுத்தும் ஆண்களில் தி பெஸ்ட் நபரைப் பெண் பறவைகள் தேர்ந்தெடுக்கும். பிறகு இரண்டும் கூடி, கேமீட்டுகள் கலந்து பெண் கருவுற்று முட்டை இடும். அதன் பிறகுதான் பிரச்னையே... ஆமை மாதிரி முட்டை இட்டோமா, மறந்துவிட்டு வந்த வழி போனோமா என்று பறவைகள் இருப்பதில்லை. முட்டைகள் மேல் அமர்ந்து அடைகாத்து, முட்டை குஞ்சாகி, குஞ்சு சிட்டாகி, சிட்டுக்கு சிறகு முளைத்து, பறந்து சுயமாக வாழும்வரை பெற்றோர் இருவரும் பொறுப்போடு இணைந்தே இருந்து தத்தம் பணியை ஆற்ற வேண்டும். அதனால் காதல், பாசம், பற்று, பொறுப்பு ஆகிய பல உணர்ச்சிகளை உணர்ந்து செயல்படும் அவசியம் பறவைகளுக்கு இருந்தது. ஆகவேதான், பறவைகளுக்கு ஆமையைவிட பெரிய சைஸ் மூளையைப் படைத்தன மரபணுக்கள். காதல் என்ற உணர்வையும் பந்தம் என்ற பிணைப்பையும் முதன்முதலில் உணர்ந்த ஜீவராசி என்ற மகத்துவத்தைப் பறவைகள் பெற்றன.



என்னது, காதலை முதன்முதலில் உணர்ந்தது பறவைகளா? மனிதர்கள் இல்லையா? என்று ஆச்சரியமாக இருக்கிறதா! இதற்கே ஆச்சரியப்பட்டால் எப்படி. இன்னும் எவ்வளவோ ஆச்சரியங்கள் காத்திருக்கின்றன.

# 27

## காதல் பிறந்த கதை!



தமிழப் படங்களைப் பார்த்துவிட்டு, காதல் என்பது கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய, முற்றிலும் மனிதர்களுக்கான புனிதமான உணர்ச்சி என்று நீங்கள் நினைத்திருந்தால், உங்கள் நம்பிக்கையில் அறிவியல் மண்ணை வாரி வீசுவதற்கு என்னை மன்னியுங்கள். ஆனால், உண்மை இதுதான். காதல், மனிதர்களுக்கான புனித உணர்ச்சியும் அல்ல. அது அத்தனை புராதனமான உணர்ச்சியும் அல்ல!

ஜஸ்ட் ஓர் எழுபது மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஊர்வனவாக இருந்த டைனோஸார் மாதிரியான விலங்குகள் திடுதிப்பென றெக்கை முளைத்து பறவைகளாகப் பரிணாம வளர்ச்சிப் பெற்றபோது உருவான உணர்வுதான் இந்தக் காதல்! காதலின் வயது எழுபது மில்லியன் ஆண்டுகள். ஓகே. ஆனால், பறவைக்கும், காதலுக்கும் வாட் இஸ் தி கனெக் ஷன் என்கிறீர்களா?

பறவைகளுக்குத்தானே கூட்டில் இருந்து அடைகாக்க ஒன்று, பறந்து திரிந்து இரைத் தேடி வர இன்னொன்று என்று இரண்டு பெற்றோரின் இணைந்த உழைப்பு தேவைப்படுகிறது. டாடி பறவையும் மம்மி பறவையும் இப்படி இணைந்து செயல்படாவிட்டால் முட்டை பறவையாக அவதரிக்காமல் அல்ப ஆயுசிலே யார் தட்டுக்கோ ஆம்லெட்டாக போய்ச் சேர்ந்துவிடும்! இப்படி ஆம்லெட் அவதாரம்

எடுக்கவா மரபணுக்கள் அத்தனை மெனக்கெட்டு முட்டை இட்டதும் மறந்துவிட்டு, தன் வேலையைப் பார்க்கப் போகும் ஊர்வனவாக இருந்தவற்றை அடைகாத்துக் குஞ்சைக் கொஞ்சும் பறவையாக மாற்றின? இல்லையே! மரபணுக்கள் செய்வதெல்லாம் ஒரே ஒரு குறிக்கோளுக்காகத்தான். தட் இஸ் இனவிருத்தி.



ஆனால், இனவிருத்தி அடைய, ஆண் பறவையும் பெண் பறவையும் இணைந்தே இருக்க வேண்டும். ஒரு நாள் இரண்டு நாட்கள் அல்ல. குஞ்சுப் பறவைகள் வளர்ந்து குட்பை சொல்லிவிட்டுப் போகும் வரை. அதுவரை, அதே முகத்தை தினமும் பார்த்துக்கொண்டு போரடிக்காமல் இருக்க வேண்டும் என்றால்... நடக்கிற காரியமா இதெல்லாம்! ஆனால், நடக்க வைத்தன ஜீன்கள்!

ஜீன்கள் பறவைகளின் மூளையைக் கொஞ்சம் பெரிதாக்கி, பொறுப்பு உணர்வு, பந்தபாசம் போன்றவற்றை உருவாக்கி, காதல் என்ற போதை உணர்வை ஏற்படுத்தி பறவைகளை இணைந்தே இருக்க வைத்தன. விளைவு: தமிழ் இலக்கியம், தாம்பத்தியத்துக்கு எடுத்துக்காட்டாகக் கூறும் அன்றில் பறவை ஆகட்டும், ஆங்கில

இலக்கியம் ரொமான்சுக்கு உதாரணமாக முன்வைக்கும் லவ் பேர்ட்ஸ் ஆகட்டும், அண்டார்டிகாவில் வாழும் பெங்குவின் பறவை ஆகட்டும், அநேக பறவைகள் காதல்கொண்டு கூடி வாழ ஆரம்பித்தன. ஆனால், ஏதாவது பெரிய மிருகம் வந்து முட்டைகளை அபேஸ் செய்துவிடும் அபாயம் எந்த நேரமும் இருந்தது.

பறவைகள் வாழ்க்கை கொஞ்சம் போர்! கூடு கட்டணும், வானத்தில் வெகுதூரம் பறக்கணும், இடையில் பிரேக் போட்டு இளைப்பாறும் சொகுசெல்லாம் லேசில் கிடையாது! ஏதாவது ஒரு பெரிய மிருகம் முட்டைகளை அபேஸ் செய்துவிடும் அபாயமும் எந்நேரமும் இருந்தது. முட்டை வெளியே கிடந்தால்தானே இந்த வம்பெல்லாம் என்றுதான் கிட்டதட்ட 60 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஜீன்கள் ஒரு புது யுக்தியை கண்டுபிடித்தன.

முட்டையை வெளியே இட்டு அடைகாத்து குஞ்சுப் பொறிக்கும் அவஸ்தைகள் இல்லாமல், உள்ளேயே வைத்து அடைகாத்து, குட்டி ரெடியானதும் பிரசவித்து பாலூட்டிப் பெரிதாக்கும் முறையை ஜீன்கள் கண்டுபிடித்தன. இந்தப் புதுவகை ஜீவராசிகளைத்தான் பாலூட்டிகள் என்கிறோம்.

பாலூட்டிகளில் ஆண், பெண் இணைந்தே இருக்க வேண்டிய அவசியமே இல்லை. பெண் புலிக்கும், பெண் சிங்கத்திற்கும், பெண் பன்றிக்கும், பெண் யானைக்கும் ஆண் அருகிலேயே இருக்க வேண்டும் என்ற அவசியமே இல்லை. தாய் தனித்தே தன் குட்டிகளை வளர்த்து ஆளாக்கிவிடும். ஆனால், தாய்க்குத் தெரிந்த வாழ்வியல் வித்தைகளைக் குட்டி கற்றுக்கொள்ள, அதற்குக் கொசுறாக கொஞ்சம் மூளை வேண்டும். அதனால்தான் பாலூட்டிகளுக்குப் பிற பிராணிகளைக் காட்டிலும் பெரிய சைஸ் மூளையை உருவாக்கித் தந்தன ஜீன்கள்.

இப்படிப் பெரிய சைஸ் மூளையுடன் பூலோகத்தைப் பிற பாலூட்டிகள் ஆட்சி செய்த காலத்தில்தான் கி.மு. ஐந்து மில்லியன் ஆண்டுகளுக்கு முன் எக்ஸ்ட்ரா லார்ஜ் மூளையுடன் தடால் என்று அவதரித்தார்கள் மானுடர்கள்.

அதுசரி, மானுடர்களுக்கு மட்டும் ஏன் இவ்வளவு பெரிய மூளை? என்று நீங்கள் யோசித்தால்... மானுட மூளைக்கும் அவர்களது இனப்பெருக்கத்துக்கும் எக்கச்சக்க சம்பந்தம் இருக்கே...!

என்ன மூளைக்கும் இனப்பெருக்கத்துக்கும் சம்பந்தமா?!

# 28

## ஆஹா பரவசம்!



ஒரு காலத்தில் ஆப்பிரிக்காவும் தென் அமெரிக்காவும் இன்றுபோல தனித்தனி கண்டங்களாக இல்லாமல், இணைந்திருந்த ஒரே கண்டமாக இருந்தன. இந்தப் பெரிய கண்டத்தில்தான் பல வகை உயிரினங்கள் உருவாகி, வாழ்ந்து வந்துகொண்டிருந்தன. இதற்கிடையில் திடிரென பூமியின் அடி மண்தட்டுகள் Tectonic plates ஏடாகூடமாக உராய்ந்துவிட நிலப்பரப்பில் விரிசல் ஏற்பட்டு, நடுவே கடல் புகுந்துவிட்டது. கடல்நீரின் அரிப்பாலும், பூமித் தட்டுகளின் நகர்ததாலும் உடைப்பட்ட இந்த இரண்டு நிலப்பரப்புகளும் காலப்போக்கில் விலகிக் கொண்டே போக, நடுவிலிருந்த கடல்நீர் பெறுகி பெறுகி அட்லாண்டிக் பெருங்கடலானது.

இப்படி ஆப்பிரிக்காவும் தென் அமெரிக்காவும் பிரிந்தபோது, அதற்கு முன்பு அங்கே வாழ்ந்த உயிரினங்களும் கண்டத்தோடு கண்டமாகப் பிரிந்து புலம்பெயர்ந்து போயின.

இப்படி தென் அமெரிக்காவுக்குப் போன குரங்குகளுக்கு அடித்தது அதிர்ஷ்டம். அங்கே நிறைய காடுகளும், எக்கச்சக்க மழையும், வறட்சியே இல்லாத நீர்நிலைகளும், குறைவே இல்லாமல் உணவும் கிடைக்க மரத்தின் மேல் தொங்கிக் கொண்டு இரண்டு கைகளாலும் பழங்களைப் பறித்து தின்ன ஒரு உறுதியான வாலை மட்டும் வளர்க்க வேண்டி இருந்தது. இந்தப் புத்துலக வானரங்களுக்கு, மற்றபடி

உணவிற்கு நேரா பற்றாக்குறை. அதனால், வாழ்க்கை படு ஜாலியாக இருந்தது.



அதே நேரத்தில் ஆப்பிரிக்காவில் தங்கிப்போன வானரங்களுக்கு இதற்கு நேர் எதிர் நிலைமை ஏற்பட்டது. ஆப்பிரிக்கா பூமத்திய பகுதியில், சூரியனுக்கு நேர் எதிரே வெயில் மிகுந்த நிலப்பரப்பு. எனவே, அங்கு உணவு அத்தனை எளிதில் கிடைக்கவில்லை. அதனால், ஆப்பிரிக்க வானரங்கள் பிழைப்புக்காக ரொம்பப் போராட வேண்டி இருந்தது. ஒன்றையொன்று அடித்து, வீழ்த்தி வாழ வேண்டி இருந்தது. இந்தப் போராட்ட வாழ்க்கையைச் சமாளிக்கவே ஆப்பிரிக்கக் குரங்குகளுக்கு மூளை இன்னும் கொஞ்சம் பெரிதாக ஆரம்பித்தது. குறிப்பாகக் கொரில்லா, சிம்பன்ஸி மாதிரியான ஆப்பிரிக்கக் குரங்குகளுக்கு மூளை ரொம்பவே பெரிதாக, சுறுசுறுப்பாக இருந்ததனால் மற்ற குரங்குகளை எளிதில் வெற்றிக்கொண்டு மொத்த ஆப்பிரிக்காவையும் தனதாக்கிக் கொண்டன.

இப்படியாக தென் அமெரிக்கக் குரங்குகளின் வாலைப் போல ஆப்பிரிக்கக் குரங்குகளின் மூளை வளர்ந்துகொண்டே போக, சுமார் மூன்றரை மில்லியன் ஆண்டுகளுக்கு முன் சிம்பன்ஸி ரகத்திலிருந்து ஒரு

புதுவகை ஜீவராசி உருவானது. அதுதான் மானுடம் என்ற லேட்டஸ்ட் வகை வானரம்!



இந்த மானுடத்துக்கும் மற்ற பாலூட்டிகளுக்கும் இருக்கும் மிகப் பெரிய வித்தியாசம் என்ன தெரியுமா? இவை மட்டும்தான் இனச்சேர்க்கை நடவடிக்கையின்போது, 'இன்பம்' என்ற ஒன்றை உணர்கின்றன. ஏனெனில், இந்த மானுடர்களின் மூளைக்குள் மட்டும்தான் 'இன்ப மையம்' என்ற ஒரு நரம்பு முடிச்சு இருக்கிறது. இந்த இன்ப மையத்தில் 'டோபமின்' என்ற ரசாயனம் பட்டால் போதும். ஆஹா! பரவசம் என்கிற உணர்வு அலை நரம்புகளில் பாய்கிறது. அப்போது சுகம் என்ற ஒன்றை அடைந்ததாக மனிதர்கள் நினைக்கிறார்கள்.

இந்த டோபமின் இன்ப மையத்தில் பதியும்போது கூடவே என்டார்ஃபின் என்ற ரசாயனத்தையும் உசுப்பிவிடுவதால் 'பேரானந்தம்' என்று எண்ணும் அளவிற்கு நரம்புகளில் 'குஷ்' பெருகி விடுகிறது. இந்த என்டார்ஃபின் என்பது மனித மூளைக்குள் உற்பத்தியாகும் ஒரு வகை போதை வஸ்து. ஒரு முறை இந்த என்டார்ஃபின் பழக்கமாகிவிட்டால்... மீண்டும்மீண்டும் அதைப் பிரயோகித்தே ஆக வேண்டும் என்ற தீவிர உந்துதல் ஏற்பட்டு விடுகிறது. இப்படிப்பட்ட தீவிர உந்துதல் ஏற்பட்டு விட்டால், பிறகு எந்தக் கட்டுப்பாட்டிற்கும் அது அடங்காது. கிட்டத்தட்ட போதைக்கு அடிமையான குடிகாரனைப் போல 'சரக்கு கிடைச்சா போதும்!' என்று ஏகக் குறிக்கோளுடன் செயல்பட ஆரம்பித்து

விடுவார்கள்.

இன்ப மையம், டோபமின், என்டார்ஃபின்... எல்லாம் சரி, ஆனால், இந்த ஜீன்கள் ஏன் இப்படிப்பட்ட போதை வஸ்துக்களை மூளைக்குள் உருவாக்கின?

எல்லாம் காரணத்தோடுதான்...

# 29

## சிற்றிடை என்பது...



இருந்தாலும் இந்த மரபணுவுக்கு ரொம்பத்தான் ஓரவஞ்சனை! இந்த உலகத்தில் எத்தனை வகை ஜீவராசிகள் இருக்கின்றன. அவற்றில் கலவுறவு இல்லாமல் தலைமுறையை உருவாக்கும் சிலவகை ஜீவராசிகளும் இருக்கின்றன.

ஒரே பாலின Asexual Reproducers-யைத் தவிர மற்ற எல்லாமே பெண்ணும் ஆணும் புணர்ந்து அடுத்த தலைமுறைக்கு ஆயத்தப்படுத்தும் Sexual Reproducers தான். இத்தனை வகை புணரும் பிறவிகள் இருந்தும் இந்த மரபணுக்கள் ஏன் மனிதர்களுக்கு மட்டும் புணர்தலில் இன்பம் உணரும் தன்மையைப் படைத்ததாம்? What is the need?

இன்ப மையம் இல்லாமலே ஸ்பஷ்டமாகப் புணர்ந்து பிள்ளைகளைப் பெற்றெடுக்க மற்ற மிருகங்களால் முடிகிறதே, அப்புறம் ஏன் இந்த மனிதர்களுக்கு மட்டும் கொசுறாக ஒரு Pleasure centre, அதைப் பாசனப்படுத்த டோபமின், என்டார்ஃபின்... என்று நீங்கள் யோசித்தால் அதற்கும் நிறைய காரணங்கள் இருக்கின்றன.

மனிதர்களுக்குத்தான் உயிரினங்களிலே பெரிய சைஸ் மூளை தேவைப்பட்டது. ஆனால், பெரிய சைஸ் மூளை சும்மாவா வரும்!



இணைப்பாகப் பெரிய சைஸ் மண்டையும் வந்தது.

இத்தனை பெரிய மண்டையைப் பிரசவிப்பது என்றால் அந்தப் பெரிய மண்டை... அதாவது, குழந்தையின் மண்டை பெண் இடுப்பு எலும்பின் நடுவில் இருக்கும் வாய் வழியேதான் வெளியே வந்தாக வேண்டும். ஆனால், முப்பது சொச்ச மில்லியன் ஆண்டுகளாக வானரமாக வனத்தில் சுற்றிய அந்தக் காலத்து ஆதிமனிதப் பிறவிகளுக்கு இருந்ததெல்லாம் பழைய மாடல் குரங்குத் தலையை பிரசவிக்க தோதான குரங்கு மாடல் இடுப்புகள்தான். இந்தக் குரங்கு மாடல் இடுப்பை வைத்துக்கொண்டு மனித மண்டையை உடைய குழந்தைகளை எப்படிப் பிரசவிப்பது? அதுவும் அந்தக் காலத்தில் அறுவை சிகிச்சையும் கிடையாது. சிசேரியன் செக்ஷன் செய்யும் அளவிற்கு மனித மூளையும் மேம்பட்டிருக்கவும் இல்லை. வாட் டு டூ? ஆனால், ஜீன்கள்தான் மகா ஜித்துகள் ஆயிற்றே. இந்தப் பிரச்னையைத் தீர்க்க இரண்டு வழிகளைக் கையாண்டன.

நம்பர் ஒன்:

குரங்கு மாடல் இடுப்பாகவே இருந்தால்தானே பெரிய சைஸ் தலையுள்ள குழந்தையைப் பிரசவிப்பதில் பிரச்னையே? இடுப்பை அகலமாக்கி ஒரு புது ‘மனித மாடல்’ இடுப்பை உருவாக்கினால் என்ன? அதைத்தான் இனங்கள் செய்தன. மனிதப் பெண்ணின் இடுப்பு எலும்புகளை அகட்டி, நிமிர்த்தி, ஆழமாக்கி கொள்ளளவைக் கூட்டின. ஆனால், இதில் ஒரு பக்கவிளைவும் நேர்ந்தது. இடுப்பை அகட்டியதில் இடுப்பு எலும்போடு இணைந்த தொடை எலும்பு ஃபீமர் (Femur) கொஞ்சம் புரண்டுபோய் ஆங்கிள் மாறிப் போனது. அதனால், ஆண்களைப் போல பெண்களால் நேர் நடை நடக்க முடியாமல் போனது. இந்தக் கோணல் ‘ஃபீமரி’ன் உபயத்தால்தான் இன்றுவரை மனிதப் பெண்கள் எல்லாம் கோணலாக ஒரு தினுசாக நடந்து வருகிறார்கள்.

இப்படி அரும்பாடுபட்டு ஜீன்கள் எல்லாம் மனிதப் பெண்ணின் இடுப்பின் கொள்ளளவைக் கூட்டினாலும் அதிகபட்சமாக 13 சென்டிமீட்டர் குறுக்களவு வரைதான் இடுப்பை அகட்ட முடிந்தது. ஆனால், முழுவதுமாக வளர்ந்த மனிதக் குழந்தை தலையின் குறுக்களவு பதினைந்து முதல் பதினேழு செ.மீ. வரை பெருத்திருக்கும். 13 செ.மீ. குறுக்களவில் இருந்து 17 செ.மீ. குறுக்களவு கொண்ட தலை வெளியே வர வேண்டுமானால் இடுப்பும் அதனை உடையவளும் காலி! அல்லது தலையும் அதனை உடையதும் காலி!

இந்தச் சிக்கலைத் தவிர்க்க பெண்ணின் இடுப்பை இன்னும் கொஞ்சம் அகலமாக்கி இருக்கலாம். ஆனால், உடம்பெல்லாம் மனித ரூபம், இடுப்பு எலும்பு மட்டும் காண்டாமிருகம் சைஸ் என்றால் அது சாத்தியப் படாதே! எனவே, மரபணுக்களின் கலாரசனைக்கு இந்தக் காம்பினேஷன் பிடிக்கவில்லையோ என்னவோ, இந்த வம்பே வேண்டாம் என்றுதான் ஜீன்கள் ஜித்து யுக்தி நம்பர் டூவைக் கையாண்டன.

நம்பர் டூ:

குழந்தையின் மூளையும் தலையும் முழு வளர்ச்சி அடைந்தால்தானே இடுப்பின் அளவை எகிறி நிற்கும். பாதி வளர்ச்சியின் போதே பிரசவித்துவிட்டால்? அதைத்தான் செய்தன மரபணுக்கள்!


மற்ற மிருகங்களின் குட்டீஸ் எல்லாம் மூளையும் மண்டையும்

முழுமையாக வளர்ந்த பிறகுதான் பிறக்கும். அதனால்தான், பிறந்த அடுத்த கணமே அவற்றால் எழுந்து நின்று நடந்து ஓட முடிகிறது.

இந்த நிறை மூளை வளர்ச்சிக்குப் பின்தான் பிரசவம் என்ற விதியை மாற்றி, 13 செ.மீ -க்கும் குறைவான குறுக்களவு கொண்ட அரை மூளை வளர்ச்சியின்போதே குழந்தையைப் பிரசவிக்க செய்துவிட்டால், பாதி வளர்ச்சியினால் மூளையும் சின்னதாகவே இருக்கும். அதன் மண்டை ஓடும் மனிதப் பெண்ணின் இடுப்போடு சண்டை போடாமல் இருக்கும்.

இந்தப் பாதி மூளை வளர்ச்சியின்போதே பிரசவிக்கும் புது பாணியைத்தான் 'Neoteny' என்போம். (நியோ = இளமை, டெனி = பற்று) தட் இஸ், முழு வளர்ச்சி அடையாத பிஞ்சுப் பிராயத்தை வெகு காலத்திற்குத் தக்க வைத்துக் கொள்வது.

அதனால்தான் மனிதக் குழந்தைகளால் பிறந்த உடனே எழ முடிவதில்லை. காரணம், அந்த அளவிற்கு மூளை வளர்ச்சியை அந்தக் குழந்தை அடைந்திருக்காது. அதேபோல மனிதக் குழந்தையின் மண்டை ஓடு முழுமையாக மூடி இறுகியும் இருக்காது. மென்மையாக, ஆங்காங்கே பள்ளமும், குழியுமாக, தொட்டால் அழுந்தும் தன்மையுமாக இருக்கும். Because the child was born with a half done head.



இப்படிக் கையாளாகாத குட்டிப் பாப்பாவாக மனிதப் பொடிசுகள் இருந்தாலும், பிறந்த ஒரு வருடத்துக்குள் சும்மா கடகடவென வளர்ந்து மூன்று மாதத்தில் தலையை நிமிர்த்தி, ஐந்து மாதத்தில் புரண்டு படுத்து, ஏழு மாதத்தில் எழுந்து உட்கார்ந்து, எட்டு ஒன்பது மாதத்தில் தவழ்ந்து,

பத்து பதினொன்றில் எழுந்து நின்று, பன்னிரெண்டு மாதத்திற்குள் நடக்கவும் ஆரம்பித்து விடுகிறன.

மிருக குட்டீஸ் பிறந்த புதிதிலேயே பண்ணியதை, மனிதக் குழந்தைகள் பிறந்த ஒரு வருடம் கழித்து எப்படியும் சாதித்து விடுகிறன. அப்படியானால், மற்ற மிருக குட்டீஸ் மம்மியின் கர்ப்பப்பையின் உள்ளேயே அடைந்த மூளை வளர்ச்சியை, மனித குட்டீஸ்கள் மட்டும் கர்ப்பப்பைக்கு வெளியே வந்து முடித்துக் கொள்கின்றன என்றுதானே அர்த்தம்!

அது சரி, இந்தப் பாப்பா பாதி வளர்ந்த மூளையுடன் பிறப்பதற்கும் மனிதர்களுக்கு இன்பம் என்ற ஓர் உணர்வு இருப்பதற்கும் என்ன சம்பந்தம்?

சம்பந்தம் இருக்கே...!

# 30

## உடற்பசியும்... அறிவுப்பசியும்...



மனிதக் குழந்தைகள் பாதி மூளையுடன் பிறந்து மீதி மூளை வளர்ச்சியை பூலோகத்துக்கு வந்ததும் முடித்துக் கொள்கின்றன.

இப்படிப் பாதி மூளையாக இருந்த பாப்பா,மீதி மூளையை வளர்த்துக்கொள்ள வேண்டுமானால் அதற்கு எவ்வளவு சக்தி தேவைப்படும்? அதுவும், வெறும் வானர வம்சமாகவே இருந்திருப்பின் ஏதோ செடி, கொடி, இலை, தழை, காய், கனி... போன்ற சைவ உணவுகளைச் சாப்பிட்டு உடம்பை வளர்த்து இருக்கலாம்.

ஆனால், இந்த மனித மூளை மாமிசப் புரதத்தால் உருவானது. என்னது! மாமிசப் புரதமா? மனிதர்கள் பிறவியிலேயே சைவ உணவுக்காரர்கள் இல்லையா? என்று நீங்கள் வியந்தால், உங்களின் நம்பிக்கைகளின் மற்றொன்றை உடைப்பதற்கு ரொம்ப ஸாரி. ஆனால், மனிதர்கள் சைவமாக இருக்கப் படைக்கப்பட்டவர்கள் அல்ல! குறிப்பாக மனித மூளை இருக்கிறதே அது முழுவதுமாக அசைவப் புரதத்தால் உருவானது.

சைவப் புரதத்துக்கும், அசைவப் புரதத்துக்கும் அப்படி என்ன பெரிய வித்தியாசம் என்ற கேள்வி கேட்க தோன்றுகிறதுதானே? ஆமாம், நிறைய வித்தியாசங்கள் உள்ளன. சைவப் புரதம் மட்ட ரகமான புரதம். அடுப்புக் கரியை வைத்துச் சமைப்பது மாதிரி. நிறைய கரியைக் கொட்டி

ஊதி பற்ற வைத்து, தீரதீர மேலும் கரியைப் போட்டு மூட்டிக்கொண்டே இருப்பதுபோல நிறைய சைவ புரதம் சாப்பிட்டால்தான் கொஞ்சமாவது உடம்பில் ஒட்டும்.



ஆனால், இந்த மாமிசப் புரதம் அப்படியல்ல. அது கேஸ் அடுப்பு மாதிரி. சும்மா சிலிண்டரைத் திறந்தாலே போதும் 'குபுக்' என்று பற்றிக்கொள்ளும். கொஞ்சம் மாமிசப் புரதத்திலேயே உடம்பு சும்மா கிண் என்று ஆகிவிடும். இதைத்தான் Fuel Efficiency என்பார்கள்.

முந்தைய கால வானரங்கள் பெரும்பாலும் சைவ பட்சிணிகளாக இருந்தன. பழம், பூ, கொட்டை, விதை, இலை, கிழங்கு... என்று பொதுவாக சைவ உணவுகளை உட்கொண்டாலும் புழு, பூச்சி மாதிரியான சில அசைவ உணவையும் அவ்வப்போது நொருக்கித் தின்றன.

ஒன்றரை மில்லியன் ஆண்டுகள் வரைக்கும் மனிதர்களும் இதே மாதிரி முக்கால்வாசி நேர சைவ பட்சிணிகளாகவும், சந்தர்ப்பம் கிடைத்தால் அசைவ பட்சிணியாகவும் மாறிக்கொள்ளும் பழக்கத்தையும் கடைப்பிடித்து வந்தார்கள். சுமார் ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் உலகமே ஒரு பெரிய சைஸ் ஐஸ்கட்டியாக உறைந்து போனது; பனியுகம் ஆரம்பமானது!

என்னது பனியுகமா? என்று மறுபடியும் ஆச்சரியப் படாதீர்கள். பூலோகத்தில் அப்படி ஒரு விசேஷம் அடிக்கடி நிகழ்ந்து கொண்டேதான் இருக்கிறது. ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு ஒட்டுமொத்த உலகமே பனி மூடி இருப்பதும், இடையிடையே ஒரு பத்து பதினோராயிரம் ஆண்டுகளுக்கு மட்டும் பனி விலகி உஷ்ணமாவதும் பூலோகத்துக்கு சகஜம். இப்போது மனிதர்கள் வாழ்வதும் இது மாதிரியான ஒரு தற்காலிகப் பனி விலகிய உஷ்ண Interglacial Period ல்தான்.

இந்தப் பனியுகத்திற்கு இடைப்பட்ட காலமான சமீபத்திய பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை பூமத்திய பகுதிகளைத் தவிர, மற்ற எல்லாப் பிரதேசங்களும் பனி மூடியே கிடந்தன. இந்தப் பனிக் காலத்தில் வாழ்ந்த மிருகங்கள் குளிருக்கு இதமாக அடர்ந்த ரோமமும், தோலின் அடியில் கொழுப்பும் கொண்டிருந்தன.

இப்படிப் பிற பிராணிகள் எல்லாம் ரோமம், கொழுப்பு என்று பனியிலிருந்து தம்மைத் தற்காத்துக் கொண்டனர். ஆனால், குளிரில் மாட்டிக் கொண்ட மனிதர்கள் பாவம் என்ன செய்வார்கள்? திடுதிப்பென்று நிறைய ரோமம் வளர்த்திருக்கலாம். ஆனால், மனித இன்கள் அதற்கும் ஒரு படி மேலேபோய் பெரிய மூளையை அவசரமாக உருவாக்கியது. இந்தப் பெரிய மூளையை சைவப் புரதத்தால் உருவாக்குவது என்றால் பல யுகங்கள் பிடிக்குமே; அதனால்தான் சட்டென அசைவப் புரதத்துக்கு மாறி, அவசர அவசரமாகப் புதிய பெரிய மூளையை மரபணுக்கள் உருவாக்கின. அதுவும் குளிரில் எல்லாமே உறைந்து போயிருந்த அந்தக் காலத்தில் காய் கனிகளைத் தேடிப் போவது கஷ்டம். ஆனால், கண்ணி வைத்து கால்நடையைப் பிடிப்பது ஈஸி.

அது மட்டுமல்ல, இந்தப் புது மூளை ஒன்றும் மலிவான சமாச்சாரம் இல்லை. வெறும் ஒன்றரைக் கிலோ இருந்துகொண்டு இது உடம்பின் மொத்த சக்தியில் முழுவதாக 20 சதவிகிதத்தை அப்படியே எடுத்துக்கொள்கிறது. முன்பு இருந்த குரங்கு மூளையோ வெறும் 5% சக்தியை உபயோகித்தது. இந்த மனித மூளைக்குத் தேவைப்பட்ட கூடுதல் 15% சக்தியை எங்கிருந்து எடுத்துத் தருவதாம்?

எதற்கும் சளைக்காத மரபணுக்கள் இதற்கும் ஒரு வழியைக் கண்டுபிடித்தன. தாவர பட்சிணியாக இருந்தால் தாவர நார்களை ஜீரணிக்க ரொம்ப நீளமான பெருங்குடல் தேவைப்படும். மாமிச பட்சிணியாக மாற்றிவிட்டால் இத்தனை நீளமான பெருங்குடல் தேவைப்படாது. அதனால், மடமடவென இன்கள் புதுப்புது

ரசாயனங்களைச் சுரக்க, மனிதர்கள் சைவத்திலிருந்து அசைவத்திற்கு மாறினார்கள். பெருங்குடலும் இரண்டு மீட்டர் சின்னதாகிப் போனது. இழந்த இரண்டு மீட்டருக்கு செலவு செய்யகூடிய சக்திகளை அப்படியே மூளைக்குத் திசைத் திருப்பி விட்டால் மேட்டர் ஓவர்! மாமிச எரிபொருளின் சிக்கனமும் கிடைத்தது; பெரிய சைஸ் மூளையும் உருவானது. மனித வாழ்க்கை முற்றிலுமாக மாறிப் போனது.



ஒருவேளை, மரபணுக்கள் மனிதர்களை மாமிச பட்சிணிகளாக மாற்றாமல் இருந்திருந்தால் என்ன ஆகியிருக்கும்? என்று நீங்கள் கிராஸ் கேள்வி கேட்க விரும்பினால் அதற்கும் ஒரு பதில் இருக்கிறது.

மனிதர்களில் ஒரு பிரிவினர் முழு மாமிச பட்சிணிகளாக மாறாமல், பெரும்பாலும் சைவ உணவை உண்பவர்களாகவே வாழ்ந்தார்கள். அந்த வகை மனிதர்களை Homosapiens Nean derthalensis என்கிறோம். பிடிவாதமான சைவப் பழக்கம் கொண்டிருந்த இவர்களால் பனியுகத்தில் குளிர் தாங்க முடியாமல் சுமார் இருபத்தைந்து முதல் முப்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் எல்லோரும் கும்பல் கும்பலாக இறந்தனராம்!

நல்ல வேளை Homo sapiens sapien என்ற வகை மனிதர்கள் முன்பே உணவுப் பழக்கத்தை மாற்றி மாமிச உண்ணிகளாக மாறியதால், இன்றும் மனித குலம் என்ற ஒன்று பூலோகத்தில் இருந்து வருகிறது.

அது சரி, மாமிசத்திற்கும் காமத்திற்கும் என்னங்க சம்பந்தம் என்று யோசிக்க தோன்றுமே!

# 31

## பச்சை உடம்புக்காரி



சரி, மனிதக் குழந்தையின் மூளை பெரிதானதால் அதன் தாயின் இடுப்பு அகலமாக வேண்டிய அவசியம் வந்தது. இடுப்பு விரிந்ததால் அவள் தொடை எலும்புகள் புரண்டு அவளது நடை கொஞ்சம் கோணலானது.

அதுபோக அப்போதுதான் பனியுகம் ஆரம்பித்து இருந்தது. சைவ உணவு சாப்பிட்டு வந்த ஸ்டைலில் இருந்து மாமிசப் புரதத்தை பிரதான உணவாக உட்கொள்ள ஆரம்பித்தார்கள் மனிதர்கள். மாமிசத்தின் மகிமையால் மூளை இரண்டு மடங்குப் பெரிதாகவும், பெருங்குடல் இரண்டு மீட்டர் சின்னதாகவும் மாறியது. எல்லாமே ஓ.கே. ஆனால், இதுக்கும் காமத்துக்கும் என்ன சம்பந்தம்?

அறிவியலில் பெரிய சுவாரசியமே என்ன தெரியுமா? சாதாரணமாகப் பார்த்தால் கொஞ்சம் கூட சம்பந்தமே இல்லாத சமாச்சாரம் மாதிரிதான் தெரியும். கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால் அவ்வளவும் நெருங்கிய சம்பந்தம் என்று புரியவரும். உதாரணத்துக்கு, இந்த ஜீன்கள் மனிதர்களில் ஏற்படுத்திய மூன்று மாற்றங்களை எடுத்துக் கொள்வோம்.

1. சாதாரண சைஸ் மூளையிலிருந்து சூப்பர் லார்ஜ் மூளை.

2. தாவர உணவு முறையிலிருந்து மாமிசம் உண்ணும் முறை.

3. மற்ற மிருகங்களைப் போல சுகமே காணாமல் புணர்ந்த காலமெல்லாம் மலையேறிப் போய் புணர்ச்சியில் சுகம் காணும் தன்மை.

இந்த மூன்றும் வெவ்வேறு சமாச்சாரங்கள் போலத் தோன்றினாலும் இவை எல்லாவற்றிலும் ஒளிந்திருக்கும் ஒரே அர்த்தம் என்ன தெரியுமா?

குரங்காக இருந்தவரை பெண் தன் சிறு தலையுள்ள குட்டியை தானே பெற்றெடுத்து, குட்டியை வயிற்றோடு பிடித்துக் கொண்டே மரங்கள் ஏறி பழம், தழை... என்று தின்று தன்னையும், குட்டியையும் பராமரித்துக் கொள்ளும். குட்டியும் பிறக்கும்போதே முழு மூளை வளர்ச்சியோடு இருப்பதால் அம்மா குரங்கின் இடுப்பை கெட்டியாகப் பிடித்துக்கொள்ளும். அவள் மரத்திற்கு மரம் எவ்வளவு உயரத்திலிருந்து தாவினாலும், விடவேவிடாது! இப்படி அம்மாவும், குட்டியும் குரங்கு வாழ்க்கைக்கு ஏற்ற அவயவங்களைப் பெற்று இருந்ததால் தகப்பனின் சேவை தேவைப்படவில்லை. அப்பா குரங்கின் வேலை அரை ஜீனோம் கொடுத்ததோடு முடிந்து விட்டது.



ஆனால், மனிதர்களாக மாறியபோதோ இந்த அம்மா + குட்டி கூட்டணி போதாமல் போனது. முதலில் இந்த மனித மூளை கொண்ட

பெரிய தலையுடைய பாப்பாவைப் பெற்றெடுப்பதே பெரும் வேதனையாகிப் போனது. பல தாய்மார்கள் இதில் பிராணனை விட நேர்ந்தது!

இத்தனை சிரமப்பட்டு, முக்கி, முனகி, திணறி, தம்கட்டி இந்தப் பெரிய தலை பாப்பாவைப் பெற்றெடுத்தும் அது உடனே எழுந்து, 'அம்மா, இனி நீ கஷ்டப்படாதே. என்னை நானே பார்த்துக்கறேன்' என்று சொல்லக் கூடாதா! அத்தனை பெரிய மூளையை வைத்துக்கொண்டு அது பாட்டிற்கு சும்மா படுத்தே கிடந்தது. எனவே, அதைத் தூக்கிக் கொண்டு மரத்தில் ஏறுவது சாத்தியமற்றுப் போனது! இந்தப் புதுவகை குழந்தைக்குத்தான் பிறந்த புதிதில் அம்மாவைக் கெட்டியாகப் பிடித்துக் கொள்ளும் டெக்னிக் தெரியாதே! குழந்தையை விட்டுவிட்டு தாய் தனியாக எங்கேயாவது போய் உணவு தேடப் போனால் பாப்பாவை வேறு மிருகம் கொன்றுவிடும். இத்தனை கஷ்டப்பட்டு முக்கி பிரசவித்தது எல்லாம் வீணாகி விடுமே.

சரி, குழந்தையைத் தூக்கிக்கொண்டே போய் இரை தேடலாம் என்றால், இந்தப் பிள்ளையைப் பிரசவிக்கத் தோதாக அவள் இடுப்பு விரிந்ததில் அவள் தொடை எலும்புகள் கோணலாகிப் போயிருந்தன. இந்தப் பச்சை உடம்புக்காரி தன் கோணல் நடையுடன் இடுப்பில் பாப்பாவோடு பத்தடி நகர்வதற்குள் வேறு ஏதாவது பெரிய பிராணிக்கு நாஷ்டாவாகிப் போகும் அபாயம் இருந்தது!

இந்தப் பிரச்னைகள் போதாது என்று இந்த மனிதக் குழந்தையின் நவீன மூளைக்கு மாமிசப் புரதம் வேறு தேவைப்பட்டது. காய், கனி கிழங்குக்கே லாட்டரி அடித்த அதன் தாய்க்கு மாமிசம் எங்கிருந்து கிடைக்கும்? மாமிசம் என்ன மரத்திலா முளைத்துக் கிடக்கும்? அதைப் போய் வேட்டையாட வேண்டுமே.

வேட்டை ஆடவோ வேகம் வேண்டும். இடுப்பில் பாப்பா, நடையில் தளர்வு... என்றிருந்த தாயால் எப்படித் தனியாகப் போய் வேட்டையாடி மாமிசம் கொண்டு வர முடியும்? மகப்பேற்றுக்குப் பிறகு ஏற்படும் உதிரப்போக்கின் வாசம் இவளை மிகச் சுலபமாகப் பிற பிராணிகளுக்குக் காட்டிக் கொடுத்துவிடும்.

இப்படிப் பல வகைகளில் பலவீனமாகி இருந்ததால் தாய் ஒருத்தியால் மட்டும் தன் பிள்ளையைத் தனிமையில் பராமரிக்க முடியாமல் போனது. பிள்ளை உயிர் வாழ வேண்டுமானால் அதன் பராமரிப்புப் பணியை இன்னொருவர் ஏற்றுக்கொண்டே ஆக வேண்டிய அவசியம் எழுந்தது. இந்த இன்னொருவர் யாராக இருக்க முடியும்?

இந்தக் குழந்தையை உருவாக்க தன் அரை ஜீனோமைக் கொடுத்தவனைத் தவிர வேறு யாருக்கு அதன்மேல் அக்கறை இருக்கும்?

ஆனால், இந்த அப்பாவின் கேரக்டரே தனி! அவன் குரங்கு வம்சாவளியின் முப்பது மில்லியன் சொச்ச காலத்தில் ஒரு ஆண் தன் பிள்ளைக்காகத் தீனி தேடித் தந்ததாகச் சரித்திரமே கிடையாது! அதுவும் மாமிசத் தீனி தேடித் தந்ததே இல்லை. அந்தக் காலத்தின் பெரிய சைஸ் மிருகங்களை அவனது கற்கால குட்டிக்குட்டி ஆயுதங்களைக் கொண்டு வேட்டையாடுவது என்றால் நோ சான்ஸ்.

ஆனாலும் வேட்டையாடினான் ஏன்...?

# 32

## வேட்டையாடு... உறவாடு...!




ஒரு பக்கம் மனிதக் குழந்தையின் மூளை பெரிதாக, அதனால் அதன் மண்டை பெரிதாகி, அதனைப் பிரசவிக்கும் பெண்ணின் இடுப்பு எலும்பும் அகலமாகியது. அகலமாகிய இடுப்பு அவள் அசைவுகளை அசௌகரியமாக்கியது. மேலும், இந்தப் பாதி முதிர்ந்த மூளையுள்ள பிள்ளையை வைத்துக்கொண்டு மாமிச வேட்டையில் ஈடுபடுவது முடியாத காரியமானது. ஆனால், இந்த மனிதக் குழந்தையின் மூளை வரவேண்டுமானால் மாமிசப் புரதம் தேவை.

ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன்னால் கால்நடையை வீட்டுப் பிராணியாக்கி, அதன் பாலிலிருந்து தயிர், நெய், வெண்ணெய்... என்று அகிம்சை முறையில் மாமிசப் புரதம் அபகரிக்கும் டெக்னிக் கண்டு பிடிக்கப்படவில்லை. அதனால், வேறு வழியே இல்லாமல் மாமிச தீனிக்காகப் பெண் தன் பிள்ளையின் தகப்பனை எதிர்பார்த்திருக்க வேண்டிய நிலைமை உண்டானது.

ஆனால், இந்த மனித ஆணோ வானர வம்சாவளியைச் சேர்ந்தவன் என்பதால், வானர வாழ்க்கை முறையில் அப்பா குரங்கு பேபி குரங்கிற்கு இரைத் தேடித் தந்ததாகச் சரித்திரமே கிடையாது! குரங்காகப் பிறந்தோமா, வளர்ந்தோமா, யார் பெரியவன் என்று பிற ஆண்களோடு மோதிப் பார்த்தோமா, பெண்களைக் கர்ப்பமாக்கி மரபணுக்களை இம்மைக்கும் மறுமைக்கும் பரப்பினோமோ என்றுதான் இருந்தது.

மேலும், முழு பிள்ளைப் பராமரிப்புப் பணியைப் பெண்ணின் தலையில் கட்டிவிட்டு ஜாலியாக அப்படியே பேச்சுலராக வாழ்ந்து பழக்கப்பட்ட இந்த ஆணைப் போய் திடுதிப்பென்று, ‘பிள்ளைக்காகக் கறி கொண்டு வா!’ என்றால் பாவம் அவன்தான் என்ன செய்வான்!



அதுவும் அந்தக் காலத்தில் மிருகங்களை வேட்டையாட துப்பாக்கி, கத்தி, அறுவாள், வேல்’ அம்பு மாதிரியான ஆயுதங்கள் கிடையாது. வெறும் கற்களால் ஆன அற்ப ஆயுதங்கள்தான். அதை வைத்துக் கொண்டு பெரியபெரிய மிருகங்களை வேட்டையாட வேண்டும் என்றால் அறிவுள்ள எவனாவது இந்த மடத்தனத்தை செய்வானா?

ஆனால், மனித ஆண் செய்தானே! குட்டிக்குட்டி கல் ஆயுதங்களைக் கொண்டு தன்னைவிட பல மடங்கு பெரிய, வலிய மிருகங்களைக் கொன்றான். கொன்ற விலங்கின் கறியைச் சுமந்து, காடு மலை கடந்து, தன் துணைவிக்கும் பிள்ளைக்கும் சிரமம் பாராமல்

கொண்டுவந்து கொடுத்தானே! அவன் பரம்பரையில் வேறு யாரும் யாத இதுமாதிரியான விசித்திரக் காரியங்களை ஒரு மில்லியன் ண்டுகளுக்கு முன் தோன்றிய இந்த Homo sapiens sapiens மட்டும் ஏன் செய்தான்? வேட்டையாடுவது என்பது விளையாட்டான காரியமில்லையே! எவ்வளவு ஆபத்து! எவ்வளவு கடும் உழைப்பு! எவ்வளவு நேரம்! வளவு சக்தி... இது எதையுமே பொருட்படுத்தாமல் வேட்டையாடுவது ஒன்றே குறி என்று அவனை மாற்றியது எது தெரியுமா? குரங்கிலிருந்து வனை மனிதனாக மாற்றியது எது தெரியுமா?

செக்ஸ் என்று ரகசியமாக, திருட்டுத்தனமாக, அசடு வழிந்து கொண்டு, ஏதோ மகா கேவலம் மாதிரியும், மிக மலிவான செயல் மாதிரியும் ரொம்பவே மர்மமான முறையில் எல்லாம் பேசப்படுகிறதே... சாட்சாத் அதே சூட்சுமம்தான்!

குரங்காக இருந்தவரை செக்ஸ் என்பது அரிப்பெடுத்தால் சொரிந்து கொள்ளும் ஓர் அனிச்சை செயலாக இருந்தது. அதில் சுகம் என்ற உணர்வு துளிக்கூடக் கிடையாது. ஆனால், மனிதனாக மாறிய மறுகணமே செக்ஸ் என்பது ஒரு சுக அனுபவம் ஆனது! இன்பம், ஆனந்தம், ஏகாந்தம்... என்று வியந்து, கல்லில் ஆரம்பித்து புராணம், கதை, கவிதை, காவியம், சினிமா என்று எல்லா கலை வடிவிலும் மனிதர்கள் அதனை ஆஹா... ஓஹோ... என்று பாராட்டி பெருமிதப்படும் அளவிற்கு ஓர் அலாதி உணர்வானது.

ஆனால், இந்த அலாதி உணர்வுகள் இலவசமாக வருவதில்லை. புணர்ச்சியில் ஏற்படும் அந்தச் சில விநாடி இன்பத்தை உணர மூளை எவ்வளவு எரிபொருளைப் பயன்படுத்துகிறது தெரியுமா? பல மைல் தூரம் ஓட உபயோகமாகும் அதே அளவு எரிபொருளைத்தான் இந்தச் சில கண சந்தோஷத்தைப் பெற செலவழிக்கிறது மூளை!

யோசித்துப் பாருங்கள் சாப்பாட்டுக்கே செம லாட்டரி அடித்த அந்தப் பனியுக கஷ்ட ஜீவனத்தில், இருந்த கொஞ்ச நஞ்ச எரிபொருளில் ஒரு கணிசமான அளவை, சில கண அற்ப சிற்றின்பத்துக்காகச் செலவழித்தன இந்த மனித மரபணுக்கள்! ‘உணவுப் பற்றாக்குறைக் காலத்தில், இருக்கிற எரிபொருளைச் சிக்கனமாகச் செலவு செய்து மிச்சம் பிடிக்காமல், அதென்ன போயும்போயும் இந்தக் கொஞ்ச நேர சுகத்துக்காக ஆடம்பரமாகச் செலவு பண்ணிக்கிட்டு!’ என்று ஆட்சேபிக்கக் கூட உங்களுக்குத் தோன்றலாம்.

ஆனால், மரபணுக்களுக்கு இதெல்லாம் ஒரு மேட்டரை இல்லை...

# 33

## இனச்சேர்க்கை இன்பம்!



மரபணுக்களின் லாஜிக் வேறு... செக்ஸ் மட்டும் சுகம் தராது இருந்துவிட்டால், ‘வேற வேலை இல்லை! இவளோட உறவு வெச்சுக்கிட்டா இவ பாட்டுக்கு ஒரு குட்டிய பெத்துப் போட்டுட்டு அக்கடானு கிடப்பா. இவளுக்கும் அதுக்கும் சேர்த்து நான்தானே லொங்கு லொங்குனு காடு மேடெல்லாம் தேடிப்போய், ஏமாந்த மிருகமா பார்த்து கஷ்டப்பட்டு வேட்டையாடிக் கொன்னு, அதை மாங்குமாங்குனு இவ்வளவு தூரம் தூக்கிட்டு வந்து... ஆளை விடுப்பா சாமி! இவளோட சேர்ந்தாதானே இந்த ரோதனை. இவ பக்கமே நான் தலை வெச்சுப் படுக்கல!’ என்று ஆண்களும், ‘அய்யய்யோ! அவனோடகொஞ்ச நேரம் சேர்ந்திருக்கிறதும் போதும் அப்புறம் மசக்கை, கர்ப்பம், கால் வீக்கம், இடுப்புவலி, பிரசவ வேதனை, தாய்ப்பால் தர்றது, இந்தக் குட்டிப் பிசாசு தன்னைத் தானே கவனிச்சிற வரைக்கும் அதைக் கண்ணுக்குள்ள வெச்சுப் பாதுகாத்து... போதும்பா, இந்த வம்பே வேண்டாம். ஆம்பிளைங்க பக்கமே நான் போகல...’ என்று பெண்களும் புணர்ச்சிக்கு ஒரு ஃபுல ஸ்டாப் வைத்துவிட்டால் பிறகு மரபணுக்கள் எப்படி மறுமைக்குப் பயணிக்குமாம்.

மனிதப் பிள்ளையின் பிறப்பும் பராமரிப்பும் ரொம்பவே சிரமமானக் காரியங்கள்தான். அந்தச் சிரமத்தையெல்லாம் மறந்து மனிதர்கள் ஆவலோடு புணர வேண்டுமானால், புணர்ச்சியின் கவர்ச்சியைக்

கூட்டியாக வேண்டுமே!



வெறும் இரண்டு உறுப்புகளின் ஒருங்கிணைப்பு என்பது காலாகாலமாக மலர்களில் ஆரம்பித்து எறும்பு, தும்பி, பாம்பு... என்று சகல ஜீவராசிகளும் செய்யும் ஒரு சாதாரண இனம் சேரும் சடங்கு அதை மனிதர்களுக்கு மட்டும் எப்படிக் கவர்ச்சிகரமாக ஆக்க முடியும்?

'அட, என்னடா இது, இந்த மரபணுவுக்கு வந்த சோதனை!' என்று திருவிளையாடல் ஹேமநாத பாகவதர் ஸ்டைலில் சொல்லும் அளவுக்கு மனித இன்கள் ஒரு விசித்திர நிலைமையில் சிக்கின. இந்த இன் உருவான இத்தனை ஆயிரம் யுகங்களில் எப்போதும் நேராத அதிசயமாகக் கடந்த ஒரு மில்லியன் ஆண்டுகளாக மட்டும், மனிதர்களில் உடல் சேர்க்கையைக் கவர்ச்சிகரமாக ஆக்க வேண்டிய அவசியத்தில் மரபணுக்கள் சிக்கின.

அதென்ன மனிதர்களில் மட்டும் கவர்ச்சிகரமாக ஆக்குவது. அப்படியென்றால் மற்ற ஜீவராசிகளுக்கு இதில் கவர்ச்சி கிடையாதா? என்று நீங்கள் கிராஸ் கேள்வி கேட்கக் கூடுமே! ஸோ, பிற ஜீவராசிகளின் அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி ஒரு குட்டி விளக்கம்.

ஜீவராசி நம்பர் ஒன்:

நாம் அன்றாடம் பார்த்தும் பார்க்காதது மாதிரி போகும் பச்சை நிற பிரஜைகள். செடி கொடிகள்! இறைவனுக்குக் காணிக்கையாகச் செலுத்தும் அளவுக்குப் புனிதம் எனக் கருதப்படும் மலர்கள்தான் செடிகளில் இனப்பெருக்க பாகங்கள். மலரின் நட்ட நடுவில் பெண்ணின ஜீனோம் காத்திருக்கும். சுற்றி ஆணின் ஆந்தர்கள் மகரந்தப் பொடியோடு சூழ்ந்திருக்கும்.

இத்தனை ஆந்தர்களின், இத்தனை ஆயிரம் மகரந்தத் தூள்களில் ஒன்றே ஒன்று பெண்ணின் சூல் குழாயினுள் போய் அதன் அரை ஜீனோமைத் தொட்டால் இரண்டு அரை ஜீனோம்களும் இணைந்த அந்தக் கணமே ஒரு புதுச்செடி பிறவி எடுக்க ஆரம்பித்து விடுகிறது. ஆனால், என்னதான் செடிகளில் ஆண் பெண் பாகுபாடு இருந்தும், இனம் சேரும் சடங்குகள் இருந்தும் பெண்ணோடு ஆண் சேருவதில் செடிகளில் பேரானந்தம் இருப்பதில்லை!

சரி, அது செடிகளின் தலையெழுத்து, மிருகங்களிலுமா அப்படி என்றால்? ஆம்.

ஜீவராசி நம்பர் டூ:

நமது வீடுகளில் புகுந்து எல்லாவற்றையும் கடித்து இம்சை தருகின்றனவே எலிகள், அதன் அந்தரங்கம் எப்படித் தெரியுமா?

பெண் எலி பருவகாலத்தை அடைந்ததும் ‘ஜூட்!’ என்று சமிக்ஞைத் தரும் வாசனை ரசாயனங்களைச் சுரக்கும். உடனே ஆண் எலி எங்கு இருந்தாலும் கடகடவென ஓடி வந்துவிடும். மிஸ் எலியை மோப்பம் பிடித்து, அதன் மேல் தாவி தன் அரை ஜீனோமை அவளுக்குள் இன்வெஸ்ட் பண்ணிவிட்டு, வந்த வேகத்திலேயே ஓடிவிடும். திருவாளர் எலி வந்தது, உடனிருந்தது, போனது... இதெல்லாம் ஒரே ஒரு நிமிடத்துக்குள் முடிந்து போய்விடும். அத்தனை சுருக்கமான, கொஞ்சம்கூட சுகமே இல்லாத இனச்சேர்க்கை எலியாருடையது.

சரி, இதெல்லாம் சின்ன சைஸ் மிருகத்தோட Sexual Behaviour ஆக இருக்கலாம்; பெரிய சைஸ் மிருகங்கள் கண்டிப்பாக சுகம் உணரும் என்று நீங்கள் நம்பினால், இருப்பதிலேயே மிகப் பெரிய சைஸ் மிருகமான திமிங்கலத்தை எடுத்துக் கொள்வோமே. அதே கதைதான்!

ஜீவராசி நம்பர் த்ரி:

பெண் திமிங்கலம் தேமே என்று தண்ணீரில் மிதந்து

கொண்டிருக்கும். ஆண் திமிங்கலம் வேறு எங்காவது விளையாடிக் கொண்டிருக்கும். பருவகாலம் வந்ததும் ஆண்கள் எல்லாம் இயல்பாகப் பெண்கள் பக்கத்தில் ஆஜராகிவிட, பெண்ணுக்குள் தன் அரை ஜீனோம்களை ஆண் தாரை வார்த்து விட்டு, அபவுட் டர்ன் அடித்து வந்த வழியே போய்விடும். நோ சுகம். நோ சந்தோஷம். கடல் வாழ் பெரிய மிருகத்துக்கு அதெல்லாம் இல்லை.

நிலவாழ் பெரிசுகள் எல்லாம் செம ஜாலி பண்ணும் என்று இப்போதும் பிடிவாதமாக நீங்கள் நம்பினால், எந்த யானைப் பாகனை வேண்டுமானாலும் கேளுங்கள். பெண் யானையின் பருவ வாசம் உணர்ந்ததுமே ஆண் யானை மதம் பிடித்து அவளைத் தேடி ஓடும். பட் again, no fun!

மற்ற வகை ஜீவராசிகளுக்கு வேண்டுமானால் சுகம் உணரத் தெரியாமல் இருக்கலாம். ஆனால், குரங்கினம் அப்படியல்ல! மனிதர்களை உருவாக்கித் தந்து மாபெரும் சாதனையைப் புரிந்த இனமே குரங்குகள்தானே Monkeys must be having fun... என்று நீங்கள் நினைத்தால், sorry again, கழுகள், நம்ம லோக்கல் குரங்குகளில் ஆரம்பித்து, ஆப்பிரிக்காவிலும், தென் அமெரிக்காவிலும் வாழும் பிற வானரங்கள் வரை குரங்குகளிலும் இனச்சேர்க்கை எந்த சுகத்தையும் தருவதில்லை. இரண்டே இரண்டு வகை வானரங்கள் தவிர... அவை 1. Homo sapiens என்ற மனிதர்கள். 2. பேன் பேனிஸ்கஸ் (Pan paniscus) என்று அழைக்கப்படும் போனோ போக்கள்.

இந்த இரண்டு வகை குரங்குகளுமே ஸேம் பிஞ்ச் சொல்லிக் கொள்ளும் அளவிற்கு கிட்டத்தட்ட 98 சதவீதம் ஒரே வித மரபணு புரதங்களால் ஆனவை தெரியுமோ!

இந்த மரபணு ஒற்றுமை இந்தக் குரங்குகளின் கலவியல் நடவடிக்கையிலும் அப்பட்டமாகத் தெரிகிறது. ஏன் தெரியுமா? உலகிலேயே இனச்சேர்க்கையில் எக்கச்சக்க இன்பம் காண்பதே இந்த இரண்டு குரங்குகள்தான்!

ஏனெனில், இந்த இரண்டு குரங்குகளில் மட்டும்தான், மரபணுக்கள் என்னென்னமோ ரீ வையரிங் செய்கின்றன. மற்ற ஜீவராசிகளைப் போல வந்தேன், கண்டேன், கொண்டேன், சென்றேன் என்ற யந்திரத்தனம் கிடையாது. வந்தேன், கண்டேன், கொண்டேன், மகிழ்ந்தேன் என்கிற இன்ப அலைகளை ஏற்படுத்தும் மேஜிக்கை செய்து வைத்துள்ளன.

அது எப்படி என்கிறீர்களா?

# 34

## சுகத்தின் விசை!



பெரிய மூளையைப் பெற்றதன் பக்க விளைவாக மனிதர்களுக்குப் பெரிய தலை உருவாகியது. இதனாலே பிள்ளை வளர்ப்பு என்பது மனித குலத்தில் மட்டும் பெரும் சுமையாகிப் போனது. இந்தப் பிள்ளை வளர்க்கும் பெரும் சுமையை எண்ணி மனிதர்கள் துவண்டுவிடாமல் இருக்க ஜீன்கள் உருவாக்கிய ஒரு தித்திப்பு ஊக்க டெக்னிக்தான் காம சுகம். ஆனால், இந்தத் திடீர் தித்திப்பு ஊக்க யுக்தி திடுதிப்பென்று மனிதர்களுக்கு மட்டும் எங்கு இருந்து வந்தது?

மனிதர்கள் இனம் சேரும் அதே முறையில்தான் உலகில் உள்ள எல்லா உயிர்களும் இனம் சேருகின்றன! எல்லா உயிரினங்களிலும் ஆண் - பெண் என்ற பாலின பிரிவினை இருக்கிறது. ஆணின் அரை ஜீனோம், பெண்ணின் அரை ஜீனோமோடு கலந்து புது உயிரை உருவாக்க, எல்லா உயிரிலுமே ஆணுக்கு ஒரு நிமிர் குழாயும், பெண்ணுக்கு ஒரு சூல் குழாயும் இருக்கின்றன. இந்த இரண்டு குழாய்களும் டெலஸ்கோப் குழாய்களைப் போல ஒன்றுக்குள் மற்றொன்று பொருமி, அரை ஜீனோம்கள் கலந்து முழு ஜீனோமாகிப் போனால், அடுத்த தலைமுறையின் முதல் மூல செல் ரெடி! அதற்குப் பின் சில நிமிடமோ, நாட்களோ, வாரமோ, மாதமோ, அந்தந்த உயிரினத்தின் கர்ப்ப காலத்தைப் பொறுத்து அடுத்த தலைமுறை இந்தப் பூலோகத்தில் அவதரிக்கிறது. அவதரித்த அந்த உயிர் வளர்ந்து

பெரிதாகி, இனப்பெருக்கம் செய்து அப்படியே ஜீன்களின் இந்தச் சங்கிலித் தொடர் வாழ்க்கை நீடித்துக் கொண்டே போகிறது.



இதுதான் குட்டியூண்டு பாக்டீரியாவில் ஆரம்பித்து, புல், பூச்சி' பல்லி, பறவை, புலி, சிங்கம், மனிதன்... போன்ற சகல ஜீவராசிகளுக்கும் இருக்கும் பொதுவான ஏற்பாடு. இதில் மனிதர்களுக்கு மட்டும் வெறும் குழாய்கள் பொருந்தி ஜீனோம்கள் பரிமாறப்படும் அந்த அற்ப சம்பவத்தின்போது இந்தச் சுகத்தை ஏன் ஏற்படுத்தித் தந்தாக வேண்டும் இந்த ஜீன்கள் ரொம்பவே திண்டாடித்தான் போயிருக்கும்!

ஆனால், அதற்கும் இந்த ஜீன்கள் சளைத்ததாகத் தெரியவில்லை. மடமடவென வேலையில் இறங்கி, கடகடவென புதுப்புது மேஜிக் செய்தன. புணர்ச்சியின்போது சுகம் உணரும்படி மனித உடம்புக்குள் நான்கு மேஜிக்குகளை மாற்றி அமைத்தன. எப்படி என்று தானே கேட்கிறீர்கள்"

மேஜிக் நம்பர் ஒன்:

மற்ற மிருகங்களுக்கு உயிர் வாழ போதுமான அளவுக்கு மட்டும் நரம்புகளைப் படைத்த மரபணுக்கள், மனிதர்களுக்கோ எக்கச்சக்கமான நரம்புகளைப் படைத்துத் தந்தன. இந்த எக்கச்சக்கமான நரம்புகள் மனிதத் தோலுக்கு அடியில் படர்ந்து ஓர் அடர்ந்த விரிப்பாக விரிந்து கிடக்கின்றன. தோலை கொஞ்சம் ஸ்பரிசித்தாலே போதும். நரம்புகள் எல்லாம் சிலிர்த்து, ஸ்ருதி மாறி, இந்தத் 'தொடுகை' தகவலை மிக விரைவில் மத்திய நரம்பு மண்டலத்துக்கு அனுப்புகின்றன.

மேஜிக் நம்பர் டூ:

உடம்பின் வெளிப்புறத்தையும் உட்புறத்தையும் ஒரு சென்டி மீட்டர் கூட மிச்சம் வைக்காமல் முழுவதுமாக மூடியிருக்கும் இந்தத் தோல், உடம்பின் சில பகுதிகளில் மட்டும் மேலும் மென்மையாகி, நிறைய நரம்பு முனைகளால் சூழப்பட்டிருக்கும். இப்படிக் கூடுதல் நரம்பு விரிப்புகள் இருக்கும் இந்த உடல் பகுதிகளைச் சென்ஸேட் ஃபோஸை 'Sensate Foci' என்கிறோம். இந்த சென்ஸேட் ஃபோஸை ஒரு வித ஸ்விட்ச் மாதிரி. இவற்றை இயக்கினால் நரம்பு மண்டலம் 'சுகம்' என்ற உணர்வை அடையும்.

மேஜிக் நம்பர் த்ரீ:

மனிதர்களின் தோலில் ஒன்றல்ல இரண்டல்ல, சில நூறு சென்ஸேட் ஃபோஸை இருக்கின்றன. இந்த ஒவ்வொரு சென்ஸேட் ஃபோஸையிலிருந்தும் புறப்படும் நரம்பு முனைகள் மத்திய நரம்பு மண்டலத்தைப் போய்ச் சேர்ந்ததும் விதவிதமான ரசாயனங்களைச் சுரக்கின்றன. இந்த ரசாயனங்களோ மூளை மையங்களைத் தூண்டி மேன்மேலும் வெவ்வேறு ரசாயனங்களைச் சுரக்க வைக்கும்.

இப்படி இத்தனை விதமான ரசாயனங்கள் ஒரே சமயத்தில் ஊறுவதால் மூளை கொஞ்சம் சூடாகி, ஸ்ருதி சட்டென சிலிர்த்துப் போக மொத்த நரம்பு மண்டலமும் இந்த ஸ்ருதியில் கும்மாளம் போட ஆரம்பிக்கிறது. மேலும், அலைஅலையாகப் பரவசம் பரவ ஆரம்பிக்க, இதையே காலங்காலமாகப் பெரிய இன்பம் என்று கருதி மகிழ்ந்து வருகிறார்கள் மனிதர்கள்.

மேஜிக் நம்பர் ஃ போர்:

ஒரே ஒரு முறை இந்த 'இன்பம்' என்கிற சமாசாரத்தை உணர்ந்து

விட்டாலும், ‘அய்! மறுபடியும் எப்போ?’ என்ற ஆவலையும் அடிமைத் தனத்தையும் ஏற்படுத்தும் Endorphin வகை ரசாயனங்கள் மூளையில் ஊறுகின்றன. இதனால் காலம், சூழ்நிலை, சம்மதம், பின்விளைவுகள், கட்டுப்பாடுகள், கர்ப்பம், எய்ட்ஸ் வைரஸ் என்ற எதையும் பொருட்படுத்தாமல் காமமே குறி என்று செயல்பட்டு விடுகிறார்கள் மனிதர்கள்.

ஆக, இந்த நான்கு மேஜிக் வழிகளில் மனிதர்களை மரபணுக்கள் மயக்கி வைத்து, இனச்சேர்க்கை என்கிற சாதாரண சடங்கை இன்ப மயமானதாக மாற்றின. அதனால்தான் பிள்ளை பிறப்பு, வளர்ப்பு என்கிற பெரும் சுமைகளை மறந்து மனிதர்கள் தொடர்ந்து இனவிருத்தி செய்து வருகிறார்கள்.

ஆனால், இந்த மேஜிக் வழிகளில் ஒரு பெரிய ஆபத்தும் இருக்கிறது. தோல், நரம்பு, தொட்டால் சிலிர்ப்பு, சிலிர்த்தால் சுகம் என்கிற மாதிரி சென்கேலட் ஃபோஸை அமைப்பதில் ஒரு பெரிய சிக்கல் என்ன தெரியுமோ? தற்செயலாக ஓர் அஃறிணைப் பொருள் வந்து சென்கேஸட் ஃபோலைலயை ஸ்பரிசித்தாலும், ஸ்விட்ச் ஆன் ஆகிவிடும்!

உதாரணத்துக்கு, லண்டன் ஜூவில் ஒரு பெண்புலி இருந்தது. இந்தப் பெண்புலியைப் பார்க்க தினமும் ஓர் ஆசாமி வருவார். அந்த ஆசாமி அந்தப் புலியின் கூண்டுக்குப் பக்கத்திலேயே நின்று கொண்டு, அது கம்பி அருகே வரும்போது அதைத் தொட முயல்வார். புலி ஒருநாள் கடித்து வைக்க, மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். பத்துநாள் மருத்துவமனையை விட்டு போகவே கூடாது என்று மருத்துவர்கள் சொன்னபோது ‘பத்துநாளா! அத்தனை நாள் என் புலியைப் பார்க்காமல் என்னால் இருக்க முடியாது!’ என்றாராம்.

“அப்படியென்ன புலி மேல இவ்வளவு பாசம்?" என்றபோது அசடு வழிந்தபடி ‘அந்தப் புலிதான் என் கேர்ள் ஃப்ரெண்ட்!" என்றாராம். புலியின் சாதாரண சீண்டல் அவரது சென்ஸேட் ஃபோஸை சிலிர்ப்பூட்டியதன் விளைவு இது! இப்படி ஒருவர் இருவருக்கு சென்ஸேட் ஃபோஸ் தடம் புரண்டாலே பெரிய பிரச்னை. மொத்த மனித குலமும் ஏதோ ஓர் அஃறிணையின் ஸ்பரிசத்துக்கு அடிமையாகிப் போகும் ஆபத்து உண்டே! அப்படியெனில் மரபணுக்களின் மேஜிக் வீணாகிவிடுமா என்றுதானே யோசிக்கிறீர்கள்? இந்த வம்பே வேண்டாம் என்றுதான் மரபணுக்கள் மனிதர்களை அடுத்த கட்டமாகக் கட்டுப்படுத்த சில புணர்ச்சி விதிகளை நிர்ணயித்தன.

அதென்ன புணர்ச்சி விதிகள்...?

# 35

## விசை மாறிய பயணம்!



மற்ற மிருகங்களுக்கு சாதாரண தோல், அதன் அடியில் போதுமான நரம்பு விரிப்புகள் என்று சாதாவாகத் தகவமைத்துத் தந்தன மரபணுக்கள். ஆனால், மனிதர்களுக்கு மட்டும் சூப்பர் ஸ்பெஷலாக மெல்லிய தோல் அதன் அடியில் ஆயிரமாயிரம் நரம்புகள் என்று ஏற்பாடு செய்து தந்தன. விளைவு, உடம்பு முழுக்க உள்ளும் - புறமும் வியாபித்திருக்கும் இந்தத் தோலை கொஞ்சம் தொட்டால் போதும். மனித மூளையில் சுகம்சுகமாக மலர்ந்து போகிறது!

ஓ! வாட் எ ஃபெனடாஸ்டிக் டிசைன்! என்று உடனே பாராட்டக் கிளம்பி விடாதீர்கள், இந்த வடிவமைப்பில் சில சிக்கல்களும் உள்ளன.

உதாரணத்துக்கு, புதிதாக வயதுக்கு வந்த ஒரு பையனை எடுத்துக் கொள்வோமே. என்னது! பையனாவது, வயதுக்கு வருவதாவது? என்று உடனே ஆச்சரியப்படாதீர்கள். பொதுவாகப் பெண்கள் மட்டும்தானே வயதுக்கு வருவதாக நினைத்திருந்தீர்கள். வழக்கம்போல உங்கள் நம்பிக்கையில் கை வைப்பதற்கு ஸாரி. பெண்களைப் போலவே ஆண்களும் வயதுக்கு வருகிறார்கள். என்ன, பெண் பூப்பெய்தால் ஊரே கூடி விழா கொண்டாடுகிறது. ஆண் வயதுக்கு வந்தால் யாரும் கண்டுகொள்வது இல்லை. அவனை அம்போ என்று விட்டு விடுவார்கள்!



அதைவிட கொடுமை ஆண் வயதுக்கு வரும் அறிகுறியான விந்தணு வெளியேற்றத்தை ஏதோ பெரிய கோளாறு மாதிரி பிரகடனப்படுத்தி, கொண்டாட வேண்டிய உடல் மாற்றத்தைக் கண்டு பையனுக்குக் குற்ற உணர்வே ஏற்படுத்தி விடுகிறார்கள். அப்பாவி ஆண்களும், 'ஏதோ கோளாறுதான் போல' என்று லேகிய விளம்பரங்களை நம்பி ஏமாந்து போகிறார்கள். How silly.

சரி, நம்ம கதாநாயகனின் உதாரணத்துக்கு வருவோம். புதிதாக வயதுக்கு வந்த பையன் என்பதால், அவன் உடலில் இளமை ரசாயனங்கள் பிரளய வேகத்தில் பாய்ந்து கொண்டிருக்கும். இனச்சேர்க்கைப் புரிய இயற்கை அவனைத் தூண்டிக் கொண்டே இருக்கும். இந்தச் சந்தர்ப்பத்தில் இந்த இளைஞன் மனிதப் நடமாட்டம் உள்ள பகுதியில் வாழ்ந்தால், தனக்குத் தகுந்த பெண்ணாகப் பார்த்து

தேர்ந்தெடுத்து உறவு மேற்கொள்ளலாம். ஒருவேளை அவன் மனித இனத்தோடு வாழாமல் ஓநாய்களோடு வாழ்ந்தவனாக இருந்தால்!

அதெப்படி ஓநாயோடு வாழ்வானாம்? என்று உடனே கிராஸ் கேள்வி கேட்டு வைக்காதீர்கள். இந்தக் காலத்தில்தான் பிரசவம் மருத்துவமனையில் நடக்கிறது. எல்லோரும் ஒன்று இரண்டு குழந்தைகளோடு நிறுத்திக் கொள்கிறார்கள். முன்பு பிரசவம் என்பது காடு, மலை, குகை, கழனி, மாட்டுத் தொழுவம்... என்று கண்டகண்ட இடத்திலும் நடந்து தொலைக்கும். பிரசவத்தில் தாய் உயிர் பிழைத்தால் நோ பிராப்ளம். ஆனால், துரதிர்ஷ்டவசமாக அம்மா அல்பஆயுசில் இறந்து போனால் அவளுக்குப் பிறந்த குழந்தையின் கதி?

இப்படி நிர்க்கதியாகக் கிடக்கும் குழந்தைகளைத்தான் ஓநாய் மாதிரியான பாலூட்டி மிருகங்கள் தூக்கிக்கொண்டு போய் வளர்க்கும். ஏனெனில், பிறந்த புதிதில் மனிதக் குழந்தை சாட்சாத் ஓநாய்க்குட்டி மாதிரிதான் தெரியும்! தாய்ப்பாசம் தாளாமல், ‘அட, நம்ம குட்டி இங்க எப்படி?’ என்று மிஸஸ் ஓநாய் மனிதக் குழந்தையை ஸ்வீகாரம் செய்துகொள்ளும். இப்படி வளர்ந்த குழந்தைகளுக்கு நிஜ வாழ்வில் உதாரணங்கள் இருந்தாலும், கதை வடிவில் உதாரணம் சொல்ல வேண்டுமெனில் ரொம்ப பிரபலமான ‘ஜங்கிள் புக்’கில் வரும் மோக்லீ கதாபாத்திரத்தைச் சொல்லலாம்.

மோக்லீயாவது கதைப்படி மனிதர்களை சின்ன வயதிலிருந்து பார்த்து வளர்கிறான் அதனால் குழப்பங்கள் தீர்ந்தன. ஆனால், நிஜ வாழ்க்கையில் இப்படி ஓநாயால் வளர்க்கப்பட்ட மனிதன், வயதுக்கு வந்ததும் அவன் ரியாக்ஷன் எப்படி இருக்கும்? அவனுக்கும் ஸென்லேஸட் ஃபோகஸ் + டச் = சுகம் என்றுதானே மூளை அமைக்கப் பட்டிருக்கும்.

ஆக, இந்த ஸென்ஸேட ஃபோகஸைத் தீண்டுவது எதுவானாலும் அதனுடன் புணரத்தானே பையன் முயல்வான்? ஆனால், அவன் இப்படி இனம் மாறி புணர்வதில் மரபணுக்களுக்கு எந்த லாபமும் இல்லை. வேற்றின விலங்குகளோடு புணர்ந்தால்தான் வாரிசு உருவாகாத.

மரபணுக்களின் ஒரே குறிக்கோள், வம்சவிருத்தி. அது வேற்றின புணர்ச்சியினால் சாத்தியமாகாது! தனக்கு சாதகமாக இல்லாத எந்த நடவடிக்கையையும் மரபணுக்கள் நடத்த விடாது. அதனால்தான் எல்லா மனித ஆண்களின் மனதிலும், ‘டேய்! நீ மனித ஆண். நீ மனிதப் பெண்ணோடு மட்டும்தான் இனம் சேரணும்’ என்ற அழுத்தமான கட்டளையைப் பதித்து வைக்கின்றன மரபணுக்கள்.

அதென்ன மனித ஆணுக்கு மட்டும் கட்டளை, மனிதப் பெண்ணுக்கு இல்லையா? என்றால், மனிதப் பிறவிகளிலும் 'ஆண்தான் துணை தேடும். பெண் வரும் துணையைத் தேர்ந்தெடுக்கும்' என்ற பொது விதியைத்தான் இயற்கை அமல்படுத்தி உள்ளது.



எந்த ஜீவராசியிலும் பெண் துணை தேடாது. தேடல் வேட்கை என்பது முற்றிலும் ஆணின் பணி. அதனால்தான், ஆணுக்கு மட்டும் தன் இன அடையாளங்களை உணரும் தன்மையை அதிகமாக்கி உள்ளது இயற்கை. அதனால்தானோ என்னவே ஆண்களுக்கு மட்டும் இனவெறி அதிகமாக இருக்கிறது! எந்தக் காலத்திலும் பெண்கள் இனவெறியர்களாக இருந்ததாகச் சரித்திரமே கிடையாது.

சரி, நம்ம மேட்டருக்கு வருவோம். மனிதப் பெண் என்றால் யார் என்பதை ஓர் ஆண் எப்படித் தெரிந்து கொள்வான்! எப்போது தெரிந்து கொள்வான்? மனிதப் பெண்ணின் அடையாளங்கள் எவை?

அதையெல்லாம் அவனுக்கு சொல்லித் தருவது யார்?

இவையெல்லாம் ரொம்ப சுவாரசியமான கேள்விகள்தான்! நீங்கள் கொஞ்சமும் எதிர்பார்க்காத பதில்கள் இதற்கு உள்ளன.

# 36


## ஏவாளின் அடையாளங்கள்!



மனிதப் பெண் என்றால் யார் என்பதை ஒரு சின்னக் குழந்தைகூட படு துல்லியமாகச் சொல்லிவிடும். ஆனால், மனித இனம் உருவானது நிறைய மனிதர்களை அன்றாடம் சந்திக்கும் ஜனநெருக்கடியான நகர்ப்புறத்தில் இல்லை. அது உருவானது மற்ற மிருகங்கள் குறிப்பாக, மற்ற வானரங்கள் அதிகம் வசித்த ஆப்பிரிக்கக் காடுகளில்தான்.

யோசித்துப் பாருங்கள்... ஒரு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் ஆப்பிரிக்காவில் வாழ்ந்த மனிதன், சிம்பன்ஸி, பொனோபோ என்ற இந்த மூன்று ரக குரங்குகளும் மரபணுக்களால் நெருங்கின ஒன்றுவிட்ட உறவுக்காரர்கள். ஆனால், இவைகளுக்குள் கலப்பு நேர்ந்தால் பிள்ளை பிறக்காது. இதனாலேயே அந்தந்த குரங்குகள் அந்தந்த இனத்தோடு மட்டும் சேர வேண்டுமென, மரபணுக்கள் அவற்றைத் தூண்டின.

இப்போது சொல்லுங்கள். கொரில்லா, சிம்பன்ஸி, பொனோபோ, கிப்பன்... போன்ற பலவகை வானரப் பெண்கள் தன்னைச் சுற்றி இருக்கும்போது, தன் இனத்தை அபிவிருத்தி செய்யத் தேவையான மனிதப் பெண்ணை ஓர் ஆதிவாசி ஆண் எப்படி அடையாளம் கண்டுகொள்வான்? மனிதப் பெண்களுக்கும் மற்ற வானரப் பெண்களுக்கும் என்ன வித்தியாசம்?



வித்தியாசம் நம்பர் ஒன்:

மனிதப் பெண் இரண்டு கால்களால் நடப்பாள். அவள் கால்கள் மற்ற குரங்குகளின் கால்களை விட நீளமாக இருக்கும்.

வித்தியாசம் நம்பர் டு:

மனிதப் பெண்ணிற்கு மட்டும்தான் மார்பகங்கள் உள்ளன. மற்ற வானரப் பெண்களுக்கு, 'நான் கருவுறத் தயார்' என்று சமிக்ஞை காட்டும் உடல் வீக்கங்கள் உடம்பின் பின்புறம் இருக்கும். மனிதப் பெண்ணுக்கு மட்டும்தான் அது மார்பக ரூபத்தில் முன்பக்கம் இருக்கும்.

வித்தியாசம் நம்பர் த்ரீ:

மற்ற வானரப் பெண்களின் மேனி முழுக்க அடர்த்தியான முடி இருக்கும். மனிதப் பெண்ணின் சருமத்தில் மட்டும்தான் முடி கண்ணுக்கே தெரியாத பொடி சைஸில் இருக்கும்.

வித்தியாசம் நம்பர் ஃபோர்:

மற்ற வானரப் பெண்களின் உடம்பில் உற்றுப் பார்த்தால் கூட இடுப்புப் பகுதி தெரியாது. மனிதப் பெண்ணின் இடையோ தூரத்திலிருந்து பார்த்தாலும் 'குறுக்கு சிறுத்தவளே' என்று கண்டுபிடிக்க முடியும்.

வித்தியாசம் நம்பர் ஃபைவ்:

மற்ற வானரப் பெண்களுக்குக் கழுத்து நீளமாக இருக்காது. அடர்த்தியாக, அகலமாக, குட்டையாக இருக்கும். ஆனால், மனிதப் பெண்ணின் கழுத்து தூரத்திலிருந்து பார்த்தாலும் கொஞ்சம் நீளமாகத் தெரியும். அவள் கழுத்தும் தலையும் ஒரு காம்பின் மேல் அமர்ந்த மெல்லிய மலர் மாதிரி அமைந்திருக்கும். இந்த ஐந்தும்தான் தூரத்திலிருந்து பார்த்தாலே, 'அவள் மனிதப் பெண்தான்' என்று உணர வைக்கும்.

ஆனால், மனிதப் பெண் மாதிரியே உடல்வாகுக் கொண்ட பொனோபோ பெண்களும் உண்டு. தூரத்திலிருந்து பார்த்தால் பொனோபோவிற்கும் மனுஷிக்கும் வித்தியாசம் தெரிவது கொஞ்சம் கஷ்டம். ஆனால், அருகில் வந்து பார்த்தால் தெரியக்கூடிய வித்தியாசங்கள் பல உள்ளன.

அவை என்ன தெரியுமா...?

வித்தியாசம் ஒன்:

கிட்டத்தட்ட குழந்தையின் முகம் மாதிரி மனிதப் பெண்ணுக்கு முகம் சப்பையாக இருக்கும்.

வித்தியாசம் டூ:

அவள் கண்கள் பெரிது. மற்ற எந்தக் குரங்குக்கும் விழியின்

வெண்பகுதி வெளியே தெரியாது. இவளுடைய கண்களில் வெண்பகுதி பளபளப்பாகத் தெரியும்.

வித்தியாசம் த்ரி:

உலகிலேயே உதட்டின் உட்தோல் வெளியே பிதுங்கி இருக்கும் தன்மை கொண்ட ஒரே வானரம் மானுடம்தான். இந்த Everted lips பெண்களுக்கு கொஞ்சம் கூடுதல் சிவப்பாக இருக்கும்.

வித்தியாசம் ஃபோர்:

மனிதப் பெண்ணின் சருமம் மட்டும்தான் பட்டு மாதிரி, பதப்படுத்திய மிருகத்தோல் மாதிரி வழவழப்பாக, கதகதப்பாக இருக்கும்.

இவை அருகில் வந்து பார்த்தால் தெரியும் வித்தியாசங்கள். ஆனால், பேசிப் பழகினால் மேலும் பல வித்தியாசங்கள் புலப்படும்.

அவை என்ன தெரியுமா...?

முதல் வித்தியாசமே மனிதப் பெண்ணின் முகத்தில் தோன்றி மறையும் expressions, பேசும்விதம்தான். உலகிலேயே பேசத் தெரிந்த ஒரே வானரம் மனிதர்கள்தான் என்றாலும், பொதுவாக மனித ஆணைவிட மனிதப் பெண் அதிகம் பேசுவாளே. பிளஸ் அவள் சிரிப்பு.

அடுத்து, மனிதப் பெண்ணின் மெய்பாட்டியல் குறிப்புகளான Body language... இவை சகஜமான பழக்கத்தின்போதே தென்படும். ஆகா! இவள் முகபாவம், பேச்சு, சிரிப்பு... போன்றவை she is human என்று தகுந்த ஆதாரங்களுடன் அவள் இனத்தை நிரூபிக்கும்.

ஆனால், அப்போதும் அவள் யாரோ ஒரு மனிதப் பெண் மட்டும்தானே! அது அந்த மனிதனின் தாயாகக் கூட இருக்கலாம், சகோதரியாக இருக்கலாம், ஏன் பாட்டியாகக் கூட இருக்கலாமே. தன்னுடைய சொந்த ரத்தத்தோடு இனம் சேருவது என்பது பெரிய ஆபத்தாயிற்றே.

ஒரே ரத்தம் என்பதால் பரம்பரை பரம்பரையாக நோய்களை உருவாக்கும் வில்லங்க ஜீன்கள் இவர்களது ஜீனோமில் ஒளிந்திருக்கும். ஒரே விதமான வில்லங்க ஜீன்களை கொண்டவர்கள் உறவு கொண்டால் அவர்களுக்குப் பிறக்கும் பிள்ளையின் ஆரோக்கியம் பாதிக்கும். ஆயுள் அவுட்! அதனாலே வேற்று ரத்த நபர்களோடு சேரும் தன்மை எல்லா விலங்குகளுக்கும் உண்டு.

ஆனால், இவள் வேற்று ரத்தக்காரியா என்பதை ஆண் எப்படித் தெரிந்து கொள்வான்? சிம்பிள்! அவள் பேசும் விதம், வாழ்வைப் பற்றி அவள் சொல்லும் சுயசரிதைத் தகவல்கள் எல்லாமே வித்தியாசமாக இருக்கும். அப்புறமென்ன Opposite attract ஆகிவிடுமே! ஆக தூரத்தில் பார்த்து, அருகில் பார்த்து, பேசிப் பார்த்து, பழகிப் பார்த்து என்று பல வழிகளிலும் மனிதப் பெண்ணை அடையாளம் கண்டுகொள்ளும் தன்மை மனித ஆண்களுக்கு உண்டு. இந்த எல்லா அடையாளங்களையும் ஒன்றுகூட்டி மனித ஆணின் மனதில் உருவகம் பெறும். அந்த ‘நார்மல் மனிதப் பெண்’ எப்படி இருப்பாள்?

நீளமான கால்கள், முன்பக்க மார்பகங்கள், முடியில்லா தேகம், சிறுத்த இடுப்புப் பகுதி, நீளமான கழுத்தின் மேல் ஒரு சப்பட்டை முகம், அதில் இரண்டு பெரிய கண்கள், பிதுங்கிய உதடுகள், மென்மையான சருமம், பேச்சு, சிரிப்பு, அசைவு, செய்கை, அவளுக்கென்று ஒரு சரித்திரம்... திஸ் இஸ் தி நார்மல் மனுஷி!

மனித மூளையின் டிஸைன் எப்படித் தெரியுமா? நார்மல் விஷயங்கள் மிகைப் படுத்தப்பட்டால், உடனே அதன் மேல் கூடுதல் கவனம் செல்லும். மிகைகள் மெச்சப்பட்டு போகப்போக அதுவே பிடித்தும் போகும். உதாரணத்துக்கு, மனிதப் பெண்ணின் நார்மல் தோற்றம் நீளமான கால்கள். மிகையான தோற்றம் குதி உயர்ந்த குப்பர் நீளமான கால்கள். இந்த Super normal ரக கால்களைப் பார்த்ததும், உடனே ஆண்கள் ‘அய்’ என்று குஷ் ஆகிவிடுவார்கள். போகப்போக அதுவே பிடித்தும் போய்விடும்.

இந்தச் செயல்பாடு இருப்பதால்தான் சூப்பர் நார்மலாக்கப்பட்ட பருமனான மார்பகங்கள், ரோம நிவாரணம் செய்த தேகம், குதி உயர்ந்த கால்கள், பொய்யோ என்னும் இடை, சங்கு மாதிரி கழுத்து, நிலவு மாதிரி முகம், மாவடு மாதிரி கண், மாதுளை மாதிரி உதடு, பட்டு மாதிரி சருமம், சலங்கை மாதிரி சிரிப்பு, பூ மாதிரியான அசைவு, சுவாரசியமான சரித்திரம், தேவதை மாதிரி குணம்... என்று எல்லா விதத்திலும் அடிப்படை மனிதப் பெண்ணின் அடையாளங்களின் மிகையை ஆண்கள் பெரிதும் விரும்புகிறார்கள். அதையே தங்கள் கலை வடிவங்களிலும் தெரிவிக்கிறார்கள்.

அந்தக் கால கலை வடிவமான குகை ஓவியம் ஆகட்டும், இந்தக் கால கலை வடிவான சினிமா சமாச்சாரம் ஆகட்டும், எல்லா கலை வெளிப்பாடுகளுமே பெண்ணின் Super normal அடையாளங்களை மேன்மேலும் மிகைப்படுத்திக் காட்டிக் கொண்டே இருக்கின்றன.

சரி, இது ஏன் தெரியுமா?

# 37

## வாத்துக்குட்டியும், வக்கிரங்களும்...



மனிதப் பெண்ணுக்கு என்றே இருக்கும் சில பிரத்யேக அடையாள அம்சங்களைப் பார்த்தோம். இப்படிப்பட்ட அடையாள அம்சங்கள் தேவைதானா? அடையாள சான்றுகளைத் தேடிப்பிடித்து சரிபார்த்து இனம்சேர பெண் என்ன முத்திரைத் தாளா? என்று கூட நீங்கள் யோசிக்கலாம். but you know what !

இந்த உலகில் முத்திரைத் தாளில் எப்படி டூப்ளிகேட் உண்டோ, அதேபோல மனிதப் பெண்ணின் ஒவ்வொரு தனித்தனி அடையாளத்துக்கும் எக்கச்சக்க டூபளிகேட்டுகள் உண்டு. அவை என்னென்ன என்பது பற்றி பேசுவதற்கு முன் ஒரு முக்கியமான ஆசாமியை நான் உங்களுக்கு அறிமுகப்படுத்தி ஆக வேண்டும்.

அவர் பெயர் (Konard Lorenz) கான்ராட் லாரன்ஸ். கிராமத்தின் வயலும் வயல்சார்ந்த இடத்திலும் வளர்ந்த ஆஸ்திரிய நாட்டு விஞ்ஞானி. கான்ராடுக்கு ஆறு வயதிருந்தபோது அவரது எதிர்வீட்டு அங்கிள் நீயே வளர்த்துக்கோ!' என்று ஒரு வாத்தை கான்ராடுக்கு கொடுத்தாராம்.

கான்ராடும், அவரது அந்தக் கால ஸ்நேகிதி (பிற்கால மனைவி!) கிரிஸ்சலும் அந்த வாத்தை கண்ணும் கருத்துமாக வளர்த்து வர, வாத்து ஒரு சுபயோக தினத்தில் நான்கு முட்டைகளை இட்டு வைத்தது. அந்த

நான்கு முட்டைகளில் இரண்டு திடுதிப்பென்று காணாமல் போக, மீதமிருந்த இரண்டு முட்டைகளும் ஒரு நாள் ஓடு உடைய ஆரம்பிக்க, உள்ளிருந்து இரண்டு புத்தம்புதிய வாத்து குட்டிகள் மூக்கை நீட்டிக்கொண்டு வெளியே வந்தன. ஆறு வயதிற்கே உரிய ஆர்வத்துடன் குட்டி கான்ராட் வாத்து குட்டிகளோடே முழுப் பொழுதையும் கழிக்க ஆரம்பித்தார்.




கான்ராட் லாரன்ஸ்

வாத்து குட்டீஸின் ஒரு பொது பழக்கம் என்னவென்றால் நடக்க ஆரம்பித்ததும் நேரே தண்ணீரைத் தேடி ஓடும். பிகாஸ், அதன் ஒட்டிய கால்களை வைத்துக்கொண்டு 'தத்தகபுத்தக' என்று தரையில் நடப்பது ரொம்ப கஷ்டம். ஆனால், தண்ணீரில் நீந்துவது ரொம்ப ஈஸியாச்சே! ஸோ வாத்து வாட்டரை தேடிப் போவது அதன் இயல்பு. இப்படித் தண்ணீரைத் தேடி வாத்து போக வேண்டுமானால், அதன் அம்மா வாத்து உடனிருந்து அழைத்துச் செல்ல வேண்டும். குட்டி கொஞ்சம் பெரிதாகி நடக்கும் வளர்ச்சியை அடைந்ததும் அம்மா வாத்து ஃபாலோ மீ; என்பது போல முன்னே நடந்தால் போதும். குட்டீஸ் எல்லாம் 'பேக் பேக்', என்று சமர்த்தாக அம்மா பின்னால் போகும். இதுதான் நார்மல் வாத்து வழக்கம்.

ஆனால், கான்ராட் வளர்த்த வாத்து குட்டிகள் ரொம்ப விசித்திரமாக இருந்தன. குட்டிகள் நடக்கும் பிராயத்தை அடைந்த பிறகு அம்மா வாத்து, 'வா தண்ணீருக்கு போகலாம்' என்பது போல முன்னே நடக்க,

குட்டி வாத்துகள் அம்மா வாத்தைக் கண்டுகொள்ளாமல் கான்ராட் லாரன்ஸின் பின்னாலேயே போயின!



அதைக் கண்ட கான்ராட் லாரன்ஸுக்கு, வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த யாரோ ஓர் அந்நியன் பின்னால் போகிறது என்றால்... என்னமோ உதைக்குதே என்று லாரென்ஸ் படு மும்முரமாக வாத்து ஆராய்ச்சியில் இறங்கினார்.

அப்போதுதான் அந்த இரண்டு முக்கியமான மேட்டர்களைக் கவனித்தார் லாரன்ஸ். நடக்கும் வயதை எட்டிய குட்டி வாத்துகள் தன் எதிரில் நடக்கும் முதல் வாத்து எதுவானாலும் 'பேக் பேக்' என்று அதனையே பின் தொடர்ந்து போயின. முன்னால் நடப்பது கான்ராட் ஆகட்டும், காற்றில் பறக்கும் பிளாஸ்டிக் பேப்பர் ஆகட்டும், ஆராய்ச்சிக்காக அவற்றின் எதிரில் நகர்த்தப்பட்ட பொம்மை ஆகட்டும் நகர்வது எதுவாக இருந்தாலும், குட்டி வாத்துகள் வேறு எந்த விவஸ்த்தையும் இல்லாமல் அதனைப் பின்தொடர்ந்தன.

இப்படிக் குட்டி வாத்து முதல்முறையாக எதைப் பின் தொடர ஆரம்பித்ததோ அதையே 'அம்மா' என்று எண்ணி, அதனோட ஒட்டிக் கொண்டது. அதன் பிறகு என்ன பாடுபட்டாலும் வாத்தின் இந்த உறவாடலை மாற்றவே முடியாமல் போனது!

கான்ராட்டிக்கு வாத்துகளின் இந்த விசித்திர நடந்தை ரொம்பவே வேடிக்கையாக இருந்தது. அதெப்படி பிறவியிலேயே வாததாக அவதரித்த இந்த ஜீவராசிகளுக்கு வாத்து எது? பிளாஸ்டிக் பேப்பர் எது? மனிதன் எது? என்று தெரிய வேண்டாமா? வாத்து எவ்வளவு சின்னது, மனிதன் எவ்வளவு பெரிசு! வாத்து உடலமைப்பு எப்படி? மனிதன்

உடலமைப்பு எப்படி? இந்த அடிப்படை வித்தியாசம் கூடவா தெரியாது!

ஆனால், ரொம்ப கால ஆராய்ச்சிக்குப் பிறகுதான் ஓர் உண்மையைக் கண்டுபிடித்தார் லாரன்ஸ்.

அது என்ன உண்மை...?

# 38

## காமத்தின் முதல் டீச்சர்!



குட்டி வாத்தின் குட்டி மூளையில் வாத்து என்றால் இப்படிதான் இருக்கும். அம்மா என்றால் இவள்தான் என்பது மாதிரியான முன்பதிவுகள் எதுவுமே இல்லை. அவற்றின் மூளையில் இருந்ததெல்லாம், 'நீ நடக்குற வயசை அடஞ்சதும் உன் பக்கத்துல நடக்குறது எதுவாக இருந்தாலும் அதை அப்படியே பின்தொடர்ந்து போ. அதுதான் உன் அம்மா. அதை விடாம ஃபாலோ பண்ணு.'

தண்ணீர் எங்கே, எதைச் சாப்பிட வேண்டும், யாரோடு இனம்சேரனும் என்ற இதர சமாச்சாரங்களை அந்த அம்மா கேரக்டரே கற்றுக்கொடுக்கும். அது சொல்லுவதைக் கேட்டாலே போதும் பிழைக்சிக்கலாம்! பட், தி இம்பார்ட்டெனட திங் டு டூ இஸ் ஃபாலோ ஹர்! என்ற சிம்பிள் கட்டளைதான்.

ஏனென்றால், இந்த மரபணுக்கள் உருவான காலத்தில் மனிதர்களும் பிளாஸ்டிக் பேப்பர்களும் வாத்து குட்டிகளின் பக்கத்தில் போகும் வாய்ப்பே இல்லை. ஒன்லி அம்மா வாத்து மட்டும் குட்டிகளோடு இருந்திருக்கும். 'அதனால்தான் உன் எதிரில் நடக்கும் வாத்துவை தொண... என்ற கட்டளையை இட்டன மரபணுக்கள்.



அதெல்லாம் சரி, வாத்துகள் கான்ராட் லாரன்ஸை பின் தொடர்ந்ததுக்கும் காமத்துக்கும் என்ன சம்மந்தம் என்று யோசிக்கிறீர்களா? லாரன்ஸ் கண்டுபிடித்த அந்த முக்கிய கால கட்டத்தில் (Critical period) எது முன்னே நடந்தாலும், அதையே தன் தாய் என்று வாத்து நினைத்துக்கொள்ளும் என்ற சமாச்சாரம் அவருக்கு நோபல் பரிசை மட்டும் பெற்றுத் தரவில்லை. மனித ஆண்களின் பல செயல்களுக்கான காரணத்தையும் உலகத்துக்குப் புரிய வைத்தது!

தான் பார்க்கும், தனக்கு முன்னால் நகரும் வஸ்துவை தாய் என்று நினைத்து பின்தொடரும் வாத்துகளின் வழக்கத்திற்கும், மனிதர்களின் மிகப் பரவலான பல வக்கரங்களுக்கும் ஒரு நேரடி தொடர்பு உண்டு தெரியுமா?

வாத்துக்கும் வக்கரத்திற்கு ‘வ’னாவை தவிர வேறென்ன நேரடி தொடர்பு என்றுதானே யோசிக்கிறீர்கள்!

வாத்துகளின் சின்ன மூளையில் ‘நகரும் முதல் வஸ்து = தாய்’, என்பதோடு அந்த முதல் பதிவு முடிந்து விடுவதில்லை. தான் தாய் என்று நினைத்த பொருளை பின்தொடர்ந்தே அது பெரிதாகும். இந்த வாத்துகள், வளர்ந்து பருவமடைந்ததும் தாய் என்று நினைத்த அதே வஸ்துவுடன் புணரவும் முயல்கின்றன. இப்படிக் கான்ராட் லாரன்ஸை சுற்றி எக்கச்சக்க வாத்துகள் க்யூவில் நின்றபோதுதான் மனிதருக்கு ஒரு முக்கியமான மேட்டரே புரிந்தது!

இந்த வாத்துகள் பிறக்கும்போது ஒரு வெற்றுப் பேப்பர் மாதிரி மூளையுடன்தான் பிறக்கின்றன. அந்த வெற்றுத் தாளில் வாழ்வியல் விதிகளையும், உறவு முறைகளையும் பதிவு செய்வது அந்த வாத்துகளின் தாயின் கைங்கரியம். நிஜ வாத்து தாயோடு வாழ்ந்தால், ‘ஓ! இந்த மாதிரி ஒரு ஜீவராசியோடுதான் பழகணும். இப்படிதான் பழக்க வழக்கங்களைக் கற்றுக்கொள்ளணும். இப்படிப் பட்டதோடுதான் புணரணும்’ என்று குட்டிகள் புரிந்து கொள்ளும். துரதிர்ஷ்டவசமாக வாத்தை தவிர வேறு ஏதோ ஒரு ஜீவனை தாய் என்று நினைத்து குட்டிகள் வளர்ந்தால் அவற்றின் தலையெழுத்தே தடம்புரண்டு போய்விடும்!

அதெல்லாம் வாத்துகளோட விதி! அஞ்சறிவு மட்டும் இருந்தா இந்தக் கதிதான்! ஆனால், மனிதர்களுக்கு இந்த நிலை வரவே வராது. பிகாஸ், நமக்குதான் ஆறு அறிவாச்சே! என்று நீங்கள் மட்டுமல்ல சமீபத்திய சில காலம் வரை எல்லா விஞ்ஞானிகளுமே மனிதன்னா ‘ஸ்பெஷல்’ என்றுதான் மார் தட்டிக் கொண்டிருந்தார்கள்.

இந்த மேலான நம்பிக்கையில் மண் அள்ளிபோடுவது மாதிரி ஒரு சம்பவம் நடந்தது. வட இந்தியாவில் மிட்னாபூர் என்ற இடத்தில் இறை ஊழியம் செய்துகொண்டிருந்தார் ஒரு பாதிரியார். அந்தப் பாதிரியாரிடம் ‘ராத்திரியில வந்து எங்க கோழிய ஏதோ ஒன்னு அடிச்சிட்டு போயிடுது!’ என்று கிராமத்துக்காரர்கள் காட்டு விலங்குகளைப் பற்றி புகார் கொடுத்தனர்.

தீப்பந்தம் ஏந்தி பாதிரியார் விலங்குகளின் இம்ஸையை ஒரு கை பார்க்க புறப்பட்டார். காவலுக்காகப் போய் நின்று பார்த்தால், நான்கு காலில் நடந்து வந்து கோழியை அபேஸ் பண்ணியது ஒரு மனிதன்!

மகா ஆச்சரியமாகிப் போன பாதிரியார் அந்த நாலு கால் ஆசாமியை பின்தொடர்ந்து போய் அவன் வசித்த எறும்புப் புற்றை இடித்து, அவனைப் பிடித்துவர முயன்றார். அந்தப் புற்றுக்குள் இன்னும் இரண்டு மனிதக் குழந்தைகள் இருந்தனர்! இந்த மூன்று மனிதர்களையும்

ஏதோ ஓர் ஓநாய் புற்றுக்குள் வைத்து வளர்த்து வந்திருக்கிறது.

ஓநாயிடமிருந்து இந்த மனிதர்களை மீட்ட பாதிரியார் தன் இருப்பிடத்துக்கு அவர்களைக் கொண்டு போனார். பிறவியில் மனிதர்கள் என்றால் அவர்களுக்குள் மனித குணம் இயல்பாகவே அமைந்திருக்குமே! ஓநாய்த் தனத்தை ஒழித்து மனித குணத்தை வெளியே கொண்டு வரலாம் என்று பாதிரியாரும் முயற்சி செய்து பார்த்தார். 'ஊஹூம்... நாலு காலில்தான் நடப்போம், ராத்திரியில் விழித்திருந்து வேட்டையாடுவோம், நக்கித்தான் ருசிப்போம், கண்ட இடத்தில் இயற்கைக் கடன் முடிப்போம்' என்று அந்த ஓநாய் மனிதர்கள் கொஞ்சமும் மாறாமல் தங்கள் பழைய பழக்க வழக்கங்களைப் பின்பற்றினர். மனிதர்களுக்கே உரிய பேச்சு கைகளை ஆககப்பூர்வமாகப் பயன்படுத்தும் திறன், காலையில் விழித்து மாலையில் உறங்கும் பழக்கம் என்று எதையுமே அந்த ஓநாய் மனிதர்களால் கற்றுக்கொள்ளவே முடியவில்லை.



யூ நோ ஒய்?

பிகாஸ், மனித இயல்பு என்று நாம் சர்வ சாதாரணமாக நினைக்கும் ஒவ்வொன்றும் பிறரிடமிருந்து கற்றுக்கொள்ளும் பழக்கமுறைதான். வாத்துகளில் மட்டுமல்ல’ மனிதர்களிலும் மனம் என்பது ஒரு வெள்ளைத் தாள் போலத்தான். இந்த வெற்று காகிதத்தில் ‘இதை இதை’, ‘இப்படி இப்படி’, ‘இந்த இந்த’ நேரத்தில செய்யணும் என்று சொல்லித் தருவது வெளி உலகம்தான். இப்படி வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சம் போலவே காமமும் கற்றுத் தெரிந்துகொள்ளும் ஒரு பழக்கம் மட்டுமே!

காமமும் கற்றுத் தெரிந்துகொள்ளும் பழக்கம்தான் என்றால் அந்தப் பாடத்தின் முதல் ஆசிரியர் யார்? வேறு யார், எல்லாவற்றையுமே கற்று தரும் தாய்தான் அதற்கும் முதல் ஆசிரியை!

என்னது! அம்மாவாவது, காமத்தையாவது, கற்றுத் தருவதாவது! என்று ஆச்சரியமாக இருக்கிறதா! இதற்கே ஆச்சரியப்பட்டால் எப்படி... இன்னும் பல ஆச்சரியங்கள் இருக்கிறதே!

# 39

## தாயை மணந்த தனையன்!



‘எந்த ஊரிலாவது பெற்ற தாயே தன் பிள்ளைக்குக் காமத்தைப் பற்றி சொல்லித் தருவாளா? என்ன அசிங்கம் இது!’ என்று ஆச்சரியப்பட்டிருந்தால்... பொறுங்கள், உங்களுக்கு நிறைய விளக்கங்கள் காத்திருக்கின்றன.

விளக்கம் நம்பர் ஒன்றின் பெயர் சிக்மண்ட ஃபிராய்டு. இவர் வியன்னாவைச் சேர்ந்த மிகப் பிரபலமான உளநலவியல் மேதை. உளவியலைப் பற்றி இன்று தெரிந்திருக்கும் பல தகவல்களை முதன்முதலில் உலகிற்கு எடுத்துச் சொல்லியவரே ஃபிராய்டுதான்.

கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்கு முன் பாலியல், கலவுறவு மாதிரியான சமாச்சாரங்களைப் பற்றி வெளியே பேசவே எல்லோரும் வெட்கப்பட்ட காலத்தில் ‘சைக்கோ செக்ஸுவல் டெவலப்மென்ட்’ என்ற மனக் காம முதிர்ச்சியைப் பற்றி மிகத் தெளிவான விளக்கங்களை முன்வைத்தார் ஃபிராயடு. இப்படி அவர் முன்வைத்த விளக்கங்களில் ‘எடிபஸ் காம்ப்ளெக்ஸ்’, ‘இலெக்ட்ரா காம்ப்ளெக்ஸ்’ என்ற இரண்டு சமாச்சாரங்கள் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்து அதிர்ச்சி, அவநம்பிக்கை, விவாதம்... போன்ற பல ரியாக்ஷன்களைத் தூண்டியது.



எடிபஸ் என்பவன் கிரேக்க இதிகாசமான ‘எடிபஸ் ரெக்ஸ்’ என்ற கதையில் வரும் கதாநாயகன். லாயஸ் என்ற அரசனுக்கும் அவனது பட்டமகிஷி ஜகோஸ்டாவிற்கும் பிறந்தவன். இவன் பிறந்ததுமே ‘இந்தக் குழந்தை தன் தந்தையைக் கொன்றுவிட்டு தாயை மணந்துகொள்வான்’ என்று ஆரூடம் சொல்லப்பட’ டென்ஷனாகிப் போன லாயஸ், குழந்தையைக் காலில் குத்தி காட்டில் விட்டுவிடும்படி வேலையாளை ஏவினான்.


வேலையாளோ, ‘குழந்தை’ என்று தயங்கி, காட்டில் இருந்த ஆடு மேய்ப்பவனிடம் குழந்தையைக் கொடுத்துவிட்டான். ஆடு மேய்ப்பவனோ, கொரிந்த் நாட்டு ராஜா பாலிபஸிடம் குழந்தையைக் கொடுத்துவிட, குழந்தையின் வீங்கிப்போன காலைப் பார்த்து அவனுக்கு எடி (வீக்கம்), பஸ்(கால்) என்று பெயரிட்டு இளவரசனாக வளர்த்து வந்தான்.

பாலிபஸ்தான் தன் தந்தை என்றே நினைத்து வளர்ந்த எடிபஸ் ஒரு சந்தர்ப்பத்தில் குறிகேட்கப் போகும்போது, ‘அப்பாவைக் கொன்று அம்மாவை மணப்பாய்!’ என்ற குறியைக் கேட்டு, ‘அய்யய்யோ! இப்படி நடந்துவிடக் கூடாதே!’ என்று அஞ்சி, ஊரை விட்டு வெளியேறினான்.

போகிற வழியில் ஒரு குறுகலான ஒற்றையடிப் பாதையில் 'யார் முதலில் போகலாம்?' என்ற தகராறில், எதிரில் வந்து வம்பு பண்ணிய ஆசாமியைப் பிடித்துத் தள்ளிவிட்டுப் போனான் எடிபஸ். அந்த ஆசாமி கீழே விழுந்த வேகத்தில் மரணம் அடைந்தார். அவர்தான் அவனின் உண்மையான தந்தை லாயஸ் என்பது எடிபஸுக்கு அப்போது தெரியாது.

பிறகு அவன் தெப்ஸ் நாட்டுக்குப் போனான். அங்கே 'ஸ்பிங்ஸ்' என்ற ராட்சஸ ஊர் மக்களைச் சித்திரவதை செய்து கொண்டிருந்தாள். 'ஸ்பிங்ஸை' ஒழிப்பவனுக்கே ராஜ்ஜியம்' என்று அறிவிக்கப்பட்டது. எடிபஸ் தன் வாதத் திறமையால் 'ஸ்பிங்ஸை' ஜெயித்துவிட, தெப்ஸ் நாடும் அதன் பட்டமகிஷி ஜகோஸ்டாவும் அவனுக்கே சொந்தம் என்றானது. இப்படியாகத் தன் தாயுடனே குடும்பம் நடத்தி, அன்டிகோன் என்ற பெண் குழந்தையும் பிறந்தது. அதன்பின் எடிபஸ் ஜகோஸ்டா வாழ்வில் நடந்த திருப்பங்கள் என்ன என்பது சுவாரஸ்யமான தனிக்கதை.

ஆனால், விஷயம் என்னவெனில், இப்படி எடிபஸ் தன் தாயின் மீதே கொண்ட இந்தக் காதலைப் போலத்தான் எல்லா ஆண குழந்தைகளும் ஒன்றிலிருந்து ஆறு வயது வரை தன் தாயையே நேசிக்கிறார்கள் என்றார் ஃபிராய்டு. இந்த நேசத்திற்கு அவர் வைத்த பெயர்தான் 'எடிபஸ் காம்ப்ளெக்ஸ்.'



ஃ பிராய்டு

ஆண் குழந்தைகள் அம்மாவை 'என்னவள்' என்று நேசிப்பது போலவே பெண் குழந்தைகள் அப்பாவை 'என்னவன்' என்று நேசிக்கிறார்கள். அதை 'இலெக்ட்ரா காம்ப்ளெக்ஸ்' என்றார் ஃபிராய்டு. இப்படிப் பெற்றோரை பிள்ளைகள் காதலிப்பதாகச் சொன்னது

உலகையே உலுக்கியது. .ஃபிராயடுக்கு எக்கச்சக்க கெட்ட பெயர் வந்தது. ஆனால், ஃபிராயடு சொன்னது சரிதான் என்று நிரூபணபிக்கும் வகையில் இன்னொருவரும் விளக்கம் அளித்தார்.

அவர்தான் ஹரி ஹார்லோ, குரங்குகளை வைத்து விதம்விதமாக ஆராய்ச்சி செய்து வந்த விஞ்ஞானி. அப்படி ஓர் ஆராய்ச்சியில், தாயின் வாசனையே இல்லாமல் குட்டி குரங்குகளைத் தனித்து வளர்த்துப் பார்த்தார்.

இப்படித் தனியாகவே வளர்க்கப்பட்ட இந்தக் குட்டிகள் பெரிதானதும், அவற்றுக்கு ஏற்ற துணையோடு சேர்த்து வைத்தார் ஹார்லோ. பருவ வயதின் உச்சத்தில் இருந்த தனி வளர்ப்புக் குரங்குகளால் எதிர்பாலினத்தோடு இனமே சேர முடியவில்லை. எப்படி இனம் சேருவது என்ற அடிப்படையே அந்தக் குரங்குகளுக்குத் தெரியவில்லை.

யூ நோ வை?

# 40

## தாயின் திருப்பணி



"எல்லா ஆண் குழந்தைகளுக்கும் அவர்களது அம்மாதான் முதல் காதலி. விவரம் தெரிய ஆரம்பித்ததுமே ஆண் பிள்ளைகள் அப்பாவிடம், 'அம்மா பக்கத்துல நீ வராதே' என்றுதான் கட்டளை இடுகிறார்கள். 'அம்மா எனக்கு மட்டும்தான் சொந்தம்' என்று அப்பா அம்மா இருவருக்கும் இடையே ஆண் குழந்தைகள் புகுந்து அப்பாவை விலக்குகிறார்கள். ஐந்தாறு வயதைத் தாண்டியதும், 'என் அம்மா, எனக்கு மட்டும்!' என்ற எடிபஸ் காம்ப்ளெக்ஸ் தணிந்து, 'சரி, இவள் அப்பாவுக்குச் சொந்தமானவள். அவள் அவருடனே இருக்கட்டும். நான் வளர்ந்து அப்பா மாதிரி பெரியவனான பிறகு அம்மா மாதிரியே ஒருத்தியைக் கட்டிக்கிட்டு எனக்கே எனக்குனு வைச்சிக்குவேன்!' என்று ஆண் குழந்தைகள் புதுத் தெளிவைப் பெறுகிறார்கள்" என்ற ரீதியில் சிக்மண்ட் ஃபிராய்டு விளக்கம் அளித்தார்.

ஹரி ஹர்லோ, குரங்குகளை வைத்து நடத்திய ஆராய்ச்சிகளை ஆதாரமாக வைத்து, "தாயிடமிருந்து பிரித்து வளர்க்கப்பட்ட ஆண் குரங்குகளுக்கு இனம் சேரத் தெரியவில்லை!" என்று அறிவித்தார். ஆனால், அம்மாவின் அரவணைப்பில் வளர்ந்த குரங்குகள் மட்டும் மடமடவென இனவிருத்தி செய்து வந்தன. ஏன் இந்த வித்தியாசம்? அம்மா குரங்கு ஒன்றும் பாப்பா குரங்குக்கு கலவிக் கல்வி பாடம் நடத்துவதில்லையே! பிறகு ஏன், அம்மா வளர்த்தால் இனம் சேரத்

தெரிகிறது? இல்லாவிட்டால் தெரிவதில்லை?

இதற்கு விளக்கம் தருவது போல அமைந்தது மைக்கேல் மீனி என்பவரின் எலிகள் ஆராய்ச்சி. மீனி, எலிகளின் மூளை வளர்ச்சியைப் பற்றி ஆராய்ச்சி செய்து வந்தார். அந்த எலிகளைச் சும்மா வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருக்கும்போதுதான் மீனி ஒரு மிகப்பெரிய விஷயத்தைக் கண்டுபிடித்தார்.

குட்டிப் போட்டதுமே அம்மா எலி, குட்டிகளை நாவால் தடவி விடுகிறது. இந்தத் தடவல்கள் ஆண் எலிகளுக்குக் கொஞ்சம் அதிகம், பெண் எலிகளுக்குக் கொஞ்சம் குறைவு என்ற ரீதியில் அமைந்ததைப் பார்த்த மீனி, 'ஏதேது, எலிகளில் கூட இவ்வளவு ஓரவஞ்சனையா' என்று இந்தச் செயலை மேலும் தீவிரமாகக் கண்காணித்தபோது அதைக் கவனித்தார். தாயால் அதிகம் தடவப்பட்ட ஆண் எலிகள் பருவமடைந்ததும் எந்தப் பிரச்னையுமே இன்றி இனம் சேர்ந்தன. தாயின் தடவலே இன்றி அகற்றி வளர்க்கப்பட்ட ஆண் எலிகளுக்கு இனம் சேரத் தெரியவில்லை!



தடவலுக்கும், இனம் சேருவதற்கும் என்ன சம்பந்தம் என்று மீனி, எலிகளின் மூளைகளைப் பரிசோதனை செய்து பார்த்தார். தடவப்பட்ட எலிகளின் மூளையில் ரசாயனம் மாறியிருந்தது தெரிய வந்த்து. ஆக, அம்மா ஆண் குட்டியைத் தடவித் தருவது வெறும் ஓரவஞ்சனைக்காகவோ, பொழுதுபோக்கிற்காகவோ இல்லை.

குட்டியின் மூளை மையத்தைத் தூண்டுவதற்காக என்பது புலப் பட்டது.

இந்த மூளை மையங்கள் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் சரியானபடி தூண்டப்பட வேண்டும். அப்போதுதான் வளர்ந்து பெரிதானதும் இயல்பு வாழ்க்கையை மேற்கொள்ள முடியும். அந்தக் கிரிட்டிக்கல் பீரியடைத் தாண்டிவிட்ட பிறகு யார் என்ன தூண்டினாலும் மூளையில் பதியாது!

இதெல்லாம் எலிகளில்தானே! என்று நீங்கள் இளக்காரம் செய்வதற்கு முன், இதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள். மரபணுக்களின் செயல்பாடு எல்லாப் பாலூட்டிகளுக்கும் பொதுதான். எலியும் பாலூட்டிதான் என்பதால் அதற்காப் பொருந்தும் விதிகள் சில மனிதர்களுக்கும் பொருந்தும். அப்படிப் பார்த்தால், ஃப்ராய்டு ‘அம்மாதான் ஆணின் முதல் காதலி’ என்று சொன்னதும் ஹார்லோ, ‘அம்மாவின் அரவணைப்பு இல்லாமல் இயல்பு கலவுறவு நிகழாது’ என்றதும், மீனி சொன்ன தாய் மகன் உறவினால் ஏற்படும் மூளை மாற்றமும் ஒரே விஷயத்தைத்தான் குறிக்கின்றன.

மனிதர்களிலும் ஆண் குழந்தையின் மூளையில் ‘எதிர்பாலினம் என்றால் என்னைப் போலத்தான் இருக்கும்’ என்ற அடையாளத்தையும், எதிர்பாலினத்தைக் கண்டால் எதிர்வினையாற்றல் புரியத் தேவையான நரம்பு இணைப்புக்களையும் ஏற்படுத்தித் தருவதே தாய் என்பவள்தான்!

குழந்தையின் இந்தக் கிரிட்டிக்கல் பீரியடின்போது தாய் அருகில் இருந்து இந்த அடையாளத்தையும், மூளை இணைப்பையும் ஏற்படுத்த உதவவில்லை என்றால் அதன் மூளை தடம்மாறிப் போய்விடும். மனுஷி இல்லாத பிற வஸ்துக்களுடன் உறவு மேற்கொள்ளும் வக்கிரப் புத்திக்கு ஆளாகும் அபாயம் உள்ளது!

இன்று மனித ஆண்களில் மிகப் பரவலாகக் காணப்படும் பல வக்கிரங்களுக்குக் காரணமே, இந்தக் கிரிட்டிக்கல் பீரியடின்போது ஏற்பட்ட தவறான பதிவுகள்தான் (Malimprinting) என்று சமீபத்திய ஆராய்ச்சிகள் தெரிவிக்கின்றன. ஆக, ஆண் குழந்தைகளின் ஆரோக்கியமான Psycho - sexual வளர்ச்சிக்கு முக்கியமான அஸ்திவாரமே அம்மா என்ற உறவுதான்.

அப்படினா பெண் குழந்தைகளுக்கு அம்மாவின் அவசியமே இல்லையா? என்றால் இருக்கிறது. ஆனால், அதனைவிட பல மடங்கு அவசியம் ஆண் குழந்தைகளுக்குத்தான் இருக்கிறது. தட் இஸ் வை தே ஸே The hand that rocks the cradle is the hand that rules the world தொட்டிலை ஆட்டும் கைதான் உலகத்தையே ஆள்கிறதாம்! இது

பாஸிடிவ் பக்கம். ஆனால் இதன் மறுபக்கம்?

தாய் ஆண் சேய் உறவு சரியாக அமையாவிட்டால், கிரிட்டிக்கல் பீரியடின்போது தாய் அருகில் இருக்காவிட்டால் Malimprinting என்ற பிழையான பதிவுகள் நேரும் வாய்ப்புகள் அதிகம்.

அய்யய்யோ! அப்படின்னா ஆண்களின் ஏடாகூட வக்கிரங்கள் எல்லாவற்றுக்கும் ஆதிமுதல் காரணமே அவர்களது அம்மாதானா? என்று உடனே தாய்க்குலத்தின் தலையிலே எல்லாப் பழியையும் போடாதீர்கள்! தாயைத் தவிரவும் ஆணின் மூளையைப் பாதிப்பவர்கள் நிறையப் பேர் இருக்கிறார்கள்!

அவர்கள் யார்? யார்?

# 41

## மனித ஞாபகம்



‘எதிர்பாலினம் என்றால் என்னை மாதிரிதான் இருக்கும்!’ என்ற முதல் அடையாளத்தை ஆண்களுக்கு அறிமுகப்படுத்துவதே அவர்களின் அம்மாதான்.

பாலின அடையாளம் ஏற்படும் அந்த முக்கியமான கால கட்டத்தில் (8 மாதம் முதல் மூன்று வயது வரை) ஆண் குழந்தைகள் அம்மா, அக்கா, செவிலி, பாட்டி என்று பெண்களின் அரவணைப்பிலே வளர்ந்தால்தான், பெரியவன் ஆனதும் மனிதப் பெண்களோடு மட்டும் ஆரோக்கியமான உறவுகொள்ளும் பக்குவத்தைப் பெறுகிறார்கள்.

ஏதாவது துரதிர்ஷ்ட காரணத்தினால் பெண்ணின் அரவணைப்பு இல்லாமல் ஓர் ஆண் குழந்தை வளர்ந்தால், மனிதப் பெண்ணின் அடையாளத்தைக் கொண்ட பிற அஃறிணை வஸ்துக்களின் மீது நாட்டம் கொள்ள ஆரம்பித்து விடுகிறான்.

உதாரணத்துக்கு, மனிதப் பெண்ணின் ஒரு முக்கியமான அடையாளம் அவளுடைய ரோமம் குறைவான பளபள தோல்தான். ஆனால், இந்த மாதிரியான பளபள தோல் மனிதப் பெண்ணுக்கு மட்டும் இருப்பது இல்லை. டால்ஃபினுக்கும் இதே மாதிரியான ரோமமற்ற பளபள தோல்தானே!



1991-ம் ஆண்டு நடுக்கடலில் நீச்சல் அடித்த ஆசாமி ஒருவர் கைது செய்யப்பட்டார்! ஏன் தெரியுமா? அவர் கடலில் தேமே என்று நீச்சல் அடித்துக் கொண்டிருந்த ஒரு டால்ஃபினோடு சில்மிஷம் செய்து கொண்டிருந்தார் என்பதால்! போயும்போயும் ஒரு டால்ஃபினோடு சில்மிஷமா? சை! என்று பலர் முகம் சுளிக்கலாம்.

ஆனால், 'மனிதப் பெண் என்றால் இவள்தான்! இவளோடு மட்டும் நீ உறவு கொள்' என்ற அறிவைப் பெறாத பிழையினால், அந்த மனிதர் வெறும் பளபள தோல் = புணர்ச்சி என்ற மாறுபட்ட முடிவிற்கு வர, விளைவு வக்கிரம்!

'அவன் டால்ஃபினோடு சில்மிஷம் பண்ணினா என்ன? அவன் தனி மனிதன், அவன் விரும்பும் வஸ்துவோடு, ஜந்துவோடு உறவுகொள்ள அவனுக்கு எல்லா உரிமையும் உண்டு' என்று மனித உரிமைக் காப்பாளர்கள் ஒரு பக்கம் வாதிட்டார்கள். 'அந்த டால்ஃபினுக்கு சம்மதமானு யாராவது கேட்டீங்களா?' என்று மிருக உரிமைக் காப்பாளர்கள் மறுபக்கம் வாதிட்டார்கள். ஆனால், மரபணுக்கள் கப்சிப் என்று இதுமாதிரி வேற்றின, அஃறிணைச் சேர்க்கைகளைத் தவிர்க்கும் நடவடிக்கையில் மும்முரமாக இருந்தன.

மனித ஆண் மனிதப் பெண்ணோடு மட்டும் சேர்ந்தால்தான் மனித மரபணுக்கள் பல்கிப் பெருக முடியும். வேற்று இனத்தோடு சேர்ந்தால் வம்சம் பெருக வாய்ப்பே இல்லை! ஆக, மரபணுக்கள், 'டேய் நீ

மனுஷன்டா! மனுஷியோட மட்டும் சேர்ந்து தொலை!' என்கிற மெசேஜை பல வழிகளில் நினைவூட்டிக் கொண்டே இருக்கின்றன.

வழி நம்பர் ஒன்:

Collective unconscious என்று கேள்விப் பட்டிருப்பீர்கள். ஸ்விட்சர்லாந்தைச் சேர்ந்த 'கார்ல் கஸ்டேவ்யூஸ்' என்கிற உளநலவியல் மேதைதான் இதை முதன்முதலில் உணர்ந்தார். என்னதான் மனிதர்கள் மொழி, மதம், இனம், இருப்பிடம், பழக்க வழக்கம் என்று பலப்பல விஷயங்களில் வேறுபட்டு இருந்தாலும், இந்த மேலோட்டமான வித்தியாசங்களுக்கு அடியில் போய்ப் பார்த்தால், ஆழ்மனதில் எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியான குணாதிசயமும், நம்பிக்கையும், நடவடிக்கையும் கொண்டவர்களே. மனித மனதில் ஆதிமனித அறிவின் ஒரு விழுது இழையோடிக் கொண்டேதான் இருக்கிறது. ராக்கெட்டில் வெளிக் கிரகம் போகிற விஞ்ஞானிகூட பாக்கெட்டில் தன் காதலியின் படத்தைத்தானே வைத்திருக்கிறான். மேலோட்டமாகப் பார்த்தால், வெவ்வேறு மதங்களாகத் தெரிந்தாலும், மனிதர்கள் பின்பற்றும் எல்லா மதங்களும் பிரளயம், சொர்க்கம், நரகம், தண்டனை, மன்னிப்பு, தர்மம் மாதிரியான விஷயங்களைப் பற்றித்தானே பேசுகின்றன.

அவ்வளவு ஏன், தாயின் அரவணைப்பு இன்றி வளர்ந்து ஆளாகி, மனிதப் பெண்ணை விட்டுவிட்டு பாண்டா கரடியோடு குடும்பம் நடத்தும் ஆணுக்கும் அடிமனதில் தெரியுமே, 'எங்கயோ உதைக்குதே, இது சரியாகப் படலை!' என்று. ஆக, மரபணுக்கள் மனிதர்களைச் சரியான தடத்தில் கொண்டு செல்லப் பயன்படுத்தும் முதல் வழி இந்தப் பொது ஆழ்மனமும், அதில் பதிந்துள்ள அடிப்படை மனித குணங்களும்தான்!

ஒருவேளை இந்தப் பொது ஆழ்மனம் மனித குணத்தைத் தூண்டத் தவறினாலும், அடுத்த கட்ட நடவடிக்கையாக மரபணுக்கள் உபயோகித்த ஆயுதம் 'சமுதாயம்.'

வழி நம்பர் டு:

'சில மனிதர்கள் தங்கள் பொதுவான சுய நலத்திற்காகச் சேர்ந்து வாழ்வதுதான் சமுதாயம் என்ற கருத்தை மாற்றி, மனிதர்களுக்கு மனித நடத்தையைச் சொல்லித் தருவதே இந்தச் சமுதாயம் என்கிற அமைப்புதான்' என்று கண்டுபிடித்தார் ஜெர்மனியைச் சேர்ந்த விஞ்ஞானி எரிக் எரிக்ஸன்.

தமிழ் சினிமா எட்டு எட்டா மனுஷ வாழ்க்கையைப் பிரிச்சிக்கோ

என்று பாடுவதற்கு அரை நூற்றாண்டுக்கு முன்னமே எட்டு எட்டாக மனித வாழ்வைப் பிரித்து விளக்கி என்னதான் அம்மா, அப்பா, தாத்தா, பாட்டி என்று அரவணைப்பில் வளர்ந்தாலும், அநேக விஷயங்களைக் குழந்தைகள் வெளி உலகத்திடம் இருந்துதான் கற்றுக்கொள்கிறார்கள்; அம்மை அப்பனைவிட சமுதாயம்தான் ஒரு குழந்தையின் வளர்ச்சிக்கு அதிமுக்கியம் என்று உணர்த்தியவர் இந்த எரிக்ஸன்.



உதாரணத்துக்கு, புடவைக் கட்டிய அம்மா, கண்டாங்கி உடுத்திய பாட்டி இவர்களையே பார்த்து வளர்ந்த பையன், சினிமா

கதாநாயகியைப் பார்த்ததும், ‘எனக்கு ஜீன்ஸ், டீ ஷர்ட் போட்ட கேர்ள் ஃபிரெண்டதான் வேணும்!’ என்று நினைக்க ஆரம்பித்து விடுகிறான்! ஏனெனில், குடும்பத்தின் தாக்கத்தை விடவும் சமுதாயத்தின் தாக்கம் அத்தனை வலிமையானது.

எத்தனை வலிமையானது...?

# 42

## உலகின் முதல் கடவுள்!



சமுதாயத்துக்கும், செக்ஸுக்கும் என்ன சம்பந்தம்? என்று யோசிக்கிறீர்களா? சமுதாயம், செக்ஸ், மரபணுக்கள் இந்த மூன்றும் சாதாரணமாகப் பார்த்தால் கொஞ்சமும் சம்பந்தமே இல்லாத தனித்தனி சமாச்சாரங்கள் மாதிரி தெரிந்தாலும் இந்த மூன்றுக்குள்ளும் எக்கச்சக்க தொடர்பு உண்டு தெரியுமா?

அதெப்படி? மரபணு எவ்வளவு குட்டியூண்டு? சமுதாயம் எவ்வளவு பெருசு? செக்ஸ் எவ்வளவு மென்மையானது? இந்த மூன்றுக்கும் அப்படி என்ன சம்பந்தம் இருக்க முடியும் என்று நீங்கள் வியக்கிறீர்களா? வெயிட் வெயிட்! அதற்குள் வியக்க ஆரம்பித்து விடாதீர்கள். உண்மையான வியத்தகு விஷயங்கள் இனிமேல்தான் இருக்கின்றன!

செக்ஸ் என்பது மலரினும் மெல்லிய மேட்டராக ஆஹா, ஓஹோ என்று பெரிதாகப் புகழப்பட்டாலும், உண்மையில் காமம் என்பது மரபணுக்கள் தம்மைத் தாமே அபிவிருத்தி செய்து கொள்வதற்காகப் பயன்படுத்தும் ஓர் உத்திதான்.

கலவி சுகம் என்பது வம்சவிருத்தி நடவடிக்கையில் ஈடுபடும் மனிதர்களுக்கு மரபணு தரும் ஓர் ஊக்க டானிக். ஆனால், இன்னொரு மேட்டர் ஒன்று உண்டு. அதுதான் பரிணாம சமன்பாடு யுக்தி (Evolutionary Stable Strategy).

அதுபற்றி சொல்வதற்கு முன் மனித மரபணுக்களைப் பரப்பிவிட அவை மேற்கொள்ளும் வழிகளைப் பற்றி சொல்லியாக வேண்டும்! என்னதான் ‘ஒருவனுக்கு ஒருத்தி என்பதே உயரிய மனிதப் பண்பு’ என்று எல்லா தரப்பு மனிதர்களும் இன்று வாய் ஓயாமல் பேசினாலும், இந்த ஒருவனுக்கு ஒருத்தி என்கிற சமன்பாடுகள் ஆரம்ப மனித கலாசாரத்தில் இடம் பெறாத சமாச்சாரம்.

அது கல் தோன்றி, மண் தோன்றாக் காலத்துக்கு முன் தோன்றிய இனம் ஆகட்டும், ‘கலகாரி’ பாலைவனத்தில் இன்றும் ஆதிவாசி நிலையில் வாழும் ‘ஸான்’ பழங்குடி இனத்தவர் ஆகட்டும் எல்லா மனிதர்களுமே ஆரம்ப காலத்தில் ஒருத்திக்குப் பல ஆண்கள் என்கிற Polyandry வகை வாழ்க்கை முறையைத்தான் பின்பற்றினார்கள். என்னது ஒருத்திக்குப் பல ஆண்களா? மை காட்! வாட் ஹாப்பெண்ட் டூ தி கிரேட் கற்பு? என்றுதானே வியக்கிறீர்கள்?

கற்பு என்பது இப்போதுதான் சமீபத்தில் மூவாயிரம் ஆண்டுகளாக மட்டுமே பேசப்பட்டு வருகிறது. ஆனால், இந்த ‘பாலியாண்டரி’ என்பது மிகப் பழமையான ஒரு வாழ்க்கை முறை. கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனிதர்கள் அனைவரும் ஒரு பெண் + பல ஆண்கள் என்கிற யுக்தியைத்தான் பின்பற்றி வந்தனர்.

இதற்கு நிறைய காரணங்கள் இருந்தன. அந்தக் கால காட்டு வாழ்வின் கஷ்ட ஜீவனத்தில் பிரசவம் என்பது ரொம்பவே சிக்கலான ஒரு விஷயமாக இருந்தது. பெண்களின் மரண விகிதம் மிக அதிகமாக இருந்தது. பெண்களின் எண்ணிக்கைக் குறைவாகவும், ஆண்களின் எண்ணிக்கை அதிகமாகவும் இருந்தது.

பெண் என்பவள் இல்லாமல் பிள்ளை பாக்கியமே ஏற்படாது என்று உணர்ந்ததால், அவர்கள் எல்லோரும் ஏற்கனவே குறைந்த எண்ணிக்கையில் இருந்த பெண்களைப் பிரத்தியேக பிரஜைகளாக நடத்தினர்.

அதுவும் இல்லாமல் அந்தக் காலத்தின் அறியாமை நிறைந்த நாட்களில் ‘குழந்தை எப்படித் திடீர்னு பிறக்குது?’ என்பதே யாருக்கும் புரியவில்லை. அதுவும் இந்தக் குழந்தைகள் ஏனோ வினோதமாகப் பெண்களுக்கு மட்டுமே பிறந்தன. எப்பாடு பட்டும் எந்த ஆணாலும் ஒரு புழு பூச்சியைக் கூட பிரசவிக்கவே முடியவில்லை.

ஆனால், எல்லாப் பெண்களாலும் முடிகிறதே, இந்தப் பெண் இனத்திடம் மட்டும் ஏதோ ஒரு மாய சக்தி இருக்கிறது! அவள்

இல்லாவிட்டால் நோ குழந்தை குட்டி, நோ வம்சம், நோ வாழ்க்கைக்கு அர்த்தம். அவளுள் இருந்த ஏதோ ஒரு மர்ம சக்தி உயிரை உருவாக்க உதவியது. உயிரையே உருவாக்க வல்லவள் கடவுளின் அவதாரம்தானே...? இந்த லாஜிக்கில் மூழ்கிய அந்தக் காலத்து ஆண்கள் பெண்ணை பெரும் சக்தியாக வணங்க ஆரம்பித்தனர்.





உலகெங்கும் உள்ள ஆதி பரம்பொருட்களின் உருவச் சிலைகள் எல்லாமே பெண் வடிவமாகத்தான் உள்ளன. மிகப் புராதன சமுதாயங்கள் அனைத்தும் பெண் தெய்வங்களைத்தான் முதன்முதலில் வழிபட்டு வந்துள்ளன. உதாரணத்துக்கு, எகிப்தியர்கள் ‘ஐஸிஸ்’ என்ற பெண் கடவுளையும், சுமேரியர்கள் ‘இனானா’ என்ற பெண்ணையும் தமிழர்கள் ‘கொற்றவை’ என்ற பெண்ணையும்தான் முதன்முதலில் வழிபட்டு வந்தார்கள். அந்தக் காலத்தில் ஆண் தெய்வங்களே இல்லை. எல்லாமே பெண் தெய்வங்கள்தான்!

இப்படிப் பெண் குறைந்த எண்ணிக்கையில், உயர்ந்த ஸ்தானத்தில், மிக மதிப்பான பிரஜையாக நடத்தப்பட்டதால், அந்தக் காலத்தவர் பெண்வழிச் சமூகத்தினராக வாழ்ந்தார்கள். அதாவது தாயின் வீட்டில் மகள் வாழ்வதும், அவளை மணப்பவன் அவளது தாயின் வீட்டிற்குக் குடிபுகுவதும், அம்மாவிடம் இருந்து எல்லா சொத்தும் பெண்களுக்கு மட்டுமே பிரித்து வழங்கப்பட்டும் வாழும் Matriarchal முறை இருந்தது!

இப்படிப் பெண்கள் எல்லோரும் முதன்மைப் பிரஜைகளாக வாழ்ந்த அந்தக் காலத்தில்தான், ஒரு பெண் தனக்குப் பிடித்த பல ஆண்களோடு உறவு கொள்ளும் Polyandry முறை பழக்கத்தில் இருந்ததாம். உதாரணத்துக்கு மகாபாரத குந்தி!

குந்தியின் கதை எப்படி என்றால்...?

# 43

## ஒரு பெண் X பல ஆண்கள்



முன்பு ஒரு காலத்தில் இந்தியாவில் பிரிதை என்ற இளவரசி வாழ்ந்து வந்தாள். அவளை குந்திபோஜன் என்ற அரசனுக்குத் தத்துக் கொடுத்தபடியால், செல்லமாகக் குந்தி என்றும் அழைத்தார்கள். அவள் துர்வாச முனிவருக்கு பக்தி சிரத்தையுடன் பணிவிடை செய்து வந்தாள். அவளது சேவையில் அகமகிழ்ந்துபோன ரிஷியோ, அவளுக்கு ஓர் அற்புதமான வரத்தைத் தர முடிவு செய்தார். 'மகளே, நீ எந்த ஆணை நினைத்து பிள்ளை வரம் வேண்டினாலும், அது அப்படியே நடப்பதாகுக!' என்று வரம் அளித்துவிட்டுப் போனார்.

குட்டிப் பெண் பிரிதைக்கு வரத்தை வைத்து விளையாடும் ஆசை வந்தது. வரத்தை, 'டெஸ்ட் பண்ணிப் பார்க்கலாமே!' என்ற ஆர்வத்தில் சுற்றும் முற்றும் பார்த்தாள். வானத்தில் இருந்த சூரியன் மட்டுமே அந்தக் கணத்தில் அவளுக்கு ஆதர்ஷ ஆண்மகனாகத் தோன்ற, "சே! என்ன தேஜஸ். இவனோட பிள்ளையைப் பெத்தா எப்படி இருக்கும்?' என்று அவள் நினைத்தாள். அடுத்த கணம் சாட்சாத் சூரியதேவனே அவள் எதிரில் தோன்றி ஆவன செய்ய, அடுத்த ஒன்பதாவது மாதத்தில் பிரிதை தாயானாள். அப்புறம்தான், 'திருமணம் ஆகாமல் குழந்தையா!' என்ற பயம் வர, பெற்ற குழந்தையைக் கூடையில் வைத்து ஆற்றில் நீந்தவிட்டாள். அந்தப் பிள்ளை ஒரு தேரோட்டிக்குக் கிடைத்தது. தேரோட்டியின் மனைவி ராதே அவனை ஆசையாக வளர்த்து

ஆளாக்கினாள். அவன்தான் பின்னர் ராதேயா என்கிற கர்ணனாகப் பெரும் புகழை அடைந்த சூரியபுத்திரன்.



அவனின் உண்மையான தாயான பிரிதையோ வளர்ந்து முறையாகத் திருமணம் புரிந்து, குருவம்ச இளவரசன் பாண்டுவின் பத்தினி ஆனாள். பாண்டு சும்மா இல்லாமல் ஒரு ஜோடிப் மான்கள் மீது விளையாட்டாக ஒரு சமயம் அம்பு எறிந்தானாம். பார்த்தால், அவை மான்களே இல்லையாம். கூடுவிட்டுக் கூடுபாய்ந்து கூடி விளையாடிய ரிஷியும், அவன் பத்தினியுமாம். அந்த ரிஷி, ‘என்னையா கொன்றாய்! இனி நீ எவளையாவது ஆசையோடு நெருங்கினால், அப்போதே நீ செத்துப் போகக் கடவது!’ என்று சபித்துவிட, அந்தச் சாபத்தின் காரணத்தால் பாண்டு அவன் பத்தினியை ‘நோ டச்.’

ஆனால், அவன் ராஜ வம்சத்தைச் சேர்ந்தவன் என்பதால் அவனுக்கு ஒரு வாரிசு அவசியம் தேவைப்பட்டது. அதை அனுசரித்தே, பிரிதை தன் ஃப்ளாஷ்பேக்கைச் சொல்லி, தன் பிரத்தியேக வர சக்தியை விவரிக்க, உடனே பாண்டுவும், ‘குட் ஐடியா!’ என்று குஷியானான். அவன் விருப்பத்துக்கு இணங்கி, பிரிதை தன் வர சக்தியை உபயோகித்து குழந்தையைப் பெற்றெடுக்க முற்பட்டாள்.

அப்போது கண்ணில்பட்ட எல்லா ஆண்களோடும் அவள் உறவு கொள்ளவில்லை. சர்வ வல்லமை படைத்த மரபணு வளம் கொண்ட ஆண்களாகத் தேடிப் பிடித்து உறவுகொண்டாள். அப்போதும் ஒரே

ஆணோடு எல்லாப் பிள்ளைகளையும் பெறவில்லை. யமதேவன், வாயுதேவன், இந்திரன் என்று வெவ்வேறு ஆண்களுடன் கூடி, வெவ்வேறு மரபு வளங்களைத் தேர்ந்தெடுத்து யுதிஷ்டிரன், அர்ஜுனன் ஆகிய மூன்று மகன்களைப் பெற்றாள்.

அவள் இவ்வளவு Polyandry புரிந்தபோதும், அவள் கணவனோ, புகுந்த வீடோ, சமூகமோ, அவளை 'ஏன் இப்படிச் செய்யிற?' என்று ஒரு வார்த்தைக் கூட தட்டிக் கேட்கவில்லை. யு நோ வை? பிகாஸ், அந்தக் காலகட்டத்தில் இது ஒரு தப்பாக யாருக்கும் படவில்லை. 'பிள்ளை பிறக்கலையா? விந்து தானம் பெற்றுக்கொள், அல்லது வேறு ஒருவனை உபயோகித்துக் கொள். பட், தி இம்பார்ட்டன்ட் திங் இஸ் எப்படியாவது ஒரு வலிமையான பிள்ளையைப் பெற்றெடு!' என்பதுதான் அந்தக் காலத்து லாஜிக்.

இப்படி மரபணுக்கள் ஒட்டுமொத்த மனித சமுதாயத்தை 'பாலியாண்டரி' என்ற யுக்தியை மேற்கொள்ள வைத்தன. காரணம், அந்தக் காலத்தில் ஜனத்தொகை மிகக் குறைவு. பிரசவத்தில் தாய்மார்கள் இறப்பது மிக சகஜம். குழந்தைகளின் இறப்பு விகிதம் அதிகம். அதனால் அன்றைய தேவை ஆண், பெண்ணின் ஏகபத்தினித்தனம் அல்ல. உயர்தர வீரியம் மிகுந்த பிள்ளைகளைப் பெற்றெடுக்க ஒரு யுக்தி. அதனால், பாலியாண்ட்ரியை மனிதர்கள் பரவலாகப் பயன்படுத்தினார்கள்.

ஆனால், பாலியாண்ட்ரியில் ஒரு பக்கவிளைவும் இருந்தது. பெண்கள் வீரியம் நிறைந்த மரபணுக்களைக் கொண்ட ஆண்களாகப் பார்த்துப் பார்த்துத் தேர்ந்தெடுத்து உறவு கொண்டதால், அடுத்தடுத்த தலைமுறைப் பிள்ளைகள் மகா பலசாலிகளாகப் பிறந்தார்கள். நிறைய குழந்தைகள் கொஞ்சமே நிலப்பரப்பு என்கிற சமன்பாட்டு ஏற்ற இறக்கம் ஏற்பட, நில உரிமைக்காகச் சண்டை போட்டுக் கொள்ளும் தன்மை தலைதூக்க ஆரம்பித்தது.

வலியவன் நிறைய சொத்துக்களைச் சேகரித்து வைப்பதும், வறியவன் அவனுக்குச் சேவகம் புரிந்து வாழ்வதுமாகச் சமுதாய ஏற்ற இறக்கங்கள் உருவாயின. அந்தச் சமயத்தில் ஜனத்தொகை ஒரு பிரச்சனையாக இல்லை. இருக்கும் ஜனங்களின் உரிமைகளைக் கட்டிக் காப்பதே பிரதானமானது. எதிரி நாட்டு அச்சுறுத்தல், இயற்கையின் சீற்றம், எதிர்பாராத உலகியல் மாற்றங்கள் என்று எல்லாவற்றையும் சமாளித்தாக வேண்டிய நிலை உருவானது. பாதுகாப்பு, வாணிகம், வெளிதேசப் பயணம் மாதிரியான வேலைகளை ஆண்களே செய்து

வந்ததால் ஆணின் பங்கு அதிக முக்கியமாக உணரப்பட்டது. அதனால், தாய் வழி சமூக முறைகள் மாறி தந்தை வழி சமூக முறைக்கு எல்லா மனிதர்களும் மாறினார்கள். போர் அடிக்கடி மூண்டதால் வீரம் ஒரு பெரிய வளமாகக் கருதப்பட்டது.



பெண் வழி நாகரீகமாக இருந்த காலத்தில் மனித இறையாண்மை பெண் தெய்வ வழிபாடு, பிரசவ தெய்வ வழிபாடு என்று இருந்தது. ஆனால், தந்தை வழி நாகரீகத்திற்கு மாறியபோது ஆண் தெய்வ வழிபாடாக மாறியது. போர்க் கடவுள்கள், காவல் தெய்வங்கள், ஆக்கல் காத்தல் அழித்தல் கடவுள்கள் என்று ஆண் தெய்வங்கள் சமீபத்திய 5000 வருடங்களில் தோன்றியதற்கான காரணமே தந்தை வழி சமூகம் முறைதான்.

இப்படி ஆணைச் சார்ந்து சமூகம் மாறியதனால், மரபு வளத்தைத் தேடி பிள்ளை பெறும் வழக்கமும் மாறியது. பொருள்வளம் தேடி, பொருள் இருப்பவனுக்கு பெண்கள் பிள்ளையைப் பெற்றிடும் பழக்கத்தை மேற்கொள்ள ஆரம்பித்தார்கள். பொருள் உள்ளவன் ஏற்கனவே குடும்பஸ்தனாக இருந்தாலும் பரவாயில்லை. ஆனால்,

அவன் என் குழந்தைகளைப் பட்டினி போடாமல் இருந்தால் சரி என்று ஒரே ஆணோடு பல பெண்கள் உறவு கொள்ள ஒத்துழைத்தார்கள். தட் வா ஸ் Evolutionary Stable Strategy நம்பர் டு Polgyny ஒரு ஆண், பல பெண்களோடு சேர்ந்து வாழும் பரிணாம சமன்பாட்டு யுத்தி...

# 44

## ஒரு ஆண் X பல பெண்கள்



இந்தச் சமுதாயம் ஏன் இப்படி இருக்கிறது?

ஒரு சமயம் ஒரு பெண் பல ஆண்களுடன் உறவுகொண்டு குழந்தைகள் பெற்றுக்கொள்ளும் பாலியாண்ட்ரி என்கிற வாழ்க்கை முறை பின்பற்றப்பட்டது. அதை எந்தச் சமுதாயமும் தட்டிக் கேட்டதாகத் தெரியவில்லை!

அதன்பிறகு வந்த காலத்தில், இதற்கு நேர்மாறாக, ஓர் ஆண் பல பெண்களுடன் கூடி வாழும் பாலிகைனீ என்கிற முறை பரவ ஆரம்பித்தது. அதையும் எந்தச் சமுதாயமும் தட்டிக் கேட்டதாகத் தெரியவில்லை!

ஒரே சமுதாயத்தில் இப்படி எதிரும் புதிருமான இரண்டு வாழ்க்கை முறைகள் இருந்திருக்கின்றன. இந் இரண்டையுமே ஏன்? எதற்கு? என்று தட்டிக் கேட்காமல் எல்லாவற்றையும் அனுமதிக்கிறதே இந்தச் சமுதாயம் இதற்கு அறிவே இல்லையா என்று யோசிக்கிறீர்களா? கூல் ட்வுன்.

சமுதாயம் என்பது வெறும் மனிதர்கள் சேர்ந்து வாழும் ஓர் அமைப்பு மட்டுமே. மனிதர்கள் மரபணுக்களால் இயக்கப்படும் யந்திரப் படிவங்கள் ஆவர். இந்த மரபணுக்கள் தன்னைக் காப்பாற்றிக் கொள்வதைத் தவிர, வேறு எதைப் பற்றியும் யோசிக்காத வடிகட்டின சுய நலவாதிகள்!



சரி - தப்பு, நியாயம் - அநியாயம் என்று யோசிக்காமல், காலம், நேரம், சூழல், தேவை என்று பலவற்றையும் கணித்து, சந்தர்ப்பத்துக்கு ஏற்றாற்போல மரபணுக்கள் விதிகளை மாற்றிக்கொண்டே போகும். மரபணுக்களின் வெளிப்பாடுதான் மனித குணம். மனித குணத்தின் ஒருங்கிணைப்புதான் சமுதாயம். ஆக, சமுதாயம் என்பதும் மரபணுவின் வெளிப்பாடுதான். எல்லா சமுதாயங்களும் மரபணுவின் இஷ்டப்படிதான் இயங்கி வருகின்றன.

தங்களின் செயல்பாடுகள் மரபணுக்களை வளப்படுத்துவதாக இருந்தால் அந்த நடத்தையை சமுதாயங்கள் நியாயம் என்றன. அதுவே ஒருவரின் செயல்பாடு மரபணுக்களின் வளத்துக்குப் புறம்பானதாக இருந்தால் சமுதாயங்கள் அதை அநியாயம், அதர்மம் என்று சாடி திருத்தப் பார்த்தன.

உதாரணத்துக்கு, மனிதர்களின் இனப்பெருக்க உத்திகளையே எடுத்துக் கொள்வோமே!

எப்போது தரமான மரபணுக்களைத் தேர்ந்தெடுத்து வலிமையான பிள்ளைகளை உருவாக்க வேண்டும் என்ற அவசியம் தலை தூக்குகிறதோ, அப்போது பாலியாண்ட்ரி தானாக நிகழ்ந்து விடுகிறது. தனக்குச் சிறந்த வாரிசுகள் வேண்டும் என விரும்பி தேவர்களோடு கூடி குழந்தைகளைப் பெற்ற பிரிதை முதல், தனக்குச் சிறந்த பிள்ளைகள் வேண்டும் என ஆரோக்கியமான ஆண்களின் விந்தணுக்கள் வேண்டி இன்டர்நெட்டில் விளம்பரம் செய்யும் தற்காலப் பெண் வரை இதற்கு உதாரணங்கள் பலர். இருவரும் வாழ்ந்த காலங்கள் வெவ்வேறாக இருந்தாலும், அவர்களின் தேவையைப் பொறுத்து அவர்கள் பயன்படுத்தும் யுக்தி ஒன்றே. அதைச் சமுதாயம் தவறு என்று சொல்வது இல்லை. காரணம், இந்தச் சந்தர்ப்பங்களில் பாலியாண்ட்ரியால் மரபணுவுக்கு நன்மை கிட்டும் என்பதால் அதை எல்லா சமுதாயங்களும் ஆல்ரைட் சொல்லி ஆதரிக்கின்றன.

அதேபோலதான் பாலிகைனீயும். எப்போது தரம் முக்கியம் இல்லை அர்ஜென்ட்டா நிறைய குழந்தைகள் தேவை! என்ற சூழல் ஏற்படுகின்றதோ, அப்போது ஓர் ஆண் பல பெண்களோடு கூடி வாரிசு உருவாக்குவது ஏற்றுக் கொள்ளப்படுகிறது. அது மனுசாஸ்திரத்தின்படி கந்தர்வத் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்ட அந்தக் கால க்ஷத்திரியன் ஆகட்டும், அல்லது ஹிட்லர் ஆணையிட்டார் என்று ஆரிய குழந்தைகளை அவசர கதியில் உருவாக்க பல பெண்களை மானாவாரியாகக் கருவுறவைத்த நாட்ஜி படை வீரர்கள் ஆகட்டும்! வேக இனப்பெருக்கம் தேவைப்படும்போது பாலிகைனீயை சமுதாயங்கள் அனுமதிக்கின்றன.

ஆனால், இந்த பாலியாண்ட்ரி, பாலிகைனீயில் இன்னொரு பிரச்னையும் இருக்கிறது.

அதென்ன பிரச்னை...?

# 45

## ஒருவனுக்கு ஒருத்தி!



பெண்களின் கட்டுப்பாடற்ற Polyandry என்ற பாலியல் நடத்தை ஆண்களுக்கு ஓர் ஆபத்தாகவே இருந்தது. மிகச் சிறந்த மரபணுக்களையுடைய ஆண்களைத் தேர்ந்தெடுத்துப் புணர்ந்தால்தான் வலிமையான குழந்தைகள் பிறக்கும் என்பதால், ஆண்களை அலசி ஆராய்ந்து மேலானவர்களோடு மட்டும் விரும்பி உறவுகொண்டனர் பெண்கள். ஆனால், எல்லாப் பெண்களுமே மரபில் சிறந்த சில ஆண்களை மட்டுமே விரும்பி தேர்ந்தெடுத்தால் அப்புறம் மிதம் இருக்கும் ஆண்களின் கதி?

மனிதர்கள் கூட்டாகச் சேர்ந்து வேட்டையாடும் வாழ்க்கை முறையைச் சார்ந்து வந்தவர்கள். வலியவர்கள், மெலிந்தவர்கள், பயந்தவர்கள், தைரியசாலிகள்... என்று எல்லா ரக ஆண்களும் சேர்ந்து ஒற்றுமையாக வேட்டைக்குப் போனார்கள். இந்த ஒற்றுமைதான் எல்லா வானரங்களையும் முந்திக்கொண்டு மனிதர்களை ஜெயிக்க வைத்தது. ஆனால், இந்தக் கூட்டுறவு வாழ்க்கை ஆண்களை எப்போதும் இணைந்த கைகளாகவே இருக்க நிர்பந்தித்தது. கொஞ்சம் பகைமை, பொறாமை, வெறுப்பு மூண்டாலும் ஒட்டுமொத்த மனித சமுதாயமும் தோற்றுப் போய்விடும் அபாயம் இருந்தது.



அப்படி இருந்தும், ‘சிறந்த ஆணை மட்டுமே தேர்ந்தெடுக்கும்’ பெண்களின் பாலியல் தேர்வுமுறை ஆண்களுக்கு இடையே ஒரு மிகப்பெரிய விந்தணுப் போட்டியை (Sperm competition) உருவாக்கியது. அது அமேஸான் நதிக்கரை ஓரமாக வாழும் நிர்வாண ‘யனோமமோ’ பழங்குடியினர் முதல், மன்ஹட்டனின் வானளாவிய கட்டடத்தில் வாழும் நவநாகரிக அமெரிக்கர் வரை ஆண்களுக்கிடையே பிரச்னைகள் வர பிரதான காரணமே பெண்கள்தான்.

ஒரு பெண் தன்னை நிராகரிப்பதுதான் ஆணுக்கு இருப்பதிலேயே மிகப் பெரிய வேதனை. இப்படி நிராகரிக்கப்பட்ட ஆண் சும்மா இருப்பதில்லை. தன்னை வென்ற ஆணைப் பழி தீர்த்துக் கொள்ளும் வேளைக்காகக் காத்திருப்பான். இந்தப் போட்டியும், பொறாமையும் பகைமையும்தான் மனித வரலாறு முழுக்கப் பல போர்களையும், உயிர்

இழப்புகளையும் ஏற்படுத்த தூண்டுகோலாக இருந்துள்ளன. இவ்வளவு உயிர் சேதாரம் எதனால்? இந்தப் பெண் ஆணிடம் பாரபட்சமாக நடந்து கொண்டதால்தானே?

இப்படி இல்லாமல் ஒவ்வொரு ஆணுக்கும் ஒரு பெண் துணையாக அமைந்துவிட்டால் அப்புறம் எல்லா ஆண்களும் சமமானவர்கள் ஆகிறார்கள். அவர்களுக்குள் ஏற்றத்தாழ்வுகள் இருக்காது. எல்லாரும் சரிசமம் என்ற நிலை வந்தால் ஆண்கள் எல்லோரும் முழு மனதோடு வேட்டையில் ஒத்துழைப்பார்கள். ஒட்டுமொத்த மனித சமுதாயமும் இதனால் பலனடையும்.

ஆனால், இதில் ஒரு சின்னச் சிக்கல் இருந்தது. என்னதான் மனித சமுதாயத்தின் வாழ்வியல் தேவைக்காக ஆணும், பெண்ணும் பாலியல் ஒழுக்கங்களைக் கடைப்பிடித்தாலும், மரபணுக்களைப் பொறுத்தவரை ஒழுக்கம் என்ற சமாச்சாரமே அதற்குத் தெரியாது. மரபணுவிற்குத் தெரிந்ததெல்லாம் தன்னைத் தானே முடிந்தமட்டும் அதிகமாக மறுமைக்கு கொண்டு போவதுதான். இதனால், அவை ஆண்களில் கூடுமானவரை அதிகப் பெண்களோடு கூடி வேகவேகமாக இனத்தைப் பெருக்கிவிடும் உத்வேகத்தைத் தூண்டுகின்றன. இதுவே பெண்களில் முடிந்த மட்டும் விதம்விதமான ஆண்களோடு கூடி மரபணுக்களை அபிவிருத்தி செய்து, தரத்தைத் தக்கவைத்துக் கொள்ளத் தூண்டுகின்றன.

இந்த மரபணுவின் வேக இனப்பெருக்கம், தரமான இனப்பெருக்கம் ஆகிய இரண்டு தூண்டுதல்களும் ஆணையும் பெண்ணையும் வெளியே உறவு மேற்கொள்ளவும் உந்தின. ஆனால், ஒவ்வொரு முறை இந்த வெளி உறவு அம்பலமாகும்போது மேலும் சண்டைகள், சச்சரவுகள், உயிர் இழப்புகள் நேர்ந்ததால் அதுவும் ஒருவகை மரபணு விரயமாக ஆனது.

யுகயுகமாக இந்தத் தேவையில்லாத சண்டை சச்சரவுகளைச் சகித்து வந்த மனிதர்கள், உதிர விரயத்தைத் தவிர்த்து ஒற்றுமையை நிலைநாட்ட ஒரு புது உத்தியை உருவாக்கினார்கள். இஷ்டப்பட்டவர்களோடு உறவு வைத்துக் கொள்வதைத் தவிர்த்து, மணமுடித்த ஒருவரோடு மட்டுமே காலம் முழுக்கக் கலவிகொள்ளும் ‘ஒருவனுக்கு ஒருத்தி’ என்ற நடைமுறையைப் புனிதமெனப் போற்ற ஆரம்பித்தனர். திருமணமானவர்கள் வாழ்நாள் முழுக்க ஒருவருக்கு ஒருவர் உண்மையாக இருந்தே ஆக வேண்டும் என்கிற சமூகக் கட்டாயம் ஏற்பட்டது. ஆனால், இந்தச் சமூக மாற்றங்கள் எல்லாமே

செயற்கையானவை. மரபணுக்களின் வேகப் பெருக்கம் வீரியப் பெருக்கம் ஆகிய உந்துதல்களுக்குப் புறம்பானவை. அதனால், ஒருவருக்கு ஒருவர் உண்மையாக இருப்பது மனிதர்களுக்கு அத்தனை சுலபமாக வரவில்லை. அதைக் கற்றுத் தர வேண்டி இருக்கிறது.

எப்படி...?

# 46

## கற்பு எனப்படுவது யாதெனில்!



புராதன சமுதாயங்கள் எல்லாம் தங்கள் இனப்பெருக்க வயதுப் பிள்ளைகளுக்குப் பாலியல் ஒழுக்கத்தையும் திருமணத்தின் புனிதத்தையும் வலியுறுத்திக் கற்பித்தன. மனித மனத்தைக் கட்டுப்படுத்தக் காலங்காலமாகப் பயன்படும் பரிசு - தண்டனை என்ற தந்திரத்தைத்தான் இதற்கும் பயன்படுத்தினர். 'ஒழுங்காகக் குடும்பம் நடத்தினால் உலகமே உன்னைப் பாராட்டும். இந்தப் பிறவி மட்டுமல்ல, அடுத்த பிறவியும் இன்பமாக அமையும். ஆனால், ஏதாவது சொதப்பினால் எல்லோரும் உன்னைத் தூற்றுவார்கள். நிச்சயமாக உனக்கு நரகம்தான். அங்கே உன்னைச் சும்மாவிட மாட்டார்கள். கொதிக்கும் எண்ணெயில் போட்டு வறுத்து எடுப்பார்கள்.'

அந்தக் கால மனிதர்களுக்குச் சொர்க்கம் - நரகம் மாதிரியான விஷயங்களில் எக்கச்சக்க நம்பிக்கை இருந்தது. எதற்கு வம்பு என்று பழிபாவத்துக்குப் பயந்து எல்லோரும் திருமண பந்தத்தில் ஒழுக்கமாக இருக்க முயன்றார்கள். ஆனால், மரபணுக்களின் உந்துதல் விடவில்லை. அதனால் மரபணுக்களை வேகமாகப் பரப்பிவிட சந்தர்ப்பம் கிடைத்தபோது ஆண்கள் படி தாண்டினார்கள். அதிக வீரிய மரபணுக்களோடு கலக்கும் சந்தர்ப்பம் அமைந்தபோது பெண்களும் படி தாண்டினார்கள். ஆனால், பெண்கள் படி தாண்டியதை ஆண்களால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. காரணம், ஆண்கள் படி

தாண்டினால் விளைவது வெறும் கண்ணீர் மட்டும்தான். அதுவே, ஒரு பெண் படி தாண்டினால் அங்கே பெருகி ஓடியது ரத்தமாயிற்றே.

ஆக, பெண்ணின் பாலியல் ஒழுக்கம்தான் அமைதியான சமூக வாழ்க்கைக்கு முக்கியமான அஸ்திவாரம் எனக் கருதப்பட்டதால், பெண்களின் மூளையைத் தொடர்ந்து பதப்படுத்தி ஆணுக்கு விசுவாசமாக இருந்தே ஆக வேண்டும் என்பதைக் கற்பித்தார்கள். பெண்கள் எல்லோரும் தங்கள் பாலுணர்வே அடக்கி, வீரிய இனப்பெருக்க உத்வேகத்தை விட்டுக்கொடுத்து, ஒருவனுக்கு மட்டும் வாழ்நாள் முழுக்க உண்மையாக இருக்கும் பாடம் கற்பிக்கப்பட்டது. அதற்கு ஒரு தனிப் பெயரே உண்டு. அதுதான் கற்பு. கல் என்றால் கற்றுக் கொள்ளுதல். கற்பு எனப் படுவது யாதெனில் கற்பிக்கப்படுதல்.



பிறந்தது முதல் பெண்ணுக்குப் பாலியல் ஒழுக்கம் கற்பிக்கப் படுகிறது. அவளது பெண்மை, பாலுணர்வு, மகப்பேறு சக்தி எல்லாமே

அவள் கணவனுக்கு மட்டும் பயன்பட வேண்டும் என்று நம்ப வைக்கப்படுகிறாள். அவள் கணவன் வெறும் கல்லாக இருக்கலாம்; சிறு புல்லாக இருக்கலாம். ஆனால், கல்லானாலும் கணவன், புல்லானாலும் புருஷன் என்பதால் ஈரேழு பதினாலு ஜென்மத்துக்கும் அவனுக்குப் பெண் 100% உண்மையாக இருந்தாக வேண்டும். அப்போதுதான் சமுதாயம் அவளைப் போற்றும். அவள் பெய் என்று சொன்னாலே போதும் உடனே வானம் மழையாக பொழிந்திடும்.

ஆனால், அவள் கற்பு நெறியிலிருந்து கொஞ்சமும் பாதை மாறினால் மானம் கெட்டவள் என்று ஊரே தூற்றும். அவள் கணவனுக்கும் அது பெரிய அவமானம். அவள் பிள்ளைகளுக்கும் பெரிய களங்கம், சமுதாயம் அவளை ஒதுக்கி வைக்கும். தெய்வங்களும் அவளை வெறுத்து சபித்திடும். அப்புறம் என்ன, நரகம்தான். குழந்தையிலிருந்து இப்படியே கற்பிக்கப்பட்டு வந்ததால், இந்தக் கற்பு என்பது பெண்களின் நம்பிக்கையில் ஆழமாக வேரூன்றிப் போனது. எந்த அளவுக்குத் தெரியுமா?

அவள் கணவன் தொழுநோய்க்கு ஆளாகி உருகுலைந்த பின்னும் அந்த ஊர் விபச்சாரியோடு உறவுகொள்ள ஆசைப்பட்டான். எதிர்ப்பேச்சு பேசாமல் கணவனைக் கூடையில் வைத்துத் தலைமேல் தூக்கிக் கொண்டுபோய் விபச்சாரியின் வீட்டில் விட்டு வந்தாள் ஒருத்தி.

அவள் கணவன் சரியான சந்தேக நோயாளியாக மாறி, நெருப்பில் குதித்து களங்கமற்றவள் என்பதை நிறுபிக்கச் சொன்னான் என்பதற்காக மறுப்பின்றி நெருப்பில் குதித்தே விட்டாள் இன்னொருத்தி.

அவள் கணவன் திருமணமான மறுநாளே மனைவியை மறந்துவிட்டு, இன்னொரு பெண்ணுடன் போன பிறகும், அவனைத் திருத்தி நல்வழிப் படுத்தாமல், அவனுக்குக் கடைசிவரை ஆமாம் சாமி போட்டு, அவனுக்காகத் தன் சிலம்பை அவிழ்த்துக் கொடுத்து, அதையும் சரியாக விற்று பிழைக்கத் தெரியாமல், ஒரு பொய் வழக்கில் சிக்கி அவன் செத்தபோது, சிந்தைப் பிசகி தன் மார்பை பிய்த்தெறிந்து ஊரைக் கொழுத்தினாள் இன்னொருத்தி.

தன் கணவன் காலரா, மலேரியா என்று ஏதாவது நோய்வாய்ப் பட்டு அற்ப ஆயுசிலே யமலோகம் போய்ச் சேர்ந்தாலும் அவளை நம்பி இருந்த ஒரு டஜன் பிள்ளைகளை ‘அம்போ’ என்று விட்டுவிட்டு, அவன் சிதையில் குதித்துத் தானும் உடன்கட்டை ஏறிய பெண்கள் பலர்.


இப்படி நெருப்பில் குதிக்கும் அளவிற்கு தைரியம் இல்லை என்று,

தலையை மொட்டை அடித்துக் கொண்டு ஆசாபாசம் துறந்து காவி உடை, பத்தியச் சாப்பாடு, பாலுணர்வு அற்ற வாழ்க்கை என்று நடை பிணமாக வாழ்ந்தார்கள் பலர்.

நெருப்பில் குதித்து உயிர்விட்டதா, மார்பகத்தைப் பிய்த்து எரிவதா, பத்திய சாப்பாடு சாப்பிடுவதா? what nonsense! என்று இன்று இந்த வழக்கங்கள் வடிகட்டின முட்டாள்தனமாகக் கருதப்படலாம். ஆனால், ஒரு காலத்தில் இதுதான் ஒழுக்கமான வாழ்க்கை நெறியென கருதப்பட்டது. சமுதாயம் இதை சரியென அனுமதித்தது. தட் இஸ் தி பவர் ஆஃப் தி சொசைட்டி!

# 47

## தந்தை மகற்காற்றும் நன்றி!



சும்மா சொல்லக் கூடாது. காலம், நேரம், சூழல், ஜனத் தொகை ஆகியவற்றுக்கு ஏற்ப அவ்வப்போது தன் இனவள யுக்தியை மாற்றிக் கொள்வதில் மரபணுக்கள் கில்லாடிகள்!

மனித குலம் தோன்றிய ஆரம்ப காலத்தில், பிள்ளைப்பேறு மிகப் பெரிய வளமாகக் கருதப்பட்டது. ஏனெனில், அப்போது மரண விகிதம் அதிகம். வாழ்க்கைத் தரம் ரொம்பக் குறைவு. பிரசவத்தின்போது தாய், சேய் இருவரும் மரணம் அடையும் விகிதம் மிக அதிகமாக இருந்தது. அந்தக் கால சூழலை அனுசரித்து இந்த மரபணு Polyandry என்ற ஒரே பெண் பல ஆண்களுடன் உறவு கொள்ளும் முறையை அப்போது மேலோங்கச் செய்தது.

அந்தக் காலத்துப் பெண்கள் வலிமையான மரபு வளமுடைய எந்த ஆணைக் கண்டாலும் அவனோடு கூடி அவன் பிள்ளைகளைப் பெற்றிட விரும்பினார்கள். காரணம், அந்தக் கால கஷ்ட ஜீவனத்தில் மரபு வலிமை இல்லையெனில் யாரும் பிழைத்திருக்க முடியாது. அத்துடன் அந்தக் காலத்தில் மனிதர்கள் தாய் வழி சமூக முறையைக் கடைப்பிடித்தார்கள். அதனால், தகப்பனை விட தாய்தான் முக்கியமான அந்தஸ்தை வகித்தாள். எல்லாக் குழந்தைகளையும் பெண்கள் இணைந்தே வளர்த்தார்கள். அதனால் தகப்பனோடு வளர வேண்டிய தேவையும், தகப்பன் யார் என்று தெரிந்து கொள்ளும் தேவையும் அன்று

இல்லை. அவ்வளவு ஏன்? அந்தக் காலத்து Polyandry முறைபடி பிறந்த குழந்தைகளுக்கு இனிஷியலே அவர்களது அம்மாவின் பெயர்தான். அர்ஜுனனை ‘பார்த்தா’ என்று அழைக்க காரணம் ‘இவன் பிரிதையின் மகன்’ என்று பொருள் வரத்தான். கர்ணனை ‘ராதேயோ’ என்று அழைக்க காரணம் அவன் வளர்ப்புத் தாய் ராதேயின் பெயர் வரத்தான்.

இ ந் த Polyandry யுக்தி ரொம்பவும் வெற்றிகரமாகச் செயல்பட்டதால், மடமடவென மக்கள் தொகைப் பெருகியது. இத்தனை மனிதர்களின் பசியைப் போக்க ஏராளமான நிலங்களும், வளங்களும் தேவைப்படட்து. வலிமையானவர்கள், வலிமையற்றவர்களை வீழ்த்தி அவர்கள் வளத்தை அபகரிக்கும் வாழ்க்கை முறை மெல்ல தலைதூக்க ஆரம்பித்தது.



இப்படி வலிமையால் பிறரை வெல்லும் வேலையை பொதுவாக ஆண்களே செய்து வந்தார்கள். எனவே, இந்தக் காலகட்டத்தில் ஆணின் முக்கியத்துவம் அதிகமாக உணரப்பட்டது. அதோடு இந்தக் கால மனிதர்கள் அதிக சக்திவாய்ந்த ஆயுதங்களையும் கண்டுபிடித்து வைத்திருந்ததால் மரணம் என்பது மனிதர்களால் ஏற்படும் நிகழ்வாகிப் போனது.

இவ்வளவு அழிக்கும் திறன் படைத்த ஆண் சக்தி வாய்ந்தவன் மட்டுமல்ல, ஆபத்தானவனும் கூட. அவனைச் சாந்தப்படுத்தி மனம் குளிர வைத்திட வேண்டும். இல்லையெனில் நெற்றிக் கண்ணைத் திறந்துகொண்டு கோபத்தில் எல்லோரையும் அழித்து விடுவான் என்ற சமூகக் கருத்து மெல்லமெல்ல உருவாக, ஆண் கடவுள் வழிபாடுகள்

உருவாகின.

ஆண்களின் இந்த ஆக்ரோஷம் அடிக்கடி போர், சண்டை, சச்சரவு என்று முடிந்தது. அதுவரை ஏறுமுகமாக இருந்த மனித ஜனத்தொகை ஒரே போரில் சரிந்துபோக, திடீரென எண்ணிக்கையில் குறைந்து போனார்கள் மனிதர்கள். எண்ணிக்கையில் குறைந்த இனம் எதிரியால் எளிதில் வீழ்த்தப்படும்!

ஆகையால், போர்க்கால அடிப்படையில் இந்த ஜனத்தொகையை மறுபடியும் மடமடவென அதிகரித்தாக வேண்டிய நிர்ப்பந்தம் மனிதனுக்கு இருந்தது. இப்படிப்பட்ட சூழலில்தான் வேக இனப்பெருக்க யுக்தியான Polygyny யைக் கிளப்பி விட்டன மரபணுக்கள்.

ஓர் ஆண் பல பெண்களுடன் உறவு கொண்டால் ஒரே சமயத்தில் எக்கச்சக்க பிள்ளைகளைப் பெற்றுத் தள்ளி மானாவாரியாக மனித சாகுபடி செய்து விடலாம்! ஆக, அவசரமாக ஆள்பலத்தை அதிகரிக்க வேண்டிய அவசியம் எழும்போது பலதாரம் ஏற்றுக் கொள்ளப் பட்டது.

ஆக, மனிதர்களின் தரத்தை அதிகரிக்க வேண்டிய தருணங்களில் பாலிண்டரியும், எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டிய தருணங்களில் பாலிகைனியும் அமலாக்கப் பட்டன. ஆனால், என்னதான் உயர்தரமாக இருந்தாலும் அதிக எண்ணிக்கை இருந்தாலும், சமூக ஒழுக்கம் இன்றி யாரும் பிழைத்திட முடியாது. உதாரணத்துக்கு, மறுபடியும் மகாபாரதத்தை எடுத்துக் கொள்வோமே குந்தி தரம் தேடி பாலியாண்ட்ரி முறையில் வெவ்வேறு வலிமையான ஆண்களோடு கூடி நான்கு மகன்களைப் பெற்றெடுத்தாள். காந்தாரி ஒரே நேரத்தில் நூறு மகன்கள் வேண்டி ஒரே கருவை நூறாகப் பிரித்து, பதப்படுத்தி பிள்ளைகளாக வளர்த்து எடுத்தாள். ஆக, பாண்டவர்கள் வீரிய இனப்பெருக்க முறையில் பிறந்தவர்கள். கௌரவர்கள் வேக இனப்பெருக்க முறையில் பிறந்தவர்கள். இருவரும் வளர்ந்து பெரியவர்களாகி நிலத்துக்காகப் போரிட்டார்கள். போரில் பாண்டவர்கள் ஜெயித்தபோதும் அவர்களது சந்ததியினரால் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முடியவில்லை.

காரணம், ஒவ்வொரு பாண்டவனுக்கும் வெவ்வேறு பெண்களோடு தொடர்பு இருந்ததால் பலப்பல குழந்தைகள் எங்கெங்கோ பிறந்திருந்தார்கள். இப்படி எண்ணிக்கை அதிகமாக இருந்தாலும் தரமான வளர்ப்பு முறை தரப்படாத குழந்தைகள் என்பதால் அவர்களால் ஆட்சியைக் கட்டிக்காக்க முடியவில்லை.

ஆக, தரம் எண்ணிக்கை என்ற இரண்டும் போக, வளர்ப்பு முறை

என்ற மூன்றாவது விஷயம் முக்கியத்துவம் பெற ஆரம்பித்தது. இந்தத் தேவையைப் பூர்த்தி செய்ய மரபணுக்கள் கண்டுபிடித்த யுக்தி நம்பர் த்ரீதான் மோனோகேமி (Monogamy) ஒருவனுக்கு ஒருத்தி என்ற வாழ்க்கை முறை.

இந்த மோனோகேமியை மரபணுக்கள் எப்படிச் செயல்படுத்துகின்றன...?

# 48

## ஆயிரம் காலமும் அவசர கதியும்



அந்தக் காலத்து அரசர்கள் சிலர் பல பெண்களுடன் கூடியதற்கும், அவர்கள் வம்சம் உருப்படாமல் போனதற்கும் என்ன சம்பந்தம் என்று சொல்வதற்கு முன்னால் ஒரு கதைகயைச் சொல்லி விடுகிறேன்.

இந்தக் கதையின் ஹீரோ ஒரு நாட்டின் மன்னன். அவனுக்கு எண்ணிக்கையில் அடங்காத மனைவியர். எண்ணுவதே முட்டாள்தனம் என்ற அளவிற்கு ஏகப்பட்ட எக்ஸ்ட்ரா உறவுகள். அவருக்கு நிறைய குழந்தைகள் பிறந்தனர்.

நிறைய குழந்தைகள் என்பதால் அரசனால் தன் பட்ட மகிஷிக்குப் பிறந்த குழந்தைகளைத் தவிர, வேறு எந்தக் குழந்தையையும் தட்டிக் கொடுத்துப் பேசக் கூட முடியவில்லை. ஆக, அவனுடைய தலைவிக்குப் பிறந்த குழந்தைகளைத் தவிர வேறு எந்தப் பிள்ளைக்கும் அவனால் தனிக் கவனம் செலுத்த முடியவில்லை.

இதர பிள்ளைகள் எல்லாம் தாயால் மட்டுமே தனித்து வளர்க்கப் பட்டார்கள். இவன் அரசன் என்பதால் இவனுக்குப் பிறந்த எல்லாப் பிள்ளைகளுக்கும் இவன் படி அளந்தான். அதனால், வயிற்றுக்குத் திண்டாட்டம் இல்லை. ஆனால், Man does not live by food alone இல்லையா? வயிறு மட்டும் ரொம்பி விட்டால் உள்ளம் நிறைந்து விடாதே! ஆக, தகப்பனின் ஆதரவில்லாமல் வளரும் குழந்தைகளின்

நிலைமை பிரச்னைக்கு உள்ளானது. எப்படியெனில், மனித மூளை மிகப் பெரியது. அத்தனை ஆற்றல் படைத்த மூளையைத் தக்கபடி வழிநடத்த பெற்றோரின் முழுக் கவனம் தேவை. ஏன், தாய்தான் இருக்கிறாளே தகப்பனுக்கும் சேர்த்து அவளே அந்தக் குழந்தையை ஒழுங்காக வளர்க்க முடியாதா? என்று கூட நாம் கேட்கலாம்.



ஆனால், விஷயம் என்ன தெரியுமா? தாயின் மூளை பெண் வடிவமானது. அவள் உலகைப் பார்க்கும் கண்ணோட்டம் வேறுவிதமாக இருக்கும். ஆனால், ஆணின் மூளை, டெஸ்டோஸ்ட்ரானுக்குப் பின் வேறுவிதமாக இயங்குகிறது. அதனால் ஆண்களின் அணுகுமுறை, கண்ணோட்டம், செயல்பாடுகள் வேறு விதம். பெண் ஒரு பாதி, ஆண் இன்னொரு பாதி இருவரும் சேர்ந்தால்தான் அது முழுமை என்பது மூளைக்கும் பொருந்தும்!

இப்படி இருக்க, அப்பாவின் மூளை தரும் வேறு கோண சிந்தனைகள் எதுவுமே இல்லாமல் அம்மாவின் மூளைக்கு எட்டியவற்றை மட்டுமே அறிந்து, ஒரு குழந்தை வளர்ந்தால் அந்தக் குழந்தையின் மூளை முழு வளர்ச்சியை அடையாது.

இப்படி அரை வளர்ச்சி மூளையோடு வளர்ந்து ஆளாகும் இந்தக் குழந்தைகளால் எப்படி வல்லமையைப் பெற முடியும்?

நன் கதாநாயகனிடம் (நாட்டின் மன்னன்) திரும்புவோம். அவனின் மரபணுக்கள் மானாவாரி சாகுபடி செய்து, வேகமாகப் பெருகிக் கொள்ளலாம் என்று ஆசைப்பட்டு அவனை பாலிகைனீ புரியத் தூண்டினாலும் தகப்பன் என்பவன் ஒருவன்தான். எனவே, அவன் ஒருவனால் இத்தனை குழந்தைகளுக்கும் ஒரே சமயத்தில் தனிப்பட்ட கவனத்தை எப்படிச் செலுத்த முடியும்? தகப்பனின் தனிப்பட்ட கவனம் இல்லை என்றால் எத்தனை வீரியம் நிறைந்த வாரிசாக இருந்தாலும் அது தரிசாகத்தான் போகும்!

முன்பு மனிதர்களின் ஜனத்தொகை குறைவு. அதனால், மனிதர்கள் எல்லாக் குழந்தைகளும் முக்கியம் என்கிற மாதிரியான சமூக அமைப்பில் வாழ்ந்தார்கள். ஓர் ஊரில் இருக்கும் எல்லாக் குழந்தைகளுக்கும் அந்த ஒட்டுமொத்த ஊரே பொறுப்பேற்றுக் கொண்டு தர்மம், ஒழுக்கம் மாதிரியான விஷயங்களைக் கற்றுத் தந்தது.

ஆனால், மனிதர்களின் எண்ணிக்கை அதிகமாக அதிகமாக, Diffusion of responsibility என்பார்களே, ‘என்னைப் பற்றி மட்டும்தான் நான் கவலைப்பட முடியும். மற்றபடி வேறு யார் எக்கேடு கெட்டால் எனக்கென்ன?’ என்கிற மனப்பான்மை தலைதூக்கி விடுகிறது. பிறர் குழந்தைகளுக்குப் பாடம் சொல்லித் தரும் எண்ணம், கரிசனம் யாருக்கும் இருப்பது இல்லை. பெற்றவர்களுக்குத்தான் எல்லாப் பொறுப்பும் என்ற அணுகுமுறை ஏற்பட்டு விடுகிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் நம் கதாநாயகன் என்ன செய்தால் அவன் மரபணு நல்லபடியாகப் பெருகும்?

வழி ஒன்:

மானாவாரியாக நிறைய விதைகளைத் தூவி வைப்போம். முளைச்சா அதுவா பிழைச்சிக்கட்டும் என்று பாலிகைனீ புரிவது.

வழி டூ:

நிறைய பெற்று, அதில் பல பாடாவதியாகப் போவதை விட, சிறந்த பெண்ணாக ஒருத்தியைத் தேர்ந்தெடுத்து, அவளோடு கூடி சில குழந்தைகளைப் பெற்றெடுப்பது. அந்தக் குழந்தைகளை நானும் அவளுமாகச் சேர்ந்து நன்றாக வளர்த்து, நல்ல வாழ்க்கைத் துணைகளுக்கு மணமுடித்துக் கொடுப்பது. இந்தச் செயலினால் தொடர் சங்கிலிப் போல நல்ல மரபு வளம் கொண்ட குழந்தைகள் தொடர்ந்து பிறந்து கொண்டே இருப்பார்கள். ஆயிரம் காலத்துப் பயிராக மரபு வளம் பெற்றுக்கொண்டே போகும் என்று ஒருவனுக்கு ஒருத்தியான மோனோகேமி முறையைக் கையாள்வது.

இந்த இரண்டு முறைகளில் எது அதிக மகசூல் தரும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்...?

# 49

## மனித மகசூல்!



இஷ்டப்பட்ட பெண்களைத் துரத்திப் பிடித்து கவர்ந்து, கலவிகொண்டு மானாவாரியாக விதைகளைத் தூவி, எக்கச்சக்கமாகக் குழந்தைகளை எங்கெங்கோ பெற்றுப் போட்டு, அப்பாவின் அரவணைப்பு இன்றி வளர்த்து ஆளாக்குதல் மரபணுகளுக்கு நல்லதா?

அல்லது சக்தியைச் சேகரித்து வைத்து, இருப்பதிலே சிறந்ததாக ஒரே ஒரு பெண்ணை மட்டும் தேர்ந்தெடுத்து அவளோடு கூடி, அவளுக்கும் தனக்கும் பிறக்கும் குழந்தைகளை நல்லபடியாக வளர்க்க சேகரித்த சக்தியைப் பயன்படுத்துவது மரபணுகளுக்கு நல்லதா?

இந்த இரண்டில் எதைத் தேர்ந்தெடுத்தாலும் யூ ஆர் ரைட்! என்ன, இரண்டுமே சரியான பதில்களா! அதெப்படி என்று ஆச்சரியமாக இருக்கிறதா? அதுதான் மரபணுக்களின் தந்திரமே ஒரு பிரச்னையைக் கையாள பல வழிகளை வைத்திருக்கும். இடம், பொருள், ஏவல் பார்த்து தீர்வைத் தேர்ந்தெடுத்து ஜெயிக்கும்!

உதாரணத்துக்கு, இந்த ‘மானாவாரி சாகுபடியா? இறவை சாகுபடியா? எது மனித குலத்துக்கு நல்லது?’ என்பதை எடுத்துக் கொள்வோம். பொதுவாக விவசாயப் பொதுமக்கள் எப்போது மானாவாரி சாகுபடியைச் செய்கிறார்கள்? மழை வரும் என்று நிச்சயமாகத் தெரிந்தால்தான், மடமடவென நிறைய விதைகளை

நான்குப் பக்கமும் தூவி வைப்பார்கள். மழை வந்தால் அமோக விளைச்சல். வராவிட்டால் கடும் பஞ்சம். நிறைய ரிஸ்க் இந்த மானாவாரி சாகுபடியில் உள்ளது.

ஆனால், இறவை சாகுபடி என்பது மழையை எதிர்பார்த்து நடப்பது அல்ல. ஏற்கனவே சேமித்து வைத்த நீரை இறைத்து, குறைந்த நிலப்பரப்பில், கொஞ்சம் விதைகளைத் தூவி திட்டமிட்டுச் செய்யும் ரிஸ்க் ஃப்ரீ இன்வெஸ்ட்மென்ட். இதில் பாதுகாப்பு அதிகம். எப்போதும் மகசூல் சுமாரான அளவிலேயே இருக்கும். அமோக விளைச்சலுக்கும், அய்யோ எல்லாம் போச்சே எனும் அவலத்திற்கும் அவசியமே இருக்காது.



அதேபோலத்தான் மனித இனவிருத்தி. நிறைய வளங்கள் இருக்கும்போது மானாவாரியாக மனித விதை தூவல் புரிவது, வளங்கள் குறைவாக இருக்கும்போது சிக்கனமாக இறவை சாகுபடி புரிவது என்று மரபணுக்கள் மிகக் கெட்டிக்காரத்தனமாக மனிதர்களைச் செயல்படுத்துகின்றன.

வளங்கள் அதிகமாக இருக்கும் காலங்களில் ஆண்களும், பெண்களும் பலரோடு புணர விரும்புகிறார்கள். பாலியாண்ட்ரி, பாலிகைனீ என்ற வழக்கங்கள் அப்போது தலைதூக்குகின்றன.

ஜனத்தொகை நெருக்கடி உள்ள கொஞ்ச நஞ்ச வளத்திற்கு ஏகப்பட்ட போட்டி என்று காலம் மாறும்போது இயல்பாக எல்லா மனிதர்களும் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்று மோனோகேமி முறைக்கு விடுகிறார்கள்.

ஆக, பாலியாண்ட்ரி (Polyandry), பாலிகைனி (Polygyny), மோ னோ கே மி (Monogamy) ஆகிய இந்த மூன்று யுக்திகளை மரபணுக்கள் இனவிருத்திக்கு என வைத்திருக்கின்றன. எப்போது எந்த யுக்தியைக் கையாள்வது என்று சந்தர்ப்பம் பார்த்து மரபணுக்கள் இவற்றைப் பிரயோகிப்பதால் இதைப் பரிணாம சமன்பாட்டு யுக்தி (Evolutionary Stable Strategy) என்கிறோம்.

முன்பு வளம் அதிகம், ஜனத்தொகை குறைவு என்பதால் பலதாரம் புரிந்து டஜன் கணக்கில் பிள்ளைகளைப் பெற்று எடுத்தார்கள். அதைச் சமுதாயமும் அனுமதித்தது. Because at that time, it made perfect genetic sense. அப்போது மரண விகிதம் அதிகம். ஒரு டஜன் பிள்ளைகளைப் பெற்றால்தான் நான்கு ஐந்தாவது தேறும்.

ஆனால், இன்று வளம் குறைவு ஜனத்தொகை அதிகம். இதில் மானாவாரி சாகுபடி செய்கிறேன் என்று ஆணோ பெண்ணோ நினைத்தால், அதைச் சமுதாயம் அனுமதிப்பது இல்லை. இருப்பவர்களுக்கே பூமியில் இடமில்லாதபோது, இன்னும் ஜனத்தொகையைப் பெருக்கினால் இந்த எண்ணிக்கையே மனிதர்களுக்கு எமனாகிவிடும்! அதனால்தான் இன்று பல தாரம் என்பது சட்டம், நியாயம், ஒழுக்கம், பண்பாடு, தர்மம் என்று எல்லாக் கண்ணோட்டத்திலும் தவறாகக் கருதப்படுகிறது. அதனால்தான் இப்போது ஒருவனுக்கு ஒருத்தி என்பது எல்லாக் கலாசாரத்தாலும் பின்பற்றப்படும் தர்மமாகி விட்டது.

தர்மமாவது, மண்ணாவது என்று இது எல்லாவற்றையும் தாண்டி இன்றும் பல ஆண்களும், பெண்களும் பல தாரம் புரியத்தான் செய்கிறார்கள்.

உதாரணத்துக்கு மிஸ்டர் மன்மதன்.

மன்மதன் சாருக்கு இறவை சாகுபடி செய்வதில் எல்லாம் இஷ்டமே கிடையாது. வேளைக்கு ஒருவிதமான பெண் என்று முழுநேர மானாவாரி

சாகுபடிப் பிரியர் அவர்! இப்படி அவர் இஷ்டத்துக்கு விதைகளை விதைத்துக் கொண்டே போவதில்தான் அவருக்கு இஷ்டம்.

அப்படித் தொடர்ந்து விதைத்தால் என்ன ஆகும்?

# 50

## பெண்களை கவரும் நிலைகள்!



ஒருவனுக்கு ஒருத்தி (மோனோகேமி) என்ற பரிணாம சமன்பாட்டு யுக்திதான் ஜனத்தொகையை அதிகமாக்கி, 'that that man that that life' என்று மனிதர்கள் அவரவர் பிழைப்பதிலேயே பிஸியாக இருக்க வைத்தது. அப்படி பிஸியாக இருக்கும் காலங்களில் மரபணுக்கள் மகசூலை அதிகரிக்கின்றன.

ஆனால், நம் கதை நம்பர் டூ -வின் கதாநாயகன் மன்மதனுக்கு இந்த ஏக பத்தினி விரதத்தில் ஈடுபாடே இல்லை. அவர் ஓர் அக்மார்க் தீராத விளையாட்டுப் பிள்ளை. ஏகப்பட்ட பத்தினி விரதம்தான் அவருக்குப் பிடித்த இனப்பெருக்க ஃபார்முலா. அதனால், சதா சர்வகாலமும் அவர் விழிப்புடனே இருந்தார். எப்போது, எங்கே தன்னைக் கவர்ந்த பெண்ணைக் கண்டாலும் போதும், உடனே மடமடவென தன் லீலைகளை ஆரம்பித்து விடுவார்.

ஆனால், பெண்களைக் கவர்வது சாதாரண வேலை இல்லை! இந்தப் பெண்கள் லேசுபட்டவர்களா? அவர்களை வசப்படுத்த படிப்படியாக பிளான் பண்ண வேண்டி இருந்தது.

முதல் நிலை:

இது பெண்களை அணுகுவதற்கு முன்பே செய்ய வேண்டிய prework. 'நான் ரொம்ப பெரிய ஆளாக்கும்!' என்று அவளை நம்ப

வைக்கும் அளவிற்கு தன் அந்தஸ்தை உயர்த்தியாக வேண்டும். தன் அழகு, அறிவு, ஆற்றல், பேச்சுத் திறமை, பண வசதி, ஆள் பலம், தனக்குள்ள பவர்ஃப்புல கனெக்க்ஷன்ஸ், சிந்தனை ஆழம், கலை உணர்வு, ரசனை, ஞானம்... இது எதுவுமே இல்லாவிட்டால் பரம்பரையின் பழம்பெருமை என்று ஏதாவது ஒரு ஸ்டேட்டஸ் ஸிம்பலை மிகைப்படுத்தி, தன் அந்தஸ்தை உயர்த்திக் கொண்டாக வேண்டும். அப்போதுதான் எந்தப் பெண்ணும் இவனைத் திரும்பிப் பார்ப்பாள்! ஆக, இந்த அந்தஸ்து அதிகரிக்கும் முதல் நிலை ரொம்பரொம்ப முக்கியம். இதற்கே நிறைய நேரம், கவனம், காலம், உழைப்பு எல்லாம் செலவாகிவிடும்.



இரண்டாம் நிலை**:**

ஓரளவிற்கு அந்தஸ்து அடித்தளத்தைப் போட்டு வைத்து விட்டால், இயலபாகப் பெண்களின் கவனம் தன்பக்கம் திரும்பும் என்று தன்னம்பிக்கை பெறலாம். அப்புறம் என்ன, அந்தத் தன்னம்பிக்கைத் தரும் தைரியத்துடன் பெண்களை அணுகி, பேசிப் பழகும் துணிவும் வரும். அப்படிப் பேசிப் பழகும் சந்தர்ப்பங்களை வளர்த்து வந்தால், நாளடைவில் அவளது கவனத்தை மெல்ல மெல்ல அதிகரித்து கவர்ச்சி வரை கொண்டு போகலாம்.

மூன்றாம் லை:

இந்தக் கவனத்தை கவர்ச்சியாக மாற்றம் செய்வதற்குள் ஒரு மனிதன் எவ்வளவு பிரயத்தனப்பட வேண்டியுள்ளது! அவள் பிதற்றுவதைச் சகித்துக்கொண்டு சிரித்த முகமாகவே இருக்க வேண்டும். அவள் மனம் குளிரக்குளிர தித்திப்பாகப் பேச வேண்டும். தின்பண்டங்கள், மலர்கள், பரிசுகள் என்று சதா அவளைக் கண்டுகொண்டே இருக்க வேண்டும். அவள் கூப்பிட்ட நேரங்களில் ஆஜராக வேண்டும். அவளது உறவினர்கள், தோழிகள் என்று எல்லோரையும் அனுசரித்துப் போக வேண்டும். இதையெல்லாம் அவன் தொடர்ந்து செய்து 'நம்பிக்கைக்குப் பாத்திரமானவன்' என்ற சான்றிதழைப் பெற்றதும்தான் அவள் அவனிடம் நெருக்கமாகப் பழகவே ஆரம்பிப்பாள். ஆக, இந்த நற்சான்றிதழ் பெறும் படலம்தான் மூன்றாம் நிலை.

நான்காம் நிலை:

சான்றிதழ் பெற்றவுடன் சும்மா இருக்கலாமா? உடனே அவன் விண்ணப்பங்களைத் தாக்கல் செய்வான். முதலில் 'இது மட்டும் முடியாது' என்று மறுக்கத்தான் செய்கிறாள் பெண். இந்த மறுப்பைக் கேட்டு மணமுடையாமல், மறுபடியும் தளராமல் முயல்வதே லெவல் ஃபோர்.

ஐந்தாம் நிலை:

எறும்பு உளர கல்லும் தேய்கிற கதையாக, இவன் விடாமுயற்சி செய்யச்செய்ய, அந்தப் பெண்ணும் மனம் இறங்கி கொஞ்சம் கொஞ்சமாகத் தன் வேலிகளைக் கடந்து வெளியே வருவாள். அப்படி அவள் முழுமையாக இவன் மனுவுக்கு மனம் இறங்கும் வரை காத்திருக்கும் பொறுமை இருக்கிறதே தட் இஸ் லெவல் ஃபைவ்.

ஆறாம் நிலை:

இதையெல்லாம் தாண்டி, கடைசியில் அவள், 'ஆல்ரைட்!' சொல்லி அவன் விருப்பத்துக்கு இணங்குவது லெவல் சிக்ஸ். அப்போதும் அவள் தன் மேல் வைத்திருக்கும் 'இவன் மிகப் பெரியவன்!' என்ற அபிப்பிராயத்தை அழித்துவிடாமல், அவள் எதிர்பார்ப்புகளை காப்பாற்ற வேண்டும். அவள் அபிமானத்தைத் தக்க வைப்பது முக்கியம்.

ஆக, லெவல் ஒன் முதல் லெவல் சிக்ஸ் வரை விடாமுயற்சி, நேரம், பணம், உணர்ச்சி, உழைப்பு, பக்குவம், கவனம், சரியான யுக்தி, அதிர்ஷ்டம் என்று எத்தனையோ விஷயங்களைச் செலவழித்தால்தான்

எப்படிப் பட்ட மன்மதனுக்கும் தேவியின் கடாக்ஷம் கிடைக்கும்.

இத்தனை விஷயங்களையும் இவன் செலவழித்து, அதனால் இவன் மரபணுக்கள் பரவி இருந்தால் பரவாயில்லை, இவன் முயற்சி வீண் போகவில்லை எனலாம்.

ஒரு நூற்றாண்டுக்கு முன் வரையிலும் கூட, எவன் இப்படி ஏகப்பட்ட பத்தினி விரதம் புரிந்திருந்தாலும், அவன் மரபணுக்கள் கொஞ்சமாவது அகல பரவி இருக்கும் என்று நம்பி இருக்கலாம். அதனால்தான அந்தக கால சமுதாயங்கள் பல தாரத்தைப் பொறுத்துக் கொண்டன.

ஆனால் இந்த நூற்றாண்டிலோ, ஆணுறை, கர்ப்பத்தடை மாத்திரை, கருக்கலைப்பு என்று பலப்பல கருத்தடை சாதனங்கள் புழக்கத்தில் உள்ளன. எப்பேர்ப்பட்ட மன்மதன் எப்பேர்ப்பட்ட யுக்தியைப் பயன்படுத்தி, எவ்வளவு நேரம், பணம், உழைப்பு, ஆசை வார்த்தை, போன்றவைகளைப் பிரயோகித்தாலும் அவன் மரபணுக்கள் அகல பரவுவதற்கான சாத்தியம் மிகக் குறைவு.

ஆக, மிஸ்டர் மன்மதன் ஒரு நூற்றாண்டுக்கு முன்னால் பிறந்து, தன் லீலைகளைப் புரிந்திருந்தால் கொஞ்சமாவது பலன் இருந்திருக்கும்.

ஆனால், இன்று கலவி வழியில் பரவும் H.I.V., ஹெப்படைடிஸ், சிஃபிலிஸ் மாதிரியான பல கிருமிகள் ஒரு பக்கம் இருக்கின்றன. கருவுறுதலைத் தடுக்கும் சாதனங்கள் மறுபக்கம் இருக்கின்றன. இப்படி மரபணுக்கள் பரவுவது மிகவும் குறைக்கப்பட்டு விட்டன. இந்தக் காலத்தில், மிஸ்டர் மன்மதனின் எப்பேர்ப்பட்ட லீலைகளும் கொஞ்சம் சிற்றின்பத்தையும், 'ஐய்' எத்தனை பெண்களைக் கவர்ந்தேன்!' என்று சிறுபிள்ளைத் தனமான பெருமையைத்தான் தரும். மற்றபடி மரபு பொருளாதாரக் கண்ணோட்டத்தில் பார்த்தால், இவருடைய எல்லா லீலைகளுமே சுத்த வேஸ்ட்! 'போயும்போயும் கொஞ்ச நேர சந்தோஷத்துக்கு உடல், பொருள், பணம், நேரம், உழைப்புன்னு செலவு பண்ணுறியே! இந்த நேரத்தையும், பணத்தையும் உன் பிள்ளைங்களை ஒழுங்காக வளர்க்க பயன்படுத்து. அவர்களாவது உருப்படுவார்கள். அவர்கள் மூலமாக உன் மரபணுக்கள் இன்னும் ஆழமாகப் பரவும்! அதை விட்டுவிட்டு அகல பரப்புகிறேன் என்று எல்லா வளத்தையுமே விரயம் செய்யிறியே...!' என்று இதனால்தான் இன்றைய சமுதாயம் அவரைக் கண்டிக்கிறது.

யூ ஸீ இட் ஆல் மேக்ஸ் ஜெனிடிக் ஸென்ஸ்!

# 51

## எதிர்மறை கவர்ச்சி!



குழந்தைகளை நன்றாக வளர்த்து ஆளாக்க வேண்டுமெனில் ஒருவனுக்கு ஒருத்தி என்கிற மோனோகேமி (Monogamy) யுக்திதான் பெஸ்ட் என்று மரபணுக்கள் முடிவு செய்தன. 'எவனோ ஒருத்தன் தனக்குப் பொருத்தமான அந்த எவளோ ஒருத்தியை எப்படித் தேர்ந்தெடுத்து உறவுகொள்ள வேண்டும்' என்கிற துணை தேர்வு (Mate Selection) கோட்பாட்டு விதிகளையும் மனதுக்குள் ரொம்ப ஆழமாக மரபணு முன்பதிவு செய்து வைத்துள்ளன.

இந்தத் துணை தேர்வு இலக்கணங்களை எல்லா மனிதர்களும் தங்களை அறியாமல் அனிச்சையாகக் கடைப்பிடித்து இல்லறத்தில் ஈடுபடுகிறார்கள்.

அப்படிப்பட்ட அந்த முக்கியமான துணை தேர்வு இலக்கண விதிகள் என்னென்ன?

விதிகள்:

'உறவு கலவாமை வேண்டும்' அதாவது உடன் பிறந்தவர், பெற்றவர், ஒன்றுவிட்ட உறவினர்... என்ற ரீதியுள்ள எதிர்பாலின நபர்களின் மீது இனக்கவர்ச்சி ஏற்படுவதில்லை. ஆனால், எந்தவித ரத்த சம்பந்தமுமே இல்லாத வேற்றின மனிதர்களைப் பார்த்தால் உடனே எக்கச்சக்க கவர்ச்சி ஏற்பட்டு விடுகிறது!

உதாரணத்துக்கு இராவணன், இலங்கையில் இருந்த அத்தனை பெண்களைவிட, இந்தியாவில் இருந்த ஒரு வனவாசி மேல் அவனுக்கு அத்தனை மோகம் வந்தது! அடுத்த உதாரணம் திரௌபதி. ஆர்ய வம்சத்தைச் சேர்ந்த அத்தனை வீரர்களுமே அந்த ஒற்றை திராவிடப் பெண் மேல் மோகம் கொண்டு நான் முந்தி நீ முந்தி என்று மீனின் கண்ணைக் குறி பார்த்தார்களே! ஆக, அந்தக் காலம் தொட்டு, தற்காலம் வரை எல்லா சமயத்திலுமே வேற்றின எதிர்பாலினம் என்றாலே எக்ஸ்ட்ரா அட்ராக்க்ஷன்தான்!



அது ஏன் அப்படி? என்று நீங்கள் யோசித்தால் அதற்கும் ஒரு பதில் உள்ளது. அதுவும் மரபணுக்களில்தான் உள்ளது. மனித மரபணுக்களில் மேஜர் ஹிஸ்டோ கம்பாட்டி பிளிட்டி காம்ப்ளெக்ஸ் (Major Histocompatibility Complex) என்கிற MHC ஜீன்கள் சில உள்ளன. இந்த MHC ஜீன்கள் நம் உடம்பை அன்னிய கிருமிகளின் தாக்குதலில் இருந்து காப்பாற்றுவதற்கு உண்டான நோய் எதிர்ப்பு சக்தியை (immunity) ஏற்படுத்துகின்றன.

இந்த MHC ஜீன்கள், ‘இது நான், மற்றதெல்லாம் வேறு பிற’ என்று தன் திசுக்களை இனம் கண்டுகொள்ளும் புரத அடையாளக் கையொப்பத்தை உடம்பின் ஒவ்வொரு செல்லிலும் பதித்து வைக்கும்.

இப்படி ஒவ்வொரு மனிதனின் உடம்பிலுள்ள MHC ஜீன்களும் வெவ்வேறுவிதமான புரத அடையாளக் குறிகளை வைக்கும் என்பதால் No two humans are a like, பிறவி இரட்டையர்களைத் தவிர!

இப்படி MHC ஜீன்கள் போடும் அடையாளக் குறியில்லாத எந்தச் செல்லாக இருந்தாலும் ‘ஓ! அந்நிய திசு!’ என்று உடனே உடலின் நோய் எதிர்ப்பு சக்தி அந்த அந்நிய திசுவைத் துவம்சம் செய்துவிடும். அதனால்தான், பிறர் உடம்பிலிருந்து எடுத்துப் பொருத்தப்படும் உறுப்பு மாற்று சிகிச்சைகள் போதிய மருந்துகள் இன்றி புது உடம்பில் பிழைப்பதே இல்லை. புதிதாக வந்த பிறரது உறுப்பில் ‘தான்’ என்பதற்கு அடையாளக் குறி இல்லாததால், ‘போட்டுத் தாக்கு!’ என்று அதை அழித்து விடுகின்றன MHC ஜீன்கள்.

இந்த MHC ஜீன்களுக்கும் இனக்கவர்ச்சிக்கும் என்ன சம்பந்தம்? என்று நீங்கள் யோசித்தால், மனிதப் புணர்ச்சிப் பற்றிய ஆராய்ச்சிகள் எல்லாம் கண்டுபிடித்த ஒரு திடுக்கிடும் விஷயத்தை உங்களுக்குச் சொல்லியே ஆக வேண்டும்.

மனித உடலிலுள்ள MHC ஜீன்கள், தங்களை விட ரொம்ப வித்தியாசமான MHC ஜீன்களைக் கொண்டவர்களைப் பார்த்தால் உடனே ‘ஐய்!’ என்று ஆசைப்படுகின்றன. உடனே உடம்பிலும், மனதிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டு, இந்த வித்தியாசமான MHC காரர் மீது ஏகத்துக்கு காதலை ஏற்படுத்துகின்றன. ஏன் தெரியுமா?

எப்பேர்ப்பட்ட உத்தமமான மனிதராக இருந்தாலும் எல்லோர் மரபணுக்களிலும் ஏதேனும் சில பல குறைகள் இருக்கத்தான் செய்யும்! சம்பந்தமே இல்லாத, முற்றிலும் மாறுபட்ட MHC ஜீன் கொண்டவர்கள் கூடி, பெறும் குழந்தைகளுக்கு Hybrid Vigour என்கிற ஒட்டு வீரியம் ரொம்ப அதிகமாக இருக்கிறது. இப்படிக் கலப்புத் திருமணம் புரிந்து பெறப்பட்ட குழந்தைகள் அதிக ஆரோக்கியத்துடனும் வல்லமையுடனும் வாழ்கிறார்கள்.

அது ஏன்? என்றால், ஒரே ரத்தம், ஒரு குடும்பம் என்றால் ஒரே மாதிரியான குறையுள்ள மரபணுக்கள் அவர்களுக்குள் ரொம்பவே அதிகமாகப் பரவி இருக்கும்.

உதாரணத்துக்கு, மரபணு நம்பர் 6-ன் பத்தாம் கட்டத்தில்

ஒருவருக்கு 50% குறையுள்ள ஜீன் இருக்கிறது என்று வையுங்கள். இந்த நபரின் குடும்பத்தினருக்கும் அந்த ஆறாம் மரபணுவின் பத்தாம் கட்டம் பலவீனமாக இருப்பதற்கு சாத்தியக்கூறுகள் அதிகம். இந்தச் சூழ்நிலையில் இந்த நபர், 'நான் உறவுக்குள்ளேயே திருமணம் செய்வேன்' என்று அடம்பிடித்து செய்தும்விட்டால், இவரது 50% குறையுள்ள 6-ம் ஜீனோடு, இவரது துணைவரது அதே குறையுள்ள 6-வது ஜீன் சேர்ந்தால் 50% + 50% = 100% குறையுள்ள ஜீன் கொண்ட குழந்தைப் பிறந்து அது மிகவும் துன்பத்துக்கு உள்ளாகும்.

இந்த வம்பே வேண்டாம் என்றுதான் சொந்தத்துக்குள் உண்டாகும் (Inbreeding) கவர்ச்சியை விட, அசல் ஆட்களின் மீது ஏற்படும் (Out breeding) கவர்ச்சியை மரபணுக்கள் அதிகப்படுத்தி வைத்திருக்கின்றன. ஆக, உறவுக்குள்ளே இனம் சேராமல் வெளிநபர்களோடு உறவுகொள்வதுதான் மனிதப் புணர்ச்சியின் முதல் விதி.

இன்னும் இதுபோல பல புணர்ச்சி விதிகள் உள்ளன.

அவை என்ன என்றால்...

# 52

## புணர்ச்சி விதிகள்!



மரபணுக்கள் ‘இன நலன்’ பார்த்துதான் துணையைத் தேடும் என்பதால், சில முக்கியமான புணர்ச்சி விதிகளை மனதுக்குள் ஏற்கனவே முன்பதிவு செய்து வைத்துள்ளன.

விதி நம்பர் ஒன்:

‘எதிர்மறை MHC ஜீன ஈர்ப்புக் கொள்கை.’

விதி நம்பர் டூ:

‘ஆரோக்கியம் நாடு.’ அதாவது பளபள தோல், மினுமினு சருமம், பளிச் கண்கள், அடர்ந்த கூந்தல், சிக்கென்ற உடை, சுறுசுறுப்பான நடை, ஆட்டம், பாட்டம், ஓட்டம் மாதிரியான சமிக்ஞைகளை வைத்தே ஆரோக்கியமான ஜீன்கள்தான் என்று அடையாளம் கண்டுகொள்ளும் மனசுக்கு, அந்த நபரின் மீது கொசுறு கவர்ச்சி ஏற்பட்டுவிடும். அதனால்தான் அந்தக் கால மாதவி முதல் இந்தக் கால மாடல் அழகி வரை, அந்தக் கால போர்வீரர் முதல், இந்தக் கால விளையாட்டு வீரர் வரை துடிப்பான நபர்களைக் கண்டாலே எதிர்பாலினத்துக்கு ஈர்ப்பு பொத்துக்கொண்டு வந்து விடுகிறது.

விதி நம்பர் த்ரீ:

‘சமன்பாடு நாடு.’ நீ ஒன்றும் தெரியாத வெகுளியா, உன்னை விட

மூத்த, எல்லாம் தெரிந்த சாமர்த்தியசாலியைத் தேர்ந்தெடுத்துவிடு. நீ எல்லாம் தெரிந்த மேதாவியா, உன்னைவிட சிறிய வயதுக்காரரை தேர்ந்தெடுத்துவிடு என்ற 'பேலன்சிங்' யுக்திகளை மரபணுக்கள் மனதின் மூலம் அமல்படுத்துகிறது. அதனால்தான் சிறு வயது ஆண்களுக்கு 'ஆண்ட்டி' மாதிரி பெண்களையும், வயது முதிர்ந்த ஆண்களுக்கு 'குட்டி' பெண்களையும் பிடித்துப் போய்விடுகிறது. இதே மாதிரி பலப்பல எதிர்பாலினங்கள் கவரப்படுவதே இந்த மரபணு சமன்பாட்டு யுக்தியால்தான்.



விதி நம்பர் ஃபோர்:

உடல் ரீதியாக எதிர்மறையின் மேல் ஈர்ப்பு ஏற்பட்டாலும், மனதளவில் ஒரே அலைவரிசை உள்ளவர்களுக்குத்தான் ஒருவரை ஒருவர் பிடிக்கும். இதை Assortative Mating என்கிறோம். புத்தகப் புழுக்கள் மற்ற புத்தகப் புழுக்களை விரும்புவதும், கலை ஆர்வலர்கள் அதே ஆர்வம் கொண்டவர்களை நேசிப்பதும், விளையாட்டுப் பிரியர்கள் ஒன்று சேர்வதும் அவ்வளவு ஏன், குடிப் பழக்கக்காரரும் கோயிலே கதி என்று இருப்பவரும் இணைவது கூட இந்த ஒரே அலைவரிசைகளின் ஒன்று சேர்க்கையால்தான்.

அதெல்லாம் சரி, குடிக்கும், கோயிலுக்கும் அதென்ன கனெக்க்ஷன் என்று ஆட்சேபிக்கிறீர்களா? பக்தியும் ஒருவித போதை என்பதால் இந்த இரண்டு வித போதை விரும்பிகளுக்குள் பந்தம் ஏற்பட்டு விடுகிறது!

இப்படித் துணை தேர்வுக்கு என மரபணுக்கள் வைத்திருக்கும் விதிமுறைகள் பலப்பல. மனிதர்களின் ஆழ் மனம், மரபணுக்கள் விதித்த கட்டளைகளில் ஒன்றைக்கூட விடாமல், எல்லாவற்றையும் அடி

பிறழாமல் கடைபிடிக்கிறது.

அதனால்தான் தன் மேல் உயிரையே வைத்திருக்கும் அத்தை மகளை விட, அசலூர்க் காரியின் மீது பல பேருக்கு ஆசை ஏற்படுகிறது. காரணம், MHC ஜீன்கள்தான்.

'தாய் மாமன்' என்று விரும்பி திருமணம் செய்துகொள்ளும் பெண்களுக்கு மாமாவிடம் மனைவியாக நடந்துகொள்ள முடிவதில்லை. காரணம், அதே MHC ஜீன்கள்தான்.

அறிவாளிகள் அசமஞ்சங்களையும், கோழைகள் வீரத் திலகங்களையும், ரௌடிகள் பயந்தாங்கொள்ளிகளையும் விழுந்து விழுந்து நேசிக்கிறார்கள். எல்லாவற்றுக்கும் காரணம் மரபணுக்களின் சமன்பாடு நாடு யுக்திதான்.

தினமும் அழுது வடிந்து, சலங்கைகளைக் கூடக் கழற்றித் தரத் தயாராக இருந்த மக்குப் பெண் கண்ணகியை விட, தினமும் ஆடிப் பாடி ஆனந்தப் படுத்தும் மாதவிதான் உசத்தி என்று அவள் வீட்டிலேயே விழுந்து கிடந்தான் கோவலன். காரணம், மரபணுக்களின் ஆரோக்கியம் நாடும் யுக்தியின் கைங்கரியம்!

அதனால்தான் பிள்ளை குட்டி, வீடு, வாசல் என்று ஏற்கனவே ஒருவருக்கு வாழ்க்கைப் பட்டபிறகும், 'மனசுக்குப் பிடிச்சிருக்கு, விட முடியலை!' என்று மாற்றான் வீட்டுத் தோட்டத்துப் பூக்களைப் பறிக்கப் போகிறார்கள் சிலர். காரணம், ஒரே அலைவரிசை ஏற்படுத்தும் வசீகரம்!

இப்படியாக மனிதர்கள் எல்லோரும் அவரவர் துணையைத் தேர்ந்தெடுக்கக் காரணமே அவரவர் மரபணுக்கள் முன்வைக்கும் யுக்திகள்தான்.

மேலோட்டமாகப் பார்த்தால் சரி - தவறு, நியாயம் - அநியாயம், தர்மம் -அதர்மம், பாவம் - புண்ணியம் என்றெல்லாம் தோன்றும். பல மனித நடவடிக்கைகளை genesense என்ற மரபணு ரீதியான மூக்குக்கண்ணாடி வழியாகப் பார்த்தால், மனித நடவடிக்கை ஒவ்வொன்றுக்கும் பின்னால் இருக்கும் அர்த்தம் அப்பட்டமாகப் புரியும். அதிலும் குறிப்பாக மனிதர்களின் அந்தரங்க வாழ்க்கைதான் மனித ஜீவனத்திற்கே அஸ்திவாரம் என்பதால், இதில் மரபணுக்கள் ரீதியான அர்த்தங்கள் ஏராளம்.

அந்த அர்த்தங்கள் எல்லாமே ரொம்பவே சுவாரஸ்யமானவை. ஆனாலும் இத்தனை அர்த்தங்களையும் தெரிந்து கொண்டால் ஒன்று சைக்கியாட்ரிடிஸ்ட் ஆகலாம். இல்லை சன்யாசி ஆகலாம்! இந்த

இரண்டையும் விட சம்சாரியாக இருந்து ஆரோக்கியமாக இல்லறம் நடத்துவதுதான் லோக க்ஷேமத்துக்கு நல்லது. எனவே, இத்தோடு அந்தரங்களின் அர்த்தங்களை அலசுவதை நிறுத்திக் கொள்வோம்!

இதுவரை புரிந்துகொண்ட பல அர்த்தங்களை வைத்தே உங்கள் அந்தரங்க வாழ்வை அணுகி அசத்துங்கள். உங்கள் அந்தரங்கம் அர்த்தமுள்ளதாக இருக்கட்டும்!




# அர்த்தமுள்ள அந்தரங்கம்

உயிரினங்களில் தனித்துவமுடையதாக, மற்ற எல்லா உயிரினங்களுக்கும் தலைமை தாங்கக்கூடிய ஆற்றலும் அறிவும் பெற்றதாக இருப்பதுதான் மனித இனத்தின் சிறப்பு.

இந்த ஆற்றலையும் அறிவையும் மனிதனுக்கு அவன் நினைத்த மாத்திரத்திலேயே இயற்கை வழங்கிவிடவில்லை. DNA என்ற புரதச் சுருளில் தோன்றிய உயிரின் தொடக்கம், மனிதன் என்ற உன்னத நிலை வரை பரிணாம வளர்ச்சி அடைந்திருக்கிறது. அப்படிப்பட்ட உயிரைத் தாங்கி இருக்கும் உயிரினங்களின் தலையான பணியே இனப்பெருக்கம்தான். இனப்பெருக்கத்தை ஊக்குவிப்பதையே குறியாகக் கொண்டு செயல்படுபவை ஜீன்கள்.

ஜீன்கள், தன் உயிர் தேவைக்கு ஏற்றவாறு உயிரினங்களில் ஏற்படுத்திய பரிணாம மாற்றங்கள் பல. படர்வன, பறப்பன, ஊர்வன, பாலூட்டிகள்... போன்றவை இவற்றில் அடங்கும். பாலூட்டிகளின் முதிர்ந்த பரிணாமம்தான் மனித இனம். இந்தப் பரிணாமங்களுக்கும், உயிரிணங்களின் வாழ்வியல் மாற்றங்களுக்கும் அடிப்படையாக ஜீன்கள் கையில் எடுத்திருக்கும் யுக்திதான் காமம்.

பன்னிரெண்டு வகையான மனித காமத்தையும், அதனால் மனித இனத்தில் ஏற்பட்ட வாழ்வியல் ஏற்ற-இறக்கங்களையும் 'அர்த்தமுள்ள அந்தரங்கம்' என்ற இந்தப் புத்தகத்தில் விரிவாக விளக்கி இருக்கிறார் டாக்டர். ஷாலினி.

ARTHTHAMULLA ANTHARANGKAM

விகடன்
பிரசுரம்